
கல்கி
ஜனவரி 1
1961
30



அழகு எழிலோங்க
"'ஹாஸலீன்' ஸ்னோ" தினமும் உபயோகித்தீர்களானால்; உங்களுடைய சருமம் மிருதுவாகவும் மழமழப்பாகவும், அழகாகவும் விளங்குகிறது.
சருமத்தினுள்ளே ஊடுருவிச் செல்லும் அதன் சக்தி, சருமத்திற்கு கெடுதி வராமல் தடுப்பதுமல்லாமல் பவுடர் தடவிக்கொள்ள சிறந்த ஆதாரமாகவும் உபயோகிக்கப்படுகிறது.
மாற்றம் செய்யமுடியாத அதன் பாக்கிங் இதனுடைய தூய்மையை உறுதியாக்குகிறது.
"'HAZELINE' SNOW"
"'ஹாஸலீன்' ஸ்னோ"
ட்ரேட் மார்க்
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு
HAZELINE SNOW

கல்கி பொருளடக்கம்

சார்வரி, மார்கழி 18 ✻ ஜனவரி 1, 1961

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே ; சம்பவங்களும் கற்பனையே



மலர் 20 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 22

பெருபாரி விஷயம்

அரசியல் நிர்ணயச் சட்டப்படி இந்தியா பல ராஜ்யங்கள் சேர்ந்த சமஷ்டி ஆட்சி முறை கொண்டது. ஒரு தலைமைப் பீடம் கொண்ட யூனிட்டரி ஆட்சி முறையல்ல. அதனால் தான் இந்தியாவுக்கு 'இந்திய யூனியன்' ஐக்கிய இந்தியா என்று பெயர். மாகாணங் களுக்கு ராஜ்யங்கள் என்று புதுப் பெயர்.

காங்கிரஸ் ஆட்சியில் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பல அடிப்படைக் கொள் கைகள் நசுக்கப்பட்டுவருவது போல் இந்திய யூனியன் என்ற சமஷ்டி ஆட்சி முறைத் தத்துவமும் நசுக்கப்பட்டு வருகிறது.

பிரதமர் நேரு பெரோஸ்கான் நூனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டபோது, பெருபாரியின் உண்மை நிலையையே புரிந்து கொள்ளாமல் செய்து கொண்டிருக்கிறார் என்பதை அவரே ஒப்புக்கொள்ளுகிறார்.

இருப்பினும், நேருஜியின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக இல்லையாயினும், பாரதப் பிரதமரின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகவாவது இந்த ஒப்பந்தத்துக்கு மக்கள் சபை அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்று கேட்கிறார். மக்கள் சபையோ நேருஜி யன்றி வேறு யாராக இருந்தாலும் இந்த ஒப்பந்தத்துக்கு அங்கீகாரம் அளித்திராது! இந்தத் தர்ம சங்கடமான மனநிலையில் அகப்பட்டு மக்கள் சபை ஒப்பந்தத்துக்கு அங்கீகாரம் அளித்து விட்டது!

எந்த ஒப்பந்தமும் பார்லிமெண்டின் அங்கீகாரத்துக்கு உட்பட்டுத்தான் செய்யப் பட்டது. அந்த அங்கீகாரத்தைத் தருவதும் தராமலிருப்பதும் பார்லிமெண்டின் உரிமை.

வட எல்லையில் பல்லாயிரக்கணக்கான சதுர மைல்களைச் சீனாவின் ஆக்கிரமிப்புக்கு விட்டாகி விட்டது. இப்பொழுது, விஷயம் புரிந்து கொள்ளாமல் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் காரணமாக இந்தியாவின் ஒரு பகுதி பாகிஸ்தானுக்குத் தானமாகக் கொடுக்கப் படுகிறது!

இந்தத் தானத்தை, காந்திமகான் தேசப் பிரிவினையானவுடன் பாகிஸ்தானுக்கு 50 கோடி ரூபாய் கொடுக்கும்படி வற்புறுத்தியதோடு ஒப்பிட்டுப் பேசுகிறார் பிரதமர் நேரு. இதற்கும் அதற்கும் சம்பந்தமே யில்லை.

பெருபாரி மாற்றத்தினால் இவ்வளவு பேர் பாதிக்கப் படுவார்கள் என்று முன்னமே தெரியாமல் போய்விட்டது என்று நேருஜி மக்கள் சபையில் பிரலாபிக்கிறார்.

மொத்தத்தில் நேருஜி உள்நாட்டு விவகாரத்தில்தான் குழம்பிப் போய்த் தவறுக்கு மேல் தவறு செய்கிறார் என்றால், வெளிநாட்டு விவகாரத்திலும் தவறுக்கு மேல் தவறு செய்கிறார்.

இந்திய அரசாங்கம் சமஷ்டி அரசாங்கம். ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த மக்களைப் பாதிக்கும் விஷயத்தில் அப் பிரதேச மக்களின் அனுமதியின்றி இப்படிச் செய்வது தவறு.

பிரதமரின் கௌரவம் காப்பாற்றப்பட வேண்டும் என்று சொல்லியும், இந்த ஒப் பந்தத்தால் நஷ்டத்தைவிட லாபமே அதிகம் என்று ஏதோ குருட்டுக் கணக்குச் சொல்லியும் கட்சிக் 'கொரடா'வின் பலத்தின் மூலம் மக்கள் சபையின் ஒப்புதலைப் பெற்றிருக்கிறார். நேருஜியின் ஆட்சியில் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் அடிப்படைத் தத்துவமும் ஜனநாயக தத்துவமும் நசுக்கப்படுகின்றன என்பதுதான் தெளிவாகிறது!

இரண்டு மணி விழாக்கள்

ஆங்கிலப் புது வருஷம் தமிழ் மணத்தோடு பிறக்கிறது என்று சொல்ல வேண்டும். புது வருஷத்து முதல் வாரத்திலேயே இரண்டு தமிழ்ப் பெரியார்கள் அறுபதாண்டு நிறைவு பெறுகிறார்கள்.



தெ. பொ. மீ.

அவர்களுடைய மணி விழாவைச் சிறப்பாகக் கொண்டாட அன்பர்கள் முயன்று வருகிறார்கள். அவர்கள் முயற்சியில் வெற்றியடையச் செய்வது தமிழ்ப் பெருமக்களின் கடமை என்பதைச் சொல்லி வைக்கிறோம்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் இம்மாதம் 8 ம் தேதி அறுபதாண்டு நிறைவு பெறுகிறார். தெ. பொ. மீ. அவர்களின் தமிழ்ப் பற்றும், சைவப்பற்றும், பணியும் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும். காலஞ்சென்ற பெரியார் திரு வி. க. அவர்களுக்கு உறுதுணையாக நின்று அவர் செய்த பணிகள் பல. சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியின் புகழுக்கும் பெருமைக்கும் காரண புருஷர் தெ. பொ. மீ. இப்பெரியாரின் மணி விழாவைத் தக்க முறையில் சென்னையில் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், இவரது மணிவிழா நினைவாக ஓர் அறக்கட்டளை ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். அவரிடம் தமிழ் படித்த மாணவர்களும், பெருமக்களும் நிதி உதவி இம்முயற்சிகள் வெற்றியடையச் செய்ய வேண்டும்.



சீனி வேங்கடசாமி

மற்றொரு பெரியார் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள். நிறைகுடம் என்பதற்கு விளக்கமாக இருப்பவர். அவரது ஆராய்ச்சி அறிவும் புலமையும் வியப்பிற் குரியவை. ஆனால் பார்த்தாலோ, இவர் இவ்வளவு ஆற்றல் படைத்தவர் என்பதே தெரியாது. இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் சுவையற்ற வறட்டுக் கட்டுரைகளாக இராமல் எழுச்சியும் சிந்தனைக் கிளர்ச்சியும் ஊட்டுவதாக இருக்கும்.

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், மகாபலிபுரத்து ஜைன சிற்பம், பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும் முதலிய நூல்கள் அறிவுக்கு விருந்தாக விளங்குபவை. இத்தகைய அரிய நூல்கள் அளித்த தமிழ்ப் பெரியாரின் மணிவிழா ஜனவரி முதல் வாரத்தில் வருகிறது. இவரது மணி விழாவும் சிறக்கத் தமிழ் மக்கள் உதவ வேண்டும்.

காங்கிரஸும் பல்லம் ராஜுவும்

இந்த வாரம் வேலூரில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் வருகிற தேர்தலில் வெற்றி பெற என்ன என்ன தந்திரங்கள் கையாள வேண்டும் என்று யோசிப்பார்கள். இந்தச் சமயத்தில் இன்றையக் காங்கிரஸைப்பற்றி நாட்டில் எப்படிப்பட்ட அபிப்பிராயம் நிலவுகிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.


வினோபாபாவே அவர்களை யாரோ காங்கிரஸைச் சீர்திருத்தவே முடியாதா என்று கேட்டார்கள். அதற்கு வினோபா நேரடியாகப் பதில் கூறாமல் உதாரணம் மூலம் பதிலளித்தார்.

''நாட்டிலுள்ள எல்லா நதிகளும் சமுத்திரத்தில்தான் போய் விழுகின்றன. மழை பெய்து வரும் பெரு வெள்ளமெல்லாம்கூட சமுத்திரத்தில் விழத்தான் செய்கின்றன. இருந்தாலும் கடல்நீரின் உப்பை மாற்ற முடியவில்லையே'' என்றார்.

சமீபத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் சென்ற பன்னிரண்டு ஆண்டுகளில் காந்தி மகான் கொள்கைக்கு முற்றும் மாறுபட்ட முறையிலேயே காங்கிரஸ் ஆட்சி நடந்து வந்திருக்கிறது என்று சொன்னார்.

ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் கட்சிக்குப் புதிய தலைவராக வந்துள்ள இரு பல்லம் ராஜு அவர்களும் காங்கிரஸ்

சேதி தெரியுமா? — சாமா



மக்கள்
பிடித்துக் கட்டுவது யானைக்குத்தான் நல்லது!....
பிரசாத்
மைசூரில் யானை பிடித்தலை ராஜேந் பாபு பார்வையிட்டார்.
புது நடராஜன்
ராஜ்ய சங்கீத நாடக அகாடமி
எந்தக் கை கையாடல் செய்தது?
ஹுமாயூன் கபீர்
ராஜ்ய சங்கீத நாடக அகாடமி கணக்கில் ஒழுங்கீனம். சுமார் இரண்டு லட்சம் கையாடல்!
வா, வா, மாமியார்....?
1920
1930
1945
1958
1961
காங்கிரஸ்
மாமியாரைச் சீர்திருத்தம் செய்ய முடியும் என்கிறார் ஆந்திர காங்கிரஸ் தலைவர் பல்லம் ராஜு.
ரங்கநாதர் தூங்குவதற்கு இல்லை
ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் ரங்கநாதரின் நெற்றியில் பொருத்தப்பட்டிருக்கும் புதிய தங்கத் தென்கலை நாமத்தை அகற்றும்படி ஒரு கோஷ்டி கோருகிறது!
தென்கலை நாமத்தையா அவருக்குப் போடுவது?
நாமத்தை அகற்று!

கட்சியும் காங்கிரஸ்காரர்களும் அடைந்துள்ள படுமோசமான நிலையை விளக்கிக் கண்ணீர் சிந்தியிருக்கிறார்.

"காங்கிரஸில் இன்று எவ்வளவோ மேன்மையற்ற காரியங்கள் நடக்கின்றன. காங்கிரஸ் ஊழியர்கள் தங்கள் அன்புக்குரியவர்கள் அதிகாரத்தில் இருந்தால் தான் கட்சிக்காக வேலை செய்கிறார்கள். இல்லா விட்டால் தூஷிக்கிறார்கள். நாலணா அங்கத்தினர்கள் சேர்க்கும் விஷயத்தில் அவதூறுகள் நடந்து வருகின்றன. சிலபேர்கள் சேர்ந்து ரூபாய் 200 அல்லது ரூபாய் 300 கைவிட்டுக் கொடுத்து வேண்டிய பெயர்களையும் விரல் முத்திரையையும் உண்டு பண்ணுகிறார்கள். மற்றொரு மோசமான காரியம், கள்ளுக் கடையில் மறியல் செய்து அடிபட்டு, ஜெயிலுக்குச் சென்ற சிலர் குடிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஊழியர்கள் அப்பேர்ப்பட்டவர்களைத் தண்டிக்கவோ பகிஷ்கரிக்கவோ முயல்வதில்லை. அவர்கள் அதிகாரத்தில் இருந்தால் தாளம் போடுகிறார்கள். இல்லா விட்டால் மறைமுகமாக ஏளனம் செய்கிறார்கள்..."

(தினமணி 22-6)

காங்கிரஸின் இழிநிலையை இவரை விடப் பச்சையாக எந்தக் காங்கிரஸ் விரோதியாலும் சொல்ல முடியாது! இவ்வளவு தூரம் சொன்ன மனிதர் கடைசியில், "இந்த இழிநிலையிலிருக்கும் காங்கிரஸைச் சீர்திருத்தி உயர்த்த வேண்டும்" என்றும் சொல்லியிருக்கிறார்.

கோதாவரி ஜில்லாவிலிருந்து வரும் பல்லம் ராஜு அவர்கள், கோதாவரி நீர் முழுவதையும் கடலுக்கு அனுப்பி வைத்தாலும் அதன் உப்பு மாறாது என்பதை ஏன் புரிந்து கொள்ளவில்லை!

ஆலைத் துணியும் சர்க்காரும்

இந்திய சர்க்கார், தங்கள் பெரு முயற்சி காரணமாக, ஆலைத்துணிகளின் விலையில் 5 சத விகிதக் குறைப்புக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும், இதற்கு ஆலை முதலாளிகள் பெரிய மனசு வைத்து இணங்கி யிருப்பதாகவும் தம்பட்டம் அடித்துக் கொள்ளுகிறார்கள்! இந்த ஐந்து சத விகிதக் குறைப்பில் மூன்று சத விகிதம் சில்லறை வியாபாரிகள் லாபம் அடையப் போகிறார்கள். உண்மையில் பொதுமக்கள் லாபம் அடைவது இரண்டு சத விகிதம்தான்!

ஆனால் உண்மையில் இந்த ஆலைத் துணி உற்பத்தியில் பெரும் லாபம் அடிப்பவர்கள் சர்க்கார் தான். இதைச் சமீபத்தில் கோவை தொழிலதிபர் திரு கே. சுந்தரம் அவர்கள், ராஜாஜியுடன் திருநெல்வேலி சுற்றுப் பிரயாணத்தின் போது, பல மேடைகளில் எடுத்துரைத்தார்.

ஒரு வேஷ்டி சுமார் பதினைந்து ரூபாய்க்கு விற்கிறது என்றால், அந்த வேஷ்டி செய்யும் மூலப்பொருளான பஞ்சுக்குச் சுமார் ஐந்து ரூபாய் வரை செலவாகிறது. துணியாக நெய்வதற்குச் சுமார் ஐந்து ரூபாய் செலவாகிறது. சர்க்கார் கலால் வரியாக ஐந்து ரூபாய் எடுத்துக் கொள்ளுகிறது!

ஆலை முதலாளி நூற்பதற்கும், துணி நெய்வதற்கும், ஆலைத் தொழிலாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கும், போனஸ்கள் வழங்குவதற்கும், தங்களுக்கு லாபம் எடுத்துக் கொள்வதற்கும், வருமான வரியாகச் செலுத்துவதற்கும் ஐந்து ரூபாய்தான் எடுத்துக் கொள்ளுகிறார். மத்திய சர்க்கார் இருந்த இடத்திலிருந்து இந்தத் துணிக்குக் கலால் வரியாக ஐந்து ரூபாய் விதித்து எடுத்துக் கொள்ளுகிறது! இதிலிருந்து பெருத்த கொள்ளை லாபம் அடிப்பது, ஆலை முதலாளிகளோ, சில்லறை வியாபாரிகளோ அல்ல; சர்க்கார்தான்! சர்க்கார் தனது இந்த மறைமுக அநியாய வரியில் ஒரு பகுதி விட்டுக் கொடுத்தாலே ஜவுளி விலை குறையும்!

ஆனால் அடுத்து வரும் ஐந்தாண்டு திட்டத்துக்கு 1650 கோடி மறைமுக வரி மூலம் வசூலிக்க யோசித்துக் கொண்டிருக்கும் சர்க்காரின் ஆட்சியில் துணியின்மீதுள்ள கலால் வரி குறையாது. இரண்டு மடங்காகப் பெருகினால் அதிசயப்படுவதற்கில்லை!

இசையுலகம்

"பண்ணினில் நோக்கும் பரா அமுதை..." —கம்பர்

சென்ற ஆண்டில் பெரு மழையும் புயலும் அடித்து, தமிழ் மக்கள் சொல்லொணு இன்னலுற்றனர். இருப்பினும் டிசம்பர் கடைசி வந்ததும் வழக்கம்போல் மூலைக்கு மூலை நடக்கும் இசை விழாக்களில் கலந்து கொண்டு குதூகலிக்கின்றனர். இந்த இசை இன்பம் பருகும் அரும் பண்பு பண்டை நெடுங் காலமுதல் தமிழ் மக்களுக்கு இருந்து வருவது என்பதை நினைவுகூரவே இவ்வார அட்டையில் பழம் இசை அணங்குகளின் வண்ண ஓவியக் காட்சியைப் புது வருஷப் பரிசாக வழங்குகிறார் நமது ஓவியர் விஜயா.

கண்டெடுத்த கடிதங்கள்

மலிவான விலையில் மோட்டார்கள் உற்பத்தி செய்யப் போகும் மத்திய சர்க்காருக்கு, கார் தள்ளும் கந்தசாமி எழுதிக் கொண்டது:

மகாமேன்மை பொருந்திய டில்லி சர்க்கார் அவர்களே! இன்னும் ரொம்பச் சீக்கிரத்திலே ரூபாய் ஐயாயிரத்துக்கு மேலே போகாத மோட்டார் கார்களைச் செய்து ஜனங்களுக்குச் சல்லிசாக விற்கப் போறீங்களாமே? இதைக் கேட்டு, நானும் என் கூட்டாளிகளாகிய கூளைச்சாமி, முத்துமாரி, பரட்டை எல்லாரும் ரொம்பவும் ஜாலி அடைஞ்சுட்டோங்க. எங்களுக்குத் தொழிலே கார் தள்றதுதாங்க. அங்கே மவுண்டு ரோடு, பீச்சு, அம்ஞ்சிக்கரை இந்தப் பக்கம் சுத்திக்கிட்டு வருவோம். அங்கங்கே நின்னு போயிற கார்களைத் தள்ளித் தருந்தாப்பிலே சம்பாரிப்போம். சில சமயங்களிலே பஸ்ஸுகள் (சர்க்கார் பஸ்ஸுதான்!) கூட எங்களுக்குக் கிடைக்கும். இருந்தாலும் சென்னையிலே எல்லாம் இப்போ நல்ல கார்களாகவே வருது. தனியார் - தொழிற்சாலைகளில் பண்ணுகிற கார்கள் லாரிகளை நம்பி நாங்க எப்படி வாள முடியும்? அவை நல்ல மாதிரியாக் கவனிச்சு நல்லபடியாகப் பண்ணி விடுகிறாங்க. இந்தச் சமயத்திலே நீங்களாவது முன்வந்து சர்க்கார் தொழிற்சாலைகளிலே கார் பண்ண முன் வந்தது ஏதோ எங்க அதிருஷ்டமின்னுதான் சொல்லோணும். சர்க்கார் தொழிற்சாலையிலே கார் பண்ணினால் வரிப் பணம் பாளாகும்னு சிலபேர்கள் உங்களைப் பயமுறுத்தறாங்களாம். இதைப் பத்தி நீங்க ஒண்ணும் பயந்துக்கிடவேணாம்"; நாங்க இருக்கோம் சும்மா உற்பத்தி செய்து ரோட்டிலே கொண்டு வந்துவிடுங்க; ஜனங்க மேலே இல்லே!

இப்படிக்கு,
கார் தள்ளும் **கந்தசாமி**


இந்திய வருமான மந்திரி திரு கோபால ரெட்டிக்கு அநாமதேயம எழுதியது:

"சமீபத்தில லோக் சபையில் ஓர் அங்கத்தினர் தங்களை நோக்கி, ''இந்தியாவில் மொத்தம் எவ்வளவு கோடீசுவரர்கள் இருக்கிறார்கள்?'' என்று கேட்டதற்குத் தாங்கள் ''மொத்தம் இருபத்தாறு பேர்கள்'' என்று பதில் சொல்லிவிட்டீர்கள். முன் பின் யோசியாமல் ஆராயாமல் பதில் சொல்லி விடுவது தான் பொதுவாக மந்திரிகளின் வழக்கமாயிருந்தாலும், நீங்களாவது அதற்கெல்லாம் மாறாகச் சற்று ஆராய்ந்தறிந்து பதில் சொல்லியிருக்கக் கூடாதா? நீங்கள் மட்டும் சற்று நன்றாக யோசனை செய்திருந்தால் கோடீசுவரர்கள் இந்தியாவில் ஏராளமான பேர்கள் இருப்பதை உணர்வீர்கள். எங்கள் ஊரில் மட்டும் 'கோடீசுவரன், தனகோடி, புண்யகோடி' என்று அனந்த கோடி கோடீசுவரர்கள் இருந்து வருகிறார்கள். ஆந்திராவில் 'கோடி ரெட்டி' என்று பெயர் கொண்டவர்கள் எவ்வளவு என்பது தங்களுக்கும் தெரிந்ததுதான். மொத்தத்தில் தாங்கள் லோகசபையில் நாட்டில் இருபத்தாறு கோடீசுவரர்கள் தான் இருக்கிறார்கள் என்று சொன்னது தவறு என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இப்படிக்கு, தங்கள் அன்புள்ள,
அநாமதேயம்

நமது பழைமை மரபுக்கு ஏற்றவாறு உடம்புக்கு மட்டுமின்றி உள்ளத்துக்கும் வைத்தியம் செய்து வருகிறார் டாக்டர் 'ஸ்ரீஹரி' அவர்கள். உடலைச் செவ்வையாக வைத்துக் கொள்வது பற்றிக் 'கல்கி'ப் பத்திரிகையில் விஷயதானம் செய்ததற்காகக் கிடைத்த நாலாயிரம் ரூபாயைக் கொண்டு நுங்கம்பாக்கம் ஸ்ரீ பிரஸன்ன வெங்கடேசப் பெருமாள் கோவிலுக்கு மடப்பள்ளி ஒன்றைக் கட்டிக் கொடுத்திருக்கிறார் அவர்.

இம்மாதம் 11-ந் தேதி இந்த மடப்பள்ளியை அறநிலைய ஆணையாளர் ஸ்ரீ உத்தண்டராமப் பிள்ளை அவர்கள் திறந்து வைத்தார். ஸ்ரீமதிகள் ராதா, விஜயா பிரார்த்தனையுடன் தொடங்கிய இவ்விழாவில் ஸ்ரீமான்கள் சோமதேவ சர்மா, சௌம்ய நாராயணன், காழியூர் ஸ்ரீநிவாஸாச்சாரியார், வேம்பு ஐயர் ஆகியோர் ஸ்ரீஹரியின் சேவை மனப்பான்மையை வெகுவாகச் சிலாகித்துப் பேசினர். கல்கி ஆசிரியர் ஸ்ரீ சதாசிவம் அவர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டார். ஸ்ரீமதி ராதா பாடின மங்களத்துடன் விழா இனிதே நிறைவேறியது.



இலங்கை குமுறுகிறது!

ரஜனி

— கொழும்பு, டிசம்பர் 23உ

இலங்கையில் மீண்டும் அரசியல் கொந்தளிப்பு உச்ச நிலையை அடைந்திருக்கிறது. இந்தச் சமயம் பார்த்துப் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா இந்தியாவுக்குத் திடீரென்று யாத்திரை போயிருப்பது பலருக்கும், ஆச்சரியத்தை விளைவித்திருக்கிறது. அடுத்த ஏப்ரல் மாதம் காமன்வெல்த் மகாநாட்டுக்காக லண்டனுக்குப் போவதைத் தவிர அவர் சமீபத்தில் வெளிநாடு செல்ல உத்தேசித்திருப்பதாகக் கடைசி நிமிஷம்வரையில் தெரிவிக்கவேயில்லை. ஸ்ரீமதி பண்டாரநாயகா இம்மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்யப் போகிறாரென்று கொழும்பு 'வீரகேசரி'யிலும் சென்னை 'ஹிந்து'விலும் பல தினங்களுக்குமுன் ஒரு செய்தி முற்றிலும் எதிர்பாராத விதமாக வெளியாகியது கண்டு பலரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். இது உண்மை யென்பதை மூன்று நான்கு தினங்களுக்குப் பிறகுதான் அரசாங்கம் அறிவித்தது. ஸ்ரீமதி பண்டாரநாயகா பௌத்த க்ஷேத்திரங்களைத் தரிசிப்பதற்காக இந்தநேரம் பார்த்துப் புறப்படுவானேன்? அதிலும் மொழிப் பிரச்னையும் பள்ளிக்கூடப் பிரச்னையும் வெடிக்கும் தருணத்தில் இருக்கையில் அவர் ஏன் திடீரென்று அயல் நாட்டுக்குப் புறப்பட வேண்டும்? ஸ்ரீமதி பண்டாரநாயகா ஜோதிடத்தில் நம்பிக்கை மிக்கவரென்றும், வருட முடிவில் அவர் வெளிநாட்டிலிருப்பது நல்லதென்று அவருக்கு யோசனை சொல்லப்பட்டிருப்பதாயும் ஆகவே அவர் இந்தியாவுக்குச் சென்றிருக்கிறாரென்றும் கூறப்படுகிறது.

பிரதம மந்திரி வெளிநாட்டிலாகா அதிகாரிகளோ அல்லது தமது அரசியல் ஆலோசகர்களோ இல்லாமல் குடும்பத்துடன் தனிப்பட்ட முறையில் இந்தியாவுக்கு வந்திருக்கிறார். ஆகையால் அவர் புது தில்லியில் பாரதப் பிரதமர் நேருவைச் சந்திக்கும்போது இலங்கை இந்தியப் பிரச்னையைப் பற்றி அவர்கள் விரிவாக விவாதிப்பார்களென்று யாரும் எதிர்பார்க்க முடியாது. என்றாலும் அவர்கள் பூர்வாங்கமாக அபிப்பிராயம் பரிமாறிக் கொள்ளுவது இரு தேசத் தலைவர்களும் விரைவில் சந்தித்து விரிவான பேச்சுக்கள் நடத்த உதவி புரிவதாக இருக்கும்.

தமிழரசுக்கட்சி ஹர்த்தால் தீர்மானம்

ஜனவரி முதல் தேதியன்று தனிச் சிங்களச் சட்டம் சகல அரசாங்கக் காரியாலயங்களிலும் தீவிரமாக அமுலுக்கு வருவதை முன்னிட்டு, வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழர்கள் தங்களுடைய விவகாரங்களை ஓரளவு தமிழ்மொழியில் நடத்திக்கொள்ள அனுமதிப்பதற்காகத் தமிழ்உபயோகச் சட்டத்தின் கீழ் சில விதிகளை அரசாங்கம் சென்றவாரம் பிறப்பித்திருக்கிறது. அந்த விதிகள் தமிழர்களின் நியாயமான குறைகளுக்குப் பரிகாரம் செய்வதற்குப் பதிலாக வெந்த புண்ணில் வேல் விடுவதைப்போல் அமைந்திருக்கிறது. முற்றிலும் தமிழ் பேசும் மக்களடங்கிய மாகாணங்களில் சிங்களத்திலேயே கோர்ட் நடவடிக்கைகள் நடக்க வேண்டுமாம். தமிழ் மொழி உபயோகத்தையும் ஓரளவுக்கு மட்டுமே அனுமதிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. அவர்கள் பிறப்பித்திருக்கும் இந்தப்புதிய விதிகள் இதுவரையில்அரசாங்கம் நிச்சயம் நியாயம் செய்யுமென்று உறுதியாக நம்பி வந்த தமிழரசுக் கட்சிக்குப் பெருத்த ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் அளித்திருக்கிறது. சென்றவாரக் கடைசியில் தமிழரசுக் கட்சி காரியக்கமிட்டி யாழ்ப்பாணத்தில் கூடித் தமிழ்ச் சட்ட விதிகளை நிராகரிப்பதாயும் சர்வ சிங்களச் சட்டம் அமுலுக்கு வரும் ஜனவரி இரண்டாம் தேதியன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைதியாக ஹர்த்தால் நடத்துவதென்றும் தீர்மானித்திருக்கிறது. இது தவிர, அரசாங்கத்தின் சர்வ சிங்களச் சட்ட அமுலை எவ்விதம் எதிர்ப்பது என்பதைப் பற்றி யோசிக்க ஒரு பெரிய தேசிய மகாநாடு நடத்தவும் அவர்கள் திட்டமிட்

டிருக்கிறார்கள். இதற்கிடையில் ஜனவரி முதல் தேதியிலிருந்து பார்லிமெண்ட் நடவடிக்கைகளெல்லாம் சிங்களத்திலேயே நடைபெற வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருப்பதால் சிங்களம் தெரியாத தமிழ் அங்கத்தினர்கள் பார்லிமெண்டில் அங்கம் வகித்து என்ன பிரயோசனமென்றும் சிலர் இப்பொழுது கேட்கத் தொடங்கியிருக்கின்றனர். சர்வ சிங்களச் சட்டத்தை எதிர்க்கும் முகமாக பார்லிமெண்டிலுள்ள எல்லாத் தமிழ் அங்கத்தினர்களும் கூட்டாக ராஜினாமாச் செய்ய வேண்டுமென்றும் யோசனை கூறப்பட்டு வருகிறது. இந்த யோசனையைத் தமிழ்த் தலைவர்கள் தேசிய மகாநாட்டில் ஆராய்ந்து முடிவு செய்யவிருக்கிறார்கள்.

பள்ளிக்கூட நெருக்கடி

பள்ளிக்கூடங்களை யெல்லாம் தானே எடுத்து நடத்துவதென்று அரசாங்கம் செய்துள்ள நடவடிக்கைகளுக்குக் கத்தோலிக்கர்களுக்கிடையில் மிகக் கடுமையான எதிர்ப்பு உருவாகியிருக்கிறது. ஜனவரி முதல் தேதியன்று பள்ளிக்கூடங்களின் புதிய வருட வகுப்பு ஆரம்பமாகும் பொழுது அசம்பாவிதங்கள் நடைபெறுமோ என்று பலரும் அஞ்சுகிறார்கள். கொழும்பில் பல இடங்களில் அசம்பாவிதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இவ்வாரம் ஒரு கூட்டத்தினர் அரசாங்க பஸ்களை நிறுத்தி அவற்றிலிருந்த காலஞ்சென்ற பிரதம மந்திரி பண்டாரநாயகாவின் உருவப்படத்தைப் பலாத்காரமாக அப்புறப்படுத்தினார்கள். இதையொட்டி இருவரைப் போலீசார் கைது செய்தபொழுது அவர்களை விடுவிப்பதற்காகச் சுமார் ஓராயிரம் கத்தோலிக்கர்கள் போலீஸ் ஸ்டேஷனைச் சூழ்ந்து கொண்டு கற்களால் அடித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். போலீசார் கண்ணீர்ப் புகை பிரயோகித்துக் கூட்டத்தைக் கலைக்க வேண்டியதாயிற்று.

செலாவணி கெடுபிடி

ஜனவரி முதல் தேதியிலிருந்து செலாவணிக் கட்டுப்பாடு இலாகா ஒரு புதிய சட்டத்தை அமுல் நடத்தவிருக்கிறது. இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொண்ட இந்திய வம்சாவளியினர்களில் பெரும்பாலோருடைய பெற்றோர்கள் இந்தியாவில் இருக்கிறார்கள். அந்த வயோதிகப் பெற்றோர்களுக்கு இதுவரையில் வாழ்க்கைப் பணம் அனுப்ப இவர்கள் அனுமதிக்கப்பட்டு வந்தார்கள். ஜனவரி முதல் தேதியிலிருந்து இலங்கைப் பிரஜைகளாகிறவர்கள் யாவரும் இந்தியாவுக்குப் பணம் அனுப்பக் கூடாது என்றும் அவர்கள் தங்களுடைய பெற்றோர்களை இலங்கையில் தருவித்துவைத்துக்கொள்ள வேண்டுமென்றும் செலாவணி இலாகா உத்தரவிட்டிருக்கிறது. பணம் அனுப்ப மனுப் போட்டவர்களுக்கெல்லாம் மனுவை நிராகரித்துச் செலாவணிக் கட்டுப்பாடு அதிகாரி பதில் அனுப்பியிருக்கிறார்.



நா.பார்த்தசாரதி

சரித்திர நாவல்

மணிபல்லவம்

அழைப்பு

இந்நாவலின் கதா நாயகன் ஓர் அற்புதமான இளைஞன். காவிரிப்பூம்பட்டினத்துப் பொது மக்களிடையே வாழ்ந்து, வளர்ந்து, அழகனாய், அறிஞனாய், வீரனாய் உயர்ந்து ஓங்குகிறவன். இன்னும் இந்தக் கதையில் எழில் நிறைந்த பெண்கள் வருகிறார்கள். ஆனால் அவர்கள் அரசகுல நங்கையரல்ல. காதலும் இன்பமும், வீரமும் சோகமும் சூழ்ச்சியும் சோதனையும் வருகின்றன. ஆனால் அவை அரண்மனைகளை மட்டும் சார்ந்து வரவில்லை. போரும் போட்டியும் வருகின்றன. ஆனால் அவை மன்னர்களிடையே வரவில்லை.. அப்படியானால்....? அதுதானே கதை! பொங்கல் மலரிலிருந்து உங்களை ஒரு புதிய உலகத்துக்கு அழைத்துச் செல்லப் போகிறது மணிபல்லவம்.


எழுதும்
கல்கி
பொங்கல் மலரில் ஆரம்பமாகிறது

வட்ட மேஜை



பரமக்குடி வெள்ளம்

பரமக்குடி வெள்ளம் தமிழ் நாட்டில் பிரபலமடைந்து செய்திகளாக வந்துவிட்டன. மந்திரிகளும் அதிகாரிகளும் மழையிலும், வெள்ளத்திலும் நடந்தார்கள். ஒரே தீவு போல் காட்சியளித்தது என்று பயந்தார்கள் மக்கள். ஆனால் எதைப் பற்றியும் எங்களுக்குக் கவலையில்லை; ஏனெனில் கழுத்தளவு தண்ணீரில்தான் தினம் இரவு பன்னிரண்டு மணிக்கு வீடு திரும்புகிறோம். வடக்கில் சிவகெங்கை மேட்டுப் பிரதேசமும், தெற்கில் கமுதி மேட்டுப் பிரதேசமும் இருப்பதால் இதற்கிடையில் காஷ்மீர் பள்ளத்தாக்குபோல் அமைந்த ராமநாதபுரம், பரமக்குடி தாலூகா பிரதேசம் மழைக் காலத்தில் வெள்ளமாகப் பள்ளங்களில் உருண்டோடிக் கண்மாய்களை உடைத்துச் சேதம் விளைவிப்பது வருஷந்தோறும் நடைபெறுகிற விஷயம்தான்.

ஆகவே, இனி முடிவாகச் செய்ய வேண்டியது ஒன்று உண்டு. அதாவது வேந்தோணிக் கால்வாயை மூடி வேறு பக்கம் ஏற்கெனவே உள்ள கமுதக்குடி கால்வாய் வழியாகத் தண்ணீரைத் திருப்பினால் அன்றிப் பரம்பைத் தீவுக்குக் கதிமோட்சமில்லை.

பரம்பை
1-12-60

"பரம்பைவாசி"

இன்சூரன்ஸ் பிரீமியத்தொகை

ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனுடன் இணைக்கப்பட்ட யூனிட்டுகளின் பிரீமியத் தொகையை நாட்டின் பல்வேறு ஊர்களிலுமுள்ள எந்தக் கிளைக் காரியாலயத்திலும் செலுத்தித் தாற்காலிக ரசீது பெறுவதும், பின் அந்தந்த யூனிட்டுகளிலிருந்து உத்தியோக முறையில் ரசீது வருவதும் வழக்கமிருந்தது. இந்த முறையில் ரசீது கிடைப்பதில் சிறிது காலதாமதமேற்பட்டதென்பதே ஒழிய மக்களுக்கு அதனால் மிகவும் சௌகர்யமிருந்தது. ஆனால் இம்முறை திடீரென்று ஆகஸ்டு மாதம் முதல் ரத்துச் செய்யப்பட்டு விட்டது. இன்றுள்ள விதிப்படி பாலிஸிதாரர்கள் எந்தக் கிளையில் பாலிஸி எடுத்துள்ளார்களோ அங்கு மட்டுமே பிரீமியத் தொகையைச் செலுத்த வேண்டும். மற்றக் கிளைகள் அதை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இந்த மாற்றத்துக்குக் காரணம், பிரீமியத் தொகை நிலுவை - செல் - பாக்கி கணக்கு வைப்பதிலும், நோட்டீஸ் அனுப்புவதிலும் குந்தகமும் தாமதமும் விளைகிறதென்றும் நேரடி இருசால் முறை மூலம் இவற்றைத் தவிர்க்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

ஆனால் நாடு இன்றுள்ள நிலையில் மக்கள் தம் ஊர்க் கிளையிலேயே இன்சூர் செய்து கொள்வதென்பதோ, அன்றி அதே ஊரில் நிலைத்து வசிப்பதென்பதோ நடவாதென்பது வெள்ளிடைமலை. இந்த நிலைமையில் கார்ப்பரேஷனின் தற்போதைய ஏற்பாடு மக்களுக்கு அதிக இடைஞ்சலையும் பொருட் செலவையும் மேலாக அதிருப்தியையும்தான் வளர்க்கும். ஆகவே இவற்றை மனத்திற்கொண்டு கார்ப்பரேஷன் நிர்வாகிகள் மீண்டும் முன்போலவே இருசால் வசதி செய்துதர வேண்டியது அவர்கள் கடமை.

மதுரை
19-11-60

ஏ. என். ராஜன



"என்னப்பா இது வம்பாய்ப் போச்சு. நான் சங்கீத சபா செகரட்டரி இல்லேன்னு எத்தனே தரம் சொன்னாலும் விடாமே தாத்தறாங்களே !!"

எது சமுதாயநல அபிவிருத்தி ?

ஏழைகளின் வாழ்வை வளமாக்கச் சமுதாய நல அபிவிருத்தித் திட்ட இலாக்கா பெரம்பலூர் வட்டாரத்தில் என்ஜின் பம்ப் செட் வாங்கக் கடனுதவி செய்து வருகிறது. ரொக்கமாகப் பெறுமல் கம்பெனிகளில் சாமான் டெலிவரி எடுக்கச் சென்றாலோ கம்பெனிக்காரர்கள் "உங்கள் அபிவிருத்தித் திட்ட அதிகாரி, ஏதோ பள்ளி கட்டட நிதிக்காக நாடக டிக்கட் நூறு ரூபாய்க்கு வாங்கினால்தான் செக் தருவார்கள் போலிருக்கிறது. எங்களுக்கு நாடகம் வேண்டாம், கொடுக்கும் சாமானுக்குப் பணம் வந்தால் போதும். முதலில் செக் கொடுத்து விட்டு என்ஜினை எடுத்துப் போங்கள்" என்கிறார்கள். அவர்கள் சொல்வது நியாயம்தான். திட்ட அதிகாரியைக் கேட்டாலோ, "நீங்கள் முதலில் என்ஜினை டெலிவரி எடுங்கள். நாங்கள் பணம் அனுப்பிக் கொள்கிறோம்" என்கிறார்கள். கடனுதவி பெற முன்கூட்டியே விவசாயிகள் நாடக டிக்கட் வாங்குவதோடல்லாமல், பயிர் பச்சைகள் வாட, வீட்டையும் வாசலையும் விட்டு விட்டு கம்பெனிக்கும், ஆபீஸுக்கும் நடந்து கொண்டிருந்தால் விவசாயிகளின் கதி என்னவது? இது போலவே உரம் வாங்க வேண்டியிருக்கிறது. தனிப்பட்ட முறையில்

அதிகாரிகள் நாடக டிக்கட் வசூலிக்க வேண்டுமே தவிர, விவசாயிகளை அச்சாணியாகக் கொண்டால் அது தர்மத்துக்கு அழகல்ல.

துறையூர்
8-12-60 துறையூர் சாம்பசிவம்

ரயில் வசதி

இண்டோ ஸிலோன் எக்ஸ்பிரசும், நெ. 101, 102 ரயில்களும் வெகு நாட்களாக நாட்டரசன்கோட்டை ரயில்வே ஸ்டேஷனில் நின்று வந்தன. ஆனால் சென்ற 1-4-59 தேதியிலிருந்து இங்கு நிற்காமல் போய் விடுகின்றன. இந்த ஏற்பாடு நாட்டரசன்கோட்டை மக்கள், வியாபாரிகள், மாணவமாணவிகள், கோவிலுக்கு வரும் பக்தர்கள் எல்லாரையும் பாதிக்கிறது.

காரைக்குடியிலிருந்து இரவு 2-33க்குத் தான் ரயில் இருக்கிறது. ஆகையால் மக்களுக்கு மிகவும் கஷ்டமாக இருப்பதோடு கொழும்பிலிருந்து மாலை வருகிற இண்டோ ஸிலோன் எக்ஸ்பிரஸில் வருகிற இவ்வூர் வணிகப் பெருங்குடி மக்கள் சிவகெங்கையில் இறங்கி வரவேண்டியிருக்கிறது. ஏற்கெனவே பொதுமக்களும் ரயில்வே அதிகாரிகளுக்கு மனுக்கள் அனுப்பியும், தந்திகள் கொடுத்தும் பலனில்லை. இண்டோ ஸிலோன் எக்ஸ்பிரசும், நெ. 101, 102 ரயில்களையும் நாட்டரசன் கோட்டையில் நிறுத்த ரயில்வே அதிகாரிகள் இனியாவது ஏற்பாடு செய்வார்களா?

நாட்டரசன்கோட்டை நா. கண. க.
21-11-60 கண்ணப்ப செட்டியார்

குறைகள் நீங்குமா?!

அரசாங்க உதவி பெறும் எல்லா செகண்டரி உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆசிரியர்களுக்குச் சென்னை அரசினர் புதுச் சம்பள விகிதம் அளித்துள்ளனர். அந்தப்பள்ளிகளில் பணியாற்றும் பிற ஊழியர்களுக்கு அவ்விகிதம் குறிக்கப்படாதிருத்தல் வருந்தத் தக்கது. பள்ளி அலுவலகங்களில் நாள்தோறும் வேலை அதிகரித்து வருகிறது. இந்நிலையில் எளார்க்குகளுக்கு ஒரு சீரான சம்பள விகிதம் குறிக்காமல் பழைய முறையையே தொடரச் செய்வது பொருந்துமா?

வருவாய், பணி செய்யும் காலம் என்னும் இலவற்றில் நாங்கள் தனிப்பட்ட குழுவாகக் கருதப்பட்டு வருகிறோம். ஆனால் 'லீவ்' நாட்களைக் கருதுமிடத்து ஆசிரியர்களுள் ஒருவராகவே மதிக்கப்படுகிறோம். ஆசிரியர்களுக்கு விடுமுறைச் சலுகை அளிக்கப்படுகிறது. அவ்விடுமுறை நாட்களிலும் வருடாந்திரப் பொருளாதாரக் குறிப்பைத் தயாரிக்க நாங்கள் கட்டாயமாக வேலை புரியவேண்டியிருக்கிறது. இவ்வாறு இருக்க, ஆசிரியர்களுக்குத் தரப்பட்ட ஊதியச் சலுகை எங்களுக்கு இல்லாமலிருப்பது ஏனோ? இன்னும், பென்ஷன் திட்டம் எங்களுக்கு வகுக்கப்படவில்லை. இந்தக் குறைகளையெல்லாம் சென்னை அரசு விரைவில் நீக்குமா?

சேலம் வி. சுப்பிரமணியம்
18-11-60 எம். பி. நடராஜன்


ஜனவரி
1 ம்
முதல்
சென்னை
வெலிங்டன்
பிரபாத்
சரஸ்வதி
மற்றும் தென்னாடெங்கும்
ஜூபிடரின்
அரசிளங்குமரி
டைரக்ஷன்: A.S.A. சாமி
கதை, வசனம்
கலைஞர் மு. கருணாநிதி, எம்.எல்.ஏ.
ஸ்டுடியோ
நெப்ட்யூன்
Rights controlled by
JAYANTHI FILMS (MADURAI) PRIVATE LTD., MADRAS-17.

51

உன் நிலாவிய ஐவரால் குமைதீற்றி,
என்னை
உன் பாதபங்கயம்
நண்ணிலாவகையே நலிவான்,
இன்னும் எண்ணுகின்றாய்;
எண் இலாப் பெருமாயனே!
இமையோர்கள்
ஏத்தும் உலகம் மூன்று உடை
அண்ணலே! அமுதே! அப்பனே!
என்னை ஆள்வானே!

உன் நிலாவிய ஐவர் — உள்ளே மறைந்து நின்று பாதகம் செய்யும் விரோதிகளாகிய ஐந்து புலன்கள். குமை தீற்றி — துன்பத்தை நுகரச் செய்து. நலிவான் — வினையெச்சம். நலிவான் (நலிவதற்கு) எண்ணுகின்றாய் என்று கூட்டுக. நண்ணிலா வகை—சேராதபடி.

இரக்ஷகன் அண்மையில் இருப்பதைத் தவிர்த்துக் கொலைஞர் அண்மையில் இருத்தலாயிற்றே என்கிறார். அந்தக் கொலைஞர் கூட்டம் அந்தரங்கமாய் நின்று நலிகிறார்களே என்கிறார். இப்படிச் செய்கிறவர்கள் கணக்கு ஒன்றல்ல, இரண்டல்ல, ஐந்து என்கிறார்.

* * *

விண்ணுளார் பெருமாற்கு அடிமை
செய்வாரையும்
செறும் ஐம்புலன் இவை
மண்ணுள் என்னைப்பெற்றால்,
என்செய்யா மற்றுநீயும் விட்டால்?
பண்ணுளாய்! கவி தன்னுளாய்!
பத்தியின் உள்ளாய்
பரமீசனே! வந்து, என்
கண்ணுளாய்! நெஞ்சுளாய்!
சொல்லுளாய்! ஒன்று
சொல்லாயே.

அறிவில் சிறந்தாரையும் வருத்துகின்ற ஐம்பொறிகள் நீயும் கைவிட்டால் பலமற்றவனான என்னை என்ன தான் படுத்தா? என்கிறார்.

செறும்—வருத்தும்.

சம்சாரத்திலே முமுக்ஷுக்களாய்க் கைங்கரியத்தில் மூழ்கியிருப்பவர்களையும் ஐம்பொறிகள் வருத்தும். விசுவாமித்திரர் சுக்ரீவன் இவர்கள் உதாரணம். கீதை 6-24-ல் அருச்சுனன் "அந்த மனத்தினை அடக்குதல் காற்றை அடக்க முடியாதது போல் செய்ய முடியாத காரியமாக நான் நினைக்கிறேன்" என்றான்.

* * *

ஆழிஎழ, சங்கும் வில்லும்எழ, திசை
வாழிஎழ, தண்டும் வாளும்எழ,
அண்டம்
மோழைஎழ, முடிபாதம்எழ, அப்பன்-
ஊழிஎழ — உலகம் கொண்டவாறே.

ஆறு மலைக்கு எதிர்த்து ஓடும் ஒலி,
அரவு
ஊறு சுலாய் மலை தேய்க்கும் ஒலி,
கடல்
மாறு சுழன்று அழைக்கின்ற ஒலி—
அப்பன்
சாறு பட, அமுதம் கொண்ட
நான்றே!

இந்தப் பாசுரங்களில் ஆழ்வார் திருவிக்கிரம அவதாரத்தையும் கடலைக் கடந்து அமுதம் எடுத்த கதையையும் பாடுகிறார்.

மோழை—குமிழி. அரவு—வாசுகிப் பாம்பு; அரவு ஊறு சுலாய்—வாசுகியினுடைய உடலைச் சுற்றிக் கடைகிற போது; சுலாய் — சுற்றி; மாறு சுழன்று — வலமும் இடமுமாக; சாறு — அமுதம். சாறுபட — வெண்ணெய் போல் அமுதம் மேல் எழ. நான்று— காலம் இதுவே. 'எஞ்ஞான்று' 'அஞ்ஞான்று' என்கிற சொற்களிலுள்ள அடிச் சொல்.

* * *

கற்பார் இராம-பிரானை அல்லால்,
மற்றும் கற்பரோ—
புல் பா முதலா, புல்எறும்பு
ஆதி ஒன்று இன்றியே,
நல் - பால் அயோத்தியில் வாழும்
சராசரம் முற்றவும்,
நல் - பாலுக்கு உய்த்தனன் —
நான்முகனார் பெற்ற நாட்டுளே?

சீதாராம சரித்திரத்தை எண்ணி உருகி ஆழ்வார் இவ்வாறு பாடுகிறார்.

புல்பா—பாபுல்—பரவி நிற்கும் புல். தாவரங்களில் தாழ்ந்தது புல், ஜங்கமங்களில் தாழ்ந்தது எறும்பு. இவை இரண்டையும்வைத்துச்சொல்லுகிறார்.

ஞானத்தால் மோக்ஷம் என்கிற நியதியைத் தவிர்த்து ஞானம் உண்டாவதற்கு இடமில்லாத புல்லும் எறும்பும் மேல் பதவி அடைந்தன. பெருமான் கிருபைக்கு ஞானம் உண்டாவதும் உண்டாகாததும் காரணம் அல்ல.

ஒன்று இன்றியே — பேற்றுக்குத் தகுந்த ஒரு சாதனமும் இன்றி. இது ஈடு வியாக்கியானம். முழுவதும் என்கிற பொருள் அல்ல. ஒரு சாதனமும் இல்லாமலே என்பது பொருள் என்கிறார் வியாக்கியாதா. முழுவதும் என்கிற பொருளைக் காட்டுகிற சொல் 'முற்றவும்' என்பது தனியாக இருக்கிறபடியால் 'பேற்றுக்குத் தகுந்த சாதனம் ஒன்றும் இல்லாமலே' என்பது பொருள் என்கிறார்.

நற்பால் அயோத்தி — நல்ல இடமான அயோத்தி. பால்—இடம். அந்த நிலத்தை மிதித்தாலே ராமபக்தி உண்டாகும். நற்பாலுக்கு உய்த்தனன் — நல்ல சுபாவத்தை அடையும்படி செய்தான், அல்லது மேலுலகம் தந்தான்.

* * *

நாட்டில் பிறந்தவர் நாரணற்கு
ஆள் அன்றி, ஆவரோ—
நாட்டில் பிறந்து, படாதனபட்டு,
மனிசர்க்காய்
நாட்டை நலியும் அரக்கரை
நாடித் தடிந்திட்டு,
நாட்டை அளித்து, உய்யச்செய்து,
நடந்தமை கேட்டுமே?

இந்த உலகத்திலே பிறந்து, படாத துன்பம் எல்லாம் பட்டு, நாட்டை வருத்தி வந்த அரக்கர்களைக் கொன்று நாட்டைப் பாதுகாத்து மக்களை வாழச் செய்த ராமனுடைய சரித்திரத்தைக் கேட்டபின் அந்த பிரானுக்கு ஆளாவரேயன்றி வேறு ஒருவருக்கு அடிமை யாவரோ?

* * *

எங்குத் தலைப்பெய்வன்நான்—
எழில் மூவுலகும் நீயே;
அங்கு உயர் முக்கண் - பிரான்
பிரம - பெருமான் - அவன்நீ;
வெம் கதிர் வச்சிரக் கை
இந்திரன் முதலாத் தெய்வம் நீ:-
கொங்கு அலர் தண்அம் துழாய்முடி
என்னுடைக் கோவலனே?

எங்குத் தலைப்பெய்வன்நான்—நான் உன்னை எங்கே வந்து கிட்டுவேன்.— வச்சிரக்கை இந்திரன்—வச்சிராயுதத்தைக் கையிலே உடைய இந்திரன். கோவலன்—கோபாலன்.

* * *

இல்லை நுணுக்கங்களே
இதனில்பிறிது என்னும் வண்ணம்
தொல்லை நல்நூலில்
சொன்ன உருவும், அருவும் நீயே;
அல்லித் துழாய் அலங்கல்
அணிமார்ப - என் அச்சுதனே!
வல்லது ஓர் வண்ணம் சொன்னால்,
அதுவே உனக்கு ஆம் வண்ணமே.

இதனைக் காட்டிலும் வேறு சூக்ஷ்மமான பொருளே இல்லை என்று சுருதியில் சொல்லப்பட்ட பிரம்மம் நீயே. நாம் காணும் பொருள்களெல்லாம் நீயே. நமக்குக் கோசரமாகாத அவற்றின் உயிரும் நீயே. நம்மால் முடிந்த அளவு நாம் உன்னைப் பற்றித் தெரிந்தாற் போல் ஏதேனும் சொல்லலாம். அவ்வளவே யொழிய அதற்கு மேல் இட்டமாகச் சொல்ல இயலாது. அப்படிக் குறைகள் நிறைந்த முறையில் உன்னைச் சொன்னாலும் அதையும் ஏற்றுக் கொள்வாய். அது உன் பெருமை என்கிறார்.

அணுக்களுக்கு அணுவானது பிரம்மம் என்பது உபநிஷத்து.

"வாக்கும் மனமும் அவனைக் கிட்டாமல் திரும்பும்" என்பதும் உபநிஷத்து.

இந்தப் பாசுரத்தின் கடைசி அடியின் பொருள் கொஞ்சம் சிக்கல். ஆனால் பல சுருதியில் தெளிவாகச் சொல்லப்படுகிறது: "ஆம் வண்ணம் இன்னது ஒன்று என்று அறிவது அரிய அரியை ஆம் வண்ணத்தால் குருகூர்ச் சடகோபன் அறிந்து உரைத்த" என்று.

மிகச் சிறியேனை என்னை ஞானம், சக்தி முதலியவைகளை உடையேனும்படி செய்து என்னை இட்டுத் திருவாய்மொழி பாடுவித்துக் கொண்ட உபகாரத்தை நான் சொல்லித் தீர்க்க இயலாது. எவ்வளவு சொல்லியும் போதாது என்கிறார்.

நேசித்தேன் நேசிப்பேன்!



திருச்சிற்றம்பலக் கவிராயர்


ஏசுப்
நேசித்தேன் ;
பரலோக
உரைசெய்நீர்
வரவில்லை !
நரகுலகின்
தீய
தூய
ஏசுப்
நேசித்தேன் ;
ஆணிபல
தூணின்மேல்
நீணிலத்தில்
காணுங்கால்
அவமானம்
தவமே
சுமந்தாவி
சமயத்தே
சொல்லுமொரு
இல்லையென்று
அல்லற்
இல்லையெனத்
உம்மையே
கைம்மாறு
ஏனென்றால்,
தானடைவேன்
ஏசுப்
நேசிப்பேன் ;

பெருமகனே !
நேசிப்பேன் ;
வாழ்வினுக்குப்
என்பதனால்
அஃதேபோல்
அச்சத்தால்
செயல்பலவும்
வழிநடக்கத்
பெருமகனே !
நெஞ்சமெலாம்
கொண்டறைந்து,
உமையேற்றித்
உமக்கிழைத்த
உள்ளமெலாம்
பலபட்டும்,
சதைப்புண்டும்
தனைவிடுத்த
உள்நெகிழ்ந்து
பரலோகச்
பேறனும்
படுத்துகின்ற
தெரிந்தாலும்
நேசிக்கும்
தனைநோக்கிக்
என்வாழ்வில்
எனுமுறுதி
பெருமகனே !
நேசித்தேன் ;


எந்நாளும்
நேசித்துக்
பாதையிது
உள்ளத்தே
வாதைதரும்
நடுக்குற்று
செய்யாது,
துணிந்திட்டேன்
என்றாலும்
நெகிழ்ந்தும்மை
அவமதித்து,
துன்பிழைத்த
நிட்டூரச்
கரைந்தும்மை
அருவியெனக்
தாரணியில்
துயர்க்கோலம்
தளர்ந்தும்மை
சுகவாழ்வும்
என்றுமுமை
அருநரகம்
என்றுமுமக்
உறுதிக்காய்
காத்திருப்போன்
எதிர்பார்க்கும்
தானில்லை
எந்நாளும்
நேசித்துக்

நானும்மை
கொண்டிருப்பேன் !
என்றேநீர்
உமைப்போற்றி
துன்புறுத்தும்
உமக்கெதிராய்த்
நானுலகில்
என்பதில்லை !
நானும்மை
நேசித்தேன் !
சிலுவைமரத்
கொடுமையையும்
செயல்களையும்
நேசித்தேன் !
குருதிபெயும்
கொடுந்துன்பைத்
தனைக்காணும்
நேசித்தேன் !
பெருவாழ்வும்
நேசிப்பேன் !
என்றென்று
கசிந்திடுவேன் !
உம்மிடத்தே
அல்லேன்நான் !
எதனையுமே
யென்றாலும்
நானும்மை
கொண்டிருப்பேன்

[பதினாறும் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஸ்பானியக் கவிதை யொன்றின் தமிழாக்கம் இது. மூல ஆசிரியரின் பெயர் தெரியவில்லை.]







மைசூர் சிமெண்ட் தொழிற்சாலை

மைசூர் ராஜ்யத்தில் தும்கூருக்கு அடுத்த அம்மஸான்ட்ரா என்னும் இடத்தில் வெகு வேகமாக உருவாகிக் கொண்டு வரும் மைசூர் சிமென்ட்டுக் கம்பெனித் தொழிற்சாலையின் நிர்வாகக் காரியாலயக் கட்டடத்துக்கு மத்திய சர்க்கார் தொழிற்துறை அமைச்சர் திரு லால் பஹதூர் சாஸ்திரி சமீபத்தில் அஸ்திவாரக் கல் நாட்டினார்.

இந்தக் கம்பெனியின் நிர்வாக டைரக்டரான திரு பி. கே. சாரங்கபாணி முதலியார் அச் சமயம் அமைச்சரை வரவேற்றுப் பேசுகையில், இரண்டு விஷயங்களைப் பற்றி விசேஷமாகக் குறிப்பிட்டார்.

இந்தத் தொழிற்சாலை அரசாங்கத் தொழிலிலேதான் உருவாக வேண்டும் என்று சர்க்கார் ஆரம்பத்தில் எண்ணியிருந்தார்கள். பின்னர் தனியார் தொழிலுக்கு இதை ஒதுக்கி விடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. சர்க்காரின் சஞ்சலத்தைப் பார்த்துப் பயந்து தொழிலதிபர்கள் எவரும் துணிந்து இதை ஆரம்பிக்க முன்வரவில்லை. இந்நிலையில் திரு சாரங்கபாணி முதலியார் முன்வந்து இந்தத் தொழிற்சாலையை நிறுவி நடத்தும் பொறுப்பை மேற்கொண்டு அதற்கென்று பூர்வாங்க வேலைகளை அசுர வேகத்தில் முடித்து, கம்பெனி ஆரம்பித்து, மூலதனம் திரட்டித் தொழிற்சாலையையும் கட்டி முடித்துக் கொண்டிருக்கிறார். அரசாங்கம் தம் மீது வைத்த நம்பிக்கைக்காக அவர் முதலில் சர்க்காருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

சிமென்ட் தொழிலில் மந்த நிலை தோன்ற ஆரம்பித்து விட்டதோ என்று சாதாரணமாகத் தொழிலதிபர்கள் வட்டாரங்களில் சமீப காலம் வரையில் எண்ணப்பட்டது. ஆனால் இத்தொழிலில் அவ்வித நிலைமை ஏற்படவில்லை என்பது மட்டுமல்ல; விஸ்தரிப்புக்குக்கூட இடம் இருக்கிறது என்பதைப் புள்ளி விவரங்களுடன் திரு முதலியார் எடுத்துக் கூறினார். மேலும் மூன்றாவது திட்ட காலத்தில் சிமென்ட் தொழிலுக்கு நல்ல எதிர்கால வாய்ப்புகள் உள்ளனவென்பதை வலியுறுத்துவது போல், திரு லால்பஹதூர் சாஸ்திரி, மைசூர் சிமென்ட் தொழிற்சாலையின் உற்பத்தி அளவை இரு மடங்காக இப்போதே பெருக்கி விடலாம் என்று ஆலோசனை கூறினார்.

இதைக் கவனிக்கும் போது இந்தக் கம்பெனிக்கு நல்ல எதிர்காலம் இருப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது.

பிரபல அமெரிக்க ஸ்தாபனமாகிய கெய்ஸர் கார்ப்பரேஷனுடைய கூட்டுறவைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட இந்தத் தொழிற்சாலையில் நவீன முன்னேற்ற நுட்பங்களனைத்தையும் இணைத்து நூதன யந்திர சாதனங்கள் நிறுவப்பட்டிருப்பதால் இதன் உற்பத்தியும் அடக்க விலையும் லாபகரமாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடிக்கல் நாட்டு விழாவின்போது எடுக்கப்பட்ட படங்களுடன் (கீழே) தொழிற்சாலையின் முடிவான நிலைத் தோற்றமும் (மேலே) பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. — பிருகி



நிலவும் நீளும்

கஜமுகன்

இரவு பதினொரு மணி ஆகியும் மாடி வீட்டுப் பேர்வழிகள் வந்தபாடில்லை. கோதண்டத்துக்குத் தூக்கம் கண்ணைச் சுழற்றியது. உலகத்திலுள்ள வானொலி ஒலிபரப்புகளை யெல்லாம் கேட்டாகிவிட்டது. புத்தகங்களை யெல்லாம் படித்து ஏப்பம் விட்டாகி விட்டது. மனைவியோ எட்டு மணிக் கெல்லாம் குழந்தைகளை மடக்கிப் போட்டுக் கொண்டு தானும் துயில் போய் விட்டாள்.

மாடி வீட்டுக்காரன் வந்து அவன் பாலை எடுத்துக் கொண்டு போகிற வரையில் எப்படி விழித்துக் கொண்டிருப்பது? ஒரு தூக்கம் போடலா மென்றால், கோதண்டம் தூங்கினால் கடப்பாரையால் அடித்துத்தான் எழுப்பியாக வேண்டும். இரவு முழுதும் கண்விழித்துக் கொண்டிருந்தா லும் இருப்பானே தவிர அரைத் தூக்கத்தில் எழுந்து வருவது என்பது அவனால் முடியாத காரியம். எட்டு மணிக்கே தூங்கிப் போன மனைவி எழுந்து வரக்கூடாதா என்றால், அவளுக்குத் தூக்கம் கலைந்து விட்டால் மறுபடியும் தூக்கம் வராது. அதன் பலனைக் கோதண்டமும் குழந்தை களும் மறுநாள் அனுபவித்தாக வேண்டும்.

மணி பதினொன்றரை அடித்தது. வாசலில் ஒரு வாடகைக் கார் வந்து நின்றது. கோதண்டம் பெருமூச்சு விட்டுக்கொண்டே எழுந்து அடுப்பங் கரையில் காய்ச்சி வைத்திருந்த பாலை எடுத்து வந்தான்.

''கோதண்டம் சார்!'' என்று இழுவாக மாடி வீட்டுக்காரன் குரல் கொடுத்தான்.

கதவைத் திறந்தபோது ''ரொம்ப நேரம் ஆகிவிட்டது. மன்னிக்க வேண்டும்'' என்று பல்லைக் காட்டினான் மாடி வீட்டுக்காரன்.

''அதனால் என்ன சார்!'' என்றான் கோதண்டம் சுருக்கமாக.



''இனப்படி உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறேன். சாயங்காலம் பால் வேண்டாமென்றால் என் மனைவி கேட்கவில்லை...''

''ஒரு சிரமமுமில்லையே...''

மாடியில் அவர் மனைவி கதவு திறந்த சத்தம் அந்த நள்ளிரவில் சதுக்கத்தையே கிடுகிடுக்க வைத்தது.

''என்ன சார் வீடு கட்டியிருக்கிறான்? ஒரு வீட்டில் கதவைத் திறந்தால் போதும், ஊர் முழுதும் சத்தம் கேட்கிறது'' என்றான் மாடி வீட்டுக்காரன்.

''சர்க்கார் வீடுதானே?''

''கட்டி ஒரு வருஷமாகிறது. அதற்குள் சுவரெல்லாம் விரிசல்; கதவெல்லாம் கரையான்.''

''கண்டிராக்டர் சாப்பிட்டது போக மிச்சத்தில் கட்டிய வீடுகள்தாமே.''

''கோதண்டம் சார்! கோபித்துக்கொள்ளாதீர்கள், இன்று போன இடத்தில் இலேசில் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். பக்கத்தில் டாக்ஸியும் கிடைக்கவில்லை.'' மறுபடியும் தனது தாமதத்துக்கு மன்னிப்புக் கேட்கத் தொடங்கினான்.

''போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்.''

மாடி வீட்டான் கோதண்டத்தின் வறண்ட சுருக்கமான பதிலைக் கேட்டு, அசடு வழிய, பிரிய மனமில்லாமல் மாடி ஏறினான்.

''என்ன இத்தனை நேரம் கீழே பேச்சு வேண்டியிருக்கிறது? பாலைக் கொடுத்தால் வாங்கிக் கொண்டு உடனே வரவேண்டியது தானே?'' மாடியில் பெண்குரல் சிடுசிடுத்தது.

''கொஞ்சம் கூட நாகரிகமில்லாமல் பேசுகிறாயே! நம் காரியம்தானா முக்கியம்? தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு நமக்காக இத்தனை நேரம் விழித்துக் கொண்டிருப்பவர்களிடம் நாலு வார்த்தைகள் இதமாகப் பேச வேண்டாமா?''

''இதமாய்ப் பேசுவதற்கு நேரம் பார்த்தீர்களே நள்ளிரவில்! சரி! சரி! படுக்கலாம். பால் சூடாக இருக்கிறதா, இல்லை, ஆறித் தொலைந்து விட்டதா?''

''உன் வார்த்தை மாதிரிச் சூடாகத்தான் இருக்கிறது. இதோ பார், வனிதா! நான் சொல்லிவிட்டேன். நாளை முதல் இந்த வேலை வேண்டாம். பால் வேண்டுமானால் அல்வாக் கடையில் வாங்கிக் குடித்துக் கொள்ளலாம். கீழ் வீட்டுக்காரரை இனிமேல் தொந்தரவு செய்யக் கூடாது.''

''சரி சரி. உங்கள் வேலையைப் பாருங்கள். நான் மாமியிடம் சொல்லிக் கொள்கிறேன்'' என்று அந்த வனிதை கணவனுக்கு வாய்ப் பூட்டுப் போட்டாள்.

இரவின் நிசப்தத்தில் கோதண்டத்தின் செவிகளில் இந்த உரையாடல் கணீரென்று விழுந்தது. ''விசித்திரமான தம்பதிகள்!'' என்று முணுமுணுத்துக் கொண்டு படுத்தான்.

2

காலை மணி ஐந்தடிக்கும்போது 'கோதண்டம் சார்!' என்று குரல் கொடுத்தான் மாடி வீட்டுக்காரன்.

''இதோ வந்துவிட்டேன், மார்க்கண்டன்!'' என்று கோதண்டம் கையில் ஒரு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

காற்று குளுகுளுவென்று வீசியது. கோதண்டத்தையும், மார்க்கண்டனையும் போல் அந்த விடியற்காலை வேளையில் கையில் ஒரு தூக்குப் பாத்திரத்துடன் பலர் வடக்கு நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள்.

புதுதில்லி சர்க்கார் குடியிருப்புப் பேட்டைகளில் இந்தக் காட்சியை எந்தக் காலத்திலும் காலை வேளையில் காணலாம். நேரில் கறந்த பாலை வாங்குவதற்காக ஒரு மைல் இரண்டு மைல்கூட நடப்பார்கள். இதற்காகக் காலை நாலரை மணி ஐந்து மணிக்கே கூட எழுந்து விடுவது வழக்கம்.

சர்க்கார் காரியாலயத்திலிருந்து எட்டு மைல் தொலைவில் 'துக்ளக்புரா' என்று ஒரு புதிய பேட்டையை நிர்மாணித்து மார்க்கண்டனுக்கும், கோதண்டனுக்கும் வீடு கொடுத்திருந்தார்கள்.

கோதண்டம் தில்லிக்கு வந்து பத்து வருஷங்களுக்குப் பிறகு இந்த வீடு கிடைத்தது. மார்க்கண்டன் ஊருக்கு வந்து ஒரு வருஷத்துக்குள் யார் யாரையோ பிடித்து, பலவித பொய்களைச் சொல்லி ஒரு வீட்டைத் தனக்கு ஒதுக்கச் செய்து விட்டான்.

துக்ளக்புரா வீடுகள் மிகவும் துர்ப்பலமுடையவை. வீடு கட்டிய கண்டிராக்டர் பெரிய எத்தனாய் இருக்க வேண்டும். ஒற்றைக்கல் சுவர். மட்டமான மரக்கதவுகள். புழுதிப் புயல் அடித்தால் வீடு நிறைய மண். கண்ணாடி ஜன்னல்கள் வீதிக் குழந்தைகளின் பந்துகளுக்கும் கற்களுக்கும் அடிக்கடி இலக்காகிக் கண்ணாடிகள் சிதறும். அவற்றைப் போட மராமத்துப் பிரிவுக்கு நடைநடையாக நடக்க வேண்டும். இந்த லட்சணத்தில் மாடியில் ஒரு வீடும் கீழே ஒரு வீடுமாகக் கட்டியிருந்தார்கள். மாடியில் ஒரு சிறு ஆணி அடித்தாலும் கீழே தலையில் அடிப்பதுபோல அதிரும். மாடிவீட்டுக்காரனுக்குக் கீழ்வீட்டுக்காரனைப் பிடிக்காவிட்டால் குப்பை கூளங்களெல்லாம் கீழ்வீட்டு வாசலில்தான் விழும். கேட்டால் வம்பு!

நம்ப ஊர்க்காரனாக மாடியில் குடி வந்தானே என்று கோதண்டம் சந்தோஷப் பட்டான். கோதண்டத்தின் மனைவி விசாலத்துக்கும், மாடி வீட்டில் குழந்தை குட்டியில்லாதவர்களாகக் குடி வந்தார்களே என்று பெரு மகிழ்ச்சி.

குடிவந்த அன்றிலிருந்து கோதண்டமும், மார்க்கண்டனும் நண்பர்களாகிவிட்டார்கள். கடைகண்ணிக்குப் போவது, ஆபீசுக்குப் போவது எல்லாம் சேர்ந்துதான் போவார்கள்.

தொடக்கத்தில் இந்தக் கூட்டுறவு இருந்தது. பிறகு கோதண்டமே மார்க்கண்டனின் பல அலுவல்களைக் கவனிக்கும்படி நேர்ந்தது.

மார்க்கண்டன் சுகவாசி. உடம்பு வணங்கி அவனால் வேலை செய்ய முடியாது. அவன் மனைவியும் அதே வழிதான். கல்யாணமாகிப் பத்து வருஷங்களாகியும் குழந்தை ஏதும் பிறக்கவில்லை. பாதி நாட்கள் வீட்டில் சமையல் கிடையாது; எங்கேயாவது போவார்கள். ஹோட்டலில் சாப்பிடுவார்கள். ஞாயிற்றுக்

கிழமைகளில் அவர்கள் வீட்டிலேயே தங்க மாட்டார்கள். சினிமா, நாடகம், கச்சேரி, நண்பர்கள் வீடு என்று சுற்றப் போவார்கள். அவர்களைத் தேடி வருகிறவர்களுக்குக் கோதண்டமோ விசாலமோதான் பதில் சொல்லியாக வேண்டும். ஞாயிற்றுக் கிழமையன்று சலவைத் துணிகளையெல்லாம் கோதண்டம்தான் வாங்கி வைக்க வேண்டும்.

கோதண்டமும் மார்க்கண்டனும் சேர்ந்து தவறாமல் செய்யும் காரியம் விடியற்காலை எழுந்து பால் வாங்கப் போவதுதான். அந்த வேளைக்கு மார்க்கண்டனால் எங்கும் போக முடியாமல் போனதால் அந்த வேலைக்குக் கோதண்டத்தை எதிர்பார்க்காமலிருந்தான். சாயங்காலத்திலோ வனிதா கணவனை ஆபீஸ் வாசலில் சந்தித்து அங்கிருந்து ஊர் சுற்றப் போய் விடுவாள். அதனால் மார்க்கண்டன் வீட்டுப் பாலைக் கோதண்டத்தின் மனைவிதான் வாங்கி வருவாள்.



குமாரி அமிர்த பாஷிணியின் அரங்கேற்றம் சமீபத்தில் விமரிசையாக நடைபெற்றது.

கோதண்டமும் விசாலமும் மிகவும் நல்ல மனமுடையவர்கள். மாடி வீட்டாரின் அலுவல்களை அவர்கள் ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. பிறர் வாழ்க்கை எப்படியிருந்தாலும் அதைப்பற்றிப் புறம்பேசும் வழக்கமும் அவர்களுக்குக் கிடையாது.

வனிதா அடிக்கடி கீழ்வீட்டுக்கு வருவாளே தவிர, விசாலம் மாடி ஏறிப்போனதை விரல் விட்டு எண்ணிவிடலாம். தன் வேலை உண்டு, தானுண்டு என்றுதான் இருப்பாள்.

வனிதா தான் போய்விட்டுவந்த இடங்கள், பார்த்துவிட்டு வந்த திரைப்படங்கள், நாடகங்கள் எல்லாவற்றையும் பற்றி ஒன்று விடாமல் விசாலத்தினிடம் சொல்லுவாள். விசாலம் புன்னகையுடன் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருப்பாள். தன்னால் அதற்கெல்லாம் போக முடியவில்லையே என்று சிறிதும் குறைப்பட்டுக் கொள்ளமாட்டாள். எதற்கும் போக வேண்டுமென்ற ஆவலைக் கூடக் காண்பிக்க மாட்டாள்.

நாலு குழந்தைகள் இருந்தும் கோதண்டத்தின் வீடு எப்போதும் துப்புரவாக இருக்கும். பாத்திரம் தேய்ப்பதற்கு வேலைக்காரிகூடக் கிடையாது. இரண்டே பேர்கள் உள்ள மாடி வீடோ எப்போதும் ஒரே களேபரமாய்த்தான் கிடக்கும். மூலைக்கு மூலை துணிமணிகளும் புத்தகங்களும் சிதறிக் கிடக்கும். சமையல் அறையில் கால்வைத்தால் வழுக்கி விழவேண்டியதுதான். வனிதா குடித்தனம் நடத்தும் இலட்சணத்தை வேறொருவராய் இருந்தால் கைகொட்டிச் சிரித்திருப்பார்கள்.

விசாலம் எதுவுமே சொல்லமாட்டாள். யாராவது வந்து குறை சொன்னாலும், ''அப்படியா!'' என்று ஆச்சரியத்துடன் கேட்பதுபோல் கேட்டுவிட்டுக் கருத்தேதும் தெரிவிக்காமல் இருந்து விடுவாள்.

வனிதாவுக்கு விசாலத்தின் வேலைகளின் நேர்த்தியைப் பார்க்கப் பார்க்க வியப்பாயிருக்கும். தன்னால் அப்படியிருக்க முடியவில்லையே என்று நினைப்பாள். அது நினைவுடன் நின்று விடும். முயற்சி ஏதும் செய்ய மாட்டாள். ''இத்தனை குழந்தைகளை வைத்துக் கொண்டு எப்படி இவ்வளவு வேலைகளைச் செய்கிறீர்கள்?'' என்று வனிதா கேட்டால் ''நீதான் பார்த்துக் கொண்டிருக்கிறாயே!'' என்று விசாலத்தினிடமிருந்து பதில் வரும்.

* * *

கோதண்டமும் மார்க்கண்டனும் தங்கள் பாத்திரங்களைப் பாலுக்காக மரப்பெஞ்சு ஒன்றில் 'க்யூ' வரிசையில் வைத்து விட்டு ஒதுங்கி நின்றார்கள்.

''என்ன சார் தூக்கம் கலையவில்லையா?'' என்று மார்க்கண்டன் பேச்சுக் கொடுத்தான்.

''தூங்கினால் தானே கலைவதற்கு?''

''என்ன தூங்கவே யில்லையா?''

''நீங்கள் வரும்போது தூக்கம் கண்ணைச் சுற்றியது உண்மைதான். நீங்கள் வந்து விட்டுப் போனபின் தூக்கம் போய்விட்டது.''

கோதண்டம் இவ்வாறு பேசியது மார்க்கண்டனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. குற்றம் சாட்டும் வகையில் இதுவரையில் அவன் பேசியதேயில்லை.

''என்ன சார், என்னால் தூக்கம் போய் விட்டதா? அடடா, ரொம்ப மன்னிக்கணும், சார். இனிமேல் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க மாட்டேன் சார்!''

''நீங்கள் அப்படிச் சொன்னதுதான் சார் என் தூக்கத்தைக் கெடுத்து விட்டது. எங்களுடன் பல மாதங்களாகப் பழகியும் நீங்கள் எங்களைத் தெரிந்து கொள்ளவில்லையே என்ற வருத்தத்தில் நான் தூங்கவில்லை.''

''என் மனைவியிடம் இரவு நான் சொன்னது உங்கள் காதில் விழுந்து விட்டதா? அவளால்தான் நேரமாகிவிட்டது. பத்து மணி வரையில் பேசிக் கொண்டிருந்தாள். நேரமாகி விட்டது. பஸ் கிடைக்காமல் டாக்ஸி தேடி வரும்படியாயிற்று.''

''அதற்காக?''

''தினப்படி இம்மாதிரியானால் நன்றாக இல்லையே!''

''யார் சொன்னார்கள்?''

''எனக்கே தோன்றுகிறது!''

''அதனால்தான் வருத்தப்பட்டேன். உங்களுக்கு அம்மாதிரி தோன்றும்படி நான் நடந்து கொள்ளவில்லையே என்று எண்ணினேன்.''

மார்க்கண்டன் திகைத்துப் போய்க் கோதண்டத்தை பார்த்துக் கொண்டிருந்தான். 'நம்மால் இந்த மனுஷனுக்கு எவ்வளவு தொல்லைகள். இவ்வளவையும் பொருட்படுத்தாமல் இவன் எதற்காக உதவி செய்கிறான்? நம்மிடமிருந்து ஒரு துரும்புகூட

இரவிலோ, கடனே வாங்குவதில்லை. ஒவ்வொருத்தன் ஆபத்து உயிர் போகிறது என்றால் கூட டாக்டரைக் கூப்பிட ஓடமாட்டேன் என்கிறான். இந்த ஆள் உதவி செய்வதையே, அதுவும் சோம்பேறியாகிய எனக்கு உதவி செய்வதையே பெரிய திருப்பணியாக நினைக்கிறான்.' மார்க்கண்டனின் மனத்தில் எண்ணங்கள் குமிழியிட்டன.

"வாருங்கள் நமது முறை வந்துவிட்டது" என்று கோதண்டம் பாத்திர வரிசைக்கு அருகே போனான்.


3

மார்க்கண்டன் படி ஏறும் போதே கோதண்டத்தின் மனைவியின் குரல் கேட்டது அதிசயமாயிருந்தது. என்றும் வராதவன் இத்தனை விடியற்காலையில் தனது மனைவியை எதற்காகப் பார்க்க வந்திருக்கிறான் என்று ஐயப்பாடு தோன்ற நடையில் நின்று விட்டான்.

"வனிதா! காப்பிப் பொடி இல்லை என்றாயே? அதுதான் கொண்டு வந்தேன். குழந்தைகள் எழுந்திருக்கவில்லை; அதனால்தான் நானே வந்தேன். ஏன் முகமெல்லாம் ஒரு மாதிரியாக இருக்கிறது? ராத்திரி தூங்கவில்லையா?"

"ராத்திரி வரும்போது மணி பதினொன்றரை அடித்துவிட்டது. மாமா அதுவரை விழித்திருந்து பாலைக் கொடுத்தார். இனிமேல் இம்மாதிரி தொந்தரவு கொடுக்கக் கூடாது என்று அவர் கோபித்துக் கொண்டார். நான் உங்களிடம் சொல்லிக் கொள்கிறேன் என்று அவரிடம் ஓங்கிச் சொல்லி விட்டேன். இருந்தாலும் என் மனம் சமாதானமடையவில்லை. 'நமது பழக்கம் கொஞ்ச காலந்தானே. அதற்குள் இவ்வளவு உரிமை எடுத்துக் கொண்டு விட்டோமே!' என்று தோன்றியது. என் செய்கை எனக்கே வெட்கமாயிருந்தது. வெகு நேரம் இதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன்."

"பேஷ், தேவலையே! வனிதா, நாம் ஊரை விட்டு உற்றாரை விட்டு ஆயிரம் மைல் கடந்து வயிற்றுப் பிழைப்புக்காக இங்கு வந்திருக்கிறோம். வந்த இடத்தில் ஒருவருக்கொருவர்



உதவியாய் இருந்தால் என்ன நஷ்டம் வந்து விடும்? ஒரு பாலை வாங்கிக் காய்ச்சிக் கொடுப்பதுகூட ஒரு பெரிய தொந்தரவாகக் கருதினால் நாம் மனிதர்களே இல்லை. இதற்காக நீ மனத்தைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே!''

''இருந்தாலும் நாங்கள் செய்வது சரியில்லைதான், மாமி! நீங்கள் குழந்தை குட்டிக்காரர்கள். நாள் முழுதும் உழைத்து விட்டு ஓய்வெடுத்துக் கொள்ளும் போது, அதற்குத் தடையாக உங்கள் தூக்கத்தைக் கெடுப்பது பாவமில்லையா?''

''என் தூக்கத்தையா? நான்தான் எட்டு மணிக்கே தூங்கி விட்டேனே.''

''உங்களை என்றால் உங்கள் வீட்டுக்காரரைத்தான் சொல்கிறேன். நீங்கள் இனிமேல் சாயங்காலம் பால் வாங்க வேண்டாம்.'' அவள் குரலில் ஒலித்த கண்டிப்பு விசாலத்தைச் சற்று அயர வைத்து விட்டது.

''அப்படியா, சரி! உன் இஷ்டம். இந்தக் காப்பிப் பொடியையாவது வாங்கிக் கொள்வாயல்லவா?''

விசாலத்தின் குரலில் மென்மை இழைந்தது. வனிதா அவள் முகத்தை ஒரு கணம் நோக்கினாள். அவள் கரங்கள் காப்பிப் பொடியை வாங்கின.

''வரட்டுமா?'' என்று சொல்லி விட்டு விசாலம் வெளியே வந்தாள்.

மார்க்கண்டன் அதற்குள் வேறு அறைக்குள் போய் விட்டான். அவள் சென்றதும், ''வனிதா!'' என்று அழைத்தான்.

''நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்?''

''எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தேன். அப்படி வெட்டொன்றும் துண்டொன்றுமாய்ப் பேசியிருக்கக் கூடாது.''

''நீங்கள்தானே ராத்திரி அப்படிச் சொன்னீர்கள்.....?''

''அதன் பலனைக் கோதண்டம் அனுபவித்து விட்டார். நீ அந்த அம்மாளின் மனத்தை நோக அடித்து விட்டாய்.''

''தொந்தரவு வேண்டாமென்றால் அது ஒரு குற்றமா?''

''அப்படித்தான் அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் சிநேகம் வேண்டுமானால் அவர்களுக்குத் தொந்தரவு கொடுத்துத்தான் ஆக வேண்டும் போலிருக்கிறது.''

4

அன்று மாலை வனிதா வெளியில் போகவில்லை. அதற்கு மாறாகப் பால் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கீழ் வீட்டுக்கு வந்தாள்.

''மாமி! உங்கள் பாத்திரத்தையும் கொடுங்கள்'' என்றாள்.

''நானும் வருகிறேன், பேசிக் கொண்டு போகலாம்'' என்றாள் விசாலம்.

''சரி, வாருங்கள்.''

''ஏன், இன்று வெளியில் போகவில்லையா?''

''ஒரே தலைவலி, கொஞ்சம் காற்றாடப் போகலாம் என்றுதான் பாலுக்குப் புறப்பட்டேன்'' என்றாள் வனிதா.

''பால் டெய்ரியில் நல்ல காற்று வரும்? காலையில் சொன்னதைச் செயலில் நிறைவேற்றுகிறாயாக்கும்!''

வனிதா பதில் சொல்லவில்லை.

அன்று முதல் வனிதாவுக்குக் கீழ் வீட்டார் பால் வாங்கி வைப்பது நின்றது. கோதண்டம் மற்ற உதவிகளைச் செய்து வந்தான்.

ஒரு நாள் கோதண்டத்தின் குழந்தை ஒன்று சைக்கிளில் அடிபட்டு விட்டது. அதை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு போக வேண்டும். தன்னோடு வர முடியுமா என்று வனிதாவை விசாலம் கேட்டாள்.

''இதற்கென்ன மாமி துணை? நான் ஐந்து மணிக்கு அவரைச் சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறேனே...''

விசாலம் மறு பேச்சுப் பேசாமல் தன் மற்றொரு குழந்தையின் துணையுடன் ஆஸ்பத்திரிக்கு ஓடினாள்.

காயத்துக்குக் கட்டுப் போட்டுக் கொண்டு வீடு திரும்பும்போது மணி ஐந்தரையிருக்கும். மாடியில் மார்க்கண்டன் குரல் கேட்டது.

''ஓர் ஆபத்து சமயத்துக்குக் கூடப் போனால் என்ன?'' என்று மார்க்கண்டன் கூப்பாடு போட்டது விசாலத்தின் காதில் விழுந்தது.

''நீங்கள் ஐந்து மணிக்கு வந்து விடுவேன் என்றீர்களே.''

''வந்தால் காத்துக் கொண்டிருக்க மாட்டேனா? அவர்கள் நமக்கு எவ்வளவு உதவி செய்கிறார்கள்? இந்தச் சிறு உதவியை அவர்கள் நம்மிடம் வந்து கேட்டும் உன்னால் செய்ய முடியவில்லையே!''

''அவர்களை யார் உதவி செய்யச் சொன்னார்கள்? முடியாது என்று சொல்லட்டுமே. பாலுக்குச் செய்தது போல் மற்றதையும் செய்து விட்டுப் போகிறோம்.''

''வனிதா! நீ என்ன மனுஷியா? ராட்சஸியா? உனக்கு நன்றி என்பது துளியாவது இருக்கிறதா?''

''மனுஷியாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்வதுதானே! எனக்கு நன்றி உபதேசம் ஒன்றும் செய்ய வேண்டாம்.''

விசாலத்துக்கு அவள் பேச்சு வியப்பாயிருந்தது. இவ்வளவு சரளமாக மனம் விட்டுப் பழகும் வனிதாவா இப்படி விஷத்

ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசார்ய சுவாமிகளின் ஆக்ஞைப்படி ஜனவரி 14-ந் தேதிவரை தினந்தோறும் மாலை 6-30 லிருந்து 8 மணி வரை ஹைதராபாத் ஹிமாயத் நகர் பாலாஜிபவனில் அக்னிஹோத்ரம் இராமானுஜ தாத்தாச்சாரியார் அவர்களால் திருப்பாவை - திருவெம்பாவை விளக்கவுரை நடைபெறும். பக்தர்கள் திரளாக விஜயம் செய்து இந்தப் பகவத் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.


பொங்கல்
வெளியீடு
அன்னபூர்ணாவின்
தாய் உள்ளம்
டைரக்ஷன்·A.சுப்பாராவ்
வசனம்·ஸ்ரீதர்

தைக் கொட்டுகிறான்? மார்க்கண்டன் வீட்டுக்கு வருகிறேன் என்று சொல்லியிருக்கும்போது இவன் ஏன் தான் போய்ச் சந்திக்கப் போவதாகப் பொய் சொன்னான். அவ்வளவு கடின மனமா? நம்ப முடியவில்லையே!

அன்று முதல் அவர்களுடைய உறவு நைந்து சிறுகச் சிறுகக் குறைந்து விட்டது. வனிதா கீழ்வீட்டுக்கு வருவதில்லை. கோதண்டமும் மார்க்கண்டனும் வழியில் பார்த்து, 'சௌக்கியமா?' என்று கேட்பதுடன் நிறுத்திக்கொண்டார்கள். தன் மனைவியின் நடத்தையை எண்ணி வெட்கமுற்றே மார்க்கண்டன் கோதண்டத்திடம் பேசக் கூசினான். ஆனால் வனிதாவுக்கு அநாவசியமான வர்மம் ஒன்று மனத்தில் ஏற்பட்டு விட்டது.

மாடி வீட்டுக்காரர்கள் கீழ் வீட்டாருக்குக் கொடுக்கக்கூடிய சிறு தொல்லைகளையெல்லாம் அளிக்க வனிதா தயங்கவில்லை. மாடியில் 'தடால் தடால்' என்று எதையாவது போடுவது, அநாவசியமாகக் கட்டில்களைத் தரதரவென்று இழுப்பது. எதையாவது போட்டு இடிப்பது. குப்பைகளைக் கீழ் வீட்டுக்கு நேரே கொட்டுவது. இத்தியாதி இடைஞ்சல்களை அவள் செய்து வந்தாள்.

வனிதாவின் இந்தச் செயல்கள் பாவம், மார்க்கண்டனுக்குத் தெரியாது. அவன் இல்லாத நேரத்தில்தான் இவை நடைபெறும். 'இவளுக்கு ஏன் இத்தனை குரோதம்?' என்று விசாலத்துக்குப் புரியவில்லை.

ஒருநாள் கோதண்டத்திடம் மெதுவாக, ''மாடி வீட்டுக்காரிக்கு நம்மைக் கண்டாலே பிடிக்கவில்லை. நாளுக்கு நாள் அவள் அட்டகாசம் அதிகமாகி வருகிறது. எனக்கு அவளிடம் சண்டைபோட விருப்பமில்லை. நாங்கள் சண்டை போட்டால் அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் ரஸிக்கக் காத்திருக்கிறார்கள். வீடு மாற்றும் கேளுங்களேன்'' என்றாள்.

கோதண்டமும் ''சரி'' என்றான்.

ஒரு மாதத்துக்கெல்லாம் புதிய காலனி கஜினிபுராவில் கோதண்டத்துக்கு வீடு கிடைத்தது. அது மாடி வீடாகப் போகவே விசாலத்துக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. இதுக்குப்புறமாய்ப் பிறர் தொல்லையின்றி வாழலாம் என்று நினைத்தாள். கோதண்டம் தனக்கு வேறு வீடு கிடைத்ததை எவரிடமும் சொல்லவில்லை. வீடு மாற்றிய நாளும் ஞாயிற்றுக் கிழமையாகப் போனதால், வழக்கம்போல் மார்க்கண்டனும் வனிதாவும் வீட்டில் இல்லை. சொல்லிக்கொள்ள வேண்டிய தர்மசங்கடமில்லாமல் போயிற்று.

ஒரு வாரம் சென்றிருக்கும். கீழ் வீட்டில் ஏதோ அரவம் கேட்டது. அது வரையில் காலியாக இருந்த அந்த வீட்டுக்கு யாரோ குடிவருகிறார்கள் போலிருக்கிறது என்று விசாலம் எண்ணிக் கொண்டாள். ஆனால் சிறிது நேரத்துக்கெல்லாம் கதவு தட்டும் சத்தம் கேட்கவே விசாலம் போய்த் திறந்தாள்.

''ஆ! நீங்களா?'' என்று திகைத்து நிற்கும் வனிதாவைக் கண்டு விசாலம் முறுவலித்தாள். ''ஏன் என்னை எதிர்பார்க்கவில்லையா? உன்னிடம் சொல்லாமல் கூடவந்து விட்டேன். எனக்கு வருத்தம்தான். அற்ப விஷயத்தைப் பெரிதாக நினைத்துக் கொண்டு விட்டாய். உள்ளே வாயேன். எங்கே வந்தாய்? தனியாகவா வந்தாய்?''

வனிதாவுக்குப் பிரமை நீங்கச் சிறிது நேரம் பிடித்தது. அந்தக் குரலில் அதே கனிவு. அதே இனிமை. 'இவ்வளவு நடந்தும் முகத்தில் கடுகடுப்பைக் காட்டவில்லையே. இந்த அம்மாளிடம் ஏன் விரோதம் பாராட்டினேன்? எனக்கு ஏன் இப்படிப் புத்தி விபரீதமாயிற்று? இவர்கள் முகத்தில் விழிக்க இஷ்டப்படாமல் வேறு வீடு கேட்கச் சொல்லிச் சண்டை போட்டேனே. ஆனால் எனக்கு முன்னாலேயே வந்து மாடி வீட்டில் உட்கார்ந்திருக்கிறார்களே. உயரே இருந்தவள் கீழே போய்விட்டேன். கீழே இருந்தவள் மேலே போய்விட்டாள். கீழே இருந்தால் என்ன? மேலே போனால் என்ன? அவர்கள் என்றுமே உயர்ந்தவர்கள்தான்.'

''ஏன் வனிதா ஒரேயடியாய்த் திகைத்து நின்று விட்டாய்?''

''ஒன்றுமில்லை, மாமி! உங்களைவிட்டு ஓட வேண்டும் என்று வேறு வீடு கேட்கச் சொன்னேன். நீங்கள் எங்களுக்கு முந்திக் கொண்டீர்கள். ஆனால் நானும் உங்களுக்குக் கீழே வந்து விட்டேன்.''

''மாடியில் யாரோ இருப்பார்கள் என்று நினைத்து என்னைப் பார்த்துத் திகைத்து விட்டாயாக்கும்! வனிதா! உன்னிடம் எனக்குக் கோபமே கிடையாது. நீ என் தங்கையைப் போல. ஏதோ உன் மனத்தில் திடீரென்று ஒரு குறை தோன்றி விட்டது. அதற்குக் காரணமும் புலப்பட்டது.....''

''எனக்கே நான் ஏன் அப்படி நடந்து கொண்டேன் என்று புரியவில்லை. என் கையாலாகத்தனம்தான் அப்படி என்னை ஆட்டியதுபோல இருக்கிறது. துக்ளக்புரா வம்புக்காரிகளெல்லாம் நான் அப்படி இருக்கிறேன், இப்படி இருக்கிறேன் என்று வம்படித்தார்கள். அதையெல்லாம் கேட்டுக் கேட்டு என் குற்றம் புரியலாயிற்று. நீங்கள் என்னை எதுவுமே சொன்னதில்லையே என்பதை நினைத்தபோதுதான் உங்கள் பெருமையை உணர்ந்தேன். மாமி! என் செயலுக்கு என்னை மன்னித்து விடுங்கள்.''

''உன் குறை அதெல்லாம் இல்லை. உன் வாழ்வில் அடிப்படைக் குறை ஒன்று உண்டு. அதுதான் உனக்கு வீட்டில் பிடிப்பில்லாமல் அலையச் செய்தது. ஓர் ஏக்க உணர்ச்சி பொறாமையாக மாறி அநாவசிய ஆத்திரத்துக்கு இடம் கொடுத்தது. அந்த ஆத்திரம் உரிய காலம் வரும்போது அடங்கும். அதனால்தான் நான் உன்னிடம் வம்பை வளர்க்க விருப்பமில்லாமல் தனியாக வந்தேன்.''

''என் உள்மனத்திலிருப்பதை நீங்கள் புரிந்து கொண்டு விட்டீர்கள். என் குறை தீரும் காலம் வந்து விட்டது. பத்து வருஷ மணவாழ்க்கைக்குப் பிறகு என் குறை நிறைவடையப் போகிறது. அந்தக் குறைதான் உங்களிடம் தகாதனத்தில் பழகச் செய்திருக்கிறது. இனிமேல் நாம் முன்போலவே இருப்போம்'' என்று கூறி வனிதா விசாலத்தை அணைத்துக் கொண்டாள்.

வாழ்க்கையைப் புனிதமாக்க வேண்டும்!

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதிகள்

அவனன்றி ஓரணுவும் அசையாது. பிரபஞ்சத்தை ஆளும் எல்லாம் வல்ல இறைவனிடத்து அசைக்க முடியாத நம்பிக்கை கொள்ள வேண்டும். பிறரையும் கொள்ளச் செய்ய வேண்டும். இருதய பூர்வமான பக்தி செலுத்த வேண்டும். இந்த நம்பிக்கையை நம் குழந்தைகளுக்கு ஊட்டுவது அவர்களுக்கு நாம் அளிக்கும் என்றும் குன்றாத மூலதனம்.

இந்தமாதம் திருவாதிரைத் திருநாளில் ஒவ்வோர் ஊரிலும் சுவாமி புறப்பாடு உண்டு. சிதம்பரம் தரிசனத்துக்குப் போகப் பலரும் ஆசைப்படுவார்கள். ஒவ்வொரு வீட்டிலும் திருவாதிரைக் களிப் பிரசாதம் ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்கிறார்கள். நம் நாட்டில் நடராஜர் வழிபாடு விசேஷமாக உள்ளது. நடராஜன் பக்கத்தில் சிவகாமசுந்தரி திருக்கோலம் கொண்டிருக்கிறாள். மற்றொரு பக்கத்தில் கையில் புத்தகத்துடன் நிற்கும் சிறிய உருவம் மாணிக்கவாசகருடையது. அவர் ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன் மந்திரியாக இருந்தவர். ஈசுவரனே சரணமென்று தம்மைக் கடவுளுக்கே முடிவில் அர்ப்பணம் செய்து கொண்டவர்.

சில கோயில்களில் விசேஷத் தன்மை

ஆவுடையார் கோயிலில் ஒரு விசேஷம். சுவாமி தெற்கு நோக்கியிருக்கிறார். மூலவரை ஒருவரும் பார்த்ததில்லை. அது ரகசியம். அம்பாள் கோயிலிலும் அம்பாள் விக்கிரகம் இல்லை. பாதுகைகள் வைத்திருக்கின்றன. மற்ற ஆலயங்களில் இருப்பதுபோல, நந்தியும் சண்டிகேச்வரரும் இல்லை. அன்னம் நைவேத்தியம் இங்கே கிடையாது. அன்னத்தின் புகை தீபாராதனை செய்யப்படுகிறது. அம்பாள் யோகாம்பிகை என வழங்கப்படுகிறாள். இந்தச் சூட்சமங்களைக் கவனிக்க வேண்டும். இந்தக் கோயில் சோழ நாட்டிலுள்ள கட்டடக் கலைக்குப் பெயர் பெற்ற ஐந்து கோயில்களில் ஒன்று.

தமிழ் நாட்டுப் பழங்காலத்துச் சிற்பிகள் மற்றக் கோயில்களைக் கட்டும் பொழுது தாங்கள் எழுதிக் கொடுக்கும் உறுதிப் பத்திரத்தில் கீழ்க்கண்ட இந்த ஐந்து கோயில்களில் காணப்படும் விசித்திரமான வேலைப்பாடுகளைத் தவிர மற்ற எந்த வேலையையும் செய்து கொடுப்பதாக வாக்களிப்பது வழக்கம். அந்த ஐந்து விசித்திரங்களாவன : 1. திருவலஞ்சுழி கருங்கல் சன்னல்; 2. ஆவுடையார் கோயில் கொடுங்கை; 3. திருவீழிமிழலை வௌவால் மண்டபம்; 4. டாரங் கொண்டான் மதில்; 5. தஞ்சை நிழல் விழாதகோபுரம். அற்புதமான



ஆவுடையார் கோயில் க்ஷேத்திரத்தில் மாணிக்கவாசகப் பெருமானுக்குப் பரமசிவன் அந்தணர் வடிவில் வந்து ஞானோபதேசம் செய்து அருள் புரிந்தார். மாணிக்கவாசகர் இங்கும் நடராஜர் பக்கத்தில் கையில் திருவாசகத்துடன் காட்சி அளிக்கிறார்.

பரமனின் பக்தர்கள்

ஆண்டாள் சந்நிதி இல்லாத வைணவக் கோயில் இல்லை. தனி மனிதர்களான இவர்களைக் கடவுளாக வழிபடுகிறார்கள். பக்தனைப் பூஜிப்பது தன்னையே வழிபடுவதாகும் என்பது கடவுள் உள்ளம். தனது அனைத்தையும் கடவுளுக்கே அர்ப்பணம் செய்தாள் ஆண்டாள். கடவுளால் ஞானோபதேசம் அடைந்தவர் மாணிக்கவாசகர். பகவானைத் தவிர வேறு சித்தனிருத்தி இவர்களுக்குக் கிடையாது.

நம் போன்றவர்களைக் காமக் குரோதங்கள் அடக்கி ஆள்கின்றன. பயமும் ஆத்திரமும் ஆசையும் நம்மைப் பாதிக்கின்றன. இந்தப் பயமும் அற்ப சுக ஆசையும் முடிவில் சாசுவதமான துக்கத்தை அளிக்கும். இந்த ஆசாபாசங்களை அகற்றுவதற்கு ஒரே வழி, எல்லாவற்றுக்கும் மூலகாரணமான பரம்பொருளிடத்தில் மனத்தை ஈடுபடுத்துவதே. அவ்வாறு செய்தால் நிரந்தரமான ஆனந்தம் கைகூடும். இந்த நித்தியானந்தத்தை அடைய வேண்டும் என்ற ஆசை நமக்கு இருக்கிறது. இதற்கு வழி ஸத்ஸங்கம். இம்மாதிரி ஆனந்தத்தை அநுபவித்த மகான்களை நினைத்தால் நமக்கும் அது கிட்டும். பற்றற்றவர்களைப் பற்றினால் நமக்கும் பற்று அகலும். ஆசை இல்லாதவர்களை நினைத்தால் நமக்கும் ஆசை போய் விடும். எப்பொழுதும் எது உண்மையோ, எல்லாவற்றுக்கும் எது காரணமோ அதைக் காரணமாகவே பார்க்க வேண்டும். நாம் அப்படிப் பார்க்க வேண்டும் என்பதைத் திருமூலர் திருமந்திரத்தில் விளக்கியுள்ளார்.

மரயானையை அரண்மனைக் குழந்தைக்குக் கொடுத்தால் அது அதில் யானையைத்தான் காணும். அதைப் பார்க்கும் தச்சனோ மரத்தைத்தான் பார்ப்பான். தச்சனுக்கு யானை தோன்றாது; குழந்தைக்கு மரம் தெரியாது. பிரபஞ்சத்தைப் பல பொருள்கள் ரூபமாகப் பார்க்கிறோம். சாஸ்திரம் தெரிந்த பெரியோர்களுக்கு இந்தப் பிரபஞ்சம் பரமாத்ம ஸ்வரூபத்தில் மறைந்துவிடும். சிநேகம், சண்டை, ஆசை இவைபோன்ற உலக விவகாரங்களில் பரமாத்மா மறைகிறான். பரமாத்மாவைப் பார்த்தால் இந்தக் காமக் குரோதங்கள் மறையும்; உலகமும் மறையும்.

இந்த அருளைப் பெறுவதற்கு. நேராகக் கடவுளைத்

தரிசனம் செய்வது வெகு கடினம். கடவுளைக் கண்டு ஆனந்தித்த மகான்களை நாம் காணலாம். உண்மையில் உலகத்தையே கடவுளாகப் பார்க்கிறவனே கடவுள். தங்கத்தில் பல விக்கிரகங்கள் ஏற்படுகின்றன. ஆனால் எல்லாம் தங்கமே. காரணத்தை நாம் காண வேண்டும். காரியமாகப் பார்ப்பது பொய். உலகம் பரமாத்மாவால் சிருஷ்டிக்கப் பட்டது. அவர் கருணைவள்ளல்; கிருபா சமுத்திரம். ஆகவே உலகைக் கடவுளாகப் பார்த்தால் எப்பொழுதும் கசக்காது; துக்கம் ஏற்படாது. உலகத்தைப் பரமாத்ம தரிசனமாக உணர்ந்தால் கசப்பும் துக்கமும் மறையும். இந்த நிலையை அடைய, ஈசுவரனைக் கண்ட தாயுமானவர் போன்றவர்கள் நமக்குத் தங்கள் அனுபவங்களை அருளியுள்ளார்கள். அவர்களின் பாடல்களை யெல்லாம் நாம் பாடி அநுபவித்தால் அவர்களுடன் நமக்குச் சம்பந்தம் ஏற்படும்.

வயதானபின் ஏங்க வேண்டாம்

வயதான பிறகு கடவுள் உணர்ச்சி அநேகருக்கு உண்டாகக் கூடும். நமக்கென்று ஒரு காரியமும் செய்து கொள்ளவில்லையே என்று அப்போது அவர்கள் மனம் ஏங்கும். தோத்திரங்கள், உண்மையை அறிவிக்கும் பாடல்கள் போன்றவைகளைக் குழந்தைப் பருவத்தில் சொல்லி வைத்தால் பின்னராவது அவை உபயோகப்படும்.

இருதயம் அவன் இல்லம்

இருதயம் 'அவன் இல்லம்' என்ற உணர்வு ஏற்பட வேண்டும். அந்த இருதய பீடத்தில் பரமனை ஏற்றி வைக்க வேண்டும். நமது தேகம் ஒரு தேவாலயம் போன்றது. அஞ்ஞானத்தை அகற்றி விட்டால் நம் இருதயமும் தேகமும் அவனது இல்லமாக மாறிவிடும். நமது உள்ளம் பரமனுக்கு உரித்தானது. அதில் காமத்தையும் குரோதத்தையும் ஏற்றி வைப்பது அபசாரம். அதில் பரமனை உட்கார வைக்க நமக்குச் சகாயம் செய்யக்கூடியவர்கள், பரம பக்தர்களான மாணிக்கவாசகர் போன்ற பெரியோர்களும் அவர்களின் பாடல்களுமே. தெய்விக உணர்ச்சிகளை ஊட்டும் இந்தப் பாடல்களைக் குழந்தைகளுக்குப் போதிக்க வேண்டும்.

குழந்தைகளுக்குப் பயிற்சி

நம் குழந்தைகளுக்கு இவற்றைக் கற்பிக்க வேண்டும். இதுவே நாம் அவர்களுக்குச் செய்யும் பெரிய உதவி. இந்த மூலதனத்தை நாம் அவர்களுக்கு அளிக்காவிடில் அவர்கள் நம்மைச் சபிப்பார்கள். நம் நாட்டில் ஆஸ்திகம் மறைந்து வருகிறது; தெய்வ உணர்ச்சி குறைந்து வருகிறது. தெய்வ நம்பிக்கை குறைவதால் நாட்டில் துன்பங்கள் மலிகின்றன. தெய்விக உணர்ச்சி ஊட்ட, கொஞ்சிப் பேசும் குழந்தைப் பருவத்திலேயே இப்பாடல்களைப் புகட்ட வேண்டும். இன்று நம் நாட்டில் குழந்தைகள் படிக்க ஆரம்பித்ததுமே, காமத்தை வளர்க்கக் கூடிய சினிமாப் படங்களைப் பார்க்கவும், துவேஷத்தை வளர்க்கும் கீழ்த்தரமான பத்திரிகைகளைப் படிக்கவுமே துரதிருஷ்டவசமாக நேரிடுகிறது. இத்தகைய பழக்கம் ஏற்படுவதற்கு முன்னமே மகான்களின் அன்பொழுகும் குளிர்ந்த கருத்துக்களைக் குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும். புனிதமான மார்கழி மாதத்தில் திருவெம்பாவை-திருப்பாவைப் பாடல்களைப் பாடிக் கொண்டு கிரிப் பிரதக்ஷிணம் செய்ய வேண்டும். இம்மாதிரி முயற்சிகள் வெற்றி பெறப் பிரசாரம் செய்ய வேண்டும். இதற்காகத்தான் தமிழ் நாடு முழுவதும் ஆங்காங்கே திருவெம்பாவை திருப்பாவை மகாநாடுகள் நடத்துவதற்கு முயற்சி நடக்கிறது.

வேதம் நிறைந்த தமிழ்நாடு

திருப்பாவை வைஷ்ணவப் பிரபந்தங்களின் சாரம். திருவெம்பாவை சைவத் திருமுறைகளின் சாரம். இந்த இயக்கத்துக்கு விதை போட்டால் இவை இரண்டினாலும் போற்றப்பட்டுள்ள வேதங்களும் வேதத்தின் ஆறு அங்கங்களும் வளரும். தமிழ் வளர்ந்தால் வேதமும் வளரும். 'வேதமனைத்திற்கும் வித்தாகும் கோதை தமிழ்' என்று வைணவர்கள் கூறுவர். 'வேத விழுப்பொருள்' என்று தமிழ்ச் சமய நூல்களை மாணிக்கவாசகரும் கூறியுள்ளார். திருப்பாவை - திருவெம்பாவை போன்ற நூல்களைப் பிரசாரம் செய்தால் இவற்றுக்கு அஸ்திவாரமாக உள்ள வேதமும் வளரும். 'வேதம் நிறைந்த தமிழ் நாடு' என்ற பேச்சும் உண்மை யுள்ளதாகும்.

இவ்விரண்டு நூல்களுக்கும் கருத்து ஒற்றுமை இருக்கிறது. ஸ்ரீ பாகவதத்தில் கோபிகைகள் காத்யாயனியைப் (துர்க்கை) பிரார்த்தித்த முறையை அநுசரித்துத்தான் இவ்விரு பாவைகளும் ஏற்பட்டுள்ளன. சிறப்பாக, திருப்பாவை ஹரியையும், திருவெம்பாவை ஹரனையும் போற்றுவதுடன், பொதுவாக இந்த இரண்டு பாவைகளும் ஜகன்மாதாவான அம்பாளின் தோத்திரமாக அமைந்தவை என்று கருதலாம். ஆகவே ஹரிஹரன் அநுக்கிரகமும், அம்பிகை அநுக்கிரகமும் இந்தப் பாடல்களின் மூலம் நமக்குக் கிடைக்கும். இந்தப் பாடல்களின் நோக்கம், தேங்கிக் கிடக்கும் நம் தெய்விகச் சக்திகளைத் தட்டி எழுப்புவதுதான். நம் தேகத்தில் அநேக சக்திகள் இருக்கின்றன. 'அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உள்ளது' என்பார்கள். இந்தச் சக்திகளை நாம் வளர்க்க முடியும். இதற்கான வித்துக்கள் நம்மிடம் உள்ளன. ஆனால், அவை செடி மரங்களாக வளரவில்லை. அவை பூரணத்துவம் அடைய இந்தப் பாடல்கள் நம்மைத் தூண்டுகின்றன. பரஸ்பரம் சக்திகள் ஒன்றையொன்று தட்டி எழுப்பும் முயற்சிகளை இந்தப் பாடல்கள் விவரிக்கின்றன.

சைவத்துக்கும் வைணவத்துக்கும் மூலமான வேதங்களையும் வேதாங்கங்களையும் சமநோக்குடன் பார்க்கவும், கடவுள் வழிபாட்டில் ஒற்றுமையை வளர்க்கவும் இந்தத்திருப்பாவை திருவெம்பாவை இயக்கத்தை நாடெங்கும் பரப்ப ஆங்காங்கு மகாநாடுகளைக் கூட்டி, முயற்சி வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

[நன்றி ஸ்ரீ காமகோடி ப்ரதீபம், மாதப் பத்திரிகை, 4, பிரான்சிஸ் ஜோசப் தெரு, சென்னை-1. வருட சந்தா ரூ. 5.00, வெளி நாடு ரூ. 7.00, தனிப்பிரதி 50 ந. பை.]


நீங்களும்
இவ்வணங்கின்
அழகிய
கேசத்தைப் பெற
விரும்புவீர்கள்!
ஓர் திருப்பம்,
ஓர் பார்வை–அவளு
டைய அழகிய கேசம் உங்
கள் மனதில் அழியாத இடம்
பெறுகிறது. பிறகு, "இவ்வழ
கிய கேசம் எனக்கிருந்தால்",
என்று நினைக்கிறீர்கள். மிகச் சிறந்த
மூலதாரப் பொருட்களால் தயாரிக்கப்
பட்ட 'கேஷ' அபரிமிதமான அழகிய
கேசத்தை உங்களுக்கு அளிப்பதுடன்,
உங்கள் கேசத்திற்கு முற்றிலும் புதிய
அழகிய வனப்பை அளிக்கிறது–நீங்
கள் விரும்பும் அழகு உங்களை நாடு
கிறது. கேஷாவின் மென்மையான
நறுமணத்தை நீங்கள் மிகவும்
விரும்புவீர்கள்.
உங்கள் கேச
பாதுகாப்பு
திட்டத்திற்கு
கேஷா
Kesha
லோமா தயாரிப்பாளரின்
இன்னும் ஒரு
சிறந்த தயாரிப்பு
பூரண ஏஜெண்டுகள்:
எம். எம். கம்பாத்வாலா
அஹமதாபாத்–1
ஏஜெண்டுகள்:
ஸி. நரோத்தம் & கோ.,
பம்பாய்—2
TAM
சென்னை ஏஜண்டுகள்: ஜே. பாலாபாய் & கம்பெனி, 260, எஸ்பிளனேட், மதராஸ்-1
இலங்கை ஏஜண்டுகள்: சிருன் கதீர் & கோ., 41, 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

அக்கரைச் சீமையில் ஆறுமாதங்கள்

5. பாதாள லண்டன்!

இருபது ஆண்டுகளுக்கு முன்பு முதன் முதலாக நான் திருச்சிராப்பள்ளி ஜங்ஷனில் வந்து நின்றபோது அங்கே மனிதர்கள் எல்லாரும் ரயில் வண்டியிலிருந்து இறங்கியதும், பூமிக்குள்ளே போவதைப் பார்த்துப் பயந்து போய் விட்டேன். சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு பிளாட்பாரத்தில் பூமிக்குள்ளே போனவர்கள் இன்னொருபிளாட்பாரத்தில் வெளியே கிளம்பி வருவதைப் பார்த்துத்தான் நிம்மதி உண்டாயிற்று. அந்த நிம்மதியோடு ஆச்சரியமும் உண்டாயிற்று!

இப்பொழுது லண்டன் நகரத்தின் நெடுஞ்சாலைகளுக்கு மத்தியிலே மனிதர்கள் திடீர் திடீரென்று பூமிக்குள்ளே போவதைப் பார்த்ததும் அந்தப் பழைய திருச்சி நினைவு மீண்டும் வந்தது! ஆனால் ஒரு வித்தியாசம்! இங்கே பூமிக்குள்ளே போனவர்கள் மறுபடியும் வெளியே வருவதாகத் தெரியவில்லை. போனவர்கள் போனவர்களே தான்!

பாதாளத்துக்குள்ளே போகிற மனிதர்களோடு நாமும் கீழே இறங்கிப் போனால் அங்கே குகை குகையாகத் திசைதோறும் செல்லுகிற பாதாளப் பாதைகளைப் பார்க்கிறோம்! அங்கங்கே 'டிஸ்ட்ரிக்ட் லைன்' என்றும், 'பிக்காடில்லி லைன்' என்றும், 'பேக்கர்லூ லைன்' என்றும் அறிக்கைகள் தொங்குவதைக் காண்கிறோம். இவற்றைத் தொடர்ந்து நடந்து சென்றால் பாதாள ரயில்வேயின் விசித்திர உலகத்துக்கு வந்து சேருகிறோம்!

இந்தக் குகை வழிகளிலேதான் எத்தனை விசாலமான இடம் இருக்கிறது! ரயில் வண்டிகள் தங்குதடையின்றிப் போவதற்குரிய பெரிய பெரிய இருப்புப் பாதைகள், ஒன்றுக்கு மேற்பட்ட விசாலமான பிளாட்பாரங்கள், பட்டப் பகல் போன்று மின்சார விளக்குகளின் வெளிச்சம், ஆயிரக் கணக்கான மனிதர்கள் போய் வருவதற்கு ஏற்ற முறையில் உயரமும், அகலமும் பரப்பும் கொண்ட குகை வழிகள்! உலகிலேயே முதன் முதலாக அமைக்கப்பட்ட குகைப் பாதைகள்-லண்டன் நகரத்தின் பாதாள ரயில்வேப் பாதைகள்!

பாதாளத்துக்குள்ளே செல்கிற குகைப் பாதை என்றதும், இண்டும் இடுவலுமாக இருக்குமோ என்று நினைக்கிறோம் அல்லவா? இல்லவே இல்லை. நிலத்துக்குக் கீழே பெருஞ் சுரங்கங்கள் அமைத்து அங்கே பெரிய நகரங்களையே நிர்மாணித்திருக்கிறார்கள்! லண்டன் நகரத்தின் பல பகுதிகளிலும் உள்ள இந்தப் பாதாள நிலையங்களுக்குள்ளே இறங்கி விட்டால், பிறகு, நிலத்துக்குக் கீழே இருக்கிறோம் என்ற நினைப்பே தோன்றுவதில்லை! மின்சார வெளிச்சம் வெய்யிலை வீசுகிறது! காற்று சுகமாக அடிக்கிறது! இங்கிதமான குளிரும், அங்கங்கே உடம்புக்கு ஏற்ற ஒரு கணகணப்பும் இருக்கின்றன!

பாதாள ரயில் வண்டி நிலையங்களிலே இன்னொரு பெரிய அதிசயம் அவற்றின் எஸ்கலேடர் என்னும் படிக்கட்டுகள்! ஒரு பிளாட்பாரத்திலிருந்து இன்னொரு பிளாட்பாரத்துக்கோ அல்லது ரயில் நிலையத்திலிருந்து மேலேயுள்ள பேட்டைக்கோ வரவேண்டும் என்றால் உயரம் உயரமான படிக்கட்டுகளிலே நடந்தேறிக் கால்கள் நோக வேண்டியதே இல்லை! படிக்கட்டுகளின் வரிசையிலே கடைசிப் படியில் ஏறி நின்று விட்டால் போதும்! அப்படியே அந்தப் படி மேலே மேலே படிப்படியாக நகர்ந்து சென்று உச்சியிலே உள்ள பிளாட்பாரத்துக்கு நம்மைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறது! இது போல் மேலேயிருந்து கீழே வருவதற்கும் முதலாவது படியிலே நின்று விட்டால் போதும். அதுவே படிப்படியாக நம்மை நகர்த்திக் கீழே கொண்டு வந்து சேர்த்து விடும்! இந்த மின்சார வேகமும் போதாது என்று, நகருகிற படிக்கட்டு வரிசையிலேயே தாங்களும் கடகடவென்று ஏறி இறங்குகிற மனிதர்களைப் பார்க்கும்போது, மனோ வேகம் என்ற வார்த்தையின் பொருள் நமக்குப் புலனாகிறது!

மேலே செல்லும் படிகளும் கீழே வருகிற படிகளுமாக எதிர் எதிரே ஏறி இறங்கி ஓய்ச்சல் ஒழிச்சலின்றி இயங்கிக் கொண்டேயிருப்பதைப் பார்த்தால் லண்டன்நகரத்தின் உயிரோட்டம் எத்தனை சுறுசுறுப்பானது என்பது விளங்கும்.

லண்டன் ஒரு சுறுசுறுப்பான நகரம்! ஓட்ட சாட்டமான அந்த நகரத்தினுடைய இதயத்தின் படபடப்பைப் போல மின்சார ரயில் வண்டிகள் 'கடகட' என்று எந்நேரமும் சாடிய வண்ணம் இருக்கும்! காலை ஒன்பது மணிக்குப் பாதாள ரயில் வண்டி நிலையங்களின் பிளாட்பாரத்திலே, அடடா, நெருக்கி மோதிக் கொண்டு ஆயிரம் ஆயிரமாகச் சரிகிறது மனிதர் கூட்டம்! ஆணும் பெண்ணும் சிறிதும் பெரிதுமாகக் கையிலே பையும், காகிதக் கற்றையும், புத்த

சோமு



பாதாள ரயில் வண்டி நிலையம்

கங்களும், ஆபீஸ் கட்டுகளுமாக இவர்கள் போகும் ஓட்ட சாட்டத்தைப் பார்த்தால் பார்ப்பவர்களுக்கு மூச்சு முட்டும்!

லண்டன் நகரத்து அலுவலகங்களில் பெண்களின் எண்ணிக்கை ஏராளம்! அநேகமாக டைப் அடிக்கும் வேலை, காரியதரிசி உத்தியோகம் முதலியவற்றுக்குப் பெண்களையே நியமித்திருக்கிறார்கள். இவர்கள் காலை ஒன்பது மணியிலிருந்து பத்தரை மணிவரை பாதாள மின்சார வண்டிகளைப் பிடிப்பதும், பிறகு மாலை ஐந்து மணிக்கு ஆபீஸ் விட்டு வீடு நோக்கிப் பிளாட்பாரங்களில் வந்து சரிவதும் தினமும் நடக்கிற ஒரு தேர்த் திருவிழாக் காட்சிதான்!

மின்சார ரயில் வண்டிகளிலே கதவுகள் எல்லாம் மின்சாரத்தினாலேயே இயங்குகின்றன! அதாவது ஸ்டேஷனில் வந்து ரயில் வண்டி நின்றதும் வண்டிக் கதவுகள் தாமாகவே திறந்து கொள்கின்றன! சில விநாடிகள் திறந்தபடியே இருக்கும்! இந்தச் சில விநாடிகளுக்குள் மனிதர் கூட்டம் சாடிப் போய் ஏறிக் கொள்ளும்! மறு விநாடி கதவுகள் தாமாகவே மூடிக்கொண்டு வண்டி புறப்பட்டுவிடும்! வேகம் இருபது மைலிலிருந்து மணிக்கு அறுபது மைல் வரை!

சுருசுருப்பான வேளைகளில் இரண்டு நிமிஷம் மூன்று நிமிஷத்துக்கு ஒரு முறை வண்டி வந்து நிற்கும்! சில விநாடிகள் நின்று விட்டுப் புறப்பட்டுவிடும்! நடந்து சென்று ஏறுவதற்கு முன்னால் கதவுகள் மூடிக் கொண்டு விட்டால் அதற்காகக் கவலைப் படாமல் சில நிமிஷ நேரம் நம்பிக்கையோடு காத்திருக்கலாம்! அடுத்த வண்டி கட்டாயம் இரண்டு மூன்று நிமிஷங்களில் வந்துவிடும்!

சில சமயங்களில் நாம் ஏறிக் கொண்டிருக்கும்போதே கதவுகள் மூடிக்கொண்டு விட்டால் என்ன நேரும் என்கிறீர்களா? ஆங்கிலேயர்கள் மிகவும் யோசனையோடு இந்த ஆபத்தையும் எதிர்பார்த்து அதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்! கதவுகள் இரண்டும் மூடுவதற்காக நெருங்கிக்கொண்டு வரும்போது நாம் நடுவே அகப்பட்டுக் கொண்டுவிட்டால், நம்மையும் சேர்த்து நெருக்காமல், நம் உடம்பிலே பட்டதும் கதவுகள் தாமாகவே விலகித் திறந்து கொள்ளும். அதாவது மின்சார இயக்கத்தில் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டுக் கதவுகள் தாமாகவே திறந்து கொள்கின்றன! இன்னொரு எச்சரிக்கையான ஏற்பாடும் செய்திருக்கிறார்கள். அதாவது கதவுகளின் விளிம்புப் பக்கங்களிலே ஓரமாக ரப்பர்ப் பட்டைகளைப் பதித்துப் பொருத்திவிட்டிருக்கிறார்கள்! இதனால் வேகமாக வந்து மோதுகிற கதவுகளுக்கு இடையே நாம் அகப்பட்டாலும் உடம்பின் மேலே அடி விழுவதில்லை! இரண்டு கதவுகளும் வந்து நம்முடைய உடம்பை ரப்பரைக் கொண்டு அழுத்திப் பிடித்துவிட்டு உடனே அகன்றுவிடும்! நாம் வண்டிக்குள்ளே போய்க் கொள்ளலாம்! பிறகு கதவுகள் இரண்டும் நகர்ந்து வந்து மூடிக்கொள்ளும்! ஏற்பாடு எப்படி?

டிக்கெட் எடுப்பதற்கு என்று ஒவ்வொரு ஸ்டேஷனிலும் பல சாளரங்கள் உண்டு! எத்தகைய அவசரமாக இருந்தாலும் சரி, ஆங்கிலேயர்கள் ''க்யூ'' வரிசையைக் கலைப்பதோ, சிதைப்பதோ கிடையாது! தனக்கு என்ன தலைபோகிற காரியமாக இருந்தாலும், பின்னால் வந்த மனிதன் பின்னாலேதான் நிற்பான்! முண்டுவதில்லை, மோதுவதில்லை. அமைதியாக நகருகிற 'க்யூ'வில் இவனும் சேர்ந்து அமைதியாகக் கட்டுப்பாட்டுடன் நகருவான்.

டிக்கெட் ஜன்னல்கள் தவிர, அங்கங்கே டிக்கெட்டைக் ''கொப்புளி''க்கும் இயந்திரங்களும் இருக்கின்றன! மூன்று பென்னி,

நான்கு பென்னி, ஐந்து ஆறு என்று அந்தந்த டிக்கட்டுகளுக்குத் தனித்தனியே இயந்திரங்கள் நிற்கின்றன! இந்த இயந்திரங்களின் நெற்றியிலே சில ஸ்டேஷன்களின் பெயர்களை எழுதியிருக்கிறார்கள். அதாவது மூன்று பென்னி டிக்கெட் எடுத்தால், அங்கிருந்து எந்தெந்த ஸ்டேஷனுக்குப் போகலாம், நான்கு பென்னி நாணயத்தைப் போட்டு டிக்கெட் எடுத்தால் அதைக் கொண்டு எந்தெந்த ''லைனில்'' செல்லலாம் என்று இந்தப் பெயர்ப் பட்டியலைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். நாம் போக வேண்டிய ஸ்டேஷனுக்கு உரிய டிக்கெட் எந்த மெஷினில் கிடைக்கும் என்று தெரிந்து, அதன் எதிரே போய் நின்று அதிலுள்ள துவாரத்தில் உரிய நாணயங்களைப் போட்டு விட்டால், இன்னொரு துவாரத்தில் டிக்கெட் வந்து நிற்கும்! நாலு பென்னி போட வேண்டிய துவாரத்தில் பெரிய நாணயம் ஒன்றைப் போட்டோமானால் டிக்கெட்டும் பாக்கிச் சில்லறையும் கீழே வந்து விழக்கூடிய விதத்திலும் சில இயந்திரங்களை அமைத்திருக்கிறார்கள்.

டிக்கெட் சாளரங்களில் எல்லாம் எவ்வளவு பெரிய நாணயத்தைக் கொடுத்தாலும், சில்லறைக்கு என்ன செய்கிறார்கள் தெரியுமா? டிக்கெட் கொடுப்பவர் தமக்கு எதிரேயுள்ள ஓர் இயந்திரத்தின் விசையைத் தட்டினால், நாம் கேட்கும் டிக்கெட்டும், பாக்கிச் சில்லறையும் குதித்துக்கொண்டு சாளர வாசலிலே உள்ள ஒரு குழிப் பலகையிலே நம் கைக்கு, எதிரே வந்துவிழும்! எல்லாம் பித்தான்களை அமுக்கினால் போதும்! இயந்திரங்களே கணக்குப் போட்டு மீதிச் சில்லறையைத் தள்ளிக்கொண்டு வருகின்றன; ஒரு விநாடிக்குள்ளே!


இந்த ஏற்பாடுகள் தவிர, கூட்டமும் 'க்யூ'வும் அதிகமாக இருக்கக் கூடிய காலை மாலை நேரங்களில், டிக்கெட் ஜன்னலுக்கு அருகிலே நம்மூர் 'பஸ் கண்டக்டர்' போல உடை தரித்த ஒரு பெண்மணி டிக்கெட் புத்தகச் சுருளோடு கூடிய ஒரு சிறு இயந்திரமும், கழுத்திலே தொங்குகிற பையுமாக நிற்பாள். அவளுக்கு எதிரே நின்று, அதாவது 'க்யூ'விலே நின்று, பணம் கொடுத்து நமக்கு வேண்டிய டிக்கெட்டை வாங்கிக் கொள்ளலாம்! கூட்டம் இருப்பதைப் பொறுத்தது இந்த ஏற்பாடு!

டிக்கெட்டும் கையுமாக நடந்து சென்றோமானால், நாம் போக வேண்டிய பேட்டைக்கு எந்தப் பிளாட்பாரத்தில் வண்டி ஏறவேண்டும் என்று அந்தப் பாதாளப் பிரதேசத்தில் நம் கண் முன்னால் தெளிவான அறிவிப்பு எழுத்துக்கள் இருக்கும். இவை தவிர, 'You are here now' ''நீங்கள் இப்பொழுது இங்கே இருக்கிறீர்கள்'' என்று கொட்டை எழுத்திலே எழுதி, அதன் கீழே ஓர் அம்புக் குறி செல்லும், அது ஒரு பெரிய வழிகாட்டிப் படத்துக்குள்ளே போய் நிற்கும். அதில் எந்தெந்தப் பாதை அங்கிருந்து எப்படியெல்லாம் செல்கிறது என்று வர்ணக் கோடுகளினால் வரைந்து காட்டியிருக்கிறார்கள். அதைப் பார்த்துக் கொண்டு மேலே நடந்தோமானால் குகைப்பாதையின் ஒவ்வொரு திருப்பத்திலும் அறிக்கைகளும் அம்புக் குறிகளும் நமக்குத் தெளிவாகப் பாதையைக் காட்டிக் கொண்டு நிற்கும்! இத்தனையும் பார்த்த பிறகுங்கூட நமக்குப் புரியவில்லையென்றால், அங்கங்கே நிற்கிற டிக்கெட் அதிகாரி சிடுசிடுக்காமல் நமக்குப் பதில் சொல்லி உதவுவார்!

நகரும் படிகளிலேறிக் குறிப்பிட்ட பிளாட்பாரத்துக்கு வந்து ரயில் வண்டியிலும் ஏறிவிடுகிறோம். அதன் பிறகும் சிலருக்குச் சந்தேகம் ஏற்படலாம் அல்லவா? அதற்கும் உதவியாக, ஒவ்வொரு ரயில் வண்டிப் பெட்டிக்குள்ளும் வழிகாட்டிப் படம் - ஸ்டேஷன்களின் பெயர்களும், திசைகளும், வழிகளும் ஆறு வர்ணங்களிலே வரைந்து காட்டியுள்ள மிகப் பெரிய படம் - ஒட்டி வைத்திருக்கிறார்கள். அதையும் பார்த்து மனத்தை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்!

இங்கிலாந்து நாட்டிலே சிகரெட் பிடிக்கும் பழக்கம் அதிகம். எனவே ரயில் வண்டிப் பெட்டிகளில் ஒன்றுவிட்டு ஒன்று சிகரெட் பிடிப்போர் ஏறக்கூடிய பெட்டி! அங்கே

குகைப் பாதை



புகையிலைச் சாம்பலுக்குரிய கிண்ணத்தைப் பதித்திருக்கிறார்கள். ஒன்றுவிட்டு ஒன்றில், 'சிகரெட் பிடிக்காதீர்கள்' என்ற அறிவிப்பு இருக்கும்.

சிகரெட் பிடிப்பவர்கள் இந்த அறிவிப்புள்ள பெட்டியில் ஏறக்கூடாது. மற்றவர்கள் ஏறலாம். முக்கியமாகப் பிறர் சிகரெட் பிடிப்பதைத் தாங்க முடியாதவர்கள், சிகரெட் புகை ஒத்துக் கொள்ளாதவர்கள் புகை பிடிக்கக் கூடாத பெட்டிகளிலே ஏறிக்கொள்ளலாம்! பிரயாணிகள் தங்களுக்குச் சிரமமில்லாமலும் தங்களால் பிறருக்குச் சிரமமில்லாமலும் செல்வதற்கு இப்படி ஓர் ஏற்பாடு பாதாள ரயில் வண்டிகளில் மட்டுமல்லாமல், பிரிட்டிஷ் ரயில்வேயின் எல்லா வண்டிகளிலுமே அமைத்திருக்கிறார்கள்!

புதிதாக லண்டனுக்கு வந்து சேருகிற மக்களுக்கும், லண்டனுக்குள்ளேயே பல பேட்டைகளிலும் அடிக்கடி போய் வருகிற பிரயாணிகளுக்கும் உதவும்படி ஒரு வழி காட்டிப் படம் இலவசமாக எல்லா ரயில் நிலையங்களிலும் வழங்குகிறார்கள். சுமாரான கனமுள்ள ஒரு வெள்ளை அட்டையிலே ஒரு பக்கம் பாதாளப் பாதைகளின் படம் போட்டிருக்கிறார்கள். ஆறு வர்ணங்களிலே கோடுகள் போட்டு அங்கங்கே ஸ்டேஷன்களின் பெயர்களை அச்சிட்டு ஆறு திசைகளில் ஓடுகிற வண்டிகளை விளக்கியிருக்கிறார்கள்! மறுபக்கம் ஸ்டேஷன்களின் அகர வரிசை அதாவது ஏகார வரிசை! "A" யிலிருந்து ஆரம்பித்து எல்லா ஸ்டேஷன்களின் பெயர்களையும் வரிசையாக எழுதி, இந்த ஸ்டேஷன் ஒவ்வொன்றும் மறுபக்கம் உள்ள படத்தில் எத்தனாவது கோட்டிலே இருக்கிறது என்று குறிப்பும் கொடுத்திருக்கிறார்கள். யாருக்கும் எளிதிலே புரியக் கூடியதும், மிகவும் பயன்படக் கூடியதுமான இந்த இலவசப் படத்தை மிகவும் கவர்ச்சிகரமாக அச்சிட்டிருக்கிறார்கள்! மூன்றாக மடித்து ஒரு சிறிய அழகிய புத்தகமாகக் காட்சி தருகிறது இது!

பாதாள ரயில்வேயின் முழு அதிசயத்தையும் அனுபவிப்பதற்கு இன்னொரு அற்புதத்தை அவசியம் இங்கே குறிப்பிட வேண்டும். நிலத்துக்குக் கீழே இந்தக் குகைப்பாதை செல்கிறது என்று சொன்னேன் அல்லவா? சில இடங்களில் தேம்ஸ் நதியின் கீழேயும் இந்தக் குகைப்பாதை செல்கிறது!! அதாவது மேலே ஆறு ஓடுகிறது. கீழே ரயில் வண்டி ஓடுகிறது! 'வாடர்லூ' ஸ்டேஷனிலிருந்து 'சாரிங் க்ராஸ்' ஸ்டேஷனுக்குச் செல்லும்போது, பாதாளப்பாதை 'தேம்ஸ்' நதிக்குக் கீழே குடையப்பட்ட குகையிலே செல்கிறது! இது ஏதோ மயில் ராவணன் கதையிலே நடக்கும் நிகழ்ச்சிபோல் இருக்கிறதல்லவா? முதன் முதல் இந்த அற்புதத்தை நான் தெரிந்து கொண்டது "இந்தியா க்ளப்புக்கு"த் தோசை சாப்பிடச் சென்றபோது தான்! அந்த ருசிகரமான நிகழ்ச்சி மே மாதம் நடந்தது. அது காரணமாக நான் இந்தியா கிளப்பிலேயே தொடர்ந்து சில வாரங்கள் தங்கவும் நேரிட்டது! (தொடரும்)

யுத்த கீதம்

வங்காளிக் கதை: தேபேஷ்தாஸ்
தமிழாக்கம்: சேனு

அத்தியாயம் 15

உத்தமாவின் வாதங்களைக் கேட்டு, தேவல்சிம்மனுக்குத்தான் பேராச்சரியமாக இருந்தது. 'ஒன்றும் அறியாத இந்த இளம் பெண்ணை, நாட்டுப்புறப் பெண் என்று கூடச் சொல்லலாம், இப்படிப் பேசுகிறாள்! இவளுக்கு எங்கிருந்து இவ்வளவு மன உறுதி வந்தது? இவ்வளவு புத்தி தீட்சண்யம் எப்படித் தோன்றியது? சும்மா காலேஜ் படிப்புப் படித்து விட்டால் மட்டும் இது வந்து விடாதே!' என்றுதான் அவன் எண்ணினான்.

உத்தமா மீண்டும், "செத்துப் போன சிப்பாய் என்னவோ திரும்பவும் வந்து சாட்சி சொல்லப் போவதில்லை. கொள்ளையிடுவது போன்ற கெட்ட எண்ணத்தோடு கிராமத்துக்கு வந்த மற்றச் சிப்பாய்களும் வாயைத் திறக்க மாட்டார்கள். குன்றருகில் காவல் காக்கும் பாராக்காரன் விஷயத்தை எடுத்துக் கொள்ளலாம். அவன் மற்றவர்களைக் கொள்ளையடிக்கப் போகாதீர்கள் என்று தடுத்திருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம்; அப்போது அவர்கள் அவனைக் கட்டிப் போட்டு விட்டுப் போயிருந்தால் அப்புறம் அப்படிச் செய்ததாகவா அவர்கள் ஒப்புக் கொள்வார்கள்? அவனே கூடத் தாளைச் சேர்ந்த ஆசாமிகளின் பெயருக்குக் கேடு வரும்படி பார்ப்பானா? அப்புறம் அந்தப் பட்டாளத்தின் பகுதியில் அவனும் இருந்து தீர வேண்டுமே! அதற்காகவாவது விஷயத்தை வெளியிடாமல் இருக்க வேண்டியதுதானே! இப்போது விஷயம் உங்களுக்கே புரிந்திருக்கும். இதற்கு முன்னேகூட இப்படி இந்திய தேசிய இராணுவ உடை உங்களுக்குக் கிடைத்து அதை நீங்கள் எடுத்து வைக்கவில்லை என்று உண்மையாகச் சொல்வீர்களா? கேட்கிறேன். அந்த உடுப்புக்களில் ஒன்று தேவல்சிம்மனின் உடலுக்கு ஏற்றபடி அமைந்து விடுவதும் சகஜந்தானே!" என்று கூறினாள்.

உத்தமா இப்படிச் சொன்னதும் கோர்ட்டார் என்ன செய்வதென்று புரியாமல் திகைத்தார்கள்.

ராய் உத்தமாவை உற்று நோக்கினார். அவர் முகத்தில் ஏதாவது கேள்வி கேட்க வேண்டும் என்ற பாவமா, அவளைப் பாராட்ட வேண்டும் என்ற பாவமா, இந்த இரண்டில் எது அப்போது தான் ரியது என்று சொல்வது கடினம்.

தலைவர், "சரியாகச் சொன்னீர்கள். இப்படிப் பொய் வழக்கு ஜோடனை செய்ய முடியும் என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் சாதாரணச் சிப்பாய்களால் அவ்வளவு சாமர்த்தியமாக ஜோடிக்க முடியாதே!" என்றார்.

"யாரால் முடியும், முடியாது என்பதைப் பற்றி ஆராய்வது என் பொறுப்பு இல்லை; இதோ இருக்கும் பிரதிவாதிக்கும் அந்தப் பொறுப்பில்லை."

"ஆனால் வாதித் தரப்பு சாட்சியாக இருந்து நீங்கள் ஏன் இப்படிப் பிரதிவாதி பக்கமாகப் பேசுகிறீர்கள்?"

"நேர்மையாக விசாரணை நடத்த வேண்டும். நான் யார் பக்கத்துச் சாட்சியும் இல்லை. நேர்மைக்குப் பிரிட்டிஷார் பெயர் போனவர்கள். கனம் நீதிபதி அவர்களே! தேவல்சிம்மன் நிரபராதி; நீங்கள் அவர்மேல் வீண் சந்தேகம் கொண்டு கைது செய்து எதிரியாக நிறுத்தியிருக்கிறீர்கள்; அவ்வளவுதான்."

"ஆனால் எதிரி தாமே எதிரித் தரப்பைச் சேர்ந்தவர் என்று ஒப்புக் கொள்கிறாரே! அதோடு தம்மிடமிருந்து யாரும் பலாத்காரமாக வாக்குமூலம் வாங்கவில்லை என்றும் சொல்லியிருக்கிறாரே!" என்றார் தலைவர்.

அப்போது ராய், "அது உண்மை; ஆனால் வாதி அசைக்க முடியாத அத்தாட்சியைக் காட்டி நிரூபிக்க வேண்டும். இங்கே என்ன சங்கடம் என்றால், சாட்சிகளின் வாக்குமூலத்திலேயே பல இடங்களில் குறைபாடு இருப்பதுதான்" என்று கூறினார்.

நீதிபதிகளில் ஒருவர் சிரித்துக் கொண்டே, "சாட்சிகள் என்றால் இந்த இரண்டு இளம் பெண்களைத்தானே குறிப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டார்.

ராய் தலையை ஒருவிதமாக ஆட்டி, "ஆமாம், இளம் பெண்கள்தான்; இன்

னும் உலகத்தில் அடிபடாததால் பொய் சொல்லக்கூடக் கூசுகிறார்கள்'' என்றார்.

ஒரு நீதிபதியிடமிருந்து ராயை ஜாடையாகக் கண்டிக்கும் தோரணையில் ஏளனமாக, ''கர்னல் ராய் தப்பித் தவறி இங்கே இராணுவ விசாரணையில் பிராஸிக்யூட்டராக வந்து விட்டார் என்று தோன்றுகிறது! இதைவிட நீதி தர்மம் போதிக்கும் உபன்யாசகராக இருந்திருக்கலாம். அதுதான் உங்களுக்கு ஏற்ற வேலை!'' என்று பதில் வந்தது.

ராய் இதற்கெல்லாம் பின் வாங்குபவரா? முன் போலவே ஒழுங்கு குலையாமல் தலை குனிந்து வணங்கி, ''தலைவர் அவர்களே! இனி மற்றச் சாட்சியங்களைக் கவனிக்கலாம்...அம்மா, ஒலிப்பதிவான ஓர் இடத்தைக் கவனமாகக் கேளுங்கள், இப்போது'' என்றார்.

பதிவான அந்தப் பகுதியை வைத்தார்கள். ராஸ நாட்டியத்தில் தோழிமாரான இளம் பெண்கள் அலங்காரம் செய்து கொள்ளும் கட்டத்தைப் பற்றிய பாட்டு கேட்டது.

அப்போது சற்றுத் தொலைவிலிருந்து கேட்கும் அந்தப் பாட்டைவிடத் தெளிவாக அருகேயிருந்த உத்தமாவின் குரல் கேட்டது.

''நீங்கள் சாதாரண வங்காளி இல்லை. லட்சோப லட்சம் பேரில் அலாதியான மனிதர். இராணுவ உடை கிழிந்தாலும், வீர வேஷத்தில் வந்தீர்கள்.''

முன்னே குறுக்கிட்ட நீதிபதி இந்த இடத்தில் பதிவான பகுதியை நிறுத்தச் சொன்னார். ராயைப்பார்த்து அவர், ''இனி மேல் துளிக் கூடச் சந்தேகம் இல்லை; கடைசி வாக்கியத்திலிருந்தே ஆசாமி இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர். அதோடு 'மாறு வேஷ'த்தில் வந்த வேவுகாரர் என்பது ருஜுவாகி விட்டது. சுபேதார் 'டேப் ரிக்கார்டர்' இயந்திரத்தை வைத்துப் பதிவு செய்தது வீண் போகவில்லை'' என்று கூறினார்.

''நானும் அதைத்தான் சொல்கிறேன்'' என்று பின்னும் தலையைத் தாழ்த்தி ஆட்டியபடி சொன்னார் ராய். ''இதிலிருந்தே ஆசாமி ஏன் துளியும் திகில் இல்லாமல் தான் எதிரித் தரப்பைச் சேர்ந்தவன் என்று ஒப்புக் கொண்டான் என்பது தெரிகிறது.''

தலைவர் நாற்காலியை இன்னும் முன்னால் இழுத்துப் போட்டுக் கொண்டார். புதிய கோணத்திலிருந்து இனி வழக்கைக் கவனிக்க வேண்டியிருக்கும் என்று பட்டது அவருக்கு.

ராய், ''இதிலிருந்தே உத்தமா இந்த எதிரியை உள்ளூற நேசிக்கிறாள் என்று தெரிகிறது. எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்யும் காதல் இது; மெய்ம் மறந்த காதல்'' என்றார்.

நீதிபதி, ''உண்மைதான். அதனாலேதான் ஆசாமி இந்தச் சாட்சியின் வீட்டுக்கும் வந்திருக்கிறார்; சிப்பாயைக் கொன்றிருக்கிறார்; இன்னும் ஓர் ஆசாமியை அந்த அறையில் பார்த்ததும் கோபம் வந்திருக்கும். நிச்சயமாகச் சிப்பாய் ஏதோ கெட்ட எண்ணத்தோடு வந்திருக்க வேண்டும்; அவனை இவர் கொன்றிருக்க வேண்டும். இதைக் கொலை என்று சொல்ல முடியாவிட்டாலும் நரஹத்தி என்ற குற்றமாகவாவது கொள்ளவேண்டியதுதான்'' என்றார்.

அப்போது ராய், ''ஆனால் விஷயம் ருஜுவாகவில்லையே என்றுதான் எனக்கு



வருத்தமாக இருக்கிறது. எங்கே எந்த வீட்டில் ஆசாமி இந்தச் சாட்சியைத் தேடிக் கொண்டு வந்தார் என்பது தெளிவாகவில்லையே? அவர் வங்காளி என்பது மட்டும் தெரிகிறது. ஆனால் இந்தக் காலத்திலே ஆங்கில மோகம் பிடித்தவர்கள் வேஷ்டி கட்டுவதில்லை. அதோடு காலேஜ் படிப்புப் படித்த பெண்களோ இராணுவ உடை உடுத்துத் துப்பாக்கி ஏந்திய வாலிபர்களின் கழுத்தில்தான் மாலையிட விரும்புகிறார்களாம்'' என்றார்.

இப்படிச் சொன்னவர் ஒருதரம் மிதாவைக் கவனித்தார். மிதாவும் அவரையே கண் கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்தாள். உத்தமாவும் ராயின் பக்கமே கவனித்தபடி இருந்தாள். ராய் வழக்கை எப்படிக் கொண்டு போகிறார் என்று அவர்களுக்குப் புரியவில்லை. அவருடைய பேச்சிலோ, பரிகாசத்திலோ அப்படிப் பகைமை அதிகமாக இருப்பதாக அவர்களுக்குப் புலப்படவில்லை.

அப்புறம் அவர் உத்தமாவைப் பார்த்து, ''சத்தியமாகச் சொல்லுங்கள்; நீங்கள் இவரைக் கண்டதுமே காதல் கொண்டு விட்டீர்களா? அதனால்தான் இப்படி விஷயத்தை ஒளித்து இவரைத் தப்புவிக்கப் பார்த்தீர்களா? இல்லாவிட்டால் இவருடைய பழைய வரலாறு தெரிந்துதான் இவரை நேசிக்கிறீர்களா? இவர் பகைவர் தரப்பைச் சேர்ந்தவரா, இல்லையா என்பதற்கு நீங்கள் சொல்லும் சாட்சியந்தான் முக்கியமானது; சொல்லுங்கள் இப்போது'' என்றார்.

உத்தமா அப்போது நாலு பக்கமும் எல்லாரையும் கவனித்தாள். அந்தப் பார்வையில்தான் என்ன பரிதாபம்! இத்தனை நேரம் துணிச்சலாக மல்லுக்கு நின்ற அவளுடைய முந்திய தோற்றம் இப்போது எங்கே போயிற்று? அவள் ராயை நோக்கினாள்; அவர் மிதாவைப் பார்ப்பதைக் கவனித்து அவளுடைய பார்வையும் மிதாவின்மேல் சென்றது; மிதா அப்போது நேவல்சிம்மனைக் கவனிப்பதைக் கண்டு கடைசியாக அவளும் அவனையே நோக்கலானாள்.


அதற்குமேல் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மெல்ல மெல்ல மயக்க முற்றுக் கீழே சாய்ந்து விட்டாள்.

இரவோடு இரவாக இதென்ன இப்படி ஒரு மாறுதல்!

மறுநாள் நடந்த இராணுவ விசாரணையின்போது எல்லாரும் ராயின் தோற்றத்தைப் பார்த்துத்திடுக்கிட்டுவிட்டார்கள். அவருடைய தலைமயிர் வாராமல் பரட்டையாகக் கிடந்தது. கண் ஒரே இரவில் குழிந்து உள்ளுக்குப் போய் விட்டது. தம் உடுப்பில் காணும் சிறு குறைகளைக் கூட அவ்வப்போது கவனித்து ஒழுங்கு செய்து கொள்பவர், அன்று இப்படி ஏனோதானோ என்று வரவே, தலைவர் ''பிராஸிக்யூட்டருக்கு உடம்பு சரியாக இராவிட்டால் வழக்கை ஒத்திப் போட்டால் போகிறது'' என்று மெதுவாகப் பேச்செடுத்தார்.

ஆனால் ராய் உடனே, ''உடம்புக்கு ஒன்றுமில்லை; சரியாகத்தானிருக்கிறது. வழக்கு மிகவும் சிக்கலானது. ஆகவே, இரவு முழுதும் கண் விழித்துச் சட்டப் புத்தகத்தையும் தஸ்தாவேஜுகளையும் புரட்டிப் பார்க்க வேண்டியிருந்தது. யுத்த நிலைமை இருக்கிற ரீதியில் வழக்கை உடனடியாக முடித்து விடுவதுதான் நல்லது'' என்றார்.

மிதா! மிதா!—தம்மைச் சுற்றி நாலு பக்கமும் அவருடைய கண்கள் உற்று



''அவர்களுக்குள் ஒத்து வரவில்லையாம்!''

நோக்குவது போல் இருந்தது ராய்க்கு. பேச நா எழுந்தும் அவரால் ஏனோ வாயைத் திறக்க முடியவில்லை. கைக் குட்டையால் தம் நெற்றியைத் துடைத்துக் கொள்வது போல் சற்றே கண்களை மறைத்துக் கொண்டார். பிறகு துணிவு வந்தவராய் மிதாவைக் கவனிக்கலானார். ஒரு பெரிய பிரசங்கமே செய்யத் தொடங்கி விட்டார்.

அன்று அவர் புது மனிதராகவே காட்சியளித்தார். புதிதாக அந்த அறிவின் ஒளியினால் அவருடைய நோக்கில் புது வித மாறுதல் ஏற்பட்டிருந்தது. நடுவில் அவர் ஓர் இடத்தில், "தலைவரவர்களே! இந்த வழக்கில் சர்க்கார் தரப்பு அத்தாட்சிகள், வாக்குமூலம் இவைகளை என் மனக்குள்ளேயே ஆராய ஆராய ஒரு புது விஷயம் தட்டுப்பட்டது. அதனால் என் மனசில் மட்டுமல்ல, சட்டப் புத்தகத்தின் மூலை முடுக்கில் இதுவரை விளக்கமில்லாதிருந்த பல விவரங்கள் தெளிவாகி யிருக்கின்றன. நீங்களும் அதை அறிந்து ஏற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்றார். பிறகு, "தலைவரவர்களே! நான் இது வரை சாட்சிகளின் வாக்குமூலத்தைச் சர்க்கார் நோக்கில் கவனித்து அலசி அலசி ஆராய்ந்தேன். ஆனால் இந்த ஆசாமிதான் குன்றின் அடிவாரத்தில் இருந்த காவல்காரனைக் கட்டிப் போட்டார் என்பதற்கு அத்தாட்சியே கிடைக்கவில்லை. காவல்காரனுடைய சாட்சியத்தை நிரூபிக்க எந்தவிதமான ஆதாரமும் கிட்டவில்லையே! பெண்கள் இராணுவ அதிகாரியான இந்த அம்மாவின் வாக்குமூலத்திலிருந்தும் அது ருஜுவாகவில்லை. இவர் பொறுப்புள்ள அதிகாரி. இராணுவத் தரப்பில் மிகவும் அந்தரங்கமான அலுவல்களில் ஈடுபட்டிருப்பவர். இவரே ஆசாமியைப் பார்க்கவில்லை. வேறெந்தச் சத்ருவும் 'சவுண்ட்-லெவல்' மீட்டரில் பதிவில்லை என்னும் நிலையில் எதிரிதான் காவல்காரனைக் கட்டிப் போட்டார் என்ற இரண்டாம் குற்றச்சாட்டும் ருஜுவாகவில்லையே!

"மூன்றாவது குற்றச்சாட்டுக்கும் அத்தாட்சி ஏதும் இல்லை. இவர் அந்தக் கிராமத்தில் நுழைந்ததையோ மிஸ் உத்தமாவின் வீட்டில் இருந்ததையோ, அங்கே சச்சரவு நடந்ததையோ யாரும் பார்த்ததாகத் தெரியவில்லை. உத்தமா சொல்வது ஒன்றுதான் நமக்கு ஆதாரம். ஆனால் அவரோ 'ஒரு குட்டையில் சவமும், இன்னொன்றில் இந்திய தேசீய இராணுவ உடையும் கிடைத்து விட்டதால் இவர் தான் சொன்னார் என்றுபடிச் சொல்லி விட முடியும்?' என்று கேட்டு விட்டார். ஆகவே, இந்தக் குற்றச்சாட்டிலும் இவரை மாட்டிவிட முடியவில்லை. வேவுத்தொழில் செய்ய வந்தார் என்பதற்கு ஆதாரமாகவும் வழக்கு ஏதும் இல்லை. ஆகவே இது சம்பந்தமாக அநாவசியமாகப் பேசிக் கோர்ட்டாரின் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை.

"இனி முதல் குற்றச்சாட்டை எடுத்துக் கொள்வோம்: 'இராஜத் துரோகம். எல்லாவற்றையும் விடப் பெரிய குற்றம் இதுதான். தலைவரவர்களே! இந்தக் குற்றம் ருஜுவானால் ஆசாமி தப்பவே வழியில்லை. அப்போது அவசியம் மரண தண்டனை கொடுக்க வேண்டுமென்று தான் சொல்வேன். ஆமாம்; மரண தண்டனை; மரண தண்டனை!" என்றதும் ராய் மிதாவை உற்று நோக்கினார். அவருடைய வெளுத்த முகத்தில் இன்னும் நம்பிக்கை ஒளி விட்டது.







உங்கள் கேசத்திற்கும் தலைக்கும் ஆரோக்கியத்தையும் போஷாக்கையும் அளியுங்கள்!

கால்கேட் ஹேர் டானிக் லெனோலின் என்ற ஓர் அற்புதமான எண்ணெயுடன் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இது தலையில் இயற்கையாக உண்டாகும் எண்ணெய்களை வற்றாது புதிப்பித்து... கேசத்தை ஆரோக்கியத்துடனும், சேர்த்தியாகவும் இருக்க உதவுகிறது.



புதிய **கால்கேட்** ஹேர் டானிக்
லெனோலின் கலந்தது

ESTD. 1952 Govt. Regd. 672

இலவசக் கல்வி போதனை

வகுப்புகள் ஆரம்ப தேதி 14 – 1 – 61

தமிழ் அறிவு பெற்ற ஆண் - பெண் இருபாலரும், பள்ளியில் இடையே படிப்பை நிறுத்தியவர்களும், S. S. L. C. தேர்வில் தேறியவர்களும், தவறியவர்களும் கீழ்க்கண்ட 61–62ம் வருட சர்க்கார் தேர்வுகளுக்கு மாதம் மும்முறை தபால் மூலம் குறைந்த கட்டணத்தில் வகுப்பில் சேர்த்துக்கொண்டு உத்திரவாதத்துடன் பயிற்சி அளிப்பதற்குப் பத்திரம் வழங்குகிறோம்.

1. குவாலியர்: I. A. 2. I. Com. 3. மெட்ராஸ்-மெட்ரிகுலேஷன் 4. பிரீ-யுனிவர்சிடி 5. தமிழ் வித்வான் வகுப்புகள் 6. சர்வீஸ் கமிஷன் (Oct. 61) 7. S.S.L.C. (Oct.61 & March 62) 8. E. S. L. C. 9. கைத்தறி நெசவு 10. விவசாயம் 11. அக்கௌண்டன்ஸி 12. ஓவர்சியர் 13. Postal Clerk 14. Post-Man 15. கிராம - மணியம் & கர்ணம் 16. ஹிந்தி வகுப்புகள் (61.ஆகஸ்ட்) 17. ஹோமியோபதி (தமிழ் & ஆங்கிலம்) 18. கிராம வைத்தியம் 19. பேசிக் – ஆங்கிலம் முதலிய வகுப்புகளுக்கு

1952-ம் ஆண்டு முதல் சொந்த அச்சகத்துடன் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு இலவசக் கல்வி பயிற்சி அளித்து வருகிறது நமது கல்வி ஸ்தாபனம். ஆகவே 14-1-61 முதல் ஆரம்பமாகும் நமது புதிய வகுப்புகளின் முழு விவரங்களுக்கு 15 nP. தபால் தலையுடன் விண்ணப்பித்து நமது வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற்றுப் பயனடைய அன்புடன் அழைக்கிறோம்.

தமிழ் நாட்டின் தனிப்பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்!

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

ரிஷிவந்தியம் S. O. தென்னாற்காடு ஜில்லா, தென் இந்தியா

Branches: MADRAS, CEYLON, MALAYA & SOUTH AFRICA

பிரிட்டிஷ்காரரான தலைவர், "பிராவிக்யூட்டரவர்களே! பரபரப்பு அடைய வேண்டாம். ஏன் திரும்பத் திரும்பத் தண்டனையைப் பற்றிக் குறிப்பிடுகிறீர்கள்? குற்றத்தைப் பற்றி விவரமாகச் சொல்லுங்கள்" என்றார்.

"அதைத்தான் சொல்ல வந்தேன். இந்திய குற்றச் சட்டத்தில் (இந்தியன் பீனல் கோடு) இராஜத் துரோகம் என்பதைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசருக்கு எதிராகப் போர் புரிவது பெருங் குற்றமாகும். ஆனால் அரசு யாருடையது? ஆங்கிலேயர்களுடையது. ஆனால் இதோ ஆங்கில சாம்ராஜ்யத்துக்கு எதிராகச் 'சுதந்திர இந்திய சர்க்கார்' யுத்தம் தொடுத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இது சம்பந்தமான அறிக்கைகளையெல்லாம் முன்பே கோர்ட்டார் முன் தாக்கல் செய்திருக்கிறேன்.

"அதன்படி பார்த்தால் இவரோ, இந்திய தேசிய இராணுவத்தாரோ 'இராஜத் துரோகிகள்' என்பதற்கில்லை. ஏனெனில் ஜப்பானியர் 'ஆஜாத் - ஹிந்த் சர்க்கார்' என்னும் சுதந்திர இந்திய சர்க்காரை அங்கீகரித்திருக்கிறார்கள். அச்சு (Axis) நாடுகளைச் சேர்ந்த எல்லாருமே அப்படிச் செய்திருக்கிறார்கள். ஆகவே, இவரை இராஜத் துரோகி என்று எப்படி நிரூபிப்பது? இதுதான் எனக்குச் சிறிதும் விளங்கவில்லை" என்றார்.

தலைவர் வியப்பில் ஆழ்ந்தார். அவரை விட அவருடன் நீதிபதியாக இருந்த இந்தியருக்குப் பிரமாதமான கோபம் வந்து விட்டது. "இந்த மாதிரி பேமாளித்தனமாக நடந்து விசாரணையைக் குழப்ப அடிப்பதைப் பற்றித் தில்லியில் உள்ள இராணுவத் தலைமைக் காரியாலயத்துக்கு இப்போதே 'ரிப்போர்ட்' அனுப்பப் போகிறோம்" என்று கத்தினார்.

மிகவும் பணிவுடன் பிராஸிக்யூட்டராய் தலைகுனிந்து வணங்கி, "அவசியம் அனுப்ப வேண்டியதுதான். ஆனால் சட்டம் என்பது என்றைக்கு இருந்தாலும் சட்டந்தானே? நம்முடைய விருப்பு நோக்கம், சௌகரியம் இவற்றுக்கும் அதற்கும் ஒத்துவரா விட்டாலும் சரி, அது எப்படியும் சட்டந்தானே? நானே இதைப் பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கப் போகிறேன். ஆனால் அதற்கு முன் நான் சொல்வது சரியா, சட்டத்துக்குப்

திருநீர்மலை கோயில் திருப்பணி

குரோம்பேட்டைக்கு அருகேயுள்ள திருநீர்மலை திவ்யமான வைணவப் பகுதியாகும். தோயாத்ரி என்று வடமொழியில் வழங்குவது. ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்துள்ள புண்ணிய ஸ்தலம் அது. மலைமேல் வதியும் பெருமான் தம்மைச் சுற்றிலும் நீரைப் பரப்பிக் கொண்டு, தரிசிக்க வந்த திருமங்கை ஆழ்வாரை ஆறுமாத காலம் காக்க வைத்த ஸ்ரீ ரங்கநாதனவார். மலை அடிவாரத்திலும் ஒரு கோயிலுள்ளது.

செல்வச் செழிப்புக்கும், தெய்வ சிந்தனைக்கும் பெயர்போன பேட்டை முதலியார்கள் இத்தேவஸ்தானத்துக்குப் பரம்பரை தர்மகர்த்தர்கள் என்று சொன்னாலே போதும், அங்கு கைங்கரியங்கள் ஒரு குறைவுமின்றி நடைபெறும் என்பதை உணர்த்துவதற்கு. தற்போது ஸ்ரீ சி. என். வரதப்ப முதலியாருடைய ஏற்பாட்டில் மார்கழி மாதம் 14ந் தேதி (28-12-60) முதல் 24ந் தேதி (7-1-61) வரை பலர் உபயத்தைக் கொண்டு வைகுண்ட ஏகாதசி உற்சவமும் நடைபெறுகிறது.

அவ்வப்போது நடைபெறும் உற்சவங்கள் தவிர கோயில்களைத் தக்க முறையில் சீர்செய்யவும் உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. தொன்மை வாய்ந்த இவ்வாலயம் பெரிதும் சிதிலமுற்றிருப்பதால் ஜீரணோத்தாரணம் செய்து மகா சம்ப்ரோக்ஷணை நடத்த ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது.

மலைக் கோயிலில் சுற்று மதில் எழுப்பவும், இரு கோயில்களின் பிராகார தளவரிசை, பிரதான, பரிவார மூர்த்தங்களின் விமானம், கோபுரம், புஷ்கரணி இவற்றைப் புதுப்பிக்கவும், திருமலைப் படிக்கட்டுகளைச் செப்பனிட்டுப் பக்கச் சுவர் எழுப்பவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சம்ப்ரோக்ஷணை உட்பட இவற்றுக்காக ஒன்றரை லட்சம் ரூபாய் பிடிக்கும்.

ஆஸ்திகப் பெருமக்கள் யாவரும் இத்திருப்பணி சிறப்பாக நிறைவேறத் திரவிய சகாயம் செய்து, இந்தப் புனித கைங்கரியத்தில் பங்கு கொண்டு பகவத் கிருபைக்கும் பாத்திரராவாரென எதிர்பார்க்கப் படுகிறது. திருப்பணி நன்கொடைத் தொகை அனுப்ப வேண்டிய விலாசம்: காரியதரிசி, ஜீர்ணோத்தாரண கமிட்டி, ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி தேவஸ்தானம், திருநீர்மலை (குரோம்பேட்டை மார்க்கம்).

புறம்பா என்று நீங்களே யோசித்துப் பார்த்துச் சொல்லுங்கள். அதன்படியே தீர்ப்பளியுங்கள்'' என்றார்.

இராணுவ விசாரணைக்கு வந்த அந்த நீதிபதிகளுக்குத் தலை சுற்றியது. வாழ்நாளில் இப்படி ஒரு திண்டாட்டத்தில் அவர்கள் சிக்கிக் கொண்டதில்லை.

தலைவர், ''அப்படியானால் என்ன செய்யலாம், சொல்லுங்கள்? ஆசாமியை என்னவோ விடுதலை செய்ய முடியாது. ஆனால் இதோ வெளியே...'' என்று இழுத்தார்.

''அது சரி; ஆனால் கூடத் தயாராக இருக்கும் படையாட்களுக் கெல்லாம் அப்பால், அவர்களுக்கு மேலாகச் சர்வ தேசச் சட்டம் என்று ஒன்று இருக்கிறதே! சுதந்திர இந்திய அரசாங்கம் சம்பந்தமாக இதுதான் முதல் வழக்கு. பிரதம மந்திரி சர்ச்சிலின் கருத்துப்படி 'சுதந்திர இந்திய சர்க்கார்' என்ற ஆஜாத் ஹிந்த் சர்க்கார் யுத்த நாட்டினரில் ஒரு தரப்பாரைச் சேர்ந்தவர்கள் என்பது தெளிவாகி விட்டது. அப்போது இந்த வழக்கின் போக்கே ஒரேயடியாக மாறிவிடுகிறது. நேற்று இரவு நான் தில்லியில் உள்ள இராணுவத் தலைமைக் காரியாலயத்தை இது சம்பந்தமாக 'வொயர்லெஸ்' மூலம் கேட்டிருக்கிறேன். அவர்களும் அவ்வளவு இலேசில் இதைப் பற்றி முடிவு சொல்லி விடுவதற்கில்லை என்றுதான் படுகிறது.''

''அப்படியானால்-?'' என்று சந்தேகத்துடன் கேட்டார் தலைவர்.

''இராணுவச் சட்டத்தின் 98-ஆம் ஷரத்துப்படி இந்த விசாரணை சம்பந்தமான தஸ்தாவேஜுகளையெல்லாம் தில்லிக்கு அனுப்ப உங்களுக்கு அதிகாரம் உண்டு. இன்னும் எதிரியின்மேல் குற்றம் ஏதும் ருஜுவாகவில்லை என்று எழுதித் தவணை குறிக்காமல் வழக்கை ஒத்திப் போடுங்கள்'' என்றார் ராய்.

''அதுதான் சரி; அதுதான் சரி!'' என்றார் தலைமை நீதிபதி. யுத்தம் மும்முரமாக நடக்கும் இந்தச் சமயத்தில் இந்தமாதிரி சிக்கலான வழக்கை அமைதியாக இருந்து விசாரிப்பது என்றால் நடக்காதுதான். ஆனால் அதற்காகப் போய் அவசரப்பட்டு அநீதி செய்ததாகப் பின்னால் தம்மேல் பழி வந்துவிடுமே என்றுதான் அவர் அஞ்சிக் கொண்டிருந்தார். ஆனால் இன்னொரு நீதிபதிக்கு வழக்கை அப்படி முடித்துவிட விருப்பமில்லை. ஆகவே, ''ஆனால் நம் இராணுவத்தை விட்டு ஓடி விட்டதாக இவர்மேல் வழக்குத் தொடுக்க இடம் உண்டே!'' என்றார் அந்த நீதிபதி.

மிகவும் அமைதியாக ராய் வணக்கம் தெரிவித்து, ''இது சாத்தியம் இல்லை. இந்தியன் குற்றச்சட்ட விதிப்படி (பீனல் கோடில்) ஒரு குற்றத்துக்காக இரண்டு தரம் விசாரணை செய்வது பொருத்த மில்லை. இராஜத்துரோகம் என்பதே பொருந்தாமல் இருக்கும்போது இராணுவத்தை விட்டு ஓடி விட்டதாகக் குற்றம் சாட்டுவது சாத்தியமில்லை'' என்றார். இப்படிச் சொல்லி முடித்ததும் அவர் வேறு ஏதோ நினைவில் ஈடுபட்டார்.

அவருடைய மிதா அவரைப் பற்றி இப்போது என்ன எண்ணுகிறுளோ?

(அடுத்த இதழில் முடியும்)

இலங்கை வர்த்தகப் பிரமுகரின் மறைவு

இலங்கையின் பிரபல வர்த்தகரும், பட அதிபருமான திரு சிற்றம்பலம் கார்டினர் தமது அறுபத்தொன்ருவது வயதில் இவ்வுலகை விட்டு மறைந்தார்.



யாழ்ப்பாணத்தில் கல்வி பயின்ற திரு சிற்றம்பலம் கார்டினர் தமது உத்தியோக வாழ்வைப் பள்ளி ஆசிரியராகத் தொடங்கினார். பிறகு இலங்கை வர்த்தக உலகில் புகுந்து தமது இடையருத உழைப்பாலும், சாமர்த்தியத்தாலும் அத்துறையிலும் முதன்மை ஸ்தானம் பெற்றார். 1947-ம் வருஷத்திலிருந்து 1954 வரை செனட்டராகத் தொண்டாற்றியிருக்கிறார். முப்பத்திரண்டு வருடங்களுக்கு முன் 'ஸிலோன் தியேட்டர்ஸ்' என்று இருசினிமா தியேட்டர்களைத் தொடங்கிய அவர் வசம் இன்று 120 சினிமா தியேட்டர்களுக்கு மேல் இருப்பதே அவர் உழைப்புக்குச் சான்று பகரும். திரு சிற்றம்பலம் கார்டினர் தம் பொருளைக் கல்வி நிலையங்களுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும் அள்ளி அள்ளி வழங்கித் தம் வள்ளல் தன்மையைக் காட்டியிருக்கிறார். இத்தகைய தயாள சிந்தை மிக்க திரு சிற்றம்பலம் கார்டினர் மறைவு ஈழத்துக்கு மாபெரும் நஷ்டமாகும்.



இலங்கையில் கிடைக்குமிடம்: AVRA Ltd., Colombo

ரேடியோ சிலோன்: 41.72 மீட்டரில் "ரெமி நாடக விருந்து"
வெள்ளிக்கிழமைதோறும் மாலை 6-30 லிருந்து 6-45 வரை





MINERVA

நாயாடி வளர்த்த நாய்

மு. பிலோ இருதயநாத்

பாலக்காட்டில் நாயாடிகளின் குடிசையில் இரண்டு நாட்கள் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்களின் கூட்டத்தில் ஒருவன் மட்டும் சுமார் பத்து நாய்களுக்கு மேல் வளர்க்கிறான். அதுமட்டுமல்ல; அந்தப் பாடியில் இருக்கும் நாய்களெல்லாம் அவனிடம் அன்பு கொண்டிருந்தன. இரவிலும்கூட அவன் நாய்களின் மத்தியில்தான் படுத்து உறங்குகிறான். ஆகையால் எல்லோரும் அவனை, ''நாய் மாஸ்டர்'' என்று கேலியாக அழைக்கின்றனர். இதைக் கண்டு ஒருநாள் நான் அவனை அழைத்து, ''நாயின் அருகில் படுத்துக் கொள்வதால் நாயின் உண்ணி உன் காதில் நுழைந்து விடாதா? அது பெரிய ஆபத்து அல்லவா?'' என்று கேட்டேன்.

''இந்த நாய்கள் இல்லாவிட்டால், இந்த நாயாடியின் உயிரே போயிருக்கும், சார்!'' என்று கூறினான் அவன். எனக்கு ஒன்றும் விளங்காததால் விவரமாகக் கூறும்படி அவனைக் கேட்டேன்.

''நாங்கள் காட்டு நாயை உண்பதால் எங்களுக்கு நாயாடிகள் என்று பெயர் உண்டாயிற்று. சில சமயங்களில் மர நாயையும் தின்போம். ஆனால் வீட்டில் வளர்க்கும் நாயை மட்டும் தின்பதில்லை. அநேகருக்கு இது தெரியாததால் எங்களை எல்லா நாய்களையும் தின்னும் இனமென்று தவறாகக் கருதுகின்றனர். இவ்விடத்துக்கு வருவதற்கு முன், நாங்கள் மேலம்புழா மலையில் வாழ்ந்து வந்தோம். அந்த மேலம்புழா மலையடிவாரத்தில் பெரியதோர் ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. எங்களுக்கு அந்த ஆறுதான் குளிப்பதற்கும், குடிப்பதற்கும் உபயோகப்படும் தண்ணீர்.




''நான் எங்கு சென்றாலும், நான் வளர்த்த நாய் என்னுடன் வராமல் இருக்காது. சாதாரணமாய் வேட்டையாடுவதும், மத்தி மீனையும், தூண்டில் மீனையும் பிடிப்பதும்தான் எங்கள் வழக்கம்.

''ஒருநாள் நான் மீன் பிடிப்பதற்காக ஆற்றுக்குச் சென்றேன். துணிகளையெல்லாம் முதலில் துவைத்து விட்டு, மீனையும் பிடித்து விட்டுக் கடைசியில் குளித்து விட்டு, துவைத்த உடைகளை அணிந்து கொண்டு மீனையும் எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் செல்வது வழக்கம்.

''அவ்வாறே அன்றும் ஆற்றங்கரையில் துணி துவைத்துக் கொண்டிருந்தேன். என்னைப் போலவே பலர் அங்குமிங்குமாகத் துணி துவைத்துக் கொண்டிருந்தார்கள். என் நாய் திடீரென்று கோபம் பிடித்தது. பிறகு அங்கே துணி துவைத்துக் கொண்டிருந்தவர்களையெல்லாம், கரையை விட்டு, விரட்டுவதைப் போல் அங்குமிங்கும் அவர்களைப் பார்த்துக் குரைப்பதும், கடிக்கப் போவதுமாக ஆர்ப்பாட்டம் செய்தது. துணி துவைத்துக் கொண்டிருந்த எங்களுக்கு இதன் காரணம் விளங்கவில்லை. அதற்குள் சிலர் துணிகளைத் துவைத்து முடித்து விட்டார்கள். நாயையே கவனித்துக் கொண்டிருந்த எனக்கு இன்னும் கொஞ்சம் துவைக்கத் துணிகள் இருந்தன. சிலர் குளிப்பதற்காக ஆற்றில் இறங்கப் போனார்கள். அதற்குள் எனக்கும் துவைக்கும் வேலை முடிந்தது. நானும் குளிக்கத் தண்ணீரில் இறங்கினேன். ஆனால் நாய் என்னை ஆற்றில் இறங்க விடாமல் என் வேட்டியைப் பிடித்துக் கடித்து இழுக்க ஆரம்பித்தது. பலர், ''இந்த நாய்க்குப் பைத்தியம் பிடித்துவிட்டது'' என்றும், சிலர், ''நாய்க்குப் பசிபோல் இருக்கிறது'' என்றும் கூறினார்கள். ஆனால் நாயோ ஆற்றையும் எங்களையும் பார்த்துக் குரைத்துக் கொண்டேயிருந்தது. நானும் ஆற்றை நன்றாகப் பார்த்தேன். ஆற்றின் ஓட்டத்தில் ஒன்றுமே இல்லை. தண்ணீர் தெளிவாகத்தான் இருந்தது. கடைசியில் நான் நாயைக் கல்லால் அடித்துத் துரத்திவிட்டு, ஆற்றில் இறங்கப் போனேன். நான் தண்ணீரில் இறங்குவதைக் கண்ட நாய், உடனே ஆற்றில் பாய்ந்தது. ஆற்றில் ஒரு சிறிய கட்டை மிதந்து கொண்டிருந்ததை நோக்கி நீந்திச் சென்றது. நாங்கள் அதைக் கண்டு சிரிப்பதற்குள், அந்தக் கட்டைக்கும் நாய்க்கும் சண்டை நடந்தது. அப்பொழுது தான் அது கட்டை இல்லை என்றும், அது முதலை என்றும் தெரிந்து கொண்டோம்.

''அக்காட்சியை என்னால் காணவே சகிக்கவில்லை. ஆகையால் நானும் தண்ணீரில் குதித்து நாய்க்கு உதவியாகச் செல்ல ஆரம்பித்தேன். அதற்குள் எல்லோரும் என்னைப் பிடித்துக் கொண்டார்கள். நாயும் தண்ணீரில் மறைந்தது. கரையில் இருந்த எங்கள் உயிரைக் காப்பாற்றியதால், அன்று முதல் எனக்கு நாய்கள் என்றால் அவற்றினிடம் அன்பு அதிகம்'' என்று தன்னுடைய அனுபவத்தைக் கூறினான் அந்த நாயாடித் தலைவன்.



ஆறுதல்

ஸ். சுவாமிநாதன்

நாகம் சுழிப் புரண்டு படுத்தாற்போல் ராஜியின் உடல் ஒருமுறை புரண்டு ஆடி விழுந்தது. அவள் கண்களில் படிந்திருக்கும் இமைகள் மெல்ல அலர்ந்து மறுபடியும் குவிந்து கொண்டதுபோல் தோன்றியது டாக்டர் சுசீலாவுக்கு. மூழ்கிப்போன நினைவு மெல்ல மெல்லத் திரும்பி வருகிறதா என்ன?

தன் முகம் தாழ்த்தி ராஜியின் வதனத்தின் அருகே கொண்டுவந்து உற்றுப் பார்த்தாள் சுசீலா.

ராஜியின் மேனி பூங்கொடியாய்த் துவண்டு, துயின்றது. மெதுவாய் மூச்சு இயங்கிக் கொண்டிருந்தது.

''ராஜி!...ராஜி!...'' ராஜியின் காதருகே தன் அதரங்களைக் கொண்டு போய்ச் சுசீலா மெல்ல அழைத்தபோது, குரலில் கனிவு கொஞ்சியது. பதில் கிடைக்கவில்லை. ராஜியின் மௌனம் இன்னும் விலகவில்லை.

ராஜியின் கணவன் கோபாலன் சுசீலாவை அணுகி நின்றான்.

கோபாலனின் விழிப்பார்வையில் மிஸஸ் சுசீலாவின் முகம் நீந்தியது. அவளது நெற்றியின் நடுவே பெரிய குங்குமத் திலகம்.

திலகமா அது? இல்லை, சுடர் ஜோதி - தீச் சுடர்! ரத்தச் சிவப்பும் வெளிர் நீலமும் அரக்குமாய் வண்ணங்கள். அந்தத் திலகத்தில் நட்சத்திரங்கள் சுடர் விடுகின்றன. பெண் தெய்வம் காட்டும் அருள் உருவமோ?

கோபாலனுக்கு வியர்த்து விட்டது. உடம்பை உதறிக்கொண்டு தன் பிரமையி லிருந்து எழுந்தான்.

''...ஸிஸ்டர்!...''

''...ஊம்...''

''...ராஜிக்கு இப்போது எப்படியிருக்கிறது, ஸிஸ்டர்?...''

''முன்னைவிடத் தேவலாம்...''

''...அப்படியென்றால்...?''

''அதற்குமேல் என்ன சொல்ல முடியும்?''

தொட்டாற் சுருங்கி நலுங்கியது போல் கோபாலனின் முகத்தில் இருள் அடைவது சுசீலாவின் கண்ணில் தைத்தது.

''இதுவரையில் தைரியமாய் இருந்தது பெரி தில்லை. இனிமேல் தான் இன்னும் பொறுமை வேண்டும். சமுத்திரம் எல்லாம் தாண்டி யாயிற்று. கடைசியில் வாய்க்கால் தாண்டுவ தற்குத் தனி தைரியத்துடன் மூச்சுப் பிடித் தாக வேண்டும்'' என்று ஆறுதல் சொன் னாள் சுசீலா.

துவண்டு மிதக்கும் தாமரைக் கொடியை எடுப்பதுபோல் சுசீலாவின் விரல்கள் ராஜி யின் கரத்தை ஏந்தின. ரத்தம் செல்வ தால் ஏற்படும் தமனியின் துடிப்பு மோசம் இல்லை. அபாய எல்லையை இன்னும் கடந் தாகவில்லை.

பக்கத்தில் மேஜையின்மேல் மருந்தோடு தயாராக இருந்த ஊசிக்குழலை எடுத்தாள் சுசீலா. ஊசி ராஜியின் தசையில் பாய்ந்து நரம்பில் நுழைந்தது. செக்கச் சிவந்த ரத்தம் மருந்து திரவத்துக்குள் பீறிட்டது. மருந்து இறங்கி வடிந்தது.

சுகுவைப் பின்னால் தள்ளி மிஸஸ் சுசீலா அறையை விட்டுச் சென்றதும் அறையே இருண்டாற் போலிருந்தது.

அறையில் தனிமை கவிழ்ந்தது. புகை சூழ்ந்தாற்போல் குமைந்த இருளோடு இழைந்து தாங்கியது மின்சார விடிவிளக் கின் ஒளி.

''ராஜி ...ராஜி ...''

தூரத்தே நின்று யாரோ ஆதூரத்துடன் அழைப்பதுபோல் தோன்றியது ராஜிக்கு. பாதிக்கனவில் எழுந்து உட்கார்ந்து விட்டது போல் தெளிவின்றி மிதந்தது நினைவு. கறுப் புத்திரை விழுந்தாற்போல் பார்வை ஒளி யின்றி நழுவி விழுந்தது.

எண்ணத்தின் பிடிபடாமல் வழுவலாய் வழுக்கி ஓடியது சுயஉணர்வு. 'உடலோடு உயிர் இன்னும் இழைகிறதா? அல்லது உடல் வேறு, உயிர் வேறு? அல்லது உயிரின் பழக்கத் தால் உயிரோடு இருப்பதாய்ப் பாவித்துக் கொண்டு அந்த உயிர் நிழலாடலில் உடலி லிருந்து விலகிக் கொண்டிருக்கிறதா?'

''...ராஜி!...ஏய் ராஜி!''

மறுமுறை அழைப்பு நெஞ்சைத் தட்டியது! அழைப்பது யாராம்? நெருங்கிப்பழகிய குரல்! இதே குரல் இதே கனிவோடு, ஆசையோடு, அவலோடு, துடிப்போடு அவள் செவித் திரை யில் ஆயிரம் ஆயிரம் முறை கெகிசத்து விளை யாடி யிருக்கிறது. கொஞ்சிக் குழைந்து களிப் பேற்றி யிருக்கிறது.

உள் நினைவின் அலைமேல் மிதந்து செல்லும் ராஜியை இறுக அணைத்துப் பற்றி இழுத்தது அந்தக் குரல்.

''...ராஜி! ராஜி!''

''ஊம்!'' இயக்க முற்படாமல் இழுமாய்ச் சொல் உதிர்ந்தது. கல்லைக் கட்டிய கண் இமைகள் திமிறிக்கொண்டு திறக்க முயன் றன. பனித்திரை விலக்கி நுழையும் ரவியின் கதிர்போல் பார்வை ஒளி கூட்டியது.

ராஜியின் நெஞ்சில் நெருடல் கண்டது. சூழ்நிலையைப் புரிந்துகொள்ளத் தவித்தது. கோவையற்று, கனவில் நடந்ததாய்த் தோன் றும் நிகழ்ச்சிக் கவடுகளை ஒன்றுசேர்த்துக் குவித்து வைத்து, மலராய், மலரிதழ் அடுக் காய் அமைக்க முயன்றது. நினைவிழந்து கடந்துபோன சம்பவங்களையெல்லாம் இட்டு நிரப்பத் துடித்தது.

இலேசாக உதித்த நோவு மெல்ல மெல்லப் படம் விரித்து உடல் முழுவதையும் கவ்விக்

கொண்டது நினைவிலேயே இருக்கிறது. வேதனை எல்லை தாண்டியதும், பற்கள் அழுத்திய உதடு நெகிழ்ந்து, ஆற்றியதும் அரற்றியதும் மறந்து போகவில்லை. கை பதற, கால் பதற 'அவர்' பிரமித்து நின்ற காட்சி நெஞ்செதிரே நிற்கிறது. காற்றைக் கிழித்துக்கொண்டு வீட்டு வாசலில் டாக்ஸி நின்றதும் அவளுக்கு ஞாபகம் இருக்கிறது.

பின் நடந்தது என்ன? இப்போது இருப்பது எங்கே?

ராஜியின் கண்கள் நாலு சுவரையும் தொட்டன; தடவின; துழாவின. அந்தப் பனி மூடிய மலைச்சிகரங்களின் படம் - அந்த - சிவபார்வதியின் வண்ணச்சிலை - அந்த நீலநிறத் திரைச்சீலை - இதெல்லாம் முன்பே பார்த்த நினைவாய் இருக்கிறது. ஆம்! ஆணி அறைந்தாற்போல் ஞாபகம் இருக்கிறது. மிஸஸ், சுசீலாவின் நர்ஸிங் ஹோம் அல்லவா?

ராஜி ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகிறாள் என்று தெரிந்தபொழுது சுசீலாவுக்குத் தான் எத்தனை மகிழ்ச்சி! அவளுக்கே குழந்தை பிறக்கப் போவதுபோல் அல்லவா மகிழ்ந்தாள். ராஜியைவிட நான்கு வருடங்களுக்கு முன்பே அவளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. அன்புக்கன்பான கணவன்! அவனும் அவளிடம் உயிரை வைத்திருந்தான்; அவளும் வைத்திருந்தாள். மழலை மொழி கேட்க எத்தனை கொள்ளை ஆசைப்பட்டார்கள் அவர்கள்! வைத்தியத்துக் கென்று போகத் தொடங்கி டாக்டர் சுசீலா அவளுக்கு அந்தரங்கத் தோழியாகி விட்டாள். ராஜியைத் தன் நர்ஸிங் ஹோமிலே பிரசவத்துக்கு வைத்துக்கொள்ள வேண்டும் என்று அவள் பிடிக்க பிடிவாதம் என்ன? அவள்



ஆசைப்படியே ராஜீ பிரசவத்துக்கு நர்ஸிங்ஹோமில் சேர்ந்தாள்.

...ஆம்! அதே நர்ஸிங் ஹோம்தான் அது. அப்படியானால் அது எங்கே? அதுதான், அது? அது எங்கே?

எல்லாம் புரிவது போலிருந்ததே? எதுவுமே புரியவில்லையே இப்போது? நிஜமாய்ப் புரிந்தது எது? புரியாதது எது? எல்லாமின் எல்லைக் கோடுகள் எல்லாம் அழிந்தபின் எஞ்சிய வெறுமை நினைவில் புரியாததும், தெரியாததும் ஏது? புரியவும் தெரியவும்தான் என்ன இருக்கிறது? ராஜி மருண்டாள். அமைதி தாரையாய்ப் பாய்ந்தது. நினைவு சுழன்று மறுபடியும் வெள்ளத்தோடு சென்றது.

கோபாலன் ஓடிப்போய் டாக்டர் சுசீலாவை அழைத்து வந்தான். பேழை இறந்தாற்போல் மலர்ந்திருந்த கண்ணிமைகள் மறுபடியும் மூடிக்கொண்டு விட்டதில் அவன் நெஞ்சு அதிர்ந்தது.

"சிஸ்டர்!" கோபாலனின் குரல் நடுநடுங்கியது.

"பயப்பட அவசியமே இல்லை!" 'கணீ'ரென்று தைரியமாய் விழுந்தது டாக்டர் சுசீலாவின் சொல்.

சுற்றிலும் அமைந்திருக்கும் அந்த சாந்தையும் ஒரே இழுப்பில் உள் வாங்கி அமைதியுடன் பெருமூச்சாய் நெட்டித் தள்ளினான் கோபாலன்.

"நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும்! தெளிந்ததும் எதுவும் சொல்ல வேண்டாம்!"

"சொல்லவில்லை ..."

"அவன் கேட்டால்கூடச் சொல்லக் கூடாது."

"சொல்லவில்லை."

"உடலில் தெம்பு இல்லை. அதிர்ச்சி கூடாது. அவள் அழக்கூடாது."

"நிச்சயம் சொல்லவில்லை. பெரிய உயிர் நிலைத்தால் போதும் எனக்கு."

சுசீலாவின் முகத்தில் புன்னகை வளர்ந்தது. உயிரோடு உயிர் போனதையோடு இழையும் போது அவ்வுயிர்களிலிருந்து இணைந்து மலரும் உயிர் முன்னதிலும் பெரியதா, சிறியதா? அல்லது அதே அளவா? அளவே யில்லையா?

இது புதியதா? அல்லது பழையதுதானு? அல்லது உயிரிலே புதுமையும் முதுமையுமே இடையாதா?

கோபாலன் சுசீலாவையே பார்த்துக் கொண்டு நின்றான் சிறிது நேரம். இலைத்தில் நட்சத்திரங்கள் சுடர் விடுகின்றன. பெண் தெய்வம் உருவம் காட்டித் தைரியம் சொன்னுள்.

சுசீலா மறுபடியும் அறையை விட்டகன் ருள். மறுபடியும் தனிமை சூழ்ந்தது.

கோபாலன் சமைந்து உட்கார்ந்தான். ஒப்புக்கொண்ட புதுப் பொறுப்பின் சுமையில் அழுந்திப் போனுன். நினைவு மீண்டு, கண் மலர் திறந்து 'எங்கே?' என்று ராஜி அலறும் போது எப்படிப் பதில் சொல்லாமல் இருக்க முடியும்? தாய்மையின் துடிப்பைக் கண்டு உள்ளம் நெகிழாமல் எப்படிக் காக்க முடியும்?

ராஜி தாய் வீடு கிளம்பியபோது, அவள் கை விரல்களைத் தன் கைக்குள் வைத்துக் கொண்டு வெகு நேரம் விளையாடினுன் அவன். அவளும் விழிகளால் அவனை அணைத்தாள். இருவர் நெஞ்சிலும் குமைந்து எழுந்த உணர்ச்சிகள் நெஞ்சக் குழியிலேயே நின்று விட்டன. அவ் வுணர்ச்சிகளைச் சொற்க ளாக்கி வெளிப்படுத்த அவர்களால் முடிய வில்லை; தேவையும் இல்லை. 'இதயம் நிஜ மாக நிறைந்திருந்தால் அதன் பாஷையை அதுவே அமைத்துக் கொள்கிறது.'

அத்தனை ஆவலாய், ஆசையாய், தாய்மைத் துடிப்போடு இருந்த ராஜியிடம் முழுமை பெற்று வளர்ந்த உருவம் ஜீவனிழந்து சிதைந்து நழுவிய கதையை எப்படித் தெரி விப்பது? எப்படித் தெரிவிக்காமல் இருப்பது?

கோபாலன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண் டான். அரை பிரமையும் கால் நினைவுமாய்த் தடுமாறி விழுகையில் ராஜி புரண்டு படுத்தாள்.

அவள் கண்ணெதிரே ஒரு மல்லிகை மொட்டு மார்பின் மேல் இறங்கியது. குண்டு மல்லிகை - செழிப்பான வளர்ச்சி.

பார்த்திருக்கும் போதே இதழ்கள் அடுக் கடுக்காய்ப் பிரிந்து அவிழ்ந்தன. 'குப்' பென்ற மணம் ஜீவனை அந்தரத்துக்குத் தூக் கியது. அவிழ்ந்த மலருக்குள் தளிராய் ஒரு குழந்தை கவிழ்ந்து உதைத்துக் கத்தியது.

"அம்-மா", "அ-ம்மா". குழந்தையின் கன்ன மென்மையும், குஞ்சுக் கைகளின் பஞ் சும், கொழுகொழு வென்ற உடலின் மெத் தும், தொடைகளில் அடுக்சதையின் பூரிப் பும் சேர்ந்தன. பூவின் மலர்ச்சியில் அதனின்று கமழும் மணத்தில் ராஜியின் அகத்தில் உவகை பூத்தது; மனம் மணத்தது.

"அ-ம்-மா!"

"கண்ணு! கண்ணு! கண்ணு!..."

ராஜிக்கு நெஞ்சமெல்லாம் நெகிழ்ந்தது; அமுதம் பொங்கி மேலாடை நனைந்தது.

அச் சின்னஞ் சிறு பொன்மேனியின் அணைப் புச் சூட்டைத் தன் கழுத்து வளைவில் நுகரத் துடித்தாள் ராஜி. பிஞ்சு விரல்களின் பிடி யில் தன் கேசச் சுருள் அத்தனையையும் கொடுத்து விட்டு வலியில் அலற ஏங்கித் தவித்தாள். அந்த மென்மை பூப்பாதங்கள் துள்ளும்போதெல்லாம் தன் நெஞ்சில் 'விண்', 'விண்'ணென்று உதை பதிய ஆசைப்பட் டாள். மலர்ச்சிரிப்பின் அழகில் மனத்தைக் கொள்ளை கொடுத்து விட்டு மகிழ்ச்சியில் திளைத்தாள்.

வாரி எடுத்து, எத்தனையோ நாட்களாய் அடக்கி வைத்திருந்த தவிப்பு உடைந்து ஓடும் ஓட்டத்தில் அமிழ்ந்து மூழ்கவேண்டும் என்ற மகிழ்ச்சி வெறி. குழந்தையருகே ஓடினுள். குழந்தையோடு மலர் மறைந்தது. திரும்பி னுள். அதோ மலர்-குழந்தை! அங்கேயும் இல்லே, இதோ இங்கே! - இங்கேயில்லே, அங்கே! - அங்கே! இங்கே! - எங்கே?

"...அம்மா!"

"கண்ணு!..."

உதறிக்கொண்டு உட்கார்ந்துவிடவேண் டும் என்ற பதற்றம். பாறையை மேலே வைத்தாற் போல் கனம்! மெல்ல நினைவு மறுபடியும் அழுந்திச் சிதறியது ராஜிக்கு.

'கண்ணு...!' என்று ராஜி முனகியது கோபாலன் காதில் விழுந்தது. தொடர்ந்து அவள் புருவங்கள் நெகிழ்ந்தன. குவிந்த இதழ்கள் போல் அதரங்கள் பிதுங்கின.

கோபாலனின் கண்கள் துளிர்த்தன.

அன்றொரு நாள் நடந்த சம்பவத்தை நினைவு நேரே இழுத்து விட்டது. பின்னும் நினைவில் பத்திரமாய்ச் சேர்த்த சம்பவங்கள், ரகசியமாய்ப் புதைந்து கிடக்கும் பேச்சுக்கள்.

ஆசையாய்ப் பங்கிட்டுக் கொண்ட அன்புப பரிமாறல்கள் அத்தனையும் 'குப்'பென மலர்ந்து வந்தன.

தன் உடலிலே மற்றொரு உயிரோட்டத்தை உணர்ந்து கொண்ட நாளிலிருந்து ராஜி எத்தனை எத்தனை பச்சைக் கனவுகளில் அமிழ்ந்து எழுந்திருப்பாள்! மது அருந்தியது போல் பிரமை கொண்டு தடுமாறி நின்றிருப்பாள் மணிக்கணக்கில்! பெரிய குடையிலிருந்து நூறு நூறாய்ப் பூக்கள் சரிந்து விழ அதில் புதைந்து போவதாய்த் தோன்றும். சுவையின் மதுரத்தில் செயலிழந்ததாகிவிடும். பெண்மையின் நினைவு சுரும் போதையில் உடல் நெகிழ நெகிழத் கரையில் புரளும். விளையாட்டுக்கு அவிராமாய் இதயத்தில் காக்கும் ஆசைகளை வெளியே சொல்லச் சொல் கிடைக்காமல் தவிப்பாள். அப்படிப் பூத்த கனவுகள் இதழ் கொட்டி விட்டது. அவனுக்கும் தெரியாமல் எத்தனை நேரம் இருக்க முடியும்?

அன்றும் அப்படித்தான்.

எதிரே சுவரில் தொங்கிய படத்தில் கண்ணன் ஒளியில் முளைத்தெழுந்து சிரித்து மலர் சிதறினான். அவன் கன்னத்தோடு தன் கன்னம் பதித்து நாணத்தோடு முகம் புதைத்தாள் ராதை.

படத்தில் கண் அமர்த்தியபடி அவன் விரித்த கைக்குள் அவள் நடந்தாள்.

"நம் குழந்தை இப்படிக் கண்ணனைப் போலவே இருப்பான்? 'கண்ணன்' என்றுதான் நான் அவனுக்குப் பெயர் வைக்கப் போகிறேன். பெரிய மகாபண்ணி ஆட்சேபணையை ஆரம்பிக்க வேண்டாம்."

அவளது மென்மையில் அவன் புதைந்து போனான். "கண்ணன் வராமல் அவள் அன்பு வந்தால் என்ன செய்வாயாம்?"

"ராதை என்று பெயர் வைத்துவிடலாம்! சரியா?" அவன் விரல்கள் அவள் இதழ்கள் போல் குவிந்தன.

"சரம்!"

'கண்ணன் - ராதை!' சொல்லும்போதே தேன்வடிந்து நெஞ்சுக்குழல் அடிவரை தித்திக்கும் பெயர்கள். இப்போது யாருக்குப் பெயர் வைப்பதாம்?

"நீங்களே அழுகிறீர்களே? அழுகுதான்! சரம், கண்ணீரைத் துடையுங்கள். ராஜியைக் கவனிக்க நீங்கள் கல்லாகி விடவேண்டும்." கவிதாவின் இலக்கியத்தில் பட்சத்திரங்கள் மின்னின பெண் தெய்வம் உருவம் காட்டிக் கட்டளையிட்டாள்.

கோபாலன் நெஞ்சு மீட்டிய தந்தியாய் நடுங்கியது.

அவுன்ஸ் கிளாஸில் மருந்தெடுத்துக் கோப்பையை ராஜியின் வாயில் பதித்தாள் கவிதா. மொட்டவிழ்வது போல் ராஜியின் பதிந்து நின்ற அதரங்கள் நெகிழ்ந்தன. சிறுசிறு துளியாய் மருந்து செல்லும் போதெல்லாம் நெஞ்சுக்குழல் விம்மித் தணிந்தது தெரிந்தது.

"சிஸ்டர் - !"

"உச்! பேசாமல் இருங்கள். நினைவு வருவதுபோல் இருக்கிறது."

கோபாலன் ராஜியை நோக்கினான். அவள் கண்ணிமைகளின் அடியில் நினைவு மலரும் குளிர்ச்சி தெரிந்தது. விழிகள் நீரும் நிதமாய்ப் பிரிந்து அவிழ்ந்தன. நினைவு மிதப்புக்கு மீண்டு வந்ததும், நிலைகளைம் பூரணமாய் அடையாளம் புரிந்ததும் அந்த நயனங்களின் கண்ணொளி அவன்மேல் இறங்கியது.

ராஜியின் பார்வை தொட்டதும் கோபாலன் தலை குனிந்தான். அவனால் அவளைக் கண்ணெடுத்துப் பார்க்க முடியவில்லை. அச்சம் இறுக்கியது. சொல்லாத வார்த்தைகளில் மௌனம் சமுத்திரமாய்ப் பெருகி கண்களுக்குத் தெரியாத பொறிகளில் எழும்பிப் பறந்து இருவரையும் கைவிட்டியது.

ராஜி திடுக்கிட்டாள். 'ஐயோ! என்ன நடந்தது?'

கவிதாவைப் பார்வையால் துருவினாள் ராஜி. கவிதா ஜன்னலுக்கு வெளியே தன் பார்வையை விரட்டினாள்.

திறனற்ற ராஜியின் கைகளில் திடீரென்று வெறி ஏறிக்கொண்டது. வேகம் வேகமாய் அலைந்து அணைத்திருந்த தலையணையை, படுத்திருந்த மெத்தையை யெல்லாம் ஆவலோடு

கலைக்கு ஒரு சோதனை

கலை அம்சத்தில் சிறப்புப் பெற்ற தங்கள் நாடகங்களின் மூலம் தெய்வ பக்தியை வளர்ப்பதில் நவாப் ராஜமாணிக்கத்தின் மதுரை தேவி பால விநோத சங்கீத சபையார் கடந்த முப்பதாண்டுகளாக ஆற்றிவரும் பணி தமிழகம் அறிந்ததே. அடியார்களைத் தாமே ஆண்டவன் சோதிப்பதும்? சமீபத்திய பேய் மழையின் போது வடார்க்காடு ஜில்லா ஆரணியில் முகாமிட்டிருந்த நாடகக் குழுவினர் பெருத்த இன்னலுக்கு ஆளாகியுள்ளனர். இன்னமும் கூட அவர்கள் அமைத்திருந்த கொட்டகையில் மூன்றடி ஜலம் தேங்கி நிற்கிறதாம். காட்சி ஜோடனைகளும், உபகரணங்களும் பெருத்த அளவில் சேதமாகியுள்ளன. அதோடு, எவ்வளவோ தர்மங்கள் செய்துள்ள நவாப் இன்று தம்மை நம்பி வாழும் இருநூறு நடிகர்களுக்கும் உண்ண உணவும், இருக்க இடமும் அளிக்க வெளியார் சகாயத்தை நாட வேண்டியிருக்கிறது. ஒரு லட்ச ரூபாய் அளவுக்கு நஷ்டம் கண்டுள்ள சபை, மீண்டும் பழைய நிலையைப் பெறப் பொதுமக்கள் தக்க பொருள் உதவி அளிப்பார்களென நம்புகிறோம்.





''சபாவிலே சான்ஸ் கிடைக்கலேன்னு கடத்தைப் போட்டு இப்படிச் சாத்துவானேன்?''

துழாவின; தேடின. துடித்து ஓடின. இல்லே, இல்லே, இங்கே இல்லே!

அருகே நின்ற மரகதத்தொட்டில் சருகு தீர்ந்த மரமாய் வெறிச்சென்றிருந்தது. அங்கேயும் இல்லே. பின் எங்கே?

மோனக்காவலில் மெய்ப்பொருள் கருகவென்று கைத்தது. யாரும் சொல்லாமலே விளங்கியது.

கோபாலனே மறுபடியும் நேராகப் பார்த்தாள். அவன் நிமிராமல் நின்றான். 'எவன் வந்து நெஞ்சில் வாசற்படியில் நின்றும் அப்படி அவள் நின்றதும் அவன் பாதங்களில் இடுவதுபோலப் பத்திரமாய்த் தன்னோடு வைத்துக் கொண்டிருந்த தன்னர்ப்பணம் எங்கே? - இல்லே!

திடீரென்று ராஜியின் தோள்கள் குலுங்கின. மார்பே வெடித்து விடும்படியாய் விக்கி விக்கி அழுதாள். 'கண்ணு கண்ணு, கண்ணு!''

அவளைப் பார்த்துக்கொண்டு செயலிழந்து தூணாய் நின்றான் கோபாலன். அவன் கண்கள் தாரையாய் ஓடின.

''...என் கண்ணன், ஸிஸ்டர், கண்ணன்!''

''உச்! ராஜி. நீ பிதற்றாமல் இருக்கமாட்டாய். அழக்கூடாது. அழுவது நல்லதில்லே'' என்று அதட்டிப் பார்த்தாள் கபிலா.

''நெஞ்சு எரிகிறது. ஸிஸ்டர்! என் கண்ணனே நான் பார்க்கவேயில்லே. பார்க்கவே நீங்கள் விடவில்லேயே! - கண்ணு!''

''ராஜி, நீ சும்மா இருக்க மாட்டாய்?'' - கோபாலன் கெஞ்சினான்.

''...அவன் எப்படி யிருந்தான் என்று நீங்களாவது சொல்லுங்களேன். செக்கச் சிவக்கத்தானே இருந்தான். குண்டு குண்டாய்க் கறுப்பாய்த்தானே இருந்தது கண். உங்கள் சாயல்தானே!''

''ராஜி, அர்த்தமில்லாமல் அழுதால் எனக்குக் கோபம் வரும். போனது எப்படியும் திரும்பி வரப்போவதில்லே. மனத்தைத் திடப்படுத்திக் கொள்ள வேணும். உன் உடம்பும் நன்றாய் இல்லே. நீ அழுதால் மறுபடியும் திருப்பிக் கொண்டு விடுமோ என்று பயமாயிருக்கிறது.'' டாக்டர் கபிலாவிடம் கண்டிப்பு ஓங்கியது.

''என் கண்ணனே இல்லே. நானும் இல்லாவிட்டால் என்ன வந்துவிடப் போகிறது!''

''பைத்தியம் போல் பிதற்றக் கூடாது.''

கபிலாவின் உறுதி கரைய ஆரம்பித்து விட்டது. ராஜியின் துடிப்பு அவள் நெஞ்சைக் கண்டியது. மெல்ல ஜன்னலை நோக்கி நகர்ந்தாள். கோபாலனின் நிழல் அவள்மேல் இறங்கியதை உணர்ந்தாள்.

''ஸிஸ்டர், ராஜி இப்படி அலறுகிறாளே?''

''நான் என்ன செய்யட்டும்? நானும் பெண்தான். எனக்கும் சொந்தமாய்க் குழந்தையில்லே. அந்தத் தாய்மைத் துடிப்பு தெரிகிறது. துக்கம் கட்டுப்படுத்த முடியாதுதான்...''

''கண்ணு - கண்ணு - கண்ணு!'' அலறல் ஓயவில்லே.

''அவள் அழக்கூடாது. கண்ணீர் விடக்கூடாது. ஜன்னி எங்கே என்று காத்திருக்கிறது. அவள் கண்ணீரை நிறுத்த வழி தெரியவில்லே. ஆறுதல் சொல்ல வார்த்தை வரவில்லே. இத்தனே நேர முயற்சியும் வீணுகாமலிருக்க என்ன செய்வது என்று யோசிக்கிறேன்''- தணிவாகச் சொல்லிக்கொண்டே ராஜியை நோக்கி நடந்தாள் கபிலா.

''ஸிஸ்டர், உங்களுக்குத் தந்தி வந்திருக்கிறது!'' என்றபடி அப்போதுதான் கவருடன் வந்தான் சேவகன்.

கவரை ஒளியிலே பிடித்து, உறையைக் கிழித்து எறிந்தபோது கபிலாவின் திலகத்தில் நட்சத்திரங்கள் மின்னின. அமைதி கொஞ்சியது.

கபிலா தந்தியைப் படித்தாள். சட்டென்று அவள் பார்வை சூன்யத்தைப் பிடித்தது. திடுக்கென்று கோபாலனின் விழிகள் அவள் மேல் தாவின. மௌனம் அறையில் உறைந்தது. சொல் வடிவிலே எதுவுமே வரவில்லே.

வலதுபுறக் கையால் தன் நெற்றியை ஒரு முறை அழுந்தத் துடைத்தாள் கபிலா. விரல்கள் நெகிழ, சோர்ந்து விழுந்த கையிலே திலகத்தின் குங்குமம் அத்தனேயும் பற்றிக் கொண்டிருந்தது. குங்குமத்தின் வண்ணத்தில் நட்சத்திரங்கள் மின்னின.

ராஜி அதிர்ந்தாள். அவளுக்குப் புரிந்தது.

எதனுல் ராஜி தன் உயிரை மீண்டும் ஈடுசெய்து விடலாமோ, அதையே கபிலா இழந்து நிற்கிறாள். ராஜியின் கண் புனல் பிரமிப்பில் வடிந்தது; அலறல் ஓய்ந்தது.

டாக்டர் கபிலாவுக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று இப்போது அவளுக்குத் தெரியவில்லே. கபிலாவுக்குச் சாந்தி தரும்படியான சொல் எதுவும் மொழியிலேயே இல்லே.

கோபாலன் திகைத்து நின்றான். அவனுக்கு எதுவும் புரியவில்லே. ராஜியின் கட்டுக்கு அடங்காத அலறல் ஓய்ந்தது எப்படி? டாக்டர் கபிலா என்ன மாயம் செய்தாள்? இனி ராஜி பிழைத்து விடுவாள் இல்லேயா...?

கபிலா உடைந்து உள்ளுக்கு அழுங்கிப் போவதைக் காணச் சகிக்காமல், அவள் மேல் சாய்ந்து அவளைத் தாங்கிக் கொண்டாள் ராஜி. துயரத்தோடு துயரம் ஒன்றியது.


டிசம்பர் 31௳ முதல்
சித்ரா • கிரௌன்
சயானி
மற்ற நகரங்களிலும்
சிவாஜி கணேசன்
அளிக்கும்
பிரபுராம் பிக்சர்ஸ்
விடிவெள்ளி
ஒளிப்பதிவு: வின்சென்ட் கலை: கங்கா
சங்கீதம்: A.M.ராஜா எடிட்டிங்: N.M.சங்கர்
பாடல்கள்: கண்ணதாசன்-மருதகாசி
ஸ்டில்ஸ்: அருணாசலம்
ஸ்டுடியோ: விஜயா-வாஹினி
கதை, வசனம், டைரக்ஷன்: ஸ்ரீதர்
MOHAN ARTS
ELEGANT



நெஞ்சில் நிறைந்தவள்

அத்தியாயம் 21

எங்கும் வியாபித்த எழிலுருவம்

கி. ராஜேந்திரன்

'பால் அண்டு ஜோன்ஸ்' காரியாலயத்தில் ஒரு சில மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. விசாலமான முன் அறையில் முன்பிருந்த பழங்காலத்துக் கடிகாரத்தையும், கிழிந்து போய்ப் பஞ்சைப் பரவ விட்டுக் கொண்டிருந்த சோபாவையும் இப்போது அப்புறப் படுத்தி யிருந்தார்கள். பாதம் நோகாமல் நடக்கத் தரை மீது ஒரு மிருதுவான ரத்தினக் கம்பளம். புது மெருகு குன்றாத நான்கு நாற்காலிகளும் அதன் நடுவே போடப் பட்டிருந்தன. ஒரு மூலையில் இருந்த 'ரிஸெப்ஷன்' என்று அறிவிக்கும் பலகையோடு கூடிய மேஜையையும் இதற்கு முன்னால் கமலபதி அங்கே கண்டதில்லை. அதன் பின்னால் அலங்காரமாக அமர்ந்திருப்பது...மாலதியா? பட்டிக்காட்டுப் பெண் மாலதிதானா இவ்வளவு ஒய்யாரமாகக் காட்சி தருகிறாள்? முன் புறத்தில் வந்து விழுந்திருந்த இரட்டைப் பின்னல்; கண்களைப் பறிக்கும் வர்ணங்களில் ஆடைகள்; டைப் ரைட்டரை இயக்கிய விரல் நகங்களில் 'கியூடெக்ஸ்'; அடேயப்பா! பட்டணத்து நவநாகரிகம் அவளை நன்றாகப் பற்றிக் கொண்டு விட்டதா? அல்லது அவளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உத்தியோகத்துக்கே இவை யெல்லாம் தேவைப்படுகின்றனவா? இரண்டுமே இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டான் கமலபதி. அவள் அருகில் சென்று மெல்லத் தொண்டையைக் கனைத்தான்.

தயாரித்துக் கொண்டிருந்த கடிதம் தடைப்படாமல், குனிந்த தலை நிமிராமல் "தயவு செய்து உட்கார்ந்து கொண்டு தங்கள் பெயரையும் வந்த காரணத்தையும் எழுதித் தாருங்கள்" என்றாள் மாலதி.

"பால்ராஜைப் பார்க்க வேண்டும் எனக்கு" என்றான் கமலபதி.

"அது தெரிகிறது; எதற்காக என்பதை எழுதிக்...."

குரலை அடையாளம் கண்டு கொண்டவளாக! அவனைத் திகைப்புடன் ஏறிட்டு நோக்கினாள் மாலதி.

"நீங்களா?"

"ஆமாம், மாலதி! நான் தான். உள்ளே போகலாம் அல்லவா?"

"அதுதான் நடக்காது: என் அனுமதியின்றி ஒரு சிற்றெறும்புகூட இந்தக் கதவைத் தாண்டிக் கொண்டு போகக் கூடாது; புரிந்ததா?"

"நன்றாகப் புரிகிறது. அதனால்தான் உன் தயவை எதிர்பார்த்துக் கொண்டு நிற்கிறேன் இங்கேயே!"

மாலதி அழகாக முறுவலித்தாள். "முதலில் இத்தனை நாட்களாக என்னை அடியோடு மறந்து விட்டு இருந்தது ஏன் என்பதற்குப் பதில் சொல்லுங்கள்."

"மறதி ஒன்றுமில்லை, சந்திக்கச் சந்தர்ப்பம் நேரவில்லை; அவ்வளவுதான்."

"சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டால் என்னவாம்?"

"இனிமேல்தான் தினம் தினம் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளப் போகிறோமே....?"



"நிஜமாகவா?" என்று கேட்டாள் மாலதி ஆச்சர்யத்துடன். "இங்கேயே மீண்டும் வேலைக்கு வந்து விடுவீர்களா?"

"பால்ராஜ் சம்மதம் தெரிவித்தால் அப்படிச் செய்வதாகத்தான் உத்தேசம் எனக்கு."

அளவுகடந்த சந்தோஷத்தைக் கொஞ்சமும் மறைக்காமல் புலப்படுத்தியது அவள் மலர்ந்த முகம். டெலிபோன் ரிஸீவரைக் கையிலெடுத்து, "கமலபதி வந்திருக்கிறார் உங்களைக் காண" என்றாள் பால்ராஜிடம். பின்னர் கமலபதியிடம், "உடனே உங்களை உள்ளே அனுப்புமாறு உத்தரவு. வழி தெரியுமா, அழைத்துப் போகவா?" என்று கேட்டாள் மாலதி சிரித்தவாறே.

'என்னிடமே உன் சாமர்த்தியத்தைக் காட்டுகிறாயா? இரு இரு, பிற்பாடு உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்' என்பது போல் ஆள்காட்டி விரலை உயர்த்தி அவளை எச்சரித்து விட்டு நகர்ந்தான் கமலபதி.

'என்றைக்காவது உன் மனம் மாறி என் கருத்தை ஒப்புக் கொள்வதாயிருந்தால் இக் காரியாலயத்தில் ஒரு மேஜை நாற்காலி உனக்காகக் காத்திருக்கும்' என்று தாம் அளித்த வாக்குறுதியைப் பால்ராஜ் ஞாபகத்தில் வைத்திருந்தார். தமது அறைக்குள் அடியெடுத்து வைக்கும்போது சற்று நிதானித்துத் தயங்கித் தயங்கி மனக்கிலேசத்துடன் முன்னேறிய கமலபதியை அவர் ஏளனம் செய்யவில்லை; இடித்துரைக்கவுமில்லை. என்றைக்குமே அங்கே வேலையில் இருந்து வந்திருக்கும் ஒருவனாகவே கருதி ஏற்று, முக்கியமான வழக்கு ஒன்றையும் அவனிடம் ஒப்படைத்தார்.

எவ்வளவோ பெருந்தன்மையுடன் தன்னிடம் நடந்து கொண்ட பால்ராஜைத் தனக்குள் பாராட்டிய கமலபதி, அவர் தன்னிடம் வைத்துள்ள நம்பிக்கைக்குக் குந்தகம் விளையக் கூடாது; பழுதில்லாமல் எல்லாக் காரியங்களையும் செவ்வனே முடித்து அவரது அன்புக்குப் பாத்திரனாக வேண்டும் என்று உள்ளபடியே ஆசைப்பட்டான். ஆனால் அது நிறைவேறாதென்று தோன்றியது. அறிவையும் மனத்தையும் ஒருமுகப்படுத்தி எதையும் ஆராய முடியவில்லை அவனால். அறிவு சட்ட நுணுக்கங்களை அலசுவதில் ஈடுபட்டா

னும் மனம் தறிகெட்டு ஓடியது. அக்காளுடைய அறிவுரைகளைக் கேட்ட பின் நடேசனைப் போனால் போகிறது என்று தன் வீட்டுக்கு வரவழைத்தது தவறு என்று எண்ணமிட்டது. 'ஆபீஸிலிருந்து நான் இன்னும் திரும்பவில்லை என்று தெரிந்ததும் எப்படியெல்லாம் கேலி செய்து சிரித்தார்கள், அவரும்! அவருடைய வளர்ப்புப் புதல்வன் ராஜுவும்! பக்கத்திலிருந்த நளினியும் சரோவும் ஒரு வார்த்தை மறுத்துச் சொல்ல வேண்டுமே, கிடையாது! அதற்கென்ன பொருள்? அவர்களும் என்னை மட்டமாக நினைக்கிறார்கள் என்பதுதானே?'.



அவன் தவிப்பைப் புரிந்து கொண்டு பரிதாபப்படுவதாகத் தென்பட்ட ஒரே உயிர் மாலதிதான். "நீங்கள் இங்கே வேலைக்குச் சேர்ந்திருப்பதில் மற்ற எல்லாரையும் காட்டிலும் அதிகமாகச் சந்தோஷப்படுபவள் நான்தான். ஆனால் அது நீடித்து நிலைக்காதிருக்க வழி வகுத்து வருகிறீர்கள்" என்றாள் அவள்.

அவளைக் கவனியாமலே வெற்றுக் காகிதத்தில் ஒரே கோட்டில் நட்சத்திரங்கள் வரைந்து கொண்டிருந்தான் கமலபதி.

"உங்களைத்தான், காதில்விழுகிறதா?" என்று உரக்கக் கேட்டாள் மாலதி.

திடுக்கிட்டுத் துள்ளினான் கமலபதி.

"என்ன சொன்னாய்?"

"பேஷ்! எல்லாருடைய அபிப்பிராயமும் சரியாகத்தான் இருக்கிறது."

"எல்லாரும் என்ன அபிப்பிராயப்படுகிறார்கள், என்னைப் பற்றி?"

"உங்கள் போக்கே விசித்திரமாக இருக்கிறதாம்; பொறுப்புடன் நீங்கள் நடந்து கொள்வதில்லையாம். ஏகப்பட்ட புகார்கள் கிளம்பியிருக்கின்றன இந்தக் காரியாலயத்தில்."

"நியாயமான புகார்கள்தான். நான் மறுப்பதற்கில்லை."

"ஏன் இப்படி எதை யெதையோ மனத்தில் வைத்துக் கொண்டு சங்கடப்படுகிறீர்கள்? யாரிடமாவது ஒளிவு மறைவு இல்லாமல் எல்லாவற்றையும் கூறினால் கொஞ்சம் நிம்மதி உங்களுக்கு உண்டாகாதா?"

"முறையிட்டுக்கொள்ள எனக்கு அப்படி யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டான் அவன் தாபத்தோடு.

"ஏன், நான் எங்கே தொலைந்து போனேன்?" என்றாள் மாலதி.

"மாலதி! உனக்கு நான் உதவ வேண்டியது போக என் மனக் குறைகளைக் கேட்டு நீ எதற்காக உருக வேண்டும்?"

"குழந்தைப் பிராயம் முதல் உங்களிடம் நெருங்கிப் பழகி வந்த தோஷம் தான்!" என்றாள் மாலதி.

அப்போதே அவனுடைய துன்பங்கள் பாதிக்குமேல் தீர்ந்துவிட்டதாக உணர்ந்தான் கமலபதி. ஒருவரோடொருவர் முன்னேற்பாடாகப் பேசி வைத்துக் கொண்டது போல் அன்று மாலை கடற்கரையை நோக்கி நடந்தார்கள். மணலை அளைந்தவாறே தன் மன வேதனைகளை வெளியிட்டான் கமலபதி. "என்னை அசடன் என்று நினைக்கிறார் நடேசன். லட்

சியம், நேர்மை என்று மார் தட்டியவன் இன்று அவற்றிலின்றும் பின்வாங்கி அவமானமடைந்து விட்டதாகக் கருதிக் கொக்கரிக்கிறார். 'போன மச்சான் திரும்பி வந்தான். பூ மணத்தோடே' என்பது போல் நான் பால்ராஜிடம் தஞ்சம் புகுந்து விட்டதாகக் கேலி செய்து சிரிக்கிறான் ராஜு."

"இவ்வளவு தானே? வீணர்களின் பேச்சுக்கு நீங்கள் ஏன் மதிப்புக் கொடுக்கிறீர்கள்? உங்களைப் பற்றிக் குறை கூறக்கூட அவர்களுக்கு அருகதையில்லை. அதனால் நீங்கள் வருந்துவதிலும் சிறிதும் அர்த்தமில்லை."

"அவர்கள் கூற்றிலே உண்மை இருப்பதாகவே நானும் தீர்மானிக்கும் போது....?"

கலவரத்தை எடுத்துக் காட்டும் விழிகள் அவனை ஊடுருவின. "இப்படி மனம் தளரலாமா நீங்கள்? தோல்வியா அடைந்தீர்கள்? கிடையவே கிடையாது! பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது உங்களுக்கு!"

விரக்தியுடன் மெல்ல நகைத்தான் கமலபதி. "பசப்பு வார்த்தைகளால் சமாதானமடையக் கூடிய குழந்தையல்ல நான்."

"நீங்கள் விடைபெற்றுக் கொண்டு போன அன்று நடந்ததைக் கேளுங்கள். பால்ராஜும் ஜோன்ஸும் விசனத்துடன் பேசிக் கொண்டிருந்தார்கள். நான் அருகில்தான் நின்றேன். சட்டக் கல்லூரியில் தம்முடன் படித்த ராகவன் என்ற ஒரு நண்பரைப் பற்றி ஜோன்ஸ் கூறி வந்தார். ரொம்பச் சாமர்த்தியசாலியாம் ராகவன். 'பிராக்டிஸ்' ஆரம்பித்த பிறகு அவரிடம் வந்த முதல் பேர்வழி 'பிக்பாக்கெட்' அடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவன். 'பெடிஷன்' எழுதித் தருகிறேன். இருபது ரூபாய் 'பீஸ்' என்றாராம் ராகவன். பணம் எடுத்து வருவதாகக் கூறிச் சென்ற ஆள் பிறகு அந்தப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லையாம். பல நாட்களாயின. ஜெயிலிலிருந்து ராகவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அந்த அப்பாவிதான் எழுதியிருந்தான். யாரோ அவனுக்குப் போதனை செய்திருக்கிறார்கள், 'வக்கீலுக்கு எதற்காகத் தண்டம் அழுகிறாய்? வீண் விரயம். நீதிபதியிடம் குற்றத்தை ஒப்புக் கொள், தாட்சிண்யம் காட்டி விடுதலை செய்து விடுவார்' என்று. அதைக் கேட்டு மோசம் போனான். ஐம்பது ரூபாய் அபராதம் அல்லது ஆறு மாதங்கள் சிறை என்று தீர்ப்பாகியிருந்தது. தன்னை மன்னித்து விடுமாறு வக்கீல் ஐயாவைக் கடிதத்தில் கேட்டுக் கொண்டிருந்தான் அவன்! இந்தச் சம்பவத்துக்குப் பின் ராகவனுக்கு ஏமாற்றமும் தமது தொழிலில் வெறுப்பும் மிகுந்தன. வியாபாரத்திலே புகுந்தார். இன்றைக்கும் சுகமாகத்தான் வாழ்கிறார். ஆனால் அவர் வாழ்க்கையில் தோல்வி அடைந்து விட்டார் என்பதுதான் ஜோன்ஸின் முடிவு.

"நீங்கள் அந்த ராகவனைப் போல் கோழையாக மாறி விரும்பி ஏற்ற தொழிலைத் துறந்து ஓட்டமெடுக்கவில்லை; உங்களுக்குச் சம்பந்தமில்லாத வேறு துறைகளில் புகுந்து விடவும் இல்லை. பல இடையூறுகளுக்கு மிடையில் வழக்கறிஞருடைய உண்மையான கடமைக்கு எதிராக உண்டான உள்ளப் புகைச்சல்களுடன் போராடி வெற்றி கண்டிருக்கிறீர்கள். பெரிய போராட்டம்! மகத்தான வெற்றி! சந்தேகமே வேண்டாம் அதைப் பற்றி!"

"தோல்வியைக் கூட வெற்றியாக மாற்றி விடும் திறமை இருக்கிறது உனக்கு!" என்றான் கமலபதி வியப்பைக் கட்டுப் படுத்தாமல்.

"கிளம்புவோமா?" என்று கூறி எழுந்தான் மாலதி.

கமலபதி அசையவில்லை. கடற் காற்றைக் காட்டிலும் இதமாக இருந்தது மாலதியின் பேச்சு. உதயமான நிலாவை விட இனிமையாக இருந்தன, அவள் காட்டிய பரிவும் அன்பும்.

"அவசரமா மாலதி?"

கால்கேட்டின் மூலம் பற்கள் சொத்தையாவதைத் தடுப்பதோடு
நாள் முழுவதும்
வாய் துர்நாற்றத்தையும் அகற்றுங்கள்!



ஏனெனில், கால்கேட் பற்பசை சொத்தையையும் துர்நாற்றத்தையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒரேதேய்ப்பில் **ஒழிக்கிறது!**

உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10-ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத் தான் உண்டு.

இதன் விசேஷமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் சேர்ந்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல்துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர்மூலம் அடையலாம்-ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

வெண்ணிற பற்களைப் பெறவும், வாயில் நறுமணம் கமழவும், உலகிலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

DCG. 2107 TAM.

"அலைமோதும் உங்கள் உள்ளத்துக்கு அமைதியைத் தேடித்தரும்வரை எனக்கு அவகாசம்தான்." மாலதி மீண்டும் உட்கார்ந்து வெண் மணலில் அவன் வைத்த புள்ளிகளைச் சுற்றிக் கோலம் வரைந்தாள். எட்டு வயதிலேயே அப்படி விளையாடி அவர்களுக்குப் பழக்கம். "வேறு பல கவலைகள் உங்கள் மனத்தை வருத்துகின்றன. அவைதான் நீங்கள் படும் துயரத்துக்கு நிஜமான காரணங்கள். அப்படித்தானே? அவற்றை என்னிடம் விண்டு கூற நீங்கள் பிரியப் படவில்லை!"

கமலபதி அசந்து போய் விட்டான். வாய் திறந்து வெளியிடா முன்னரே தான் படும் அவதியை எப்படி உணர்ந்தறிந்து அனுதாபம் காட்டுகிறாள் இவள்! என்னிடம் எவ்வளவு ஈடுபாடு இருந்தால் அது சாத்தியமாகும்? மாலதியின் உருவம் அவன் எதிரே வளர்ந்து வளர்ந்து எல்லாத் திக்குகளிலும் வியாபித்து விட்டது அந்த நிமிஷத்தில்.

வீட்டுக்குப் போக அவன் தயங்கிய பின்னர் மிருதியை ஊகிப்பது மாலதிக்குக் கடினமல்ல என்பதை அவன் சிந்தனைக்கு எட்டாமல் செய்து விட்டது விதி.

பதில் கூறாமல் மணலைச் சமனப்படுத்தி ஒரு விரலால் எழுதினான்: "மாலதி" இரண்டு சொட்டுக் கண்ணீர் அதன் மீது உதிர்ந்தது. துணுக்குற்று அவள் கரங்களைப் பற்றினான் கமலபதி. "மாலதி! அழுகிறாயா என்ன?"

"ஆமாம்; அழுகிறேன். எனக்காக அல்ல; உங்களுக்காக. இதயத்தின் ஆழத்தில் புதையுண்டு கிடக்கும் ரகசியங்களையெல்லாம் என்னிடம் சொல்லி ஆறுதல் தேடுவீர்கள் என்று நான் எதிர் பார்க்கவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய கஷ்டங்களில் பங்கு கொண்டு, கூடுமானால் குறைத்தும்விட ஒரு ஜீவன் ஒவ்வொரு வினாடியும் முயன்று வருகிறது. கடுகளவாவது அதில் முன்னேற்றம் ஏற்படுமானால் அதைப் பெறுதற்கரிய பேரின்பமாகக் கருதுவேன்!"

நீர்த் திரையிட்ட கண்களால் அவனை ஏக்கத்தோடு பார்த்தாள் மாலதி.

நன்றிப் பெருக்கோடு, "மாலதி! நான் அதிர்ஷ்டக்காரன்!" என்றபோது கமலபதியின் குரல் தழுதழுத்தது.

அத்தியாயம் 22

தடுமாற்றம்

கணப்பொழுதில் திக்கெட்டும் பரவியதோடு நில்லாமல் அவன் நெஞ்சுக்குள்ளும் புகுந்து வளர்ந்து வளர்ந்து அவனைத் திணற அடித்துக் கொண்டிருந்தது அந்த உருவம்.

காரணத்தைக் கேட்டறியாமல் அவன் துயருற்றிருக்கிறான் என்பதற்காகவே தானும் வருந்திக் குழையும் குணம் அந்தக் காரிகையை அவன் கருத்திலே ஓங்கி உயர்ந்து நிற்கச் செய்து விட்டது.

சிறு பிராயம் முதற்கொண்டே அருகிலிருந்து அவனது அலட்சியத்துக்குள்ளான ஒருத்தி இன்று அவன் இதயத்தைத் தொட்டு விட்டாள்.

யுகம் யுகமாக அவன் இழுத்துப் பூட்டி வைத்திருந்த சிறைக் கதவுகள் படீர் படீர் என்று வெடித்துத் தெறித்துத் திறந்து கொண்டன.

காலமெல்லாம் தர்க்கத்திலேயே கழிய வேண்டுமா என்று வாடிய அவன், தான் செய்தது எதுவானாலும் அது சரி என்று ஒத்துப் போகும் ஒருத்தியைக் கண்டு விட்டான். கண்கள் நிலை குத்தி நின்றன. நீக்கமற எங்குமே நிறைந்து விட்டாள் அவன்.

உற்சாகத்துக்குக் கேட்பானேன்? சீட்டி அடித்தவாறே, உடலில் ஒட்டிக் கொண்டிருந்த கடல் மணலெல்லாம் போகுமாறு குளித்து விட்டு வந்தான் கமலபதி. ஈரம் சொட்டிய தலையைச் சீவிச் சிங்காரிக்க நிலைக் கண்ணாடியை அணுகினான்.

உயரமான அந்த நிலைக்கண்ணாடிக்கு முன்னால் அவனுக்காகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு ஒரு முக்காலியில் அமர்ந்திருந்தாள் அவள். அப்போது தான் சோப்பு தேய்த்துக் கழுவியிருந்ததால் அவள் முகம் பளிச்சென்று துலங்கி மென்மையான மணம் பரப்பியது. ஒரு கையிலே செஞ்சாந்துக் குப்பி; மற்றொரு கையிலே பொட்டு வைக்க உதவும் கண்ணாடிக் குச்சி - இவற்றுடன் இலேசாக முன்புறம் சாய்ந்து பிரதிபிம்பத்தின் ஒளிரும் நெற்றியிலே கண்களைப் பதித்தாள் அவள். அந்தச் செய்கையின் போது தன் இடக்கரத்தில் நழுவித் தொங்கிய இளம் பச்சை நிற ஜார்ஜெட் சேலைத் தலைப்பைச் சரிசெய்து கொள்ள இயலாத வண்ணம் பிறை நுதலில் திலக மிடுவதிலே ஈடுபட்டிருந்தன விரல்கள்.

மஞ்சள் நிறச் சோலி அணிந்த மார்பு தங்கக் கலசங்களென மின்னியது.

மந்திரத்தில் கட்டுண்டவளாக அழகு கொஞ்சிக் குலவிய அந்தப் பெண்ணுரு வின் பிரதிபலிப்பை வைத்த கண் வாங் காமல் பார்த்தவாறே மெல்ல அடி யெடுத்து வைத்தான் கமலபதி. தனக் குப் பின்னால் அவன் வந்து நிற்பதை அவளும் எதிரிலேயே கண்டு விட்டாள். செயலற்றுச் சிலையாகி விட்ட அவ ளுடைய இதயம் மட்டிலும் துரிதகதியில் அடித்துக் கொண்டது. ஏங்கி ஏங்கிக் காத்துக் கிடந்த இன்பவேளை இறுதியில் நெருங்கி விட்டதா? நம்பவே முடிய வில்லை அவளால். அவன் விரல்கள் தன் கழுத்தை வருடியபோது, நம்பாமலும் இருக்க முடியவில்லை. அந்தச் சந்தோ ஷத்தில் சுவாசிக்கவும் சக்தியற்றுப் போய்ச் செத்தே விடுவோம் என்று தோன்றியது. மூச்சைப் பிடித்துக் கொண்டு ஆடாமல் அசையாமல் காத் துக் கிடந்தவள் அவன் கைகள் தன் தோள்களைப் பற்றியபோது மார்புக் குள்ளே நிறைந்து நிறைந்து வெட்ட வெளியில் கலந்துவிடக் குமுறிக் கொண்டிருந்த காற்றை நெட் டுயிர்ப்பாக வெளியேற்றினாள். அதில்தான் எத்தனை சுகம்? எவ்வளவு வேதனை? அவளு டைய சிரம் அவன் மார்பிலே சாய்ந்தது; கூச்சத்தில் கண்கள் தாமாகவே மூடிக்கொண்டன.

"மாலதி!"

நளினியின் உடல் சில்லிட்டு விட்டது. இதயம் நின்று விட்டது. உடல் செயலற் றுப் போயிற்று. நரம்புகள் உணர்வை இழந்தன. சிந்தனை இருண்டது. கண்கள் மட்டும் கட்டுக் கடங்காமல் தாரை தாரையாகக் கண்ணீர் அருவி யைக் கக்கிக் கொண்டிருந்தன.

கமலபதி ஏதேதோ உளறி னான்.

அவள் செவிகளில் ஒன்றுமே விழவில்லை.

இருள் விலகியது. அவள் எதிரே ஒரே பனிப் படலம்; மலைச் சரிவு. மலைச்சரிவிலே, பனிப்படலத்திலே அவள் ஏறிச் சென்று கொண்டிருந்தாள். கால்கள் வெண்பனியிலே புதைந்து கொண்டன. குளிரில் உறைந்து போயின. உடல் வெடவெடத்தது. மூச்சு வாங்கி யது. இனி ஓர் அடிகூட எடுத்துவைக்க முடியாது அவளால். ஆனாலும் எல்லை யற்ற வெண்பனிக் காட்டிலே முடிவற்ற மலைச் சரிவிலே அவள் அரும் பாடுபட் டாவது ஏறிச் செல்லத்தான் வேண்டும். விழுந்து எழுந்து தட்டுத் தடுமாறி அவள் நடந்தாள்.

அதோ, மலைச்சிகரம் தெரிகிறது. அதன் உச்சியில் நிற்பது யார்? கை நீட்டிச் சைகை காட்டித் தன்னை அன் புடன் அழைப்பது யார்? அவரேதான்! தன் வலக்கரம் பற்றி அக்கினியை மும் முறை வலம் வந்த கணவர்தான்!

புதியதொரு வேகம் உந்தித்தள்ள நளினி விரைந்தாள். மலைச்சரிவில் அவள் ஏறஏற மலைச்சிகரம் உயர்ந்துகொண்டே போயிற்று. வானத்தை முட்டி அதற்கு அப்பாலும் மேலே மேலே வளர்ந்து கொண்டேயிருந்தது.

அவரை அணுகவே முடியாதோ? கால்கள் நகர மறுக்கின்றனவே? புதை சேற்றுக் குழியைப் போலப் பனிக்காடு தன்னைக் கீழே இழுத்து அடக்கம் செய்து விட முயலுகிறதே! உடல் சோர்ந்து



விட்டதே! இனிக் கீழே விழவேண்டியது தான். இம்மி அளவுகூட முன்னேற முடியாது. நளினியின் தேகம் சாய்ந்தது. கடைசியாக ஒருமுறை மலைச் சிகரத்தில், தனக்கு எட்டாத உயரத்தில் நின்று தன்னைக் கூப்பிடும் கணவனை ஆசைதீரப் பார்த்தாள். அவனை நோக்கிக் கூப்பிய கரங்களுடனேயே வெண்பனிக் காட்டில் விழுந்து விம்மி விம்மி அழுதாள்.

படாரென்ற சத்தம் கேட்டுத் தூக்கி வாரிப் போட நிமிர்ந்தான் கமலபதி. 'ஐயோ! இதென்ன பயங்கரம்? தன் முகம் இந்தக் கோர சொரூபத்தை எப்போது அடைந்தது?'

நிலைக் கண்ணாடியிலிருந்து கொண்டு அந்த அவலட்சணப் பிசாசு பேசிற்று: "தவறே செய்யாதவன் நேர்மையானவன் என்று மார்தட்டுபவர்களெல்லாம் வேஷம் போடுகிறார்கள்!"

அக்காளின் கடுசொற்களை நினைவூட்டுவதுடன் அவனது வேஷத்தையும் களைந்தெறிந்து அருவருக்கத் தக்க உண்மையான தோற்றத்தைக் காட்டுகிறதா கண்ணாடி?

சர்வ கோணலாக விரிசல் விட்டிருப்பதால்தான் தன் முகத்தை அவ்வளவு கோரமாகப் பிரதிபலிக்கிறது அது என்பதைப் புரிந்துகொள்ளப் பல நிமிஷங்கள் பிடித்தன கமலபதிக்கு. அது உடையக் காரணம்?

சரிந்து விழுந்திருந்த நளினியின்மீது அவன் பார்வை சென்றது. அவள் கையிலிருந்த செஞ்சாந்துக் குப்பிதான் கவிழ்ந்து விட்டதா? அல்லது அவள் நெற்றியிலிருந்து குபுகுபு வென்று பாய்ந்து வருவது நிஜமாகவே குருதிப் பெருக்குத்தானா?

உடலும் உள்ளமும் பதறித் துடிக்க அவளை மார்புற அணைத்துத் தூக்கிச் சென்றான் கமலபதி. சாய்வு நாற்காலியில் கிடத்திவிட்டுக் கொஞ்சம் முகப் பூச்சைக் கீறல் விழுந்த இடத்திலே அப்பி ரத்தப் பெருக்கை ஓரளவுக்கு நிறுத்தினான். ஆடையைத் தளர்த்தி விட்டுக் கைக்குட்டையை நனைத்துவந்துமுகத்தில் ஒற்றி மயக்கம் தெளிவிக்க முயன்றான்.

ஓரிரண்டு நிமிஷங்களுக்கு மேல் அவனால் பொறுக்க முடியவில்லை. இது அவளுக்கு இரண்டாவது முறையாக ஏற்பட்ட மன அதிர்ச்சி, மயக்கம். சில நாட்களாகத்தான் தேறத் தொடங்கியிருந்த தேகம் இதனைத் தாங்குமா? உடனடியாக டாக்டரை அழைத்து வர வேண்டியது அவசியமாயிருந்தால்......? அவளைத் தனியே விட்டுச் செல்வதா? மயக்கம் தெளிந்ததும் அவள் தன்மீதே கொண்டிருக்கும் சுய வெறுப்பு எல்லை மீறிப் போய்....

தாறுமாறான எண்ணங்களுக்கு அணை போட்டுவிட்டு அவசரம் அவசரமாகக் கிளம்பினான் கமலபதி, வைத்தியரை அழைத்து வர.

அறைக் கதவைத் தாண்டும் சமயம், "சற்று நில்லுங்கள்" என்று ஈனஸ்வரத்தில் கேட்டுக் கொண்டாள் நளினி.

கமலபதியின் தேகம் குப்பென்று வியர்த்துவிட்டது. அவளைத் திரும்பிப் பார்க்க அவனுக்குத் திராணியில்லை. இன்னும் சற்று நேரம் அவள் கண் விழிக்காமலே இருந்திருக்கக் கூடாதா? தனிமையில் அவளிடம் சிக்கிக் கொண்டதற்காகச் சிரமப்பட்டான் அவன்!

பின்னால் காலடியோசை கேட்டது. வெட்கமும் அவமானமும் ஒன்றாகப் பிடுங்கித் தின்ன, ஒரு கரத்தால் கதவைப் பற்றித் தாங்கியவாறே மற்றொரு கரத்தால் நெற்றியை அழுத்திப் பிசைந்தான் கமலபதி.

அவன் தோள்களில் உள்ளங் கைகள் இரண்டு பதிந்தன. பளிங்குக் கன்னம் ஒன்று முதுகை முட்டி உரசியது. "மூர்ச்சித்து விழுந்து விட்டது தவறுதான். மன்னியுங்கள்" என்று கெஞ்சினாள் நளினி.

இந்த வேதனை, உள்ளத்தைக் குடைந்தெடுப்பதை நிறுத்தி உயிரைக் குடித்து விடக் கூடாதா என்று ஏங்கினான் கமலபதி.

"மாலதியாகவே என்னை எண்ணிக் கொள்ளுங்கள்; எனக்குக் கவலையில்லை!"

"நளினி!" என்று அலறினான் கமலபதி. "என்னைச் சித்திரவதை செய்யாதே, நளினி! விட்டு விடு; எங்காவது கண் காணாத இடத்துக்குத் தொலைந்து போகிறேன்!"

கண்ணீரும் கம்பலையுமாக அவன் எதிரே வந்து நின்றாள் பேதை. "எந்த விதத்திலாவது மனைவி கணவனுக்காற்ற வேண்டிய கடமைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறேன் நான். மறுக்காதீர்கள்; தடை விதிக்காதீர்கள்!"

படீர் படீரென்று தலையில் போட்டுக் கொண்ட கமலபதி, அவளிடமிருந்து விலகி ஓடிவிட யத்தனித்தான். அதற்கு முன்னால் கீழே சரிந்து அவன் கால்களைச் சுற்றி வளைத்துக் கொண்டாள் அவள். கணக்கில்லா நீர்த் துளிகளைச் சிந்தின அவளது இரு கண்களும்.

தூண்டில் புழுவாக நெளிந்த நெஞ்சம் பேசியது: "நளினி! உன்னால் என்னை மன்னிக்க முடியுமானால் மன்னித்துவிடு."

கண்ணீரால் கழுவப்பட்டுத் தூய்மை அடைந்த அவன் பாதங்களை நயனங்களில் ஒற்றியவாறே பலமாகத் தலையசைத்தான் நளினி. "மன்னிப்பைக் கோராதீர்கள். அன்பைக் கேளுங்கள்;

அன்பு செலுத்துங்கள். இல்லாவிட்டால் கடமையில் தவறிய ஏக்கத்திலேயே நான் செத்துப் போய் விடுவேன்!'' என்றாள் அவள்.

கணப் பொழுதில் கல்லாகி விட்டது கமலபதியின் இதயம். ''வீணுகப் பிடிவாதம் செய்யாதே, நளினி!'' என்று அவளை மூர்க்கத்தனமாக உதறித் தள்ளிவிட்டு விரைவாக நடந்தான்.

ஒரே எட்டில் வாசலை அடைந்து வழி மறித்து நின்றாள் நளினி. ''மாலதியாக இருக்கும்பொழுது நான் உங்களுக்கு வேண்டும்; நளினியாக மாறினால் வேண்டாமா?'' என்று அனல் தெறிக்கக் கேட்டாள்.

''நளினி!'' என்று அதட்டினான் கமலபதி. ''இரக்கமற்ற அந்த இரவு உனக்கு நினைவிருக்கிறதா? அன்றைக்கு உன் அரவணைப்பிலிருந்து தப்பி ஓடி எங்கே போனேன், தெரியுமா? முனியனின் குடிசைக்குச் சென்று அவனுடைய குழந்தையைத் தூக்கிக் கொஞ்சினேன். அப்போது ஜெயிலிலே இருந்த முனியன் பின்னால் இறந்தே போய் விட்டான். பிரேதத்தைத் தன் மடியில் போட்டுக்கொண்டு அவன் மனைவி கதறிய காட்சி இப்போதும் என் கண் முன்னால் நிற்கிறது. மரணக்களையுடன் கூடிய அவன் முகம் சதா சர்வகாலமும் என்னுடன் இருந்து துன்புறுத்தக் காரணம் யார்? சிவதாணுவைக் கொன்று போட்ட உன் அப்பாவா; அல்லது அவர் சார்பிலே கோர்ட்டில் பொய்ச் சாட்சி கூறிய நீயா? சொல்லு, நளினி! யார் காரணம் ஒரு பாவமும் அறியாத முனியனின் சாவுக்கு?''

உணர்ச்சி மிகுதியிலே கமலபதியின் உடல் நடுங்கியது. தலைகுனிந்து மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த நளினி மன்றாடுகிற மாதிரியில் மெல்ல அவனை ஏறிட்டு நோக்கினாள்.

''முனியன் செத்துப் போய் விட்டான்; நான் உயிரோடு இருக்கிறேன்!

''நளினி இன்னும் உயிருடன் தான் இருக்கிறாள். புரியவில்லையா உங்களுக்கு?''

'இல்லை' என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்துவிட்டு வெளியே போய்விட்டான் கமலபதி. நளினியின் விம்மல் எப்போது ஓய்ந்ததென்பது இருவருக்குமே தெரியாது. (தொடரும்)

கலைவெள்ளம்

மணிவண்ணன்

பூ மணக்கும் சோலையெல்லாம் புதியதமிழ்ப்
 பாமணக்க வாழ்ந்தபழம் புலவோர்கள்
நா மணக்க வாய்மணக்கச் செய்தகவி
 நாதங்கள் காலமெனும் பேரேட்டில்
சிவனுக்குப் பரிதவிக்கும் சிறுமைநிலை
 தினந்தினமும் கண்டுகண்டு தெளிந்துபினும்
நீ வலுத்து நிலைக்கவெனும் மனத்திமிரை
 நீக்கவில்லை நினைக்கின்றாய் திளைக்கின்றாய்!

பொன்னொழுகு காவிரிப்பூம் புனற்கரையில்
 புலியரசர் பீடுநடை நடந்ததுவும்
மின்னினிடை நங்கையர்கள் அன்னமென
 மெல்லியள மஞ்ஞைநடை பயின்றதுவும்
என்னெனவோ பழம்பெருமை நிகழ்ந்ததுவும்
 இன்றில்லை சென்றவிடம் தெரியவில்லை
பின்னும்நீ நினைக்கின்றாய் பெருநினைவு
 பொல்லாத காலநிலை மறந்தாயோ!

முத்தெடுத்து கரைகுவித்த கொற்கைமுகம்
 மூழ்கிமறைந் தொழிந்தவிட மாறிவார்
கத்துகுயில் பொதியவரைக் கழனிவெளி,
 கவிவாணர் மனநிறைந்த பலநினைவு,
இத்தரையில் பெருமைநிறை மதுரைநகர்,
 இன்புலவர் மன்றில்நிறை யுறந்தைநகர்,
எத்தனையோ பழம்பாடல், இவையெல்லாம்
 இருந்தவிட மிருந்தொழிய அவையில்லை.

மதுரமொழிக் கவிச்செல்வர் வளர்த்ததமிழ்
 மன்றங்கள் சங்கங்கள் இன்றெங்கே
சதுரர்பலர் களம்நின்று வென்றபுகழ்
 சரிதத்தே நின்றதன்றிப் பலனென்ன
பதறிவரும் விரைவுநிலைப் புதியயுகம்
 பழமையெலாம் போயொழியப் பலப்பலவாம்
புதியநிலை கொணர்ந்தாலும் மறப்பறியோம்
 பொற்புமிகு பழையவெழில் போற்றிடுவோம்.



நீரிழிவு

நோயாளிகளுக்கு

இலவச ஆலோசனை


❋

சிறு நீருடன் சர்க்கரை வெளியானால் அதற்கு டயாபெடிஸ் மெல்லிடஸ் (Diabetes Mellitus) என்றும், சர்க்கரை இன்றி அடிக்கடி சிறு நீர் கழித்தால் அதற்கு டயாபெடிஸ் இன்ஸிபிடஸ் Diabetes insipidus என்றும் பெயர். இந்த வியாதியால் அவதியுறும் நோயாளிகள் அதிக தாகம், பசி, தேகமெங்கும் வலி, சரீர உழைப்பு அல்லது மன சிந்தனை வேலை ஆகியவற்றைச் செய்ய விருப்பமின்மை, நாளுக்கு நாள் எடை குறைதல், சொறி, சர்ம வியாதிகள் மந்தமான கல்லீரல், பலமற்ற மூத்திரக் காய்கள் மற்றும் பழுதுள்ள பாங்கிரியாஸ் ஆகிய கஷ்டங்களுக்கு இலக்காவர். இந்த வியாதியைக் கவனிக்காவிட்டால் முடக்கு வாதம், சாவேஸ்வரம் தாங்க முடியாமை ராஜப் பிளவை, தேகம் மற்றும் மன வலிமை குறைதல், தேக ஓய்ச்சல் அதிகக் களைப்பு மற்றும் பொதுவாக தேகத் திடமின்மை ஆகியவை ஏற்படக்கூடும். இஞ்செக்ஷன் ஏதுமின்றி, பட்டினி மற்றும் பத்தியமின்றி இந்த அபாயகரமான வியாதியை ஒழித்து, என்றென்றும் வாலிப வனப்புடனும் தேக திடத்துடனும் உழைப்பில் ஈடுபட, இலவச வைத்திய ஆலோசனைக்கு எமக்கு எழுதும்படி இந்த நோயினால் அவதியுறுபவர்கள் வேண்டப்படுகின்றனர். காலம் கடக்குமுன் உடனே தயவுசெய்து எழுதவும்.

❋

வீனஸ் ரிசர்ச் லாபரடரி (K. M.)

தபால் பெட்டி நெ. 587-கல்கத்தா



வாஸந்தி

சாலை ஓரத்திலே அமர்ந்து உலக வாழ்க்கைக் காட்சிகள் சிலவற்றைக் கண்டு, அவற்றையெல்லாம் பேதைமையாகக் கருதும் ஸந்யாஸியின் முன், தீண்டத்தகாதார் வகுப்பைச் சேர்ந்த வாஸந்தி என்னும் சிறுமி வருகிறாள்.

'என் பெயர் வாஸந்தி. நான் ரகுவின் மகள். ஸ்வாமி, உங்கள் அருகில் நான் வரலாமா ?' என்று கேட்கிறாள்.

'ஏன் கூடாது, குழந்தாய் ?' என்கிறான் ஸந்யாஸி.

'நான் பக்கத்தில் வந்தாலே தீட்டு என்கிறார்கள்.'

'அப்படிச் சொல்கிறவர்கள் எல்லோருமே தீண்டத் தகாதவர்கள். பிறவிப் படுகுழியிலே புரளுகின்றவர்கள். இந்த உலகைத் தன் மனத்திலிருந்து கழுவியவன் எவனோ அவனே தூய்மையானவன்.'

'அப்போது என்னை நீங்கள் தொடலாமா ?'

'நான் எதையும் தொடலாம். ஏனென்றால் என்னை ஒன்றும் தொட முடியாது. நான் முடிவற்ற ஒன்றில் என்றும் நிலைத்து இருப்பவன்.'

'வா என்று அருகில் அழைத்து விட்டு, பிறகு என்னைப் போ என்று விலக்க மாட்டீர்களே ?'

'அழாதே, குழந்தாய்! கண்ணீரைத் துடைத்துக் கொள். நான் ஸந்யாஸி, எனக்கு வெறுப்புமில்லை, விருப்புமில்லை. எனக்கே சொந்தம் என்று உன்னிடம் உரிமை கொண்டாடினால் அல்லவா, உன்னை நான் விடுவதற்கு? என்னைப் பொறுத்தவரை இந்த நீல வானத்தைப் போலவே நீ இருக்கிறாய், அதாவது இருந்தும் இல்லாமல் இருக்கிறாய்.'

இந்தத் தத்துவமெல்லாம் வாஸந்திக்கு விளங்கவில்லை. அவள் தன் குறையைச் சொல்லுகிறாள் :

'ஸ்வாமி, மனிதர்கள் மட்டுமா, தெய்வம்கூட என்னை ஒதுக்கி விட்டது !'

ஸந்யாஸி நகைக்கிறான் :

''நானும் உன்னைப் போலத்தான். எனக்கும் மனிதர்களோ, தெய்வங்களோ இல்லை. நான் அவர்களை யெல்லாம் ஒதுக்கி விட்டேன்.'

'உங்களுக்கு அம்மா இல்லையா ?'

'இல்லை.'

'அப்பா ?'

'இல்லை.'

'நண்பன் ஒருவன்கூட ?'

'இல்லை.'

'அப்படியானால் உங்களோடு நான் இருக்கிறேன். என்னை விட்டு விட்டுப் போக மாட்டீர்களே ?'

'விடுகிற படலம் எனக்கு இனிமேல் இல்லை. எல்லாவற்றையும் விட்டாகி விட்டது. நீ என் பக்கத்தில் இருக்கலாம், குழந்தாய். ஆனால் என்னை உண்மையில் அணுகாமல் இருக்கலாம். என்னை ஒன்றும் அணுக முடியாது, தொட முடியாது.'

'என்ன சொல்கிறீர்கள் ? எனக்குப் புரியவில்லை. இந்த உலகத்தில் எனக்குத் தங்குமிடம் ஒன்றுமே இல்லையா ?'

'தங்குமிடமா ? இந்த உலகத்திலா ? இவ்வுலகம் அடியில்லாத பிலம் என்பது உனக்குத் தெரியாதா, குழந்தாய் ? பாழின் வாயிலிருந்து, ஈசலைப் போல் கூட்டங் கூட்டமாய் ஜீவராசிகள் வருகின்றன ; தங்குமிடம் தேடுகின்றன ; பிறகு இந்தப் பாழின் பிளந்த வாய்க்குள்ளே விழுந்து மறைகின்றன. உன்னைச் சுற்றி இங்கே உள்ள அனைத்தும், பொய்யாம் அருவங்கள். இவையே உலக வாழ்க்கை என்ற மாயச் சந்தையைக் கூட்டுகின்றன. இந்தச் சந்தையில் விற்கும் பொருள்கள் எவை, தெரியுமா ? வெறும் நிழல், கானல் நீர், ஆகாசத் தாமரை. இவை உன்னை ஏமாற்றுமே தவிர, இவற்றால் உன் பசி அடங்குமா ? வந்து விடு, குழந்தாய், வந்துவிடு. இந்தப் பிரபஞ்ச வாசனையே வேண்டாம்.'

'ஸ்வாமி, இங்கே எல்லோரும் சந்தோஷமாகத் தானே இருக்கிறார்கள்? சாலையோரத்திலிருந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாதா?'

'ஐயோ, அதை ஏன் கேட்கிறாய்? அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. காலாதிதம் வரையில் பரந்து கிடக்கும் சாவே இவ்வுலகம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இந்த உலகம் ஒவ்வொரு கணமும் சாகிறது. ஆனால் முடிவதில்லை, செத்துச் செத்துச் செத்துக் கொண்டே போகிறது. நாமோ, இங்கே உழல்கின்ற நாமோ, சாவைத் தின்று தின்று இருந்து வருகிறோம்.'

'நீங்கள் சொல்வதைக்கேட்டால் எனக்குப் பயமாக இருக்கிறதே, ஸ்வாமி.'

இதற்குள், சாலையில் வரும் வேறு சில 'பேதைமை' வடிவங்கள் ஸந்யாஸியின் கவனத்தைக் கவர்கின்றன. அவற்றையெல்லாம் ஆராய்ந்து, 'பேதைமை' என்று முடிவு கட்டி, அவன் திரும்புவதற்குள் வாஸந்தி தூங்கி விடுகிறாள். ஸந்யாஸி அவளைப் பார்க்கிறான். அவன் நெஞ்சில் கவலை அரும்புகிறது :

'தன் கையே தலையணையாக இந்தச் சிறுமி தூங்கி விட்டாள். இவளைவிட்டு இப்போது போய் விடலாம். ஆனால், ஆனால், பயங்கொள்ளியே, நீ ஓடித்தான் போக வேண்டுமா ? இந்தச் சிறு உயிரை விட்டு ஓடியா போக வேண்டும் ? சே,சே, எதற்காக ? இவையெல்லாம் மாயையின் சிலந்தி வலைகள் ; இவற்றால் விட்டிற் பூச்சிகளுக்கு வேண்டுமானால் அபாயம் ; எனக்கென்ன, என்போன்ற ஸந்யாஸிக்கு என்ன பயம், ஏன் ஓடவேண்டும் ?'

வாஸந்தி விழித்துக் கொள்ளுகிறாள்.

'ஸ்வாமி, என்னை விட்டுவிட்டுப் போய் விட்டீர்களா ?' என்று பதைப்புடன் கேட்கிறாள். ஸந்யாஸியின் மேல் சாய்ந்து, அவன் கையைப் பிரித்துத் தன் முகத்தில் ஒற்றிக் கொள்ளுகிறாள். வாஸந்தி என்ற நிழல், பாழிலிருந்து வெளி வந்து, புகலிடம் தேடித் தவித்து, பாழுக்குள் மறையப் போகும் பொய் வடிவம் (அப்படித்தானே ஸந்யாஸி வாஸந்தியைக் கருதுகிறான் !) உலக பந்தங்களிலிருந்து விடுபட்டு, சுத்த சைதன்யத்தில் நிலைத்தவனாகத் தன்னைக் கருதும் ஸந்யாஸியின் இதயத்தைத் தொட்டு விடுகிறது. 'என்ன மிருதுவான கை ! இதன் மென்மைக்கு சத்திய அந்தகாரத்தின் அகண்டத்துவம் எப்படி வந்தது ?' என்று ஸந்யாஸி வியப்படைகிறான். வாஸந்தியிடம் பேசுகிறான்:

'நீ என்னைத் தொடும்போது எவ்வளவு மிருதுவாய் இருக்கிறது தெரியுமா, மகளே ? தூக்கத்தின் மென்மையைப் போல் இருக்கிறது. நித்தியம் என்ற மந்திரக்கோலால் ஆன்மாவைத் தொடும் கங்குல் பகலற்ற அத்வைதப் பாழ், அதைப் போல் அல்லவா உன் கை இருக்கிறது ? ஆனால், குழந்தாய், நீ பகலிலே முளைத்த விட்டிற்பூச்சி. உனக்கான பச்சை வயலும், பறவையும், மலரும், கொள்ளை கொள்ளையாய் இருக்கும் போது, வட்டத்தின் நடு மையத்தில் ஊன்றி, அதன் சுற்று வளைவை இல்லாமற் செய்த துறவி என்னிடம், நீ என்ன கண்டாய் ? ஏன் என்னிடம் ஒதுங்கினாய்?'

"எனக்கு வேறொன்றும் வேண்டாம். உங்கள் அன்பு போதும்' என்கிறாள் வாஸந்தி.

'ஐயோ பாவம், தன்னிடம் நான் அன்பு வைத்திருப்பதாக எண்ணுகிறாள் இந்தப் பேதை. போகட்டும், அந்த நினைவில் அவளுக்கு ஆனந்தம் இருக்கிறது. இருந்து விட்டுப் போகட்டும். என்ன செய்வாள், மாயையில் ஊறி அதைக் குடித்து வளர்ந்தவள், மாயையைக் கொண்டுதான் ஆறுதல் அடைய வேண்டும்' என்று ஸந்யாஸி எண்ணுகிறான்.

இதற்குள் வாஸந்தி அருகிலிருந்த கொடி ஒன்றைக் காட்டிப் பேசுகிறாள் :

'இதோ பாருங்கள், ஸ்வாமி! இந்தக் கொடி புல்லின் மேல் துவண்டு விழுகிறது, பற்றிக் கொண்டு பின்னி வளர்ந்தேறுவதற்கு மரமொன்றைத் தேடுகிறது. இது நான் வளர்த்த கொடி. சின்னக் குழந்தையின் 'குவா குவா' என்ற குரலைப் போல், இது இரண்டே இரண்டு தளிர்விட்ட நாளிலிருந்து, நான் தண்ணீர் விட்டு வளர்த்து வருகிறேன். என்னைப் போலத்தான் இந்தக் கொடி, நான்தான் இது. சாலையோரத்திலே வளர்ந்து கிடக்கிறது ! அதன் மலர்களைப் பார்த்தீர்களா? சின்ன மலர்கள் வெளிர் நீல மலர்கள், இதயத்திலே வெண் புள்ளிகள். இந்த வெள்ளிப் புள்ளிகளே மலரின் கனவுகள். உங்கள் முகத்தை இந்தப் பூக்களால் மெல்ல வருடுகிறேன். எவ்வளவு அழகிய மலர்கள் ! நான் கண்ணாற் காணாத, எனக்குத் தெரியாத அத்தனைக்கும் அழகுதான், அழகுடைய பொருள்தான். என்னை அழைத்துச் செல்கிறது. சத்தியத்தின் மாளிகைக்குத் திறவுகோல் சௌந்தர்யம்.'

இப்படிப் பேசுகிறாள் வாஸந்தி. தீண்டாதார் வகுப்பைச் சேர்ந்த, கல்வியறிவு இல்லாத சிறுமி ஒருத்தியால் இப்படிப் பேச முடியுமா? பேச முடியாது தான். உண்மையில் வாஸந்தியின் மூலமாக, குருதேவரே பேசுகிறார்; அழகே சத்தியம், சத்தியமே அழகு என்று நம்பிய கவிஞரே பேசுகிறார். நாடகப் பாங்

ருக்கு இது பொருந்தாதுதான். வாஸந்தி சிறிது நேரத்துக்குத் தாருராக மாறிவிடு கிறுள். இப்படி எல்லாப் பாத்திரங்களும் கவிஞராக மாறிவிட்டால், பிறகு நாடகமேது ?

வாஸந்தியின் பேச்சைக் கேட்டு, ஸந்யாஸி திகைக்கிறுன் :

'அழகா, அது வெறும் பிரமை. உண்மையை அறிந்தவனுக்கு, பூவும் புழுதியும் ஒன்றே. ஆனுல் ஏன் என் இரத்தத்தில் இன்பச் சோர்வு படிகிறது? இந்திர தனுசின் வண்ணங்களால் ஆன மெல்லிய பனித்திரை ஏன் என் கண்ணை மறைக்கிறது? என்னைச் சுற்றி, மறுபடியும், மாயை தன் கனவுகளை நெய்து, என் புலன்களை மயக்குகிறுளா ?'

ஸந்யாஸிக்குக் கோபம் வருகிறது. சரேலென எழுந்து, எதிரே கிடந்த பூங்கொடியைப் பிய்த்து எறிகிறுன். கோபத்தோடு பேசுகிறுன் :

'போதும், போதும். இனிமேல் இதற்கு இடம் தர மாட்டேன். பெண்ணே, இது என்ன விளையாட்டு என்னுேடு? என்ன சூழ்ச்சி இது? நான் ஸந்யாஸி ; கட்டுக்களை யெல்லாம் அறுத்து எறிந்தவன்; விடுதலை பெற்றவன் ; சுதந்திரன்.'

வாஸந்தி திகைத்துப் போய் அழுகிறுள். ஸந்யாஸிக்கு இரக்கம் வருகிறது.

'வேண்டாம், வேண்டாம், அழாதே. கண்ணீர் விடாதே. என்னுல் அதைத் தாங்க முடியாது. ஆனுல் எப்படி என் நெஞ்சில் கோபம் என்ற பாம்பு பதுங்கிக் கிடந்தது? ஸந்யாஸிக்குக் கோபமா? எப்படித் தன் விஷப் பல்லைக் காட்டிக் கொண்டு, இருட் புற்றிலிருந்து, இந்தப் பாம்பு சீறி வந்தது? இல்லை, உணர்ச்சிகள் இன்னும் சாகவில்லை. எவ்வளவு பட்டினி போட்டாலும் சாகாமல் அல்லவா இருக்கின்றன! பிரகிருதி என்ற சூனியக்காரி தன் மாய மகுடியை எடுத்து ஊதியவுடன், உணர்ச்சிகள் என்ற நரகப் பூச்சிகள். தமது எலும்புக் கூடுகளை மட மட வென்று முறுக்கி வலித்துக் கொண்டு, என் இதயத்தில் கூத்தாடத் தொடங்கி விட்டன. அழாதே, குழந்தாய், அழாதே. என்னிடம் வா. இழந்த உலகத்தின் குரல் போல, அலைந்து தவிக்கும் நட்சத்திரம் ஒன்றின் பாடலைப் போல, நீ தோன்றுகிறுய். இந்த இயற்கை, மாளாத இந்தப் பிரகிருதி, சூரியன், நட்சத்திரங்கள், இவற்றை யெல்லாம் கடந்த அலகிலா ஒன்றை, என் மனத்துக்கு நீ கொண்டு வருகிறுய். அத்வைத அந்தகாரம் எவ்வளவு பெரிதோ அவ்வளவு பெரிதாக அது தோன்றுகிறது. ஆனுல் அது எனக்கு விளங்கவில்லை. இதுவரை நான் அறியாதது, ஆகவே அதைக் கண்டு அஞ்சுகிறேன். திரும்பிப் போய்விடு, நான் அறியாத உலகம் ஒன்றின் தூதாக நீ வந்தாய், அங்கேயே போய்விடு.'

'எங்கே போவேன்? உங்களைத் தவிர எனக்கு வேறு ஒருவரும் இல்லை. என்னை விட்டு விட்டுப் போய் விடாதீர்கள்.'

'இல்லை, இல்லை, நான் போகவேண்டும். அறிந்து விட்டேன் என்று நினைத்தேன். அது தவறு, ஆனுல் அறிந்தாக வேண்டும். அறிந்தே ஆகவேண்டும்; நீ யார் என்று அறிவதற்காக உன்னை விட்டுப் போகிறேன்.'

'போனுல், நீங்கள் போய் விட்டால் நான் இறந்து விடுவேன்' என்று கதறுகிறுள் வாஸந்தி.

'என்னை விடு, என் கையை விடு. என்னைத் தொடாதே. நான் கட்டுப்படாத சுதந்திரனுய் இருக்க வேண்டும். விடுதலை விடுதலை !' என்று கூறிக்கொண்டே ஓடி விடுகிறுன் ஸந்யாஸி. நாடகத்தின் இரண்டாம் காட்சி முடிவடைகிறது.



ஓய்வுபெற்ற அபீஷியல் அஸ்ஸைனியும், சென்னை வழக்கறிஞருமான ஸ்ரீ வி. தியாகராஜய்யருடைய மனைவி ஸ்ரீமதி சுந்தரம்மாள் டிசம்பர் மாதம் 13-ந் தேதி இரவு தமது ஐம்பத்தெட்டாவது வயதில் காலமானுர். முன்பு சென்னை ராஜ்யத்தில் டிபுடி கலெக்டராக இருந்த ஸ்ரீ சி. என். சுப்பிரமணிய அய்யரின் புதல்வியார் அவர். மிகவும் எளிய வாழ்வு வாழ்ந்த அவர் பக்தியும், தார்மீக சிந்தையும் படைத்திருந்தார். அவரது பிரிவால் துயருறும் அவருடைய கணவருக்கும், மூன்று புத்திரர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

மழபாடி மாணிக்கம்

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

உலகத்தில் நமக்குக் கிடைக்கும் மணிகளில் எல்லாம் மிக்க உறுதியானது, மிக்க ஒளி உடையது வைரம் என்பதை அறிவோம். இது காரணமாகவே அதன் மதிப்புமே உயர்ந்திருக்கிறது. வைரக் கம்மல்கள் அணிந்த பெண்ணுக்கும் வைர மோதிரம் அணிந்த ஆணுக்கும் சமுதாயத்திலே ஒரு மதிப்பு இருக்கிறதே. இந்த வைரத்தையே வஜ்ரம் என்றும் கூறுவார்கள். இந்த வைரம் எப்படி உருவாகிறது என்று தெரியுமா? பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிலப்பரப்பின்மேல் மரங்கள் அடர்ந்த காடுகள் இருந்திருக்கின்றன. பலவகையான இயற்கை மாற்றத்தால் இம்மரங்கள் நிலத்துக்குள் புதைந்திருக்கின்றன. கணக்கற்ற ஆண்டுகள் இப்படிப் புதைந்து கிடந்தமையால் அவை மிகச் செறிவு பெற்று நிலக்கரிப் பாறைகளாக உறைந்திருக்கின்றன. மேலும் மேலும் மண்ணும் கல்லும் அந்தப் பாறைகளை அழுத்த உள்ளேயிருந்த வெப்பமும் தாக்க, இந்த அழுத்தம் காரணமாகக் கரிப் பாறைகள் வைரமணிப் பாறைகள் ஆகியிருக்கின்றன. இப்படிக் கரியானது அளவுக்கு மிஞ்சிய அழுத்தத்துக்கும் வெப்பத்துக்கும் உள்ளாகும்போது தான் வைரமாகிறது என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். இத்தனை அழுத்தம் காரணமாகப் பிறப்பதினால் தான் அத்தனை வலிவுடனும் வைரம் இருக்கிறது.



அதிகாரநந்தியும் சுயம்பிரபையும்

உறுதியான உள்ளம் படைத்தவர்களை வைர நெஞ்சு உடையவர்கள் என்று கூறுகிறோம்; பாராட்டுகிறோம். பாரதி பாடினானே நம் நாட்டுப் பாப்பாக்களைப் பார்த்து:

உயிர்களிடத்து அன்புவேணும்—தெய்வம்
உண்மை என்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும்—இது
வாழும் முறைமையடி பாப்பா

என்று. மனிதர்களில் வைரமுடைய நெஞ்சு படைத்தவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அஞ்சி அஞ்சிச் சாகும் மனிதர்கள் தானே இங்கு அதிகம். ஆனால் அந்த மனிதர்களை யெல்லாம் காக்கும் இறைவன் நல்ல திடமான வைர நெஞ்சு படைத்தவனாக இருந்திருக்கிறான். எது வந்தாலும் அசையாது அஞ்சாது நிற்கும் இயல்புடையவனாக இருந்தால்தானே, அவன் உலகுயிர் அனைத்தையும் காத்தல் கூடும். அப்படி இருப்பவனையே வைரத்தூண் என்போம். அப்படியே அழைத்திருக்கிறார்கள், ஒரு தலத்தில் உள்ள இறைவனை. அந்தத் தலத்து இறைவன் பெயரே வஜ்ரஸ்தம்பேசுரர். அவரையே அருள்மிகு அப்பர் அடிகள் 'மறை நான்கும் ஓலமிட்டு வரம் ஏற்கும் மழபாடி வயிரத் தூணே' என்று மனமுருகிப் பாடுகிறார். இவர் எப்படி வைரத் தூண் ஆனார் என்று தெரிந்துகொள்ள வேண்டாமா?

பிரம்ம லோகத்திலிருந்து சிவலிங்கத்தைப் புருஷாமிருகம் எடுத்து வந்து கொள்ளிடக் கரையில் பிரதிஷ்டை செய்து விடுகிறது. பிரம்மாவோ தான் பூஜித்த லிங்கத்தைத் தேடி அங்கு வந்து அதைப் பெயர்த்து மீண்டும் தன் உலகத்துக்கு எடுத்துப் போக விரும்பியிருக்கிறார். இறைவனோ அசையாது ஆடாது வைரத் தூணாக, வஜ்ர ஸ்தம்பமாக நின்றிருக்கிறார். பிரமன் அவரை அப்படியே விட்டு விட்டே திரும்பியிருக்கிறான். லிங்க வடிவில் பிரம்ம லோகத்திலிருந்து வந்தவர் எப்படி வைரத் தூணாக மாறினார்? கற்ப கோடி காலங்களாகப் பக்தர்கள் அன்பென்னும் பூமியில் அல்லவா புதைந்திருக்கிறார்கள். தேவர் ஒரு புறமும் மக்கள் ஒரு புறமும் இருந்து அழுத்த அழுத்த, அவர் வைரமாக—வைரத்தூணாக மாறியதில் வியப்பில்லை தானே. இந்த வஜ்ரஸ்தம்பேசுரர் கோயில் கொண்டிருக்கும் தலம்தான் திருமழபாடி. அந்த மழபாடிக்கே செல்கிறோம் நாம் இன்று.

திருமழபாடி திருச்சி ஜில்லாவில் கொள்ளிடக் கரையில் உள்ள ஊர். இதற்குச் செல்வதற்குத் தல யாத்திரிகர்களை வழி கேட்டால், திருவையாற்றிலிருந்து ஒரு மைல் மேற்கே போய்த் தில்லைஸ்தானம் என்று இன்று வழங்கும் நெய்த்தானத்து நெய்யாடி அப்பரையும் பாலாம்பிகையையும் தரிசித்துவிட்டு வடக்கே திரும்பி இரண்டு மைல் நடந்து கொள்ளிட நதியையும் கடந்தால் சென்று சேரலாம் என்பர். இது எல்லாம் நல்ல பங்குனி சித்திரை மாதம் கொள்ளிடத்

தில் தண்ணீர் இல்லாத காலத்துக்குச் சரி. ஆற்றிலே தண்ணீர் இருந்தால் இந்த வழி எல்லாம் சரிப்பட்டு வராது. நேரே திருச்சி விருத்தாசலம் ரயில் பாதையில் புள்ளம்பாடி ஸ்டேஷனில் இறங்கிக் கிழக்கு நோக்கிப் பன்னிரண்டு மைல் நடந்தோ வண்டியிலோ போக வேணும். இதைவிடச் சுளுவான வழி, திருச்சியிலேயே பஸ் ஏறி லால்குடி, பூவாளூர், புள்ளம்பாடி வழியாகக் கிட்டத்தட்ட முப்பது மைல் போகவேணும். சொந்தக் கார் உள்ள மகாராஜாக்கள் 'ஜம்' என்று காரிலேயே போய்ச் சேரலாம். கோயில் வாயிலிலே கொள்ளிட நதி ஓடும். அதுவும் அங்கு வடக்கு நோக்கியே ஓடும். 'ஓ! அப்படியானால் அது உத்தர வாஹினியாயிற்றே. அங்கு ஸ்நானம் செய்வது எவ்வளவோ புண்ணியத்தைத் தருமே' என்று நினைத்து முதலிலே நதியில் இறங்கி நன்றாக நீராடுங்கள். அங்கு எப்போதுமே குளிக்கும் அளவுக்குத் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்குமாம். இப்படிக் கொள்ளிடத்தில் நீராடி விட்டுக் கரையேறிக் கோயிலுக்குள் செல்லலாம். கோயில் வாயிலை ஒரு பெரிய கோபுரம் அழகு செய்கிறது. ஆற்றிலே நீர் நிறைந்து போனால் கோயிலுக்குள்ளேயே தண்ணீர் வந்துவிடும். அப்படித் தாழ்ந்தே இருக்கிறது வாயில். கோயிலுள் செல்லுமுன் இத்தலத்துக்கு எப்படி மழபாடி என்ற பெயர் வந்தது என்று தெரிந்துகொள்ளலாம். சேரர் மரபில் ஒரு கிளையினர் மழவர். அந்த மழவர்கள் தங்கியிருந்த இடம் மழபாடி என்று ஆகியிருக்கிறது. நமக்குத்தான் அந்த மழவர் மகள் **செம்பியன் மாதேவி** முன்னமேயே நன்கு அறிமுகம் ஆனவள் ஆயிற்றே. இது தவிர இத்தலத்தில் இறைவன் மழு ஏந்தி நர்த்தனம் செய்திருக்கிறார். அதனால் மழு ஆடி என்று பெயர் பெற்று மழபாடி ஆயிற்று என்றும் கூறுவர். இதற்கேற்ப மழு ஏந்தி இறைவன் நிருத்தம் செய்யும் கற்சிலை ஒன்றும் கோயிலுள் இருப்பதைப் பார்க்கிறோம். கோயில் நல்ல பெரிய கோயில், பெரிய பிராகாரங்களையுடையது. வெளிப் பிராகாரத்தில் காணவேண்டியவை சிறப்பாக ஒன்றும் இல்லை. ஆதலால் இடை நிலைக் கோபுரத்தைக் கடந்து உள்ளே செல்லலாம். மகா மண்டபம், அர்த்த மண்டபம் எல்லாம் கடந்து சென்றால் இறைவன் திரு முன்பு வந்து நிற்போம். வைரத் தூண் என்று பெயர் தாங்கியவர் ஆயிற்றே என்று அவர் மேனியில் வைர ஒளியை எதிர்பார்த்தல் கூடாது. வஜ்ரஸ்தம்பேசுரர் என்பதனால் பெரிய ஸ்தம்பம் போலும் இருக்க மாட்டார். நல்ல காத்திரமில்லாத வடிவில் லிங்கத் திருஉருவாக அவர் இருப்பார். இத்தலத்துக்குச் சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் வந்திருக்கிறார்கள், பாடி யிருக்கிறார்கள்.

அலை அடுத்த பெருங்கடல் நஞ்சு
அமுதாம் உண்டு அமரர்கள்தம்
தலைகாத்த ஐயர், செம்பொன்

சிலை எடுத்து மாநாக நெருப்புக்
கோத்து திரிபுரங்கள் தீயிட்ட
செல்வர் போலும்!

நிலை அடுத்த பசும் பொன்னால்
முத்தால் நீண்ட நிரை வயிரப்
பலகையால் குவையார்த்து உற்ற
மலை யடுத்த மழபாடி
வயிரத்தூணே! என்றென்றே
நான் அரற்றி நைகின்றேனே

என்பது அப்பர் தேவாரம். சுந்தரரோ, திருவையாறு வந்தவர் ஆலம்பொழில் வரை சென்று அங்கு இரவு தங்கியிருக்கிறார். அவருக்கு மழபாடி செல்லவேண்டும் என்ற எண்ணம் அப்போது இருக்கவில்லை. மழபாடி இறைவனுக்கோ சுந்தரரை அப்படி எளிதாக விட்டுவிட விருப்பமில்லை. அவரிடம் பாடல் பெறும் வாய்ப்பை இழந்து விடுவோமோ என்று எண்ணியிருக்கிறார். அதனால் சுந்தரர் கனவில் தோன்றி, 'என்னை மறந்தனையோ?' என்று கேட்டிருக்கிறார். அதனால் சுந்தரர் கொள்ளிடத்தைக் கடந்து இங்கு வந்திருக்கிறார். பாடிப் பரவியிருக்கிறார். அவருடைய,

பொன்னார் மேனியனே! புலித்
தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர் கொன்றை அணிந்தவனே!
மன்னே மாமணியே!
மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே உன்னை யல்லால்
இனி ஆரை நினைக்கேனே!

என்று தொடங்கும் பதிகம்தான் பிரபலமானதாயிற்றே. வயிரத் தூணாக இருந்த இறைவன் சுந்தரருக்குச் செக்கச் சிவந்த மாணிக்கமாக அல்லவா காட்சி கொடுத்திருக்கிறார். இன்னும் அந்தப் பொன்னார் மேனியன் பாட்டை நினைவுபடுத்திக்கொண்டு, மழபாடி பக்கத்திலேயே பொன்னார் மேனி விளாகம் என்று ஒரு சிறு ஊரும் இருக்கிறதே.

இந்த மழபாடி மாணிக்கம் சிறந்த வரப்பிரசாதியாகவும் இருந்திருக்கிறார். வேத வியாசரது வாதநோய் இத் தலத்துக்கு அவர் வந்து வணங்கிய பின்தான் தீர்ந்திருக்கிறது. கோயில் பலி பீடத்தில் வைத்திருந்த உணவை ஒரு கழுகு வந்து சாப்பிட யத்தனிக்கையில் அதை ஒரு வேடன் அம்பெய்து வீழ்த்த அந்தக் கழுகுக்கு இரங்கி அதற்கு மோக்ஷ பதவியையே அளித்திருக்கிறார். அந்தக் கழுகின் பரம்பரையில் வந்த கழுகு ஒன்று இன்னும் கோயில் கோபுரத்திலே வசித்து வருகிறது என்கிறார்கள். சந்திரனைப் பற்றியும் ஒரு கதை உண்டு. அவனுக்கோ அசுவினி முதலிய இருபத்து ஏழு மனைவியர். இவர்களில் அவனுடைய காதலெல்லாம் ரோகிணியிடமே. இந்தப் பாரபக்ஷம் காட்டியதற்காக அவனது மாமனாரான தக்ஷன், அவன் கலை தேயச் சாபமிட்டிருக்கிறான். தேய்ந்த கலை வளர அருள் புரிந்தவர் இந்த மழபாடி மாணிக்கமே என்பது புராணக் கதை. அதனால் இவர் வைத்தியநாதர் என்ற பெயரையுமே ஏற்றிருக்கிறார். இத்தனை விஷயங்களையும் இறைவன் சந்நிதி முன் நின்றே தெரிந்துகொள்ளலாம். அதன்பின் திருவுண்ணாழிச் சுற்றைச் சுற்றப் புறப்பட்டால் அங்குதான் மழு ஏந்தி நடனம் செய்த இறைவனை ஒரு

தாழ்ந்த மாடத்தில் பார்ப்போம். அதனை அடுத்தே செப்புச் சிலை வடிவில் சோமாஸ் கந்தர் இருப்பார். இவர்களை வணங்கிவிட்டு அடுத்த சுற்றுக்கு நடந்தால் அங்கே மேலப் பிராகாரத்தில் சிலை உருவிலே சோமாஸ்கந்தரது வடிவம் ஒரு சிறு கோயிலுள் இருக்கும். கற்சிலையாகச் சோமாஸ்கந்தரை எல்லா இடத்தும் காணுதல் இயலாது. இந்தத் தலத்தில் இவர் விசேஷமானவர். இந்த மூர்த்திகளை யெல்லாம் வணங்கியபின் வெளியே வந்துதான் வட பக்கம் தனிக் கோயிலில் இருக்கும் அன்னை **அழகம்மை**யைக் காண வேண்டும். அழகம்மையின் வடிவம் அழகானது என்பதைத் தவிர, சிறப்பாகச் சொல்வதற்கு ஒன்றும் இல்லை.

இத்தலத்தின் சிறப்பான திருவிழா பங்குனி மாதத்தில் நடக்கும் நந்தியம் பெருமானின் திருமண விழாதான். நந்தி என்றால் கோயில் வாயிலில் இறைவனை நோக்கிப் படுத்துக் கிடக்கும் காளை என்று தானே தெரியும் நமக்கு. அந்த நந்தி மனித வடிவம் தாங்கி இறைவனது அம்சமான திரிநேத்திரம், மழு, மான் ஏந்திய நான்கு கரங்களோடு சிவ கணங்களுக்கு எல்லாம் தலைவராம் பதவி பெற்று, முதல் திருவாயிலிலேயே இருந்து காக்கும் உரிமையையும், சைவ ஆச்சாரியருள் முதல் குருவாக இருக்கும் தன்மையையும் பெற்று **அதிகார நந்தி** என்ற பெயரோடு விளங்குகிறார் என்பதை நம்மில் பலர் அறியமாட்டோம். சிலாத முனிவரின் மகனாகப் பிறந்து செபேசுரர் என்ற திருநாமத்தோடு வாழ்ந்து, அரிய தவம் செய்து இறைவனது அருளைப் பூரணமாகப் பெற்றுப் பின்னர் வசிஷ்டரது பௌத்திரியும் வியாக்கிரபாதருடைய புத்திரியும், உபமன்யரது தங்கையுமான சுயம்பிரபையை மணந்திருக்கிறார். இவரே சிவ கணங்களுக்கு எல்லாம் தலைவரான அதிகார நந்திதேவர். இவரது திருமணம் சிறப்பாக நடந்தது இந்த மழபாடியில்தான். இங்கு தானே மணப் பெண்ணான சுயம்பிரபை பிறந்து வளர்ந்து இவருக்கெனக் காத்திருந்திருக்கிறாள். இந்தத் திருமணத்துக்கு மணமகனையும் அழைத்துக்கொண்டு ஐயாறப்பரும் அறம் வளர்த்தாளும் வந்திருக்கிறார்கள். இந்த மணமக்களை அழைத்துக் கொண்டே ஐயாறப்பர் ஏழூர் காணப் புறப்பட்டிருக்கிறார். இத்தனை சிறப்பு வாய்ந்தது இத்தலம். இக்கோயிலின் சரித்திர ஏடுகள் மிக மிக விரிவானவை. மொத்தம் முப்பது கல்வெட்டுகள் இக்கோயிலிலிருக்கின்றன. மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மன் என்னும் முதல் பராந்தக சோழன் காலம் முதல், மாறவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டியன், ஹொய்சல மன்னர்கள், விஜயநகர வேந்தர்கள் காலம் வரை இந்தக் கோயிலில் பல பகுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. பல நிபந்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. திருவிசைப்பா பாடிய கண்டராதித்த சோழர், ராஜராஜன் முதலியோர் காலத்தில் இக்கோயில் பலவகையாலும் விரிவடைந்திருக்கிறது. மழபாடி பக்கத்திலேயே கண்டராதித்த சதுர்வேதிமங்கலம் என்று ஓர் ஊர் இருக்கிறது. அதுவே இன்று கண்டராச்சியம் என வழங்குகிறது. கண்டராதித்தரது மனைவியின் திருப் பெயரால் செம்பியன்மாதேவிப் பேரேரி ஒன்றும் வெட்டப்பட்டிருக்கிறது. இந்த அம்மையின் மற்றொரு பெயரான குலமாணிக்கம் என்றே ஒரு வாய்க்காலுக்குப் பெயரிடப்பட்டிருக்கிறது. சோழர் ஹொய்சலர் சரித்திர ஆராய்ச்சியாளருக்கு இந்தக் கோயில் கல்வெட்டுக்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் அனந்தம்.



மழு நடனர்

நேரமும் வசதியும் உடையவர்கள் மழபாடியிலிருந்து வடக்கே பத்து மைல்கள் சென்றால் **பழுவூர்** செல்லலாம். பொன்னியின் செல்வன் நவீனம் மூலம் நமக்கெல்லாம் அறிமுகமான பழுவேட்டரையரது ஊர் அது. பரசுராமர், தாயாம் ரேணுகையைத் தந்தையின் கட்டளைப்படி கொன்றார் என்பதும் அந்தப் பழியை இங்குள்ள வடமூலநாதரை வணங்கித் தீர்த்துக் கொண்டார் என்பதும் புராண வரலாறு. நமது பழிகளும் நம்மை விட்டு நீங்க இப்பழுவூர் சென்று வடமூல நாதர் அருந்தவ நாயகி இருவரையும் வணங்கலாம். திருச்சிக்குத் திரும்பும்போது வழியில் உள்ள **அன்பில் ஆலந்துறையார், சுந்தரராஜப் பெருமான்**, லால்குடியிலுள்ள **திருத்தவத் துறையார்** முதலியவர்களையும் வணங்கி விட்டே திரும்பலாம். இதற்கெல்லாம் வசதி செய்து கொள்ள வேண்டுமானால் சொந்தக் காரிலே தான் தலயாத்திரை தொடங்க வேண்டும் என்பது மட்டும் ஞாபகம் இருக்கட்டும்.

கோஹினூர்

காந்தன்

ராஜகுமாரன் என்று ஒருவன் இருந்தால் அவனுக்கென்று பல கஷ்டங்கள் வரும். அந்தக் கஷ்டங்களிலிருந்தெல்லாம் அவன் பெருமுயற்சி செய்து வெற்றி பெறுவான். அந்த வழக்கத்துக்குக் கைலாச நகரத்து ராஜகுமாரன் மாத்திரம் எப்படி விரோதமாயிருக்க முடியும்? அந்தச் சமஸ்தானத்துத் திவானே அவன் உயிருக்கு உலை வைக்க முயல்கிறான். திவானின் சதித் திட்டங்களில் சிக்காமல் ராஜகுமாரன் தப்பி விடுகிறான். அவனைக் கொல்ல, திவான் பாம்பை வளர்க்கிறான். அந்தப் பாம்புக்கு எதிரியான கீரிப்பிள்ளையை ராஜகுமாரன் வளர்க்கிறான். ராஜ சபையில் ஒரு நாள் அந்தப் பாம்பைக் கீரி தீர்த்து விடுகிறது. பிறகு ராஜகுமாரன் நாட்டை விட்டே வெளியேறி அயல் நாட்டுக்குச் செல்லுகிறான். அங்கு சேனாதிபதியினால் அக்கிரமமாகச் சிறை வைக்கப்பட்டிருக்கும் ராஜகுமாரியைத் தற்செயலாகக் கண்டு அவளை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபடுகிறான்.

ராஜகுமாரனாக வரும் திலிப்குமார் ராஜகுமாரியைக் காதலிக்கிறார்; அவளை விடுவிக்கப் போய்க் கத்திச் சண்டை போடுகிறார். சேனாதிபதியை ஏமாற்றச் சாமியார் வேஷம் போடுகிறார். ராஜகுமாரனாகத் தோன்றும் போது இருப்பதை விடச் சாமியார் வேஷத்தில் திலிப்குமார் நன்றாயிருக்கிறார். அப்பொழுது பேசும் பேச்சும் தமாஷாயிருக்கிறது.

இந்தப் படத்தில் இரண்டு வில்லன்கள். ராஜகுமாரனுக்கு எதிராக ஒரு வில்லன்-திவான். ராஜகுமாரிக்கு எதிராக ஒரு வில்லன்-சேனாபதி. இரண்டு வில்லன்களையும் ராஜகுமாரன் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

வில்லன்களில் ஒருவராக வருபவர் ஜீவன். அவர் நடிப்பு நன்றாயிருக்கிறது.

வில்லனின் கண்களில் படாமல் தப்ப நிலைக் கண்ணாடியின் வெறும் சட்டத்துக்குப் பின்னால் நிற்கிறான் கதாநாயகன். வில்லன் குடித்துவிட்டு வந்து அந்த நிலைக் கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துத் திகைக்கிறான். கைகளை அசைக்கிறான்; பல சேஷ்டைகள் செய்கிறான். அவ்வளவு சேஷ்டைகளையும் கதாநாயகனும் செய்கிறான். அதைக் கண்டு வில்லன் ஏமாந்து விடுகிறான். கண்ணாடியில் தெரிவது தன் உருவந்தான் என்று தீர்மானிக்கிறான். படம் பார்ப்பவர்கள் ஒரு முகமாக இக் காட்சியை ரசிக்கின்றனர். இது நன்கு படமாக்கப்பட்டிருக்கிறது.

கதாநாயகியாக வரும் மீனாகுமாரியின் நடிப்பில் குறை அதிகம் கூற முடியாது.

கோட்டை, கொத்தளங்களின் தொலைவுக் காட்சிகள் நன்றாயிருக்கின்றன. படத்தின் ஒளிப்பதிவு பல இடங்களில் பாராட்டத்தக்க விதத்தில் சிறப்பாயிருக்கின்றன.

பாடல்கள் பத்து இருக்கின்றன. திலிப்குமாரும், மீனாகுமாரியும் குதிரையில் போகும் போது பின்னணியிலிருந்து பாடப்படும் பாட்டு இருமுறை பாடப்படுகிறது. ஆனாலும் அலுக்கவில்லை.

நாட்டிய மங்கை கும்கும் ராஜகுமாரனிடம் மனத்தைப் பறி கொடுத்து ஏமாற்றமடைகிறாள். ஆனால் பழிக்குப்பழி வாங்க முயலாமல், கதாநாயகனைக் காப்பாற்றுகிறாள்.

கதை, பழைய கதை, சம்பவங்கள், பழைய சம்பவங்கள். ஆனால் சுவையூட்டும் பல உத்திகளைக் கையாண்டு படத்தைப் புதுமையாக்க முயற்சி செய்திருக்கின்றனர்.

கோஹினூர் என்ற பெயரை, திலிப்குமார் சாமியார் வேஷத்தில் தோன்றும்போது வைத்துக் கொள்கிறார். அதுவே படத்தின் பெயராகி விட்டது.

நீளத்தைக் கணிசமாகக் குறைத்து, பல புதிய அம்சங்களைப் புகுத்தி, இன்னும் துரிதமாக ஓடச் செய்திருந்தால், படம் உண்மையிலேயே "கோஹினூரா"யிருந்திருக்கும்.



விட்டில்

கு. வேங்கடரமணி

விளக்கு வைத்து இரண்டு நாழிகைப் பொழுது கழிந்திருக்கும். அது ஒரு பட்டிக்காடு. சிவன் கோவிலில் அர்த்தஜாமப் பூஜை வேளையின் மணி அடித்ததும் ஊர் ஒய்ந்து தூங்கத் தொடங்கிவிடும். இரண்டொரு பாட்டி அம்மாக்கள் சுவாமி தரிசனத்தை முடித்துக் கொண்டு அவசரம் அவசரமாக வீட்டுக்குத் திரும்புவார்கள். அவர்கள்தான் தெருவில் கடைசியாக நடமாடும் ஜீவன்கள்.

தெற்கு வடக்காக ஓடிய தெரு. தெருக் கோடியில், தெற்கு மூலையில், முதல் வீட்டுத் திண்ணையில் ரங்கு உட்கார்ந்திருந்தான். எதிரில் வேலியோரமாக லாந்தர் கம்பத்தின் தலையில் அமர்ந்துகொண்டு மண்ணெண்ணெய் விளக்கு அழுது வடிந்து கொண்டிருந்தது. கம்பத்தைச் சுற்றி ஒரு சின்ன வட்டமாக அசட்டு ஒளிப் படலம். ஒளியின் எல்லைக் கோட்டைத் தாண்டினால் எங்கும் ஒரே இருள்.

அந்த இருளின் தாலாட்டில்தான் தெரு தூங்கிக் கொண்டிருந்தது.

ரங்கு திண்ணையில் காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். இரவில் பத்து மணி வரையில் அவன் இப்படித்தான் உட்கார்ந்திருப்பான். லாந்தர் கம்பத்தைச் சுற்றிச் சுற்றி வரும் விட்டில்களை வேடிக்கை பார்ப்பதில் அவனுக்கு அடங்காத ஆசை. பத்து மணி வரை அவன் இந்தக் காட்சியில் லயித்து அமர்ந்திருப்பான். அதற்குமேல் விளக்கில் எண்ணெய் தீர்ந்து போய், அதன் ஜீவன் அடங்கிவிடும். ரங்கு ஜமக்காளத்தை உதறிப் போட்டுக் கொண்டு கையை மடக்கித் தலைக்கு உயரமாக வைத்துக்கொண்டு தூங்கிப் போய் விடுவான்.

வாழ்க்கையில் அவனும் எதையோ மையப் புள்ளியாக வைத்துச் சுற்றி வந்து கொண்டிருந்தான். அதன் காரணமும் முடிவும் அவனுக்குத் தெரியாது. அவன் அன்பு செலுத்தத் தெரிந்தவன். அதற்கு மேல் அவன் எதற்கும் கவலைப்பட மாட்டான். ஒரு பார்வையில் அவன் அசடுதான்!

தெருவில் வடக்கேயிருந்து, நாட்டியக்காரியின் பாதச் சலங்கையைப் போல் வில் வண்டியின் மணியோசை பிறந்து வளர்ந்து கொண்டே வந்தது.

ரங்குவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. யார் ஊருக்குப் போகிறார்கள்? எட்டே முக்கால் மணி ரயிலுக்குப் போகிறவர்கள்தான் இந்த நேரத்துக்குப் புறப்படுவார்கள். ரங்குவுக்குத் தெரியாமல் யாரும் இரவு வண்டிக்குப் போய்விட முடியாதே!

வண்டி வேகமாக ஓடி வந்து அவனைக் கடந்து சென்று கொண்டிருந்தது. அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. எழுந்து போய் லாந்தர்க் கம்பத்தின் வெளிச்சம் விழும்போது கவனித்தான்.

ரங்குவுக்குத் தலையைச் சுற்றியது. வண்டிக்குள் பிரேமா உட்கார்ந்திருந்தாள். வேண்டுமென்றே, அவனைப் பார்க்காமல், முகத்தை எதிர்ப்புறமாகத் திருப்பிக்கொண்டு அவள் உட்கார்ந்திருந்தாள்.

அவள்தான் அவனுடைய மன இயக்கத்தின் மையப் புள்ளி!

ரங்குவைச் சுற்றிலும் 'குப்'பென்று துக்கம் வந்து சூழ்ந்து கொண்டது.

மறுபடியும் அவன் திண்ணையில் வந்து அமர்ந்துகொண்டான்.

'பிரேமா ஏன் ஊரைவிட்டுப் போகிறாள்? ஏன் என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் அவள் போகிறாள்?'

அன்றைக்கு ரங்கு விடிய விடியத் தூக்கம் வராமலே புரண்டு கொண்டிருந்தான்.

மறுநாள் முதல் காரியமாக வண்டிக்காரனைப் போய்ப் பார்த்தான் ரங்கு.

''பட்டணம் போறாங்களாம். இனிமேல் இங்கே திரும்பி வரமாட்டாங்க!''

இதற்குமேல் அவனுக்கு எதுவும் சொல்லத் தெரியவில்லை.

* * *

இது நடந்து ஐந்து வருஷங்கள் வேகமாக ஓடிவிட்டன.

நினைத்துக் கொண்டால் ரங்குவுக்கு இப்பொழுதுதான் கண்ணெதிரில் பிரேமாவைச் சுமந்து கொண்டு வில்வண்டி தெருவோடு ஓடுவதுபோல் இருக்கிறது.

அவள் பட்டணம் போனபிறகு பத்து நாட்கள் வரையில் தெருவோடு போகும் பொழுதெல்லாம் அவளும் அவளுடைய அம்மாவும் குடியிருந்த வீட்டைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடப்பான் ரங்கு. மூடிய கதவில் தொங்கும் பூட்டு அவனைப் பார்த்து எதுவும் சொல்லத் தோன்றாமல் மௌனம் சாதிக்கும்.

* * *

ரங்குவுக்கு அப்பொழுது இருபது வயது இருக்கும். ஆனால் பொய்யும், வஞ்சனையும் இல்லாத மனம். ஊரில் எல்லாரும் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள்; பேசினார்கள். உடல் வளர்ச்சியைப்போல் உள்ள வளர்ச்சி இல்லை. குழந்தை மனம். எதையும் நம்பிவிடும் போக்கு.

அம்மா அப்பளம் இட்டு வியாபாரம் செய்தாள். இரண்டொரு வீடுகளில் சமையல் அது - இது என்று காரியங்களும் செய்து கொண்டிருந்தாள். ரங்குவும் இரண்டுங்கெட்டான் உத்தியோகம் ஒன்று பார்த்து வந்தான். கோவிலில் குருக்களுக்கு உதவியாகத் தண்ணீர் தூக்குவது, விளக்கை அணைப்பது இது மாதிரி சில்லறை வேலைகள். தேவஸ்தானத்தில் மாதம் ஒரு கலம் நெல் அவனுக்குச் சம்பளம் கொடுத்தார்கள்.

ரங்கு கவலையே அறியாமல் வளர்ந்த பிள்ளை. வேளை தவறாமல் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டு தன்னுடைய வேலைகளைக் கவனித்துக் கொண்டிருப்பான்.

இப்படியே கழிந்து கொண்டிருந்த அவன் வாழ்வில் ஒருநாள் மாறுதல் ஏற்பட்டு விட்டது.

பிரேமாவும் அவளுடைய அம்மாவும் அந்த ஊருக்குப் புதிதாகக் குடிவந்தார்கள். ஒரு வெள்ளிக்கிழமை பிரேமா கோவிலுக்கு வந்தாள். அப்பொழுதுதான் ரங்கு அவளை முதன் முதலாகப் பார்த்தான்.

வைத்த கண்களை எடுக்க முடியாமல் அப்படியே பிரமைபிடித்துப் போய் நின்றுவிட்டான் அவன். அவனுடைய வாழ்வில் அந்த ஊரை விட்டு அவன் எங்கேயும் போனது கிடையாது. அந்த ஊருக்குள் பிரேமாவைப் போல் ஒரு பெண்கூட இருந்ததில்லை.

அவள் அம்மன் சந்நதியில் நிலைத்து மனம் உருக உருக நின்று கொண்டிருந்தாள். ரங்குவுக்கு அவளைப் பார்க்கப் பெருமையும் மரியாதையும் அதிகரித்துக் கொண்டே போயின. கோவில் தூணில் செதுக்கியிருக்கும் சிலை தான் உயிர் வந்து, குதித்து வந்து நிற்கிறதோ என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தான்.

கடைசியில் மெள்ளமெள்ள அடியெடுத்து வைத்து அழகாக நடந்து அவள் போய் விட்டாள்.



வெளி மண்டபத்தில் துண்டை உதறிப் போட்டு விட்டு அமர்ந்த ரங்குவிடம் குருக்கள் கேட்டார்: ''ஏண்டா ரங்கு! குட்டியைப் பார்த்தியாடா?''

ரங்கு விழித்துக் கொண்டு கேட்டான்:

''யாரை மாமா சொல்கிறேள்?''

''அவள்தாண்டா! இப்போது வந்து விட்டுப் போனாளே, சினிமாக்காரி மாதிரி எத்தனை ஜோராக இருந்தாள் பார்த்தியா?''

''பார்த்தேன் மாமா, அழகாய்த்தான் இருக்கிறாள். ஆனால் சினிமாக்காரி மாதிரின்னு சொல்லாதீங்கோ. எனக்கு அவளைப் பார்த்தால் அப்படித் தோணலே மாமா!''

''பின்னே எப்படிடா இருக்கிறாள்?''

''அதெல்லாம் எனக்குச் சொல்லத் தெரியாது. பார்த்த உடனே எனக்கு மனசெல்லாம் நிறைஞ்சு போய் அவளையே பார்த்துக் கொண்டு இருக்கணும் போலத் தோணித்து. எத்தனை உருக்கமா அவள் வேண்டிக்கொண்டு நின்றாள் தெரியுமோ?''

''நீ இளவட்டமாச்சே, உனக்குப் பிடிக்குமே என்று அப்படிச் சொன்னேன். பார்த்தால் நல்ல பெண்ணாகத்தான் தெரிகிறது. அப்பா எங்கேயோ வேலையாய் இருந்தாராம். திடீர்னு செத்துப் போயிட்டாராம். இந்தப் பெண்ணும் அவள் அம்மாவும் நம்ம ஊருக்கே குடிவந்து விட்டார்கள்.''

''ஐயோ, பாவம்!''

அதற்குப் பிறகு வாரம் தவறாமல் வெள்ளிக்கிழமைதோறும் பிரேமா கோவிலுக்கு வந்தாள். ரங்குவிடம் இரண்டொரு வார்த்தைகள் பேச்சில் தொடங்கி, இரண்டு மாதங்களில் தாராளமாகப் பழகினாள். ஊர்ப் பெண்கள் எல்லாம் ஆண்களைக் கண்டால் ஓடி ஒளிந்து கொள்ளும்போது, பிரேமா தைரியமாய் நின்று பேசுவதைக் கண்டு ரங்குவுக்கு ஆச்சர்யமாக இருந்தது. பெருமையால் மனத்துக்குள் பூரித்துப் போனான். அவனையும் மனிதனாக மதித்து ஊரில் இதுவரையில் யாருமே பேசியதில்லையே!

ஒரு நாள். ரங்கு தெருவோடு போய்க் கொண்டிருந்தான்.

''ரங்கு! ரங்கு!''

குரல் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான். பிரேமா வாயிற்படியில் நின்று கொண்டிருந்தாள். தளர முடிந்த தலை; நெற்றியில் காலை ஒளியில் பளீரென்று குங்குமப் பொட்டு. இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகுதான் ரங்கு பார்வை கலைந்து நினைவுக்கு வந்தான்.

''ஏன் என்னையா கூப்பிட்டாய்?''

''ஆமாம். கொஞ்சம் இங்கு வந்துவிட்டுப் போயேன்.''

ரங்கு அவள் பின்னால் வீட்டுக்குள் நுழைந்தான்.

''அம்மாவுக்கு இரண்டு நாட்களாய் உடம்பு சரியில்லை. மளிகைக் கடைக்குப் போய்ச் சாமான் வாங்கிக் கொண்டு வர வேண்டும்!''

''இவ்வளவுதானே! இதோ நான் போய் வாங்கிண்டு வரேன். அது சரி! உங்கம்மாவுக்கு என்ன உடம்பு?''

''சாதாரண ஜுரந்தான்'' என்றாள் பிரேமா.

''அப்படி அலட்சியமாக இருக்கப்படாது. ஜுரம் என்றால் மருந்து சாப்பிட வேண்டாமா?'' என்றான் அக்கறையோடு.

''ஆமாம், இந்த ஊரில் பெரிய டாக்டர் இருக்காரோ?''

ரங்கு மளிகைக்கடைக்குப் போய்விட்டுத் திரும்பும்போது உள்ளூர் வைத்தியரையும் பின்னோடு அழைத்துக் கொண்டு வந்து விட்டான். அவரும் மருந்து கொடுத்தார்.

* * *

மறுநாள் தெருவோடு போகும்போது பிரேமா அழைக்காமலே அவளுடைய வீட்டுக்குள் நுழைந்தான் ரங்கு.

''உங்கள் வைத்தியர் நல்ல கைராசிக்காரர்தான். அம்மா எழுந்து உட்கார்ந்து விட்டாள்'' என்றாள் பிரேமா மகிழ்வோடு.

ரங்குவுக்குச் சந்தோஷ மிகுதியில் பேச நா எழவில்லை.

"இன்னிக்கு ஏதாவது காரியம் இருக்கா? ஏதாவது வாங்கிக் கொண்டு வரணுமா?" என்று தன்னைச் சமாளித்துக் கொண்டு கேட்டான் ரங்கு.

"இங்கே பூக்காரியே வரமாட்டாளா?" என்று கேட்டாள் பிரேமா.

"பூவா? இந்த ஊரில் காசு கொடுத்து யாரும் பூவே வாங்க மாட்டா. ஆனால் காவேரிக் கரையில் நந்தவனம் இருக்கு. உனக்கு என்ன பூ வேணும்? நான் போய்க் கொண்டு வரேன்."

"மல்லிகைப் பூ என்றால் எனக்கு உயிர். இப்போ வேண்டாம். நாளைக்கு மூணு மணிக்கு அரைப் படி அரும்பு கொண்டு வந்து தாருங்களேன்."

"ஏண்டி அந்தப் பிள்ளையைப் போய் இப்படி வேலை வாங்கறே?" என்று தடுத்தாள் பிரேமாவின் அம்மா.

"இது என்ன பிரமாத வேலை? நாளைக்குக் கட்டாயம் கொண்டு வரேன், பிரேமா!"

* * *

தெருவோடு வந்துகொண்டிருந்த ரங்கு தூரத்திலிருந்தே பிரேமாவின் வீட்டு வாசலில் சிதறிக்கிடந்த வைக்கோலைப் பார்த்து விட்டு வண்டி வந்துவிட்டுப் போயிருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டான்.

"வண்டி வந்திருக்கே, பிரேமா! யார் வந்திருந்தா?"

பிரேமா பதில் சொல்லாமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

"இவளைப் பெண் பார்க்க மாயவரத்திலிருந்து வந்திருந்தார்கள்."

"என்ன மாமி பிரேமாவையா? எதுக்காக இவளை வந்து பார்த்தார்கள்?"

"அவளுக்கும் வயசு பதினெட்டு ஆயிட்டுதே! ஒரு வரனைப் பார்த்து அவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க வேண்டாமா? அதுக்காகத்தான்."



பிரேமாவின் தாய் விவரித்தது எதுவும் ரங்குவுக்குப் புரியவில்லை; அவன் அதைக் காது கொடுத்துக் கேட்கவும் இல்லை. அதற்குள் அவன் கவனம் பிரேமாவின் பின்னலுக்குத் தாவிவிட்டது.

"பிரேமா! நீ மல்லிகை அரும்பு வச்சுப் பின்னிக் கொண்டிருக்கிறது ரொம்ப ஜோரா இருக்கிறது....!"

ரங்கு மனம் நிறையத் தனது ரசனையை வெளியிட்டான்.

"போ ரங்கு! உனக்கு வேறே வேலையில்லே!" பிரேமா ஒயிலாகத் திரும்பிப் பின்னலை முன்புறம் தவழவிட்டுக் கொண்டு ஓடி விட்டாள்.

* * *

குருக்கள் ஒரு நாள் ரங்குவின் வாயைக் கிண்டினார்: "ரங்கு! பிரேமாவுக்கு மும்முரமாய் வரன் பார்க்கிறாளாமே அவள் அம்மா? இதுவரையில் இரண்டு மூணு பையன்கள் வந்து அவளைப் பெண் பார்த்து விட்டுப் போனார்களாமே?"

"ஆமாம், மாமா! நேத்திக்குக் கூடத் திருவாரூரிலே இருந்து யாரோ வந்திருந்தா!"

"நீ என்னமோ தினம் நூறு நடை அவள் வீட்டுக்குப் போயிட்டு வரே. கடைசியிலே அவள் யாரையாவது கல்யாணம் பண்ணிக் கொண்டு உன்னை மறந்து, ஊரை விட்டே போய் விடுவாள்!"

"நிஜமாவா மாமா? பிரேமாவுக்குக் கல்யாணம் ஆயிட்டா அவள் இந்த ஊரை விட்டா போய்விடுவாள்?"

ரங்கு சிந்தனையில் ஆழ்ந்து போனான். அவனால் இதைத் தாங்கவே முடியவில்லை.

இரண்டு வருடங்கள் ஓடி விட்டன. பிரேமாவை எத்தனையோ பேர்கள் வந்து பெண் பார்த்துவிட்டுப் போனார்கள். ஆனால் ஓர் இடம் கூட நிச்சயமாகவில்லை. திடீரென்று ஒரு நாள் பிரேமாவின் தாயார் ரங்குவை அழைத்து, "நாளைக்கு மாயவரம் போகிறேன். நீயும் என்னோடு துணைக்கு வரவேண்டும்" என்றாள்.

"ஏன் மாமி, பிரேமாவுக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுத்தா?"

"ஊஹூம்! பிரேமா கல்யாணத்துக்காகத்தான் வீட்டை விற்று மூவாயிரம் ரூபாய் வைச்சிருந்தேன். இத்தனை நாட்களாய் நானும் படாதபாடு பட்டுப் பார்த்தேன். கையில் இருந்த பணந்தான் சாப்பிட்டுச் சாப்பிட்டுக் கரைந்து போச்சு. நாளைக்குப் போய் என் சங்கிலியை விற்கப் போகிறேன். செலவுக்கு வேறே வழியில்லே!"

'' அடாடா ! அப்போ பிரேமா கல்யாணத்துக்கு என்ன பண்ணுவேள் ?''

'' அது எப்போ நடக்கப் போகிறதோ? எப்படி நடக்கப் போறது? எனக்கு ஒன்ணும் புரியலே இல்லே.''

'' இதுக்காக ஏன் மாமி வருத்தப்பட்டுக் கண்ணீர் விடறேள்? எல்லாம் தாராளமா நடக்கும் பாருங்களேன்.''

ரங்குவின் கடைசி வாக்கியத்தைக் கேட்டுக் கொண்டே பிரேமா கொல்லைப்புறத்திலிருந்து வந்தாள்.

'' என்ன ரங்கு எது தாராளமாய் நடக்கும் என்கிறாய் ?''

'' உன் கல்யாணந்தான்.''

'' ஏது நீ ஏதாவது வரன் பார்த்து வந்திருக்கிறாயா ?''

'' நான் இருக்கேனே ! நானே உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேனே !''

'' ஆசையைப் பாரு ! உனக்குப் பெரிய மிராசுதார் மகளாய் வந்து மாலை போடுவாள். கவலைப்படாதே !''

ரங்குவுக்கு நெஞ்சை அடைத்தது. அவன் மிகவும் சிரமத்துடன் பேசினான்.

'' பிரேமா ! நான் கல்யாணமே பண்ணிக் கொள்ள மாட்டேன். எனக்கு அந்த ஆசையே கிடையாது. போனால் போகிறது என்று உனக்காகச் சொன்னேன்.''

'' கோவிச்சுக்காதே, ரங்கு ! நானும் விளையாட்டுக்குத்தான் சொன்னேன்.''

இதற்குப் பிறகு பிரேமா ஆறு மாதங்கள் தான் கிராமத்தில் இருந்தாள். திடீரென்று ஒரு நாள் மாலைப் பொழுதில் தன் தாயுடன், ரங்கு பார்த்துக்கொண்டே நிற்க, அவனைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் - அவனிடம் சொல்லிக் கொள்ளாமலே - ஊரை விட்டுப் போய் விட்டாள்.

ரங்குவுக்கு ஆத்திரம் நெஞ்சையடைத்தது. வெளியில் சொல்லத் தெரியாமல் அவன் தன் மனக்குறையோடு புழுங்கினான்.

காலம் நகர்ந்தது. ரங்குவின் கோபம் தணிந்து விட்டது. பிரேமாவின் நினைப்பு மட்டும் அவனிடம் அகலாமல் இருந்தது.


* * *

திடீரென்று ஒரு நாள் கோடி வீட்டு ஜெயராமன் பட்டணத்தில் இருந்து வந்து சேர்ந்தான். அவன்தான் அந்தப் புதிய செய்தியைச் சொன்னான்.

பிரேமா சினிமாவில்சேர்ந்து நடிக்கிறாளாம்! ரங்குவுக்கு இது ஓர் அதிசயமான செய்தியாக இருந்தது. மூன்று தடவை ஜெயராமனைத் துருவித் துருவிக் கேட்டான்.

'' நீ அவளைப் பார்த்தாயா ? நீ அவளோடு பேசினாயா ?''

'' ஓ ! பேசினேனே ! அவள்கூட ஊரில் ரங்கு சௌக்கியமாக இருக்கானா என்று கேட்டாள். போடா பைத்தியம் ! இப்போது அவளிடம் நெருங்கிப் பேசிவிட முடியுமா ? எத்தனை பெரிய கார்? பெரிய பங்களா வாங்கியிருக்கிறாள். பேரைக்கூட பிரேமகுமாரின்னு மாற்றி வைச்சிண்டிருக்காடா ! ஆஹா ! எவ்வளவு பிரமாதமா நடிக்கிறாள் தெரியுமா ?''



எங்கிருந்தாலும் சகோதர மனப்பான்மையை விடாதவர்கள் நம் தமிழ் மக்கள். சென்னை ராஜ்யத்தில் சமீபத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் கஷ்ட நிவாரணத்துக்காக ரூர்கேலாவிலுள்ள தக்ஷிண பாரத சமாஜம் முதலிய பல தென்னிந்திய ஸ்தாபனங்கள் ரூபாய் ஐயாயிரம் வசூலித்தன. டிசம்பர் 8-ந் தேதி சென்னை ராஜ்ய முதன் மந்திரி ஸ்ரீ கே. காமராஜ் அவர்களும் நிதி மந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் அவர்களும் ரூர்கேலா உருக்காலைக்குச் சென்றிருந்தபோது ஆலையின் ஜெனரல் மானேஜர் ஸ்ரீ எஸ். சாம்பசிவன் இந்தத் தொகையை முதன் மந்திரியிடம் அளித்தார்.

ரங்குவுக்குச் சினிமாவைப் பற்றி அதிகம் தெரியாது. அவன் கையில் காசு கிடைத்ததும் கிடையாது. அவன் பத்து மைல்களுக்கு அப்பால் இருந்த சினிமாக் கொட்டகையை எட்டிப்பார்க்க ஆசைப்பட்டதும் கிடையாது.

செட்டியார் கடைவாயிலில் தொங்கும் திரைப்பட விளம்பரங்களை அவன் ஊன்றிக் கவனித்தான். தனிமையில் அவற்றை ஆதாரமாக வைத்துக் கொண்டு ஏதேதோ கற்பனைகள் செய்து பார்த்தான்.

''பிரேமா இப்போது எப்படி இருப்பாள்?''

உடனே ஓடிப் போய் அவளைப் பார்க்க முடியாதா, அவளிடம் பேசமாட்டோமா என்று அவன் மனம் ஏங்கத் தொடங்கி விட்டது.

பட்டணத்துக்கும் அந்தப் பட்டிக்காட்டுக்கும் நடுவில் இருந்த தூரத்தை நினைத்துப் பார்த்ததும் அவன் மனத்தில் பொங்கி யெழுந்த ஆசை அடங்கித் தணிந்தது.

இத்தனை காலம் கழித்து ரங்கு பிரேமாவைப் பார்க்கப் புறப்பட்டு விட்டான். ஐந்து வருஷங்களுக்குப் பிறகு இப்பொழுதுதான் அவனிடம் பணம் சேர்ந்திருந்தது. பெட்டிக்குள் கிடந்த சட்டையை எடுத்துத் துவைத்துப் போட்டுக் கொண்டு, இருபது ரூபாய்களை மடியில் கட்டிக் கொண்டு, ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அவன் ரயிலேறினான்.

சென்னையில் பல இடங்களில் சுற்றிக் கடைசியில் அந்தப் பங்களாவைக் கண்டுபிடித்தான்.

வாசலில் ரங்கு நின்று தவம் செய்து கொண்டிருந்தான். நேரம் ஓடிக்கொண்டே இருந்தது.

மாடியிலிருந்து ஒரு பெண் முகம் எட்டிப் பார்த்து விட்டு மறைந்ததைத் தற்செயலாக நிமிர்ந்தபோது கண்டான் ரங்கு.

'யார் அது? பிரேமாவா? இல்லே, பிரேமா மாதிரி இல்லே!'

மாடிப் படிகளில் காலடி ஓசை கேட்டது. ரங்கு எட்டிப் பார்த்தான்.

வைரங்கள் டாலடிக்க, பட்டின் வர்ணங்கள் கண்களைப் பறிக்க அவள்-மாடியில் நின்று பார்த்தவள்-எதிரில் வந்தாள்.

"சினிமாவில் நடிக்கிற பிரேமாவின் வீடு இதுதானே?"

"ஆமாம்!"

"பிரேமா இல்லியா?"

"ஏன்?"

"நான் பார்க்கணும்."

"யார் நீ?"

"பிரேமாவுக்கு என்னைத் தெரியும். என் பேர் ரங்கு!"

வந்தவள் சட்டென்று திரும்பி உள்ளே போய் விட்டாள்.

ஐந்து நிமிஷங்களில் ஒரு வேலைக்காரன் வந்தான்.

"நீங்கதானே ரங்கு?"

"ஆமாம்."

"சாயங்காலம் நாலு மணிக்கு வாங்க. அம்மாவைப் பார்க்கலாம்!"

"இப்போ வீட்டிலே பிரேமா இல்லியா?"

"ஊஹூம்!"

ரங்குவுக்கு அதற்கு மேல் அங்கே நிற்க யோசனையாக இருந்தது. அவன் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தான்.

நான்கு மணி. ரங்கு ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்து விட்டான். அவனுக்கு மூச்சு வாங்கியது.

படியில் காலை வைத்ததும் ரங்கு நிமிர்ந்தான். ஒரு நிமிஷம் அவனுக்கு மூச்சு நின்று விட்டது.

எதிரில் அவள் நின்று கொண்டிருந்தாள்!

பிரேமா! அவனுடைய பிரேமாவேதான்!

"பிரேமா!"

"ரங்கு!"

ஆறு வருஷங்களுக்குப் பிறகு பார்க்கும் பொழுது, கொஞ்சம் உயர்ந்து இன்னும் நன்றாகப் பருமனாகக் காணப்பட்டாள் பிரேமா. அவளையே கண் கொட்டாமல் பார்த்தான் ரங்கு.

அதே முகந்தான்! முன்போல் அத்தனை அழகாக இல்லையே ஏன்?

"ரங்கு எப்பொழுது வந்தாய் ஊரிலிருந்து? சௌக்கியமாய் இருக்கிறாயா?"

"ஓ! உன்னைப் பார்க்கணும் என்று இத்தனை நாட்களாய்த் துடிச்சிண்டிருந்தேன். நேத்திக்குத்தான் ரயில் செலவுக்குப் பணம் கிடைச்சுது. உடனே கிளம்பி விட்டேன்!"

"வா, உள்ளே போய்ப் பேசலாம்!"

பிரேமா அவனை மாடிக்கு அழைத்துச் சென்றாள். தானே காப்பி கொண்டுவந்து கொடுத்தாள்.

"ரங்கு! நீ என்னை மறக்கவே இல்லையா?"

"உன்னையா? இந்த ஜன்மம் முழுக்க உன்னை மறக்க மாட்டேன்!"

"ரங்கு! ரங்கு..."

பிரேமாவுக்கு நெஞ்சை யடைத்துப் பேச்சு நின்று விட்டது. அவள் உடல் குலுங்கியது. அவள் விம்மினாள்.

"ஏன் பிரேமா! நீ ஏன் இப்போ அழறே? நீ இருக்கிற இடத்தை வந்து பார்த்ததுமே எனக்கு எத்தனை பெருமையாய் இருந்தது தெரியுமா?" என்றான் ரங்கு பூரிப்புடன்.

கைகளில் புதைத்திருந்த முகத்தைப் பிரேமா நிமிர்த்தினாள். கண்களின் கடைக் கோடியில் முத்துக்கள் திரண்டிருந்தன.

"ரங்கு! அதெல்லாம் பொய். இந்தப் பங்களா, கார், நான் வாழ்கிற வாழ்வு அத்தனையும் பொய்!"

"என்ன பிரேமா இது? என்ன சொல்கிறே நீ!" என்றான் வியப்புடன்.

"சொன்னாலும் உனக்குப் புரியாது. நான் சினிமாவில் சேர்ந்து இரண்டு வருஷங்கள் பணமும் புகழுமாக வந்து குவிந்தன. அப்போ எல்லாத்தையும் மறந்துட்டேன். அப்புறம் நிலைமை தலைகீழா மாறிப் போச்சு. என்னை யாரும் நடிக்கிறதுக்குக் கூப்பிடவே இல்லே. மூணு வருஷமாய் எதிர்பார்த்து ஏமாந்து போயிட்டேன். இப்போ கடன் தலைக்கு மேலே போயிட்டுது. நாளைக்குக் கடன்காரன் வந்து எல்லாத்தையும் கொண்டு போகப் போகிறான். நல்லவேளை! நீ இன்னிக்கே வந்தாயே! நாளைக்கு வந்திருந்தால் என்னைப் பார்த்திருக்க முடியாது!"

"இதெல்லாம் நிஜந்தானா பிரேமா?"

"இன்னும் ஒரு விஷயத்தையும் சொல்லுகிறேன். இதோ உன் எதிரில் நான் கொஞ்சம் கொஞ்சமாய்ச் செத்துப் போய்க் கொண்டே இருக்கேன், ரங்கு! நான் விஷத்தைக் குடிச்சுட்டேன். இத்தனையும் போன பிறகு நான் எப்படி உயிரோடே இருக்க முடியும்?"

"பிரேமா! நான் வரும்போது உன்னைப் பத்தி எப்படி நினைத்துக் கொண்டு வந்தேன், தெரியுமா?"

"நீ நினைத்தபடி நான் இருந்திருந்தா என்னையே உனக்கு அடையாளம் தெரியாது. ரங்கு! காலையில் நீ வந்தியே அப்போ ஒருத்தி உன்னிடம் வந்து பேசினாளே அவள் யார் தெரியுமா? நான்தான் அவள்! உனக்கு என்னைப் புரியலே இல்லே அப்போ!"

பிரேமா சிறிது தயங்கினாள். ரங்கு பேசத் தெரியாமல் உட்கார்ந்திருந்தான்.

"ரங்கு! ஒரு சமயம் நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதாகச் சொன்னியே, ஞாபகம் இருக்கா! அந்தப் பாக்கியம் எனக்குக் கிடைச்சிருந்தால் இப்போது நான் எத்தனை நிம்மதியாக இருப்பேன் தெரியுமா? ஹூம்! எல்லாம் போச்சு. அதை உதறிவிட்டு எதையோ நினைத்து மயங்கி ஓடிவந்தேன்..."

பிரேமாவுக்கு உடல் நிலை கொள்ளாமல் தள்ளாடியது.

ரங்கு எழுந்து அவளைப் பிடித்துக் கொண்டான். தன் மடியில் அவள் தலையைத் தூக்கி வைத்துக் கொண்டான். பிரேமாவின் கண்கள் சோர்ந்தன. அவள் ஒரேயடியாகக் கண்களை மூடி விட்டாள்.

கண்டக்டர் சொன்ன கதை

என்னைப் போன்றவர்கள் டிக்கட் வாங்காமலேயே நிரம்பப் பஸ்ஸில் பிரயாணம் செய்கிறோம். பெரும்பாலான பிரயாணிகளும், போலீஸ்காரர்களும், டிக்கட் பரிசோதகர்களும் இதைப்பற்றிச் சிந்திப்பதில்லை. ஏனெனில் நான் ஒரு பஸ் கண்டக்டர், இப்பொழுது மாஜி பஸ் கண்டக்டர்.

இயந்திரத்துக்கும் எங்களுக்கும் அதிக வேற்றுமை இல்லை. ஸ்டேஜ் இரண்டு, ஸ்டேஜ் பதினைந்து என்று டிக்கட் கிழிப்போம். 'இந்தக் காசு செல்லாது', 'சில்லறை யில்லை', 'தயவு செய்து புகை பிடிக்காதீர்கள்', என்று கூவுவதும் கயிற்றை இழுத்து மணி யடிப்பதும் நடைபாதையில் அங்கு மிங்கும் அலைவதும்- இவைதான் எங்கள் வேலை ; உலகம் எல்லாம்.

நான் வேலைக்கு வந்த முதல்நாள் சிறிதளவு உணர்ச்சி என் இதயத்திலிருந்தது. அருகிலுள்ள யுவதியை நோக்கி நகர்ந்து வரும் கல்லூரி மாணவனை முறைத்துப் பார்த்தேன். மற்றப் பிரயாணிகளைப் பற்றிய கவலை சிறிதும் இன்றி வெளியில் எச்சில் துப்பிக் கொண்டிருந்த கொழுத்த ஸேட்டின் மீது வெறுப்பை உமிழ்ந்தேன்.

ஆனால் ஒரு வார வேலைக்குப் பிறகு நானும் மற்றக் கண்டக்டர்களைப் போலவே, காலியான இடங்களையும், அதிகப்படியான பிரயாணிகளையும் எண்ணுவது, தவறுதலாக அதிகப் பணம் கொடுத்த பிரயாணிகளுக்காகப் பரிதாபப் படுவது - அந்தப் பணத்தை எடுத்துக் கொண்ட பின்புதான்! செல்லாத காசைக் கொடுத்த பிரயாணிகளைச் சபிப்பது— முதலியவற்றில் ஆழ்ந்து போனேன். பஸ்ஸில் அமர்ந்துள்ளவர்களை மனிதர்களாக எண்ணி ஆராய்ந்து பார்ப்பதற்கு எனக்கு நேரமும் இருந்ததில்லை, ஆர்வமும் ஏற்பட்டதில்லை.

காலமும் காற்றும் யாருக்கும் காத்திருப்பதில்லை என்கிறார்கள். பஸ்கூட அப்படித்தான். ஆனால் அன்று காலை பஸ்ஸைப் பிடிக்க என்னை நோக்கிக் கையை அலைத்துக் கொண்டே பின்னால் ஓடோடியும் வந்தாள், கறுப்புத் தாவணி அணிந்த ஒரு பெண். அவளுக்காக ஸ்டாண்டிலேயே பஸ்ஸைக் காத்திருக்கச் செய்தேன். அவளும் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடி வந்து பஸ்ஸில் ஏறினாள். அவளுக்காக பஸ்ஸை ஏன் அதுவரை நிறுத்தியிருந்தேன் என்பது எனக்கே தெரியாது. அன்று முதல் அதே பஸ் ஸ்டாண்டில் தினமும் அவள் வருகிறாளா என்று என்னையறியாமலே கவனிக்க ஆரம்பித்தேன்.

அவளும் கவர்ச்சிகரமான சிவப்பு ஸ்வெட்டரும் கறுப்புத் தாவணியும் அணிந்து கொண்டு சரியாக அந்த நேரத்துக்கு அங்கே வந்து காத்திருப்பாள். ஏதாவது அலுவலகத்தில் அவள் 'ஸ்டெனோகிராப'ராக இருக்க வேண்டும். ஏனெனில் தினமும் பத்து மணிக்கு அலுவலகம் செல்ல அதே ஒன்பதரை பஸ்ஸையே அவள் பிடித்து வந்தாள். தோல்பை கைகளில் தொங்க, அகன்ற] நீலக் கண்கள் அரைத் தூக்கத்தில் பாதி மூடக் காத்திருப்பாள் அவள். பஸ்ஸில் ஏறி, இடத்தில்அமர்ந்து, பேசாமல் இரண்டணா நாணயத்தை நீட்டுவாள். தினமும் அவள் ஃப்லோரா ஃபௌண்டன் போகிறாள் என்பது எனக்குத் தெரியும். எனவே, நானும் அதே டிக்கட்டைக் கிழித்துக் கொடுப்பேன். இந்த மௌன நாடகம், வாய்மூடித் தொடர்பு எங்களுக்குள் எத்தனை மாதங்கள் நீடித்தன என்பது எனக்குத் தெரியாது. ஒவ்வொரு நாளும் காலையில் தான் அவள் அங்கே காணப்படுவாள். மாலையில் காண்பதில்லை.— அதனால் அவள் வேறு பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருக்க வேண்டும்.

ஒரு நாள் அவளைப் பஸ் ஸ்டாண்டில் காணவில்லை. வரிசையிலே காத்திருக்கும் மக்கள் பஸ்ஸில் நுழையும்போது என் கண்கள் விறுக அவளைத் தேடி அலைந்தன. உள்ளே நுழைந்த பிரயாணிகளை அன்று எண்ணவுமில்லை. எத்தனை பேர்கள் வந்தாலும் அந்தப் பெண் இல்லாமல் பஸ் முழுதும் காலியாகவே எனக்குத் தென்பட்டது. இந்த உணர்ச்சி எனக்கு ஏன்தான் ஏற்பட்டதோ? நினைக்க நினைக்க எனக்கே விசித்திரமாகப் பட்டது. ஏனெனில் அவளைப் பற்றிய விவரம் எதுவுமே எனக்குத் தெரியாது; அவளோடு நான் பேசியதும் இல்லை; கண் பார்வையையோ கைச் சைகையையோ கூடப் பரிமாறிக் கொண்டது கிடையாது. அப்படி யிருக்கும் பொழுது அவளைப் பற்றிய சிந்தனை எழுவானேன் என்று கேட்டால் எனக்குப் பதில் சொல்லத் தெரியாது. அவள் எனக்கு ஒரு பழகிப்போன அன்றாட நிகழ்ச்சியாகப் போய் விட்டாள். இப்போது அவளைக் காணாதது காரணமறியாத் துயரத்தை எனக்கு உண்டாக்கியது. நான் ஒரு பெருமூச்சு விட்டேன். மணியடித்தேன் — பஸ் நகர்ந்தது. முன்னைப் போலவே கையை அலைத்துக் கொண்டு பின்னால் ஓடி வருவாள் என்னும் ஆசையில் திரும்பித் திரும்பிப் பார்த்தேன். ஆனால் அவள் வரவில்லை. அவள் வரவில்லை என்பதற்காக பஸ் நிற்கவில்லை; தன் போக்கில் ஓடியது.

அவளுக்கு என்ன நேர்ந்திருக்கும்? ஒரு வேளை காய்ச்சலா யிருப்பாளோ? அல்லது அந்தப் பகுதியை விட்டு வேறு இடத்துக்குத்

மூலம்: ஹரீஷ் குமார் மெஹ்ரா

தமிழாக்கம்: கோ. பரமேசுவரன்



தன் பெற்றோர்களுடன் குடிமாறிச் சென்றிருப்பாளோ? நான் செய்வது வீண் கற்பனைதான். அவளது பெற்றோர்கள் உடனிருக்கிறார்கள் என்பது எனக்கு எப்படித் தெரியும்? அவளது பெற்றோர்களைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது; தெரிந்து கொள்ளும் அக்கறையும் கிடையாது. என் கவலையெல்லாம் அவளைப் பற்றித்தான். மறுநாளும் அவள் வரவில்லை. அவளது இடத்தை ஒரு மாது பிடித்துக் கொண்டிருந்தாள். டிரைவர் பஸ்ஸை வேகமாக ஓட்டிச் சில நிமிடங்களுக்கு முன்பாகவே அந்த ஸ்டாண்டை அடைந்து விடுகிறாரா? அல்லது அவளது கடிகாரம்தான் தவறாக ஓடுகிறதா? என்று பலவாறு எண்ணினேன்.


தங்களைத் தாங்களே சமாதானப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் மனிதர்களிடையே அபாரம். இத்திறமை மட்டும் இல்லாவிட்டால் மனித வாழ்க்கை சகிக்க முடியாததாகி விடும். ஒவ்வொரு நாளும் அவள் இன்று வருவாள், இன்று வருவாளென்று நான் அந்த பஸ் ஸ்டாண்டில் அவளை எதிர்பார்ப்பேன். அவள் வராவிட்டால் அதற்கு ஏதாவது காரணமும் கற்பித்துக் கொண்டு மனச் சமாதானம் அடைவேன். இப்படிப் பல நாட்கள் ஓடி விட்டன.

ஒருநாள் காலை அதே ஸ்டாண்டில் அதே உடையில் அதே பஸ்ஸுக்கு அவள் காத்திருந்தாள். பஸ்ஸில் ஏறி வழக்கமாக உட்காரும் இடத்தில் அமர்ந்தாள். அவளை அணுகி இரண்டணா நாணயம் வழக்கம் போல் வரும் என்று எதிர்பார்த்து அவளைக் கேட்காமல் நானாகவே டிக்கட்டை நீட்டினேன். ஆனால் இம்முறை நாணயம் வரவில்லை. துயரம் நிரம்பிய கண்களால் என்னை ஏறிட்டுப் பார்த்தாள். அப்பப்பா! அந்தப் பார்வையில்தான் என்ன தர்மசங்கடம்! என்ன கலக்கம்! அடுத்த கணம் அவள் பார்வை தொங்கிப் போய் விட்டது.

வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசாமலே பிரயாணத்துக்கு வேண்டிய காசு தன்னிடம் இல்லை என்ற கசப்பான உண்மையை அந்தப் பார்வை எவ்வளவு தெளிவாக அறிவித்து விட்டது. என் சட்டைப் பையிலிருந்து இரண்டணாவை எடுத்துத் தோல் பையில் நானே போட்டுக் கொண்டேன். அவளது நிலைமையை மேலும் சங்கடமாக்காமல் இருக்க நான் தள்ளிப் போனேன். தான் சேர வேண்டிய இடம் வந்ததும் அவள் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் இறங்கிப் போனாள்.

அன்று வேலை முடிந்ததும் தீவிரமாக அவளைப் பற்றிச் சிந்தித்தேன். அவளிடம் பணம் காசு ஏதும் இல்லை. எனினும் அவள் எப்படியும் நகரத்துக்கு வரவேண்டியிருந்திருக்கிறது. அதற்கு என் உதவியை, என் மௌனமான நட்பையே அவள் நம்பியிருந்திருக்கிறாள். என் மீது இவ்வளவு நம்பிக்கையா? என் மனத்தில் சிந்தனை அலைகள் ஓடின. ஒரு வேளை அவள் தன் வேலையை இழந்திருப்பாளோ? வேறு வேலை தேடி வந்திருப்பாளோ?







அவளைக் காக்கப் பெற்றோரோ, உற்றாரோ இல்லையோ? பஸ்ஸுக்குக் கொடுக்க அவளிடம் பணம் இல்லையானால் இரண்டு வேளை முழுச் சாப்பாட்டுக்கும் வழி? அவளைப் பற்றி அதிகம் சிந்திக்க, சிந்திக்க அவளிடம் என்னையும் மீறி நான் தனி ஆர்வம் காட்டுகிறேன் என்றே தோன்றியது.

பஸ் கண்டக்டர் டிக்கட் வாங்கியதேயில்லை என்று யார் சொன்னது? அன்றிலிருந்து தினமும் அவளுக்காக நான்தான் டிக்கட் வாங்கினேன். ஒரு நாள் டிக்கட்டோடு ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றையும் நழுவ விட்டேன். பார்வையால்கூட நன்றி தெரிவிக்காமல் அதை எடுத்துக் கொண்டாள் அவள். அந்த நோட்டு தவறுதலாக விழவில்லை; வேண்டுமென்றேதான் போடப்பட்டிருக்கிறது என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். இவ்வாறு மூன்று வாரங்கள் கழிந்தன. ஒரு நாள் மாலை எனக்குக் காய்ச்சல் அடித்தது. உடல் கொதித்தது. ஓய்வு எடுக்க எண்ணினேன். ஆனால் அவளது அழகிய முகம் என் கண்முன் காட்சியளித்தது. வழக்கம்போல் மறுநாளும் வேலைக்குப் போனேன்.

எனக்குக் காய்ச்சல் வந்த நாளில் அலுவலக டாக்டர் என்னைப் பரிசோதித்து எனக்கு க்ஷயரோகம், வேலைக்கு லாயக்கில்லை என்று அறிவித்தார். நான் முனிசிபல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டேன். அங்கு கழித்த நாட்கள் மிகப் பயங்கரமானவை. அந்த அழகியிடமிருந்து என் எண்ணத்தை அகற்ற முடியவில்லை. அவளுக்கு இப்போது என்ன நேர்ந்திருக்கும்? அவள் யார்? அவளுக்கு வேலை கிடைத்திருக்குமா? இவ்வாறு நூறு கேள்விகள் என் மனத்தில் எழுந்தன. ஆனால் அவற்றுக்கு விடைதான் கிடைக்கவில்லை.

ஆறு மாதங்களுக்குப் பின் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே அனுப்பப்பட்டேன். நான் முழு குணமடையவில்லை என்றாலும் எனக்குச் சிகிச்சை முடிந்து விட்டது. அன்றிரவை மூச்சு முட்டும் இருண்ட அறையில் மீண்டும் எப்போது காய்ச்சல் வருமோ என்று பயந்து கொண்டே கழித்தேன்.

மறுநாள் காலை சாதாரண உடையில் அந்த பஸ் ஸ்டாண்டுக்கு வந்தேன். இப்போது பழைய காக்கிச் சட்டையும் வேடிக்கையான தொப்பியும் இல்லை. ஒன்பதரைக்கு பஸ் வந்தது. பிரயாணிகள் ஏறினார்கள். ஆனால் அந்தப் பெண்ணைக் காணவில்லை. பஸ்ஸில் ஏறிக் கொண்டேன். கண்டக்டரை விசாரித்துத் தெரிந்து கொள்ளலாமே என்ற சபலம் கூட. சிறிது நேரம் கழித்துக் கண்டக்டர் எனக்கு டிக்கட் கொடுக்க வந்தான். "நீ ஒரு டிக்கட் இல்லாத பிரயாணியை, அழகிய பெண்ணைக் கண்டாயா?" என்று கேட்டேன்.

அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஏன் சிரிப்பு வராது? உண்மையில் நான் கேட்பது ஓர் அசட்டுத்தனமான கேள்விதானே? ஒவ்வொரு நாளும் ஒரு கண்டக்டர் எத்தனையோ டிக்கட் இல்லாத பிரயாணிகளைச் சந்திக்கிறான்; இறக்கிவிடுகிறான். அவர்களையெல்லாம் நினைவிலிருத்த முடியுமா? ஆனால் இடீரென்று அவன் முகம் பிரகாசம் அடைந்தது. "புட்போர்டிலிருந்து கீழே விழுந்தாளே, அந்தப் பெண்ணையா கேட்கிறாய்?" என்று கேட்டான். உலகம் என் கண்முன் சுழன்றது. மீண்டும் நிச்சயப்படுத்திக் கொள்ளும் பொருட்டு அடுத்த கேள்வியையும் கேட்டேன்: "அவள் வெப்பு ஸ்வெட்டரும் கறுப்புத் தாவணியும் அணிந்திருந்தாளா?"

கண்டக்டர் தலையை ஆட்டி ஆமோதித்தான். ஆனால் அதற்கு முன்பே நான் விடையை அறிந்து கொண்டேன்.

"வேடிக்கையான பெண். டிக்கட்டுக்குப் பணமில்லை என்பதற்காகக் கீழே குதித்து விட்டாள்!" கண்டக்டர் கூறினான். வேடிக்கைதான்! ஏனெனில் நீண்ட, முடிவில்லாத கசப்பும், பட்டினியும், துயரமும் நிறைந்த நாட்களைப் பற்றி நீங்கள் அறிந்ததில்லை. அவளது வாழ்வின் [கடைசி நிமிஷம் அவள் எண்ணியதுபோலவே நானும் எண்ணினேன். இதையும் நீங்கள் வேடிக்கை என்பீர்கள்.

"அப்புறம்...?" நான் திணறிக்கொண்டே கேட்டேன்.

"அவளது பையில் ஏராளமான பழைய பஸ் டிக்கட்டுகள் இருந்தன. அவற்றின் பின்னால் ஒரு தொகை - ஒன்றில் ஐந்து, மற்றொன்றில் இரண்டு என்று எழுதியிருந்தது. ஆஸ்பத்திரியில் கேட்டபொழுது, 'அது அந்த அந்த டிக்கட்டுகளின் விலை; நான் கொடுக்க முடியாத விலை' என்று அவள் கூறினாள். வேடிக்கையாக இல்லையா?" என்று அவன் விடை பகர்ந்தான்.


ஆனால் ஆண்டவன் வாழ்க்கைப் பயணத்தைக் கடத்தக் கொடுத்த டிக்கட்டின் விலையை - ஆம், உயிரையே - அவள் கொடுத்து விட்டாள். கற்பனை செய்ய முடியாத தூரம் வறுமை, பசி இவற்றின் காரணமாக அந்த விலையைக் கொடுத்திருக்கலாம். யாருக்குமே இவ்வுலகில் வாழ்க்கைப் பாதையில் பிரயாணம் செய்ய இலவச டிக்கட் கிடைப்பதில்லை. நாமெல்லோருமே அதன் விலையைக் கொடுக்கத்தான் செய்கிறோம்!

சிக்கனம்

ஜீவரம் என்றால் என்னவென்றே அறியாமல் இருந்த துரைசாமி சில நாட்களாகச் சதா சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். இதுவரையில் வரவு செலவுக் கணக்கையே நினைத்துப் பாராமல் இருந்த அவருக்கு இப்பொழுது அதையெல்லாம் நினைத்துப் பார்க்க வேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டது.

ஒரு பெரிய கம்பெனியில் மானேஜராயிருந்து கை நிறையச் சம்பளம் வாங்கி வந்த அவர் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றது தான் காரணம். கடைசியில் தீரச் சிந்தித்துப் படிக்குப் பாதியாகக் குறைத்து அவர் தம் குடும்பத்துக்குப் புதிய சிக்கன 'பட்ஜெட்' ஒன்று தயாரித்தார். அதன் விவரம் பின் வருமாறு: 1. காஞ்சனா காலேஜுக்குப் போக இனி காரை எதிர்பார்க்கக்கூடாது. பஸ்ஸில்தான் போகவேண்டும். 2. சுந்தரம் காலேஜுக்குப் போக ஒரு சைக்கிள் வாங்கித் தந்துவிட வேண்டும். 3. நிச்சயமாக இனி வேலைக்காரன் தேவையில்லை. கடைக்குப் போகும் அலுவல்களை இனி துரைசாமியே கவனிப்பார். 4. பங்களாவில் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டுவிட வேண்டும். 5. தோட்டக்காரனுக்கும் உடனே கணக்குத் தீர்த்து விட வேண்டியதுதான்.

இந்தக் கண்டிப்பான 'பட்ஜெட்'டில் துரைசாமி சமையற்காரரை மாத்திரம் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. துரைசாமியின் மனைவி ஒரு நிரந்தர நோயாளி. பெரிய மனிதர்கள் வீட்டு மாதர் குல இலகங்களுக்கு மட்டும் வரும் கௌரவ நோய்களெல்லாம் அவளைப் பிடித்திருந்தன. சோபிலுக்குப் போனால் சந்நிதியில் நிற்க முடியாமல் மயக்கம் வந்துவிடும். சினிமாவுக்குப் போனால் பாதிப் படத்தில் தலைவலி வந்துவிடும். யார் வீட்டிலாவது கல்யாணம் வந்து அந்த அம்மாள் அங்கு போக நேர்ந்தால் நிச்சயம் ஏதாவது நோய் என்று சொல்லிக்கொண்டு படுத்துவிடுவாள். யாராவது அவர்கள் வீட்டுக்கு வந்தால், அந்த அம்மாளின் நோய்கள் யாவும் விசுவரூபம் எடுத்து விடும். தன் நோய்த் தொந்தரவுகளையெல்லாம் வீட்டு விருந்தாளிகளிடம் கொஞ்சம்கூட அலுத்துக் கொள்ளாமல் ஓயாமல் சொல்லுவாள். எப்பொழுது பார்த்தாலும் 'வைட்டமின்' மாத்திரைச் சீசாவும் கையுமாகக் காட்சியளிக்கும் அவளைப் பார்த்தாலே பெரிய மனிதர் வீட்டு மாதரசி என்று யாரும் தெரிந்துகொள்ளலாம்.



"எந்தச் செலவை வேண்டுமானாலும் குறையுங்கள். ஆனால் என் மருந்துச் செலவைக் குறைக்கக் கூடாது. சமையற்காரரையும் நிறுத்தக் கூடாது!" என்று அந்த அம்மாள் கண்டிப்பான உத்தரவு போட்டாள்.

ஆகவே, சமையற்காரச் சஞ்சீவி, நிரந்தர நோயாளியான அந்த வீட்டு எஜமானியம்மாளின் தயவினால் வேலை போகாமல் தப்பினார்.

துரைசாமி ரிடையர் ஆன கையோடு அவருடைய கார் விற்கப்பட்டு விட்டது. 'கார் ஷெட்' வாடகைக்கு விடப்பட்டது.

துரைசாமியின் மனம் இப்பொழுது ஓரளவு தான் நிம்மதியடைந்தது. சாப்பாட்டு வகையில் ஆகும் செலவுக்கும் ஒரு கண்டிப்பான சிக்கனத் திட்டம் தயாரித்த பிறகுதான் அவர் மனம் முழு நிம்மதியடைந்தது.

அன்று பகல் சாப்பாடு முடிந்ததும் துரைசாமி தற்செயலாகச் சமையலறைப் பக்கம் வந்தார். அப்போது சமையற்காரர் சாப்பிட உட்கார்ந்திருந்தார். துரைசாமி சமையலறைக்குள்ளே வருவதற்கும் சஞ்சீவி சாதத்தில் நெய் போட்டுக் கொள்வதற்கும் சரியாயிருந்தது. சஞ்சீவி துரைசாமியை அப்பொழுது அங்கு எதிர்பார்க்கவில்லை யாதலால், அவர் வந்ததைக் கவனிக்கவில்லை.

"சஞ்சீவி, என்ன காரியம் செய்கிறாய்!" என்று துரைசாமி அலறவே, அவர் இலையை விட்டுப் பரபரப்புடன் எழுந்து நின்றார்.


"நான் ரிடையர் ஆனதிலிருந்து எல்லாவற்றிலும் சிக்கன முறையைப் புகுத்தியிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமல்லவா? இத்தனை நாட்களாக இரண்டு 'ஸ்பூன்' நெய் விட்டுக் கொண்டோம். இனிமேல் ஒரு 'ஸ்பூன்' நெய்க்கு மேல் யாருக்கும் விடக் கூடாது என்று நான் சொல்லவில்லையா?" என்று கோபத்துடன் கேட்டார் துரைசாமி.

சஞ்சீவி மிகவும் தணிவான குரலில், "நீங்கள் சொன்னபடிதானே கவனித்து நடந்து கொள்கிறேன்..." என்று இழுத்தாற்போல் பணிவாகக் கூறினார்.

"என்ன! எங்களுக்கெல்லாம் ஒரு 'ஸ்பூன்' நெய் விட்டு விட்டு நீ மட்டும் இரண்டு 'ஸ்பூன்' விட்டுக்கொள்கிறாயே. நான் என் கண்ணாலேயே பார்த்து விட்டேனே! நீ கவனித்துச் செய்கிற சிக்கனத்தின் லட்சணம் ரொம்ப ஒழுங்காயிருக்கிறது" என்றார் துரைசாமி.

"ரிடையராகிவிட்ட உங்கள் விஷயத்தில் அந்தச் சிக்கனம் சரிதான். ஆனால் நான் இன்னும் ரிடையராகவில்லையே! அதனால் தான் எனக்கு மட்டும் இரண்டு 'ஸ்பூன்' நெய் விட்டுக் கொண்டேன்." இந்தப் பதில் சஞ்சீவியிடமிருந்து நிதானமாக வந்தது.

இதைக் கேட்ட துரைசாமி சமையலறையிலேயே கல்லாய்ச் சமைந்து போனார்!



நாட்டு வைத்தியம்

- ஸ்ரீஹரி -

148. உடல் மெலிய

அதிஸ்தௌல்யத்தைக் குறைக்க நாம் செய்து கொள்ளக் கூடிய சிகிச்சைகளை வெகு விஸ்தாரமாகக் கல்கி நேயர்களுக்கு எழுதியாயிற்று.

சமீபத்தில் வாயில் நுழையாத பெயர் கொண்டு அழைக்கப்படும் ஒரு மருந்து உடல் பருமனைப் போக்க வல்லதென்று கண்டுபிடிக்கப்பட்டதாய்ப் பத்திரிகைகளில் செய்தி வந்தது. இவ் விஷயமாக ஏற்கெனவே எழுதிய கட்டுரையையும், அதில் கண்ட முறைகளை அனுஷ்டித்துப் பலன் கண்ட கல்கி நேயர்களையும் பற்றி எழுதலாமென்றிருக்கையில், கல்கி நேயர்கள் இவ் விஷயமாகக் கேள்விமாரிகளைப் பொழியத் தொடங்கி விட்டனர். உள்ள மாரியே போதும் போதும் என்றாகி விட்டது. உடன் வேறு இக் கேள்வி மாரிகளுமா?

அன்பர் ஹைதராபாத்வாசி. பெரிய இன்ஜினீயராக இருந்து பென்ஷன் வாங்கினவர். அதைத் தொடர்ந்து சர்வகலாசாலையில் கொஞ்ச நாட்கள் கணக்குப் பேராசிரியராகவும் பணியாற்றிய பிறகு பென்ஷனோடு நிற்பவர். இவரைப் பற்றி ஒரு விஷயம்.

இன்ஜினீயர் என்றதே போதுமே! நின்ற இடத்தில் நிற்காமல் சுற்றித் திரிய வேண்டும். சாரங்களின் மேல் ஏறி இறங்கிக் கழைக்கூத்தன் ஆடும் ஆட்டமெல்லாம் ஆடுவதுதானே ஓர் இன்ஜினீயரின் வேலை. இவ்விதம் உடல் உழைப்புள்ளவர், திடீரென்று அவ்வகை உழைப்பிலிருந்து விடுபடுவதானால்...? உடற் பருமனாவது சகஜந்தானே! மேலும் அங்கு போக வேணுமே, இங்கு என்ன வாயிற்றோ என்பது போன்ற விசாரமேதுமின்றி இருக்க நேரிட்டதால்...'உண்ட அலுப்பு தொண்டருக்கும் உண்டு' என்பதற்கு இணங்கப் பகலில் சிறிது நேரம் உறக்கம் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இதனாலெல்லாம் உடற் பருமன் ஏற்படலாயிற்று. ஏற்பட்ட பருமனும் ஏறிக் கொண்டே போகலாயிற்று.

''கூடுமான வரையில் அரிசிக்குப் பதில் கோதுமையை ஏற்றுக் கொள்ளுங்கள். தண்ணீர் குடிக்கும்போது, முக்கியமாக ஆகாரத்துக்குப் பிறகு அருந்தும் நீரில், ஒரு டம்ளர் தண்ணீரில் ஒரு டீஸ்பூன் தேனையும் சேர்த்துக் கலக்கிக் குடித்து வாருங்கள்'' என்று அவருக்குச் சொன்னேன். இன்ஜினீயரும் அவ்விதமே செய்து வரலானார்.

முப்பது முப்பத்தைந்து வருஷத்திய பழக்கம். எடுத்ததற்கெல்லாம் குறிப்பு புள்ளி விவரங்கள் தயாரிப்பது என்ற பழக்கம் ஊறிவிட்ட புள்ளியல்லவா ஓர் இன்ஜினீயர்? நண்பர் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியுமா? பிரதி மாதமும் குறிப்பிட்ட தேதியன்று குறிப்பிட்ட மணிக்குக் காலையில் வெறும் வயிற்றில் தன் உடல் நிறை என்னவென்பதை நிறுத்து எடுத்து ஒரு குறிப்புப் புத்தகத்தில் எழுதி வருவார். சுமார் ஆறு மாத காலமான பிறகு புள்ளி விவரங்களைக் குறிப்புப் புத்தகத்தைத் திறந்து காண்பித்தார். ஒவ்வொரு மாதமும் நான்கு ராத்தல் கிரமமாக எடை குறைந்து கொண்டே வந்திருப்பதைப் புள்ளி விவரங்கள் மூலம் தெளிவு படுத்தினார். இப்படியாகச் சுமார் 25 ராத்தல் எடை குறைந்திருப்பதால் உடலில் பலஹீனம் எதுவுமே ஏற்படவில்லை என்பது கண்டு வியப்பும் சந்தோஷமும் எய்தினார்.

'ஏறுமுகமாக இருந்த உடற்பருமனும் எடையும் ஏறிக் கொண்டே போகாமல் தடையுற்றதே பெரிய விஷயம். அதிலிருந்து இறங்கத் தொடங்கியதும்.... அதுவும் மாதா மாதம் படிப்படியாக நான்கு ராத்தல் வீதம் குறைந்து கொண்டே வந்ததும் அதனினும் பெரிய விஷயம். ஏதோ குறைவது போல் சில நாட்கள் காண்பித்துப் பிறகு வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்ட கதையாக இல்லாமல் தொடர்ந்து குணம் தெரிந்து வந்தது மிகப் பெரிய விஷயம்' என்று அன்பர் பொழிந்த புகழ்மாரியில் நனைந்து குளிரில் வெடவெடவென்று உடல் நடுக்கமும் காணத் தொடங்கி விட்டது.

இதே சிகிச்சையைச் சென்னைவாசிகளான ஒரு சிலருக்கும் சொன்னேன். அவர்களுக்கும் அவ்விதமே பலன் ஏற்பட்டிருக்கிறது. மேலும் இவர்களுள் ஒருவர் அரிசிக்குப் பதில் கூடுமானவரை கோதுமையைச் சேர்த்துக் கொள்ளச் சொன்னதையும் செய்யவில்லை. எப்பொழுதும் போலவேதான் ஆகாராதிகளை ஏற்று வருகிறார். ஆயினும் தேன் கலந்த ஜலம் - (இதைத்தான் நமது சாஸ்திரங்களில் 'மதூதகம்' என்பர்) தினம் இரண்டு வேளை ஆகாரத்துக்குப் பின் அனுபானமாகத் தவறாமல் சாப்பிட்டு வருபவர். இப்படி ஒரு மருந்து - அல்ல அல்ல - ஆகாரத்தின் அனுபானம் பல

வளித்துள்ளதை இவ் விஷயமாகக் கேள்வி மாரி பொழிந்த நேயர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

ஈரோட்டிலிருந்து கடிதம் எழுதும் ஒரு நண்பர். 'விளையாட்டாக நாட்டு வைத்தியக் கட்டுரைகளில் வெளியான சில மருந்துகளைச் செய்து உபயோகிக்க' முனைந்தவர். பற்பல மருந்துகளைச் செய்து பலருக்கும் உதவி நற்பலனையும் புகழையும் பெற்ற விருத்தாந்தத்தை எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் உடற் பருமனைக் குறைக்கக் கோமூத்திர சிலாஜதுவை உபயோகித்துப் பலன் பெற்றதை.



'அந்த ரோடின் நடுவே பெரிய குழி இருக்கே நீர் பார்த்தீரா?''

''இல்லையே!''

''ஓகோ! நீங்கள்தான் இந்தத் தொகுதி நகரசபை அங்கத்தினரா?''

''என்ன ஆச்சரியம்! வியாதிகள் தொலைந்ததோடு இறுகிறுப்பு, வாந்தி முதலியனவும் அடியோடு போய் மிகவும் சௌகர்யமாக உள்ளார் வியாதியஸ்தர்'' என்று எழுதியுள்ளார். (ஸ்ரீ ஏ. வி. ஆ., ஈரோடு) உடற் பருமனையொழிக்கும் வகை கேட்டும் – மேலே தெரிவித்த மருந்தைப் பற்றியும் கேட்டு எழுதிய நேயர்களுக்கு இந்தத் தகவலையும் கொடுக்க விரும்புகிறேன்.

உடற் பருமனையும் அதனால் ஏற்படும் வேறு உபத்திரவங்களையும் குறைக்க வல்ல ஒரு மருந்தையும் இங்கு தெரிவித்து விடுகிறேன். இதை மருந்து என்றும் ஏற்கலாம்; ஆகாரமென்றும் ஏற்கலாம். மருந்து எளிதுதான், செய்வதும் சிரமமில்லை. தெரிவிக்கும் மருந்துகளும் கிடைக்கக் கூடியவைகளே.

வியோஷாதி மோதகம்: சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலரிசி, கடுக்காய்த் தோல், தானிக்காய்த் தோல், நெல்லி முள்ளி, முருங்கைப் பட்டை (சிலர் முருங்கையின் விதையைச் சேர்க்க வேண்டுமென்பர்) வாயுவிடங்கம், அதிவிடயம், ஓரிலை வேர் (இதை ப்ரச்னிபர்ணி என்று வடமொழி நிகண்டுகள் கூறும்) பொரித்தெடுத்த பெருங்காயம், துவர்ச்சிலை உப்பு (வெண்ணிறமாகவும் நெல்லிக் காயளவில் உருண்டை உருண்டையாகவும், ருத்திராட்சம் போல் வெளிப்புறம் முள்ளு முள்ளாகவும் இருக்கும். இதை வறுத்துப் பொடி செய்துகொள்ள வேண்டும்) சித்திர மூலத்தின் வேர் மேற்பட்டை (சிவப்பு நிறமுள்ளது சிறந்தது. கடைகளில் வேராகவும், வேர்மேற்பட்டையாகவும் கிடைக்கிறது) கறி மஞ்சள், மரமஞ்சளின் மேற்பட்டை, கண்டங்கத்திரியின் வேர் (இது வெண்ணிறமானால் நல்லது) சிவகரந்தையின் ஸமூலம் (கொட்டைக் கரந்தையல்ல) பாடைக் கிழங்கு (வட்டத் திருப்பியல்ல) இவற்றைத் தனித் தனி இடித்துப் பொடித்து வஸ்திர காலனஞ் செய்த தூள்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம் விதம் எடுத்துக் கொள்ளவும். மொத்த முள்ள எடைக்குப் பதினாறு பங்கு சத்துமா (அல்லது பொரிமா) வையும் சேர்த்தெடுத்துக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

தேன், நெய், நல்லெண்ணெய் இம் மூன்றையும் சம எடையில் எடுத்து ஒன்றாய்க் கலந்து கொள்ளவும். இக்கூட்டுத் திரவத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டு மேலே சொன்ன சூர்ணத்துடன் சேர்த்துப் பிசையவும். பிடித்தால் பிடிபடும், உதிர்த்தால் உதிர்ந்துவிடும் என்ற நிலை வருமளவு இந்தத் திரவங்களைச் சேர்க்க வேண்டும். இப்படிச் சேர்த்துப் பிசைந்ததை (ரவை லட்டு செய்வது போல்) உரலில் இடித்து அல்லது அம்மியிலிட்டு அரைத்து ஒன்று சேர்த்து வைத்துக் கொள்ளவும்.

இதில் தினந்தோறும் காலை மாலை ஒரு சுண்டையளவு முதல் கடுக்காயளவு வரையில் சிறிது தண்ணீரை அனுபானமாக ஏற்றுச் சாப்பிட்டு வர அமிதமான உடற் பருமன் குறையும். அவ்வித உடற் பருமனால் ஏற்பட்ட இதர உபாதைகளும் தீரும். நடக்க முடியாமல் மூச்சுத் திணறித் தவிக்கும் நிலையும் நீங்கிவிடும் என்பதில் ஐயமில்லை.

தயிரிலிருந்து இறுத்து எடுக்கப்பட்ட நீரையும், மதூதகத்தையும் அனுபானமாக ஏற்கலாம் என்று சிலர் சொல்வார்கள். அனுபவத்தை யொட்டி யாருக்கு எந்த அனுபானம் ஹிதமானதாகத் தெரிகிறதோ, அதையே தொடர்ந்து உபயோகிக்கலாம்.

கோவை சகோதரி இதை முக்கியமாகக் கவனிக்கவும்.

சொர்க்கத்தின் நிழல்

ஜெகசிற்பியன்

முன்கதைச் சுருக்கம்

வாசனைப் பொருள் உற்பத்திச் சாலை யொன்றின் சொந்தக்காரரான சிவப்பிரகாசம் என்பவரின் ஒரே மகள் தேவகி. கவிதைகள் இயற்றுவதில் வல்லவளாய் இருக்கும் அவளது விசித்திர நடத்தைகளைக் கண்டு சித்த சுவாதீனக் கோளாறோ என்று சந்தேகித்த தந்தை, அந்த நோயைக் குணமாக்குவதில் பிரபலமா யிருக்கும் டாக்டர் ராமநாதனிடம் அவளை அழைத்துச் செல்கிறார். தேவகிக்குச் சித்த சுவாதீனக் கோளாறு என்பதை நம்பாத டாக்டர், எதற்கும் அவளைத் தம் வீட்டிலேயே வைத்துப் பரிசோதிக்க முடிவு செய்கிறார். டாக்டரின் மனைவி சுந்தரியம்மாள் அந்தப் பெண்ணிடம் மிகுந்த வாஞ்சை காட்டுகிறாள்.

சுந்தரியம்மாளுக்கு விவேகானந்தன் என்று தம்பியொருவன் இருக்கிறான். அரசியலிலும்பகுத்தறிவு வாதத்திலும் அதிக ஈடுபாடுள்ள அவன் தன் அத்தானின் மருத்துவ விடுதியை நிர்வகிக்கும் பொறுப்பேற்றிருக்கிறான். டாக்டரின் வீட்டில் வந்து தங்கியிருக்கும் தேவகியைப் பார்த்தது முதல் அவளது அழகிலும் கவிதை இயற்றும் திறனிலும் தன் மனத்தைப் பறி கொடுக்கிறான். ஆனால் அவள் அவனைக் காதலிக்கிறாளா இல்லையா என்பது ஒரு பெரும் புதிராய் இருக்கிறது. அப்படி நடந்து கொள்கிறாள் அவள்.

நவயுக வாலிபர் சங்கம் என்ற ஒரு சங்கத்தின் தலைவனாயிருக்கும் விவேகானந்தன், அச்சங்கத்தின் செயலாளனும் அவனுடைய நண்பனுமான சாரங்கன் என்பவனது யோசனையின் பேரில், சங்க ஆண்டு விழாக்கலை நிகழ்ச்சியில் பங்குபெறப் பிரபல நாடக நடிகையான கோமதி என்பவளை ஏற்பாடு செய்யும் பொருட்டு அவள் வீடு தேடிச் சென்ற போது பிலிமிக் டைரக்டர் ஜமதக்கினி என்பவர் அவனுக்கு அறிமுகமாகிறார். அந்த பிலிமிக டைரக்டரின் ஒரு [illegible] பிரயால் சித்த சுவாதீனமிழந்த [illegible] புல்லாங்குழல் வித்வான் [illegible] என்பவன் ராமநாதனின் மருத்துவ விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகிறான். நடிகை கோமதி அவனுக்குப் பழக்க முள்ளவளாய் இருக்கிறாள்.

மோகனசுந்தரம் குணமாகி வெளியேறும்போது டாக்டர் ராமநாதன் இறுதிப் பரிசோதனைக்காக அவனைத் தம் இல்லத்தில் புல்லாங்குழல் வாசிக்க வைக்கிறார். அவனுடைய அற்புதமான குழல் வாசிப்பைக் கேட்டு உணர்ச்சி வசப்பட்ட தேவகி ஓர் அழகிய கவிதை பாடி அனைவரையும் திகைப்பில் ஆழ்த்துகிறாள். நிலையறிந்த டாக்டர், தேவகியின் சித்தசுவாதீனத்தில் ஒரு கோளாறுமில்லை யெனத் தீர்மானித்து அவளை அவள் இல்லத்துக்கு அனுப்பி வைத்து விடுகிறார்.

மோகனசுந்தரத்தின் புல்லாங்குழல் இசையை நம்பித் திரைப் படமொன்றை ஆரம்பித்து, அவனது புத்திக் கோளாறால் அது இடையில் நின்று போயிருக்க, அதை மீண்டும் ஆரம்பிக்க முயற்சி செய்கிறார் அதன் பிலிமிக் டைரக்டரான ஜமதக்கினி. ஆனால், டாக்டர் ராமநாதன், மோகனசுந்தரத்தை அந்தப் படத்துக்குக் குழல் வாசிக்க வேண்டாம் எனத் தடுக்கிறார். அப்படி வாசித்தால் அவன் மீண்டும் சித்த சுவாதீனமிழக்க நேரும் என எச்சரிக்கிறார். ஜமதக்கினியோ, நடிகை கோமதியைக் கொண்டு காரியத்தைச் சாதிக்க முயல்கிறார். ஆனால் கோமதி அவருக்கு எதிராக மோகனசுந்தரத்தைத் தடுத்து விடுகிறாள். இதனால் கோபமுற்ற ஜமதக்கினி அவளைத் தம் வீட்டிலிருந்து துரத்தி விடுகிறார். போக்கிடமற்றுப்போன ஏழைப் பெண்ணான அவளைச் சாரங்கன் தன் அறையில் இருக்கச்செய்து ஆதரவளிக்கிறான்.

அரசியல் குரோதங்களால் சில எதிரிகள் விவேகானந்தனை வழி மடக்கி அடித்துவிடுகின்றனர். அப்போது நடிகை கோமதி அவனைத் தீரத்துடன் காப்பாற்றுகிறாள். அதுமுதல் அவனிடம் கோமதி ஒரு மாதிரியாக நடந்து கொள்கிறாள். ஆனால் விவேகானந்தனோ தேவகியின்மீது எல்லையற்ற காதல்



இரண்டாம் பாகம்

உதிர்ந்த மலர்

கொண்டிருப்பதால் கோமதியை உதாசீனப்படுத்துகிறான். அவனுடைய மனத்தவிப்பை அறிந்த ராமநாதனும் சுந்தரியம்மாளும் தேவகியை அவனுக்கு மணம் செய்துவைக்க முயற்சி செய்கின்றனர். ஆயினும் அந்த முயற்சி அத்தனை எளிதில் கைகூடுவதாயில்லை. காரணம், தேவகி விவேகானந்தனை விரும்புகிறாளா என்பது சந்தேகமாக இருக்கிறது. அவள் மோகனசுந்தரத்தின் குழல் வாசிப்பில் மயங்கிக் கிடக்கிறாள்.

மோகனசுந்தரமும் கோமதியும் நெருங்கிப் பழகுவதைக் கொண்டு வெளியுலகம் அவர்களைக் காதலர்களாக நினைக்கிறது. உண்மையில் மோகனசுந்தரம் அவளை ஆவேசமாகக் காதலிக்கிறான். ஆனால் கோமதியின் நிலை இதில் என்னவென்பது புரியவில்லை. அவள் அவனிடம் மதில்மேல் பூனையாக நடந்து கொள்கிறாள்.

இதற்கிடையில், சுந்தரியம்மாளின் தங்கை மகளான கமலி என்பவள் பம்பாயிலிருந்து டாக்டரின் வீட்டுக்கு வருகிறாள். அவளுக்கும் சாரங்கனுக்கும் எதிர்பாராத ஒரு வேடிக்கைச் சந்திப்பின் மூலம் பழக்கம் ஏற்படுகிறது.

தேவகியின் மனத்தைக் கவர்ந்து தன் காதலை வெளிப்படுத்த எண்ணிய விவேகானந்தன், தனது சங்கத்தின் ஆண்டு விழாக் கலை நிகழ்ச்சிக்கு அவளைத் தலைமை தாங்க அழைக்கிறான். அந்த நிகழ்ச்சியில் மோகனசுந்தரத்தின் புல்லாங்குழல் கச்சேரி நடக்க இருந்ததால் தேவகி உடனே அதற்குச் சம்மதிக்கிறாள்.

கலைவிழாக் கச்சேரியின் இடையில் மோகனசுந்தரம் கோமாளித்தனமாக நடந்து கொள்ளவே, ஜனங்கள் கோபமடைந்து கலாட்டா செய்கின்றனர். இதனால் விவேகானந்தன் அவன்மீது மிகவும் கோபமடைகிறான். ஜமதக்கினி இதைப் பயன்படுத்திக் கொள்ள விவேகானந்தனுடன் இரகசியத் தொடர்பு கொள்கிறார்.

அன்றொரு நாள் குழல் இசையைக் கேட்டுப் பரவசமடைந்து தேவகி இயற்றிய அந்தப் பாடலை, கிராமபோன் இசைத்தட்டில் வாசித்துக் கொடுத்த மோகனசுந்தரம், அந்த இசைத்தட்டு ஒன்றைக் கொண்டு வந்து தேவகிக்கு அன்பளிப்பாகத் தருகிறான். அதனை இசைக்கச் செய்து கேட்ட தேவகி தன்னை மறந்து உணர்ச்சி வயப்படுகிறாள். மோகனசுந்தரத்திடம் நெருங்கி அவனை ஆவலுடன் பார்த்துப் புன்னகை பூக்கிறாள் தேவகி. அதன் பொருளைப் புரிந்து கொள்ளாமல் மோகனசுந்தரமும் சிரிக்கிறான்!...

— இனி மேலே தொடர்ந்து படிக்கலாம்.

அத்தியாயம் 1

புலர்ந்தும் புலராக் கன்னிக் காலை நேரத்தின் மங்கிய ஒளி நிரவலில், சாயம் போன காவிச் சேலை போல் நெடுக நீண்டு கிடந்த அந்தக் 'கான்கிரீட்' சாலையெங்கும் பாயாக உதிர்ந்திருந்த இலைச் சருகுகள், குபீர் குபீரெனச் சுழன்றெழுந்து இரு பக்கச் சரிவிலும் தூற்றலிட்டுப் பறந்து படிவது இலேசாகத் தெரிகிறது. வெள்ளையடிக்கப்பட்ட பர்லாங்குக் கற்கள் ஒன்றன் பின் ஒன்றாகப் பின்னால் வேகமாக ஓடி மறைகின்றன.

'டக்' - எட்டணா!

அதோ, சாலையின் இடது பக்கம் பசுமாடு ஒன்றை ஓட்டிக்கொண்டு, ஒரு கையில் தகரக் குவளையும் மறு கையில் வைக்கோல் பொதிந்த பொம்மைக் கன்றுக் குட்டியுமாக வருகிறான் பால்காரன் ஒருவன். அவன் கையிலிருக்கும் வைக்கோற் பொம்மை இறந்துபோன தன் கன்றின் தோலால் ஆனது என்று தெரிந்திருந்தும் அதை எல்லையற்ற தாய்ப் பாசத்துடன் நாவினால் நக்கிக் கொடுத்தவாறு பால் சுரந்த மடியைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு அசைந்து அசைந்து வருகிறது பசுமாடு.

'டக்' - பத்தணா!

இதோ, இந்தப் பக்கம் காய்கறிக் கூடைக்காரிகள் 'லொங்கு லொங்'கென்று ஓடுகின்றனர். அதோ, தொழிலாளர் கும்பலொன்று சோற்று மூட்டையுடன் வேக நடை போட்டுச் செல்கிறது. நீண்ட கறுப்புக் கம்பளி பின்னால் தொங்கத் தயிர்க் கூடையுடன் வருகிறான் ஒரு கிழவன்.

'டக்' - பன்னிரண்டணா!

சாலையை முழுதும் அடைத்துக் கொண்டு வருகிறது, செம்மறியாட்டு மந்தையொன்று. திடீரென்று அந்த ஆடுகள் சாலையின் இரு பக்கமும் கலைந்து ஓடி மீண்டும் ஒன்றாகக் கூடி இரைச்சலிடுகின்றன. முளைக்கீரைக் கட்டுடன் வந்த இளம் பெண்ணொருத்தி சுமைதாங்கிக் கல்லின்மேல் சுமையை இறக்கி வைத்து விட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தவாறு தன் முன்றானையை உதறிச் சும்மாடு கோலுகிறாள். கீரைக்கட்டு உருண்டு கீழே விழுகிறது.

'டக்' - பதினான்கணா!

பொய்மையின் பூதாகாரத் தோற்றம் போல் நீண்டு சென்ற அந்தக் கான்கிரீட் சாலையிலிருந்து, மெய்மையின் மெல்லிய இழைபோல் ஒரு செம்மண் பாதை பிரிகிறது. அந்தப் பாதையின் ஓரமாகச் செல்லும் மின்சாரக் கம்பிகளில் கரிச்சான் குருவிகளும் தவிட்டுப் புறாக்களும் வரிசை வரிசையாக உட்கார்ந்து உதயகீதம் இசைத்துக் கொண்டிருக்கின்றன.

'டக்' - ஒரு ரூபாய்!

செம்மண் பாதையில் புழுதிப் படலம் கிளம்பி நெடுஞ்சாலையை மறைக்கிறது. இதுவரையில் இருளம்பரமாக இருந்த உலகம் இப்போது ஒளியம்பரமாக வெளுக்கிறது. காலைக் கதிரவனின் சன்னமான செவ்வொளியில் கிளர்ந்தெழுந்த புழுதிப் படலம் பொற்துகள் கூடாரமாக மின்னுகிறது. அதோ, பச்சைப் பசிய மரக் கூட்டங்களுக்குப் பின்னால் மேற்றிசை அடிவானில் ஒரு தங்கக் கலசம் தகத்தகாயமாய்த் தெரிகிறது. அப்புறம் அதைத் தாங்கி நிற்கும் கோயில் கோபுரமும் கொஞ்சங் கொஞ்சமாகப் புலனாகிறது. 'டக்' - ஒரு ரூபாய் இரண்டணா!

இதோ, அந்தக் கோயில் சமீபித்து விட்டது. அதன் திருச்சுற்று மதிலின் வெள்ளையும் சிவப்புமான பட்டைகள் கூடத் தெரிகின்றன. சில்லென்று காற்று வீசுகிறது. எங்கும் அமைதி சூழ்ந்திருக்கிறது. கோயிலின் பிரதான வாயில் சாத்தியிருக்கிறது. சாத்தியிருக்கிறதா? இல்லை; சாத்தப்பட்டிருக்கும் பெரிய கதவின் கீழேயுள்ள சிறிய கதவொன்று திறந்துதான் இருக்கிறது.

'டக்' - ஒரு ரூபாய் நாலணா!



மீட்டர் கருவியின் 'கொடி'யை மேலேற்றித் தள்ளக் கீழே இறங்கினான் டாக்ஸி டிரைவர்.

"ஓர் ஐந்து நிமிஷம் காத்துக் கொண்டிருக்க முடியுமா? திரும்பிப் போக வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டே டாக்ஸியிலிருந்து இறங்கினாள் கோமதி.

வெறும் வண்டியுடன் வெகு தூரம் செல்ல வேண்டிய நஷ்டத்தை உத்தேசித்து, 'சரி' என்று தலையசைத்தான் டிரைவர். அவனுடைய பரந்த அநுபவத்தில் இன்றைய இந்தச் சவாரி அவனுக்கு மிகுந்த வியப்பைத் தந்தது. இத்தனை அதிகாலையில் ஓர் இளம்பெண் தன்னந் தனியே கோயிலுக்கு - அதுவும் நகரத்தின் எங்கோ ஒரு மூலையிலிருக்கும் இந்தப் பிரபலமல்லாத சிறிய கோயிலுக்கு-வருவது ஆச்சரியந்தானே? காலையில் எழுந்திருக்கும்போதே எந்தத் தியேட்டரில் என்ன சினிமாப் படம் ஆடுகிறது என்று ஜன்னல் வழியே சுவரொட்டி விளம்பரங்களைப் பார்த்துப் பழக்கப்பட்டுப் போயிருக்கும் சென்னை நகரப் பெண்களிடையே இப்படி ஒரு பெண்ணைப் பார்ப்பது அதிசயமல்லவா? ஆயினும் அந்த ஆச்சரிய உணர்ச்சியை அதிகமாக வளர்த்துக் கொள்ள அவனுடைய அநுபவம் இடம் தரவில்லை. கோமதி ஒரு புகழ்பெற்ற நடிகை என்பது அவனுக்குத் தெரியும். டாக்ஸி டிரைவராயிருப்பவனுக்கு இதுகூடவா தெரியாது? எனவே, இந்த அதிகாலையில் அவள் தன் வண்டியில் வந்து ஏறியதுமே, ஸ்டுடியோவுக்குப் போகிறாளாக்கும் என்று எண்ணிக் கொண்டான். பிறகு, 'கோயிலுக்கு' என்றதும், 'சரிதான்; அங்கு அவுட் - டோர் ஷூட்டிங் நடக்கப் போகிறதாக்கும்' என்று தீர்மானித்துக் கொண்டான். அவள் சினிமாவில் நடிப்பதில்லை என்ற விஷயம் அவனுக்குத் தெரிய நியாயமில்லை. நகரின் சுற்றுப் புறங்களிலுள்ள கோயில்களுக்குப் பக்தர்கள் பூஜைக்குரிய புனிதப் பொருள்களுடன் வருகிறார்களோ இல்லையோ; சினிமாக்காரர்கள்காமிராவைத் தூக்கிக் கொண்டு வரத் தவறுவதில்லை என்பதும், அவர்களுக்கு இந்தக் கோயில்களின் நிர்வாகிகள் ஓடியாடி உதவி செய்கிறார்கள் என்பதும் அவன் நன்கு அறிந்த விஷயங்களில் ஒன்று. பக்தியை விடப் பணம் முக்கியமாகிவிட்ட காலம் அல்லவா இது? ஆனால், கோமதியைப் பற்றி அவன் கொண்ட ஊகம் சரியல்ல என்று இப்போது தெரிந்து விட்டது. இங்கே சினிமாப் படப் பிடிப்பு எதுவும் நடக்கப் போவதாகத் தெரியவில்லை. அப்படியிருந்தால் நட்சத்திரங்களைத் தரிசனம் செய்ய இந்நேரம் இங்கே ஏராளமான 'பக்தர்கள்' குழுமி விட்டிருக்கமாட்டார்களா! மேலும் அந்தப் பெண் ஐந்து நிமிஷத்தில் திரும்பி வந்து விடுவதாகச் சொல்லிப் போயிருக்கிறாள். அப்படியானால் அவள் கோயிலுக்குத்தான் வந்திருக்கிறாளா? அதுவும் சந்தேகமாக இருக்கிறது; ஏனென்றால், அவள் கையில் பூ, பழம், தேங்காய் எதுவும் இல்லையே!....

இத்தனை சந்தேகங்களையும் அந்த டாக்ஸி டிரைவரின் மனத்தில் சுழல விட்டு விட்டுக் கோயிலுக்குள் சென்று விட்டாள் கோமதி.

அது ஒரு சிறிய கோயில்தான். ஆனால் பழைமைச் சிறப்புடன் உன்னதமான கலையழகோடு விளங்கியது அது. அக் கோயிலில் 'சாந்தகோவிந்தராசர்' என்னும் திருப்பெயரோடு எழுந்தருளியிருந்தார் இறைவன். அந்தப் பெயருக்கேற்ப, எத்தகைய சஞ்சல மனத்தையும் சாந்தியில் ஆழ்த்தும் இனிய அமைதி அங்கு சூழ்ந்திருந்தது.


கோமதி வந்த அதிர்ஷ்டமோ என்னமோ, அப்போதுதான் விடியற்சாம பூஜை நடந்து கொண்டிருந்தது. வேத மந்திர இன்னொலியுடன் மெல்லிய மணியோசையும் கேட்கவே, கோமதி மண்டபத் தூணோரமாக ஒதுங்கி நின்று இறைவனைச் சேவித்துக் கொண்டாள். பிறகு அங்கிருந்து கோயிலின் வலப் பக்கம் பிராகாரத்துக்குச் சென்றாள். கோயிலை வலம் வரப் போகிறாளா? இல்லை. பிராகாரத்தை ஒட்டினாற்போலிருந்த குள்ளமான நீண்ட மதில் சுவரின் நடுவில், சாத்தப்பட்டிருந்த ஒரு கதவருகில் போய் நின்று அதை மெள்ளத் திறந்தாள். அந்த மதில் சுவரைச் சார்ந்து கிழக்குத் திசையாக ஓர் அழகிய குளம் இருந்தது. பழுதான படிகளுடன்கூடிய அந்தக் குளத்தைச் சுற்றி அடர்த்தியான மரஞ்செடி கொடிகள் வளர்ந்து கவிந்திருந்தன. இதனால், பொழுது புலர்ந்து விட்ட இந்த நேரத்திலும் அங்கு இலேசாக இருள் மூட்டமிருந்தது. குளத்தில் போதுமான அளவு தண்ணீர் இருந்தது. பளிங்குபோல் தெளிந்திருந்த நீரில் பச்சை இலைத் தட்டுகளைப் பரப்பியிருந்த தாமரைக் கொடிகள் சிவப்பும் வெள்ளையுமான பெரிய பெரிய பூக்களை அப்போதுதான் மடல் அவிழ்த்துக் கொண்டிருந்தன.

கதவைத் திறந்து கொண்டு குளத்துப் படியில் வந்து நின்ற கோமதி சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தாள். எந்த ஊகத்தோடு அங்கு வந்தாளோ, அது தவறவில்லை என்பது போல் மெல்ல முறு


ஆல மரத்தடி நிழலிலே..
முன்பெல்லாம் சாதாரணமாக நம்நாட்டு கிராமவாசிகள்
அன்றாட வேலை முடிந்தவுடன் ஆலமரத்தின் நிழலில்
கூடி பொழுதைக் கழிப்பது வழக்கம்.
இப்பொழுதோ அவர்கள் மத்தியில் டிரை-செல்
ரேடியோ செட் ஒன்று செய்தி அறிக்கைகளையும்,
அவர்களுக்குப் பிடித்தமான பாட்டுக்களையும் ஒலிபரப்பிக்
கொண்டு அவர்களை இன்பத்தில் ஆழ்த்தி வருவதை
சாதாரணமாகக் காண்கிறோம்.
இக்காலத்து கிராமவாசிகள் ரேடியோ நிகழ்ச்சிகளை
மிகத்தெளிவாகக் கேட்பதற்கு அதிக சக்தி அளிக்கக்கூடிய
எஸ்ட்ரெலா பாட்டரிகளையே உபயோகிக்க விரும்புகிறார்கள்.
நீண்ட காலம் உழைக்கக்கூடியதும், டிரை-செல்
பாட்டரி உற்பத்தியில் 20 வருஷ அனுபவத்தினால்
தயாரிக்கப்பட்டதுமான எஸ்ட்ரெலா பாட்டரிகள்
வெளிநாடுகளில் உற்பத்தியாகும் சிறந்த பாட்டரிகளுக்கு
சமமானவையென்று பரிசோதனைகள்
மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.
உங்கள் ரேடியோவிற்கு ஒரு எஸ்ட்ரெலா பாட்டரியை
இன்றே பொருத்துங்கள். இது உங்களுக்குத் தேவையான
எல்லா அனுகூலங்களையும் ஒருங்கே அளிக்கவல்லது.
எஸ்ட்ரெலா
ரேடியோ பாட்டரி
இப்பொழுது உங்கள்
ரேடியோ டீலரிடம் கிடைக்கிறது
ESTRELA
எஸ்ட்ரெலா பாட்டரீஸ் லிமிடெட்
பம்பாய் • மதறாஸ் • டெல்லி • கல்கத்தா • கான்பூர்
ES-6-6 TAM



விஷ வெட்டுக் காயங்கள்



ஜாம்-பெக் உதவியினுல் சீக்கிரம் குணமடைகின்றன

வெட்டுகள், சிராய்ப்பு, மற்றும் பூச்சிக் கடிகளிலிருந்து, குணமடையுங்கள்... கட்டிச்சிரங்கு, கொப்பளங்கள் மற்றும் விஷக் காயங்கள், பொடுகு சொரிகள் இவைகளே அகற்றுங்கள். எவ்வித சரும உபாதைகளேயும் மூலிகைக்களிம்பான ஜாம்-பெக் குணப்படுத்துகிறது. மிருகக்கொழுப்பு மற்றும் எண்ணெய்கள் சேர்க்கப்படாதது என்பதற்கு உத்திரவாதம்.

Zam-Buk

ஜாம்-பெக் மூலிகைக் களிம்பு



எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

FZY-60-TAM

சி.இ. புல்போர்ட் (இந்) பிரைவேட் லிமிடெட், பம்பாய்

சோல் ஏஜெண்டுகள்:

தாதா & கம்பெனி

86, நைனியப்ப நாயக தெரு, சென்னை-3

வலித்தவாறு அந்தக் குளத்தின் வடக்கு மூலைப் பக்கம் தன் பார்வையைச் செலுத்தினான்.

அங்கே --

குளத்தின் கீழ்ப்படியில் இரண்டு கால்களையும் முட்டிவரை தண்ணீரில் விட்டுத் தன்னை மறந்த நிலையில் உட்கார்ந்து புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தான் மோகனசுந்தரம்.

மிஸ்ர தாளத்தில் இணைந்த இராக மாலிகையில் பாரதியாரின் 'தீர்த்தக் கரையினிலே' என்ற பாடல் அற்புத வடிவெடுத்து அந்தத் தண்ணென்றிருந்த குளத்தின் நாலா திசைகளிலும் விண்ணென்று ரீங்கரித்துக் கொண்டிருந்தது.

இன்று வெள்ளிக்கிழமையல்லவா? ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் அதிகாலையில் எழுந்து வந்து இந்தக் கோயிலின் குளக்கரையில் அமர்ந்து சங்கீத உபாசனை செய்வது மோகனசுந்தரத்தின் நீண்ட நாள் பழக்கமாயிருந்தது. இந்தப் பழக்கத்தை அவன் எப்போதும் எந்தக் காரணத்தைக் கொண்டும் தவிர்த்துக்கொள்வதில்லை. இது தெரிந்துதான் கோமதி இப்போது இங்கே வந்திருக்கிறாளா ?

அந்த மோகன முரளீகானத்தில் ஒரு கணம் தன்னை மறந்து லயித்து நின்ற கோமதி, மோகனசுந்தரம் அமர்ந்து கொண்டிருந்த இடத்தை நோக்கித் தயங்கித் தயங்கிச் சென்றாள்.

ஐம்புலன்களின் உணர்ச்சிகளையும் ஒருங்கு சேர்த்துப் புல்லாங்குழலின் சின்னஞ் சிறு தொளையில் நிறுத்தி ஜடம் போல் அமர்ந்து கான சஞ்சாரமிட்டுக் கொண்டிருந்த மோகனசுந்தரம், ஏதோ சஞ்சீவிக் காற்றால் உலுப்பப்பட்டவன் மாதிரி சட்டென்று குழலை எடுத்துவிட்டுத் திரும்பினான். குளத்தின் மேல்படியில் அழகாக நடந்து வந்துகொண்டிருந்த கோமதியைப் பார்த்து அளவற்ற வியப்பால் கண்களை அகல விரித்தவனாய்ச் சடாரெனத் துள்ளியெழுந்தான்.

கோமதி அவனைப் பாராதவள் போல் இரண்டு படிகளை விட்டு இறங்கிப் போய் மூன்றாவது படியில் சாவதானமாக உட்கார்ந்தாள்.

"கோமதி! நீ எப்படி இங்கு வந்தாய் ?" என்று மகிழ்ச்சியும் ஆவலும் செறிய குரலில் கேட்டுக் கொண்டே மள மளவெனப் படிகளில் ஏறி ஓடி வந்தான் மோகனசுந்தரம். அவன் ஓடி வந்த வேகத்தில் சற்றே கால் இடறினாலும் பந்து போல் உருண்டு குளத்தில் விழுந்து விடுவான். அத்தனை அவசர ஆவலுடன் அவளை நோக்கிப் பாய்ந்து வந்தான் அவன். வந்த அதே வேகத்தில், கோமதி உட்கார்ந்திருந்த படிக்கு அடுத்த கீழ்ப்படியில் ஒருக்களித்து உட்கார்ந்து அவள் முகத்தை ஆர்வத்துடன் ஏறிட்டுப் பார்த்து, "நான் இங்கே வந்திருப்பது உனக்கு எப்படித் தெரியும் கோமதி? தெரிந்துதானே வந்தாய் ?" என்று பெரிதும் வியப்படைந்தவன் போல் கேட்டான்.

கோமதி மெல்ல அவன் பக்கம் திரும்பி இப்போதுதான் அவனைப் பார்ப்பது போல் பார்த்துப் புன்முறுவல் பூத்தவாறு, "ஓ, நீங்களா ! வேறு யாரோ என்றல்லவா நினைத்தேன் !" என்றாள் சாதாரணமாக.

மகிழ்ச்சியால் மலர்ந்திருந்த மோகனின் முகம் இலேசாக வாட்டம் கண்டது. "அப்படியானால் என்னைப் பார்ப்பதற்காக நீ இங்கே வரவில்லையா, கோமதி ?...." என்று ஏக்கத்துடன் கேட்டான். மீண்டும் அவன் தொடர்ந்து, "வெள்ளிக்கிழமை தோறும் நான் இங்கு வருவது உனக்குத் தெரியுமே ?" என்றான்.

குளத்தின் நடுவில் கூம்பிக் கிடந்த அல்லி மலர் ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்த கோமதி, "ஆமாம் ; ஆனால் நான் இப்போது கோயிலுக்குத்தான் வந்தேன். நீங்கள் இங்கே இருப்பீர்கள் என்ற நினைவே எனக்கு இல்லை !" என்றாள் அமைதியாக.

மோகனின் முகம் மேலும் வதங்கிச் சுருங்கியது. அவன் மெல்லச் சிரித்து, "அதனாலென்ன ? இப்போது நீ இங்கே என்னைச் சந்தித்ததில் உனக்கு மகிழ்ச்சிதானே ?" என்று சிறு பிள்ளைபோல் கேட்டான்.

"உங்களுக்கு மகிழ்ச்சியானால் எனக்கும் மகிழ்ச்சியே !" என்றாள் கோமதி ஒரு வறண்ட சிரிப்புடன்.

மோகனசுந்தரத்தின் முகம் மலர்ந்தது. அவன் உற்சாகத்தோடு நிமிர்ந்து உட்கார்ந்தான். குறும்பாக அவளைப் பார்த்து, "நீ ரொம்பவும் பொல்லாதவள்! வேண்டுமென்றுதானே இத்தனை நாட்களாக என்னை வந்து பார்க்காமல் இருந்தாய்? பார், உனக்கே அப்படி இருப்பது கஷ்டமாகி விட்டது ! அதனால் தான் இங்கே ஓடி வந்திருக்கிறாய், இல்லையா ?" என்றான்.

கோமதி நகைத்துக் கொண்டாள்.

'எனக்குத் தெரியாதா, நீ எப்பேர்ப்பட்டவள் என்பது ? என்னை ஏங்கச் செய்து பார்ப்பதில் உனக்கு ஓர் அலாதி விருப்பம் ! அப்படித்தானே ?"

கோமதி மீண்டும் சிரித்தாள்.

"சிரி, நன்றாகச் சிரித்துக் கொள். ஆனால் நான் சிரிக்கமாட்டேன் ! என்னுடைய மனத்தின் தவிப்பைத் தெரிந்தும்

தெரியாதவள்மாதிரி கல்நெஞ்சத்துடன் நடந்து கொள்ளும் உன்னிடம் எனக்கென்ன சிரிப்பு? நீ மிகவும் கடின சித்தம் படைத்தவள்!'' என்று விம்பு பேசுவது போல் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு சொன்ன மோகன சுந்தரம் சட்டென்று அவளைப் பார்த்துக் கல கலவெனச் சிரித்தான். ''என்ன, கோமதி! கோபித்துக் கொண்டாயா? நான் விளையாட்டுக்குத்தான் அப்படிச் சொன்னேன்!''

அவனுடைய சிரிப்பில் தன் சிரிப்பைக் கலக்க விடாமல் மெல்லப் புன்னகை பூத்த கோமதி, ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றே எனக்குப் புரியவில்லை!'' என்றாள் கரகரத்த குரலில்.

''ஆமாம், ஆமாம்! இத்தனை காலமாக இப்படிச் சொல்லிச் சொல்லியே என்னை ஏமாற்றி வருகிறாய். நான் என்ன, முட்டாளா? இனியும் என்னை உன்னால் ஏமாற்ற முடியாது. எனக்கு எல்லாம் தெரியும்!'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் படபடப்பாகச் சொன்ன மோகனசுந்தரம் சட்டென்று தலை குனிந்து படியின் பொருக்குக் கல்லை விரல்களால் கீறியவாறு, ''என்னுடைய மனத் துடிப்பை உன்னால் புரிந்து கொள்ள முடிகிறதோ இல்லையோ; அல்லது அதைப் புரிந்தும் புரியாத மாதிரி நடிக்கிறாயோ என்னவோ! அதைப் பற்றியெல்லாம் எனக்குக் கவலை இல்லை. அன்று அந்தச் சங்கத்தின் ஆண்டு விழாக் கச்சேரியில் உன்னைப் பார்த்த பிறகுதான் என் மனமே தெளிவடைந்தது. கச்சேரி முடிந்ததும் உன்னைக் காணவேண்டுமென்றிருந்தேன். அதற்குள் அங்கு ஏதேதோ நடந்துவிட்டன. கலையுணர்ச்சி யில்லாத வெறும் காட்டுமிராண்டி ஜனங்கள்! அந்தச் சங்கத்தின் தலைவனை விவேகானந்தனுக்கு என் மேல் ரொம்பக் கோபம். அவன் கோபம் என்னை என்ன செய்யும்? 'அதிகம் பேசாதே, நீ கொடுத்த பணத்தை வேண்டுமானால் வாங்கிக் கொள்' என்று முகத்தில் அடித்தாற் போல் சொல்லி விட்டு வந்து விட்டேன்!'' என்று எதையோ கூற நினைத்து எங்கேயோ பேச்சைக் கொண்டுபோய் திருத்தினான்.

கோமதி அவனை மிகுந்த அநுதாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அது போகட்டும்; நீ இப்போது எங்கே குடியிருக்கிறாய் கோமதி? அந்த மியூஸிக் டைரக்டரின் வீட்டில்தானே?'' என்று கேட்டான் மோகனசுந்தரம்.

''அங்கு இல்லை. நான் வேறு வீட்டுக்குக் குடிபோய் விட்டேன்'' என்றாள் கோமதி பேசப் பிரியப்படாதவள்போல.

''ஓ! என் அம்மா சொன்னது சரிதான். பாவம், அவளை நான் வருத்துக் கொட்டிக் கொண்டு கிடந்தேன். அது சரி; இப்போது குடிபோய் இருப்பது பெரிய வீடா? முன்னதை விட வசதியான வீடா?''

கோமதி நமட்டுச் சிரிப்புச் சிரித்தாள். ''ஆமாம்; பெரிய அரண்மனை போன்ற வீடு! நான்கு அடுக்குமாளிகை!''

''அப்படித்தான் நினைத்தேன். நீ மிகவும் கெட்டிக்காரி!'' என்று நிஜமான மகிழ்ச்சியுடன் மனப்பூர்வமாகப் பாராட்டினான் மோகனசுந்தரம்.

''இன்றைக்கு என்னை உன் பங்களாவுக்கு அழைத்துச் செல்கிறாயா, கோமதி? நான் அங்கு வந்து ஆனந்தமாகப் புல்லாங்குழல் வாசிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்!''

''அதற்கென்ன? ஆனால், இன்றைக்கு வேண்டாம். இன்னொரு நாளைக்கு வாருங்கள்.''

''ஓ! அப்படியே!'' என்று உடனே ஒப்புக் கொண்டான் மோகன். அதிகம் வற்புறுத்தினால் அவள் கோபித்துக் கொள்வாளே என்று அவனுக்குப் பயம்.

கோமதி அடிக்கடி ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் லயிப்பவள் போல் தன் பார்வையை வேறு பக்கம் செலுத்திக் கொண்டிருந்தாள். அதைப் புரிந்து கொள்ளாத மோகன் அவளை உற்சாகப் படுத்த எண்ணி, ''கோமதி, உன்னிடம் ஒரு வேடிக்கையான விஷயத்தைச் சொல்லப் போகிறேன்; கேட்கிறாயா?'' என்று ஆரம்பித்தவன் நிமிர்ந்து உட்கார்ந்து தொடர்ந்தான். ''அன்றொரு நாள் டாக்டர் ராமநாதனின் மருத்துவ விடுதியிலிருந்து நான் வெளி வந்த போது, அவருடைய பிறந்த நாளையொட்டி ஒரு விருந்து நடந்தது. அந்த விருந்து முடிந்ததும் டாக்டர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஓர் ஐந்து நிமிஷம் புல்லாங்குழல் வாசித்தேன். அப்போது அங்கே தேவகி என்ற ஒரு பெண் இருந்தாள். அவள் கவிதைகள் இயற்றுபவளாம். உனக்கும் அவளைத் தெரிந்திருக்கும். கலை விழாக் கச்சேரிக்குத் தலைமை தாங்க வந்திருந்தாளே, அவள்தான்! அந்தப் பெண் அன்றைக்கு என் வாசிப்பைக் கேட்டுப் பரவசமடைந்தவளாய் ஓர் அழகிய பாடலையே இயற்றிவிட்டாள். அது மிகவும் நல்ல பாடல். அந்தப் பாட்டுக்கு நான் ஓர் இனிய மெட்டு அமைத்து கிராமபோன் இசைத்தட்டில் வாசித்துக் கொடுத்து விட்டேன். அதற்கு இப்போது ரொம்பவும் நல்ல பெயர். இசைத்தட்டு வெளிவந்த மூன்றே நாட்களில் ஆயிரத்துக்கு மேல் விற்பனையாகி யிருக்கிறதாம். நேற்

றைக்கு முன் தினம் அந்த இசைத்தட்டில் ஒன்றைக் கொண்டு போய் அந்தப் பெண்ணிடம் அன்பளிப்பாகக் கொடுத்தேன்; அதை உடனே ரேடியோகிராமில் இசைக்கச் செய்து கேட்ட அவள் ஒரேயடியாகப் பூரித்துப் போனுள்! அசடுபோல் என்னைப் புகழ ஆரம்பித்து விட்டாள். கவி பாடுகிறவர்களெல்லாம் பைத்தியங்கள்தாமே? எனக்கு அவளுடைய குதூகலம் நல்ல வேடிக்கையாய் இருந்தது! இப்போது அவளை நினைத்தாலும் சிரிப்பு வருகிறது!'' மோகன் கலகலவெனச் சிரித்தான்.

இதுவரையில் அவன் சொன்னதைக் கோமதி கவனித்துக் கேட்டாளோ இல்லையோ, அவள் மௌனமாக இருந்தாள். தன் ஹாஸ்யச் சிரிப்பில் அவளும் கலந்து கொள்வாள் என்று எதிர்பார்த்த மோகனசுந்தரம் ஏமாற்ற மடைந்தவனாய் அவளை ஏறிட்டுப் பார்த்து, ''கோமதி! ஏன் இப்படி என்னமோ மாதிரி இருக்கிறாய்? வீட்டில் உன் அம்மாவுடன் ஏதாவது சண்டையா? அல்லது என்மேல் ஏதேனும் கோபமா?'' என்று பரிதாபமாகக் கேட்டான்.

கோமதி அவனை மிகுந்த இரக்கத்துடன் திரும்பிப் பார்த்து, ''அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்றவள் மெல்லத் தலை குனிந்து, ''நீங்கள் என்னைப் பற்றி ஏதோ தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்! அதை விளக்கி வைக்கவே இப்போது இங்கு வந்திருக்கிறேன்!'' என்றாள்.

''பார்த்தாயா? நான் முன்பு சொன்னதற்கு இல்லை என்றாயே! 'என்னைப் பார்க்க அல்ல, கோயிலுக்கு வந்தேன்' என்றாயே! அது பொய்தானே?''

''ஆமாம்; அது பொய்தான்!''


''ஒப்புக் கொண்டாயா? போக்கிரி!''

கோமதி சட்டென்று எழுந்து நின்றாள். அவனை ஒருவித வெறுப்புடன் விழித்துப் பார்த்து, 'தயவுசெய்து அப்படிப் பேசாதீர்கள்! நான் உங்கள் காதலி அல்ல!'' என்றாள் மிகவும் அமைதியாக.

திடுக்கிட்டுத் திணறி விட்டான் மோகனசுந்தரம். ''என்ன! என்ன!'' என்று கேட்டுத் துள்ளி எழுந்தான்.

கோமதி எவ்விதப் படபடப்புமின்றி அவனைச் சாதாரணமாகப் பார்த்து, ''ஆமாம்; அதுதான் உண்மை! அதைச் சொல்லவே இங்கு வந்தேன்'' என்றாள். மீண்டும் அவள் தொடர்ந்து, ''இன்னும் கேளுங்கள்; நீங்கள் என் தந்தையின் சிஷ்யர் என்பதாலும், ஒரு மிகச் சிறந்த கலைஞர் என்பதாலும் உங்கள் குடும்பத்தோடு நான் நெருங்கிப் பழகி வந்தேன். நானும் உங்களைப் போல் ஒரு கலைத்தொழிலில் ஈடுபட்டவளாதலால் அந்தப் பழக்கம் இதுவரை நீடித்தது. இந்த உலகத்தில் என்னை ஒரு மனிதப் பிறவியாக நினைத்து என் பேச்சுக்கும் எண்ணங்களுக்கும் மதிப்பளிப்பவர் யாருமில்லையே என்ற ஏக்கத்தால் ஏற்படுத்திக் கொண்ட உறவு அது. மற்றப்படி அதற்கு விசேஷ அர்த்தம் எதையும் நான் கற்பித்துக் கொள்ளவில்லை. நீங்களும் அப்படித்தான் இருப்பீர்கள் என்று எண்ணினேன். அது தவறு எனப் புலப்பட்டு விட்டது. தயவு செய்து அந்தத் தவற்றைத் திருத்திக்கொள்ளுங்கள். நான் வருகிறேன்!'' என்று கூறிக்கொண்டே அங்கிருந்து விர்ரென விரைந்தாள்.

மோகனசுந்தரம் இதைக் கேட்டுக் குபீரென்று சிரித்தான். குழந்தை போல் கைகளை ஆட்டிச் சிரித்த அவன், ''ஆஹா, நல்ல வேடிக்கை! நல்ல



நடிப்பு!...கோமதி, என்னை உன்னால் ஏமாற்ற முடியாது! நான் ஏமாறவும் மாட்டேன்! நில், கோமதி! எங்கே போகிறாய்?" என்று சொல்லிக் கொண்டே அவளைப்பின்தொடர்ந்தான். அவன் வருவதற்குள், கோவிலுக்கு வெளியே நின்ற டாக்ஸி கோமதியை ஏற்றிக்கொண்டு கிளம்பி விட்டது.

அத்தியாயம் இரண்டு

ஜமதக்கினிக்குத் திடீரென்று 'மூடு' வந்துவிட்டது. 'அக்கார்டின்' என்ற இசைக் கருவியை எடுத்துக்கொண்டு ரொம்பத் தீவிரமாக வாசிக்க ஆரம்பித்து விட்டார்.

கட்டிலுக்கு அடியில் படுத்துக் கிடந்த 'நீலாம்பரி' அந்த 'மியாவ்' ஒலியைக் கேட்டு, இந்த வீட்டில் தனக்குப் போட்டியாகப் பூனை ஒன்று வந்துவிட்டதோ என்ற ஆத்திரத்துடன் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு எழுந்து ஓடி வந்தது. ஆனால், 'மியூஸிக்-டேஸ்ட்' டுள்ள அந்த நாய்க்கு உடனே விஷயம் புரிந்து விட்டதால், அதன் எஜமானருக்கு வந்தமாதிரி அதற்கும் 'மூடு' வந்துவிடவே, வாத்திய வாசிப்புக்கேற்ப எகிறி எகிறிக் குதித்து ஆடத் தொடங்கியது. இருவரும் சேர்ந்து அந்தக் கூடத்து அறையைத் 'தூள்' பறக்கச் செய்து கொண்டிருந்தனர்.

"வணக்கம், சார்!"

இசைக் கருவியை எறிந்து விட்டு, நரிக்குறவனைப்போல் இடக் கையை மடித்து விலாவில் 'டபக், டபக்' கென அடித்துத் தாளம் போட்டவாறு, 'டங்கு டக்கர-டிக்கிரிடா, டங்குடக்கர-டிக்கிரிடா' என்று உற்சாகமாகப் 'பாடி'க் கொண்டிருந்த மியூஸிக் டைரக்டர் சட்டென்று நிமிர்ந்து பார்த்தார். உடனே அவருடைய 'மூடு' கலைந்து விட்டது.

"ஹல்லோ, மிஸ்டர் விவேகானந்த்! கம்-இன்! கம்-இன்!" என்று கூவிக் கொண்டே போய் ஒரு சோபாவில் தொப்பென்று சாய்ந்தார் ஜமதக்கினி.

"உங்கள் வேலைக்குத் தடங்கல் செய்து விட்டேனா? மன்னியுங்கள்!" என்றவாறு உள்ளே வந்து ஓர் இருக்கையில் அமர்ந்தான் விவேகானந்தன்.

"நோ, நோ! உங்களைச் சந்திப்பதை விடப் பெரிய வேலை இப்போது வேறு என்ன எனக்கு?" என்று உற்சாகமாகச் சொன்ன ஜமதக்கினி, முகத்தை ஒரு தினுசாக வைத்துக் கொண்டு, "ஆனாலும் பாருங்கள், மிஸ்டர் விவேகானந்தன்! திடீரென்று ஓர் அருமையான 'டியூனை'க் கண்டுபிடித்தேன்! அது எப்படித்தான் என் மூளையில் உதயமாகியதோ, எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது! ரொம்ப 'மெலோடியஸ் டியூன்' போங்கள்! அதை வாசித்துக் காட்டுகிறேன், கேட்கிறீர்களா?" என்றவாறு தம் அருகில் கிடந்த 'அக்கார்டின்' கருவியை எடுக்கப் போனார். அதற்குள் அவர் காலடியில் சுருண்டடித்துப் படுத்துக் கிடந்த நீலாம்பரி சடாரென்று பாய்ந்து அந்த இசைக் கருவியை வெடுக்கெனப் பிடுங்கிக் கொண்டு பக்கத்து அறைக்கு ஓடிவிட்டது. இதைக் கண்டு ஜமதக்கினி தொந்தி குலுங்க நகைத்தார். பொங்கி வந்த எரிச்சலை அடக்கிக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தான் விவேகானந்தன்.

"அது போகட்டும். உங்கள் முயற்சி எதுவரையில் இருக்கிறது?" என்று மிகவும் அக்கறையாகக் கேட்டபடி நிமிர்ந்து உட்கார்ந்தார் ஜமதக்கினி.

"அதைச் சொல்லி விட்டுப் போகத்தான் வந்தேன்" என்று நாற்காலியை முன்னுக்குத் தள்ளி அமர்ந்தான் விவேகானந்தன்.

"அப்படியா? சொல்லுங்கள், சொல்லுங்கள்!" என்று ஆவலுடன் தூண்டினார் ஜமதக்கினி.

"நான் அந்தப் பெண்ணைச் சந்தித்து. மெள்ள விஷயத்தை விட்டு, வெள்ளோட்டம் பார்த்தேன்."

"நடிகை கோமதியைத்தானே?"

"ஆமாம் சார்! அதற்கு அவள் சொன்ன பதில் என்னைத் திகைக்க வைத்து விட்டது."

"என்ன சொன்னாள்? சீக்கிரம் சொல்லுங்கள்" என்றார் ஜமதக்கினி.

"மோகனசுந்தரம் அந்தப் படத்தில் புல்லாங்குழல் வாசிக்கத் தயாராய் இருக்கிறானாம்! ஆனால்?..."

"ஆனால், என்ன மிஸ்டர்?"

"அந்தப் படத்துக்கு வேறு மியூஸிக் டைரக்டரை ஏற்பாடு செய்தால், அடுத்த நாளே அவன் வந்து வாசிப்பானாம். அதற்கு யாதொரு சிபாரிசும் தேவை இல்லையாம்."

தேள் கடித்த மாதிரி எழும்பிக் குதித்தார் ஜமதக்கினி. அவர் முகம் கோபத்தால் கொள்ளிக்கட்டை போல் சிவந்தது. "அப்படியா சொன்னாள் அந்த நாசகாரி? பார்த்தீர்களா மிஸ்டர்? நல்லதற்குக் காலம் இல்லை! அந்த நன்றி கெட்ட பெண்ணுக்கு இதுவரையில் நான் எவ்வளவோ உதவிகள் செய்திருக்கிறேன்; அதை யெல்லாம் மறந்துவிட்டு

என் தலையிலேயே மிளகாய் அரைக்கப் பார்க்கிறான்! அந்தப் பையனுக்கு ஒன்றுமே தெரியாது; இவளே அவனுக்கு இப்படியெல்லாம் சொல்லிக் கொடுத்து விடுவாள்! என்னைப் பழி வாங்க அவள் தீர்மானித்து விட்டாள்!'' என்று ஒரேயடியாகக் கத்திக் கூப்பாடு போட்ட அவர் மீண்டும் தொடர்ந்து, ''அது சரி, அவள் அப்படிச் சொன்னதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று பரபரப்புடன் கேட்டார்.

''அவள் சொல்வது ஒரு வகையில் நியாயம் என்றே எனக்குப் படுகிறது!'' என்றான் விவேகானந்தன்.

''ஆகா! போச்சு! என் தொழிலே குட்டிச்சுவராகப் போச்சு! எல்லாரும் மோசக்காரர்கள்! நய வஞ்சகர்கள்! என்னைக் கெடுக்கப் பார்க்கிறார்கள்!'' என்று கைகளை வேகமாக ஆட்டி ஆக்ரோஷமாகக் கூவினார் ஜமதக்கினி.

''ஜமதக்கினி சார்! சகட்டுமேனிக்கு எல்லாரையும் சேர்த்துத் திட்டாதீர்கள். நான் உங்கள் விஷயத்தில் தலையிட்டு உதவி செய்ய முயன்றது உங்கள் பக்கம் நியாயம் இருக்கிறது என்பதற்காகத்தான். மற்றப்படி இதனால் எனக்கு எவ்வித லாபமுமில்லை. இதை நீங்கள் தெரிந்துகொண்டு பேச வேண்டும்!''

ஜமதக்கினி உடனே பெட்டிப் பாம்பாக அடங்கி விட்டார். விவேகானந்தனைப் பரிதாபமாக ஏறிட்டுப் பார்த்து, ''கோபித்துக் கொள்ளாதீர்கள் மிஸ்டர்! நான் உங்களை ஒன்றும் சொல்லவில்லை. அந்தப் பெண்ணின் இந்த அழிச்சாட்டியமான யோசனை எங்கள் புரொடியூஸரின் காதில் விழுந்தால் அவர் என்ன செய்வார் தெரியுமா? அடுத்த நாளே என் காண்ட்ராக்டைக் கிழித்தெறிந்து விட்டு வேறொரு மியூஸிக் டைரக்டரை ஏற்பாடு செய்து விடுவார்! அப்படி நடந்து விட்டால் எனக்கு ஆயிரக்கணக்கில் நஷ்டம்! இதுவரையில் எடுத்த பெயரெல்லாம் 'பணால்' ஆகி விடும்! அப்புறம் வெளியே தலைகாட்ட முடியாத அவமானம்!'' என்றார்.

''இவ்வளவுதானே? கவலைப் படாதீர்கள்! இதெல்லாம் எதுவுமே நடக்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன்!'' என்றான் விவேகானந்தன் அலட்சியமாக.

ஜமதக்கினி அவனைச் சந்தேகத்துடன் பார்த்தார். ''நிஜமாகவா சொல்கிறீர்கள்?'' என்றார் மேல் மூச்சு வாங்க.

''இதில் பொய் பேச அவசியம் இல்லை. இதோ, பாருங்கள்'' என்றவாறு, 'டைப்' செய்த காகிதமொன்றை எடுத்துக் காட்டினான் விவேகானந்தன். அது ஒரு வக்கீல் நோட்டீஸ்!

''மோகனசுந்தரத்திடம் பத்தாயிரம் ரூபாய்க்கு நஷ்ட ஈடு கோரப் போகும் வக்கீல் நோட்டீஸ் இது!''

''நஷ்ட ஈடா? எதற்கு?''

''எங்கள் நவயுக வாலிபர் சங்கத்துக்கு அவனால் பெருத்த நஷ்டமேற்பட்டு விட்டது. அன்று நடந்த கலை விழாக் கச்சேரியில் அவன் செய்த கோமாளித்தனத்தால், ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கொட்டகையும் நாற்காலிகளும் நாசமாகி விட்டன. அதைவிடப் பெரிய நஷ்டம், எங்கள் சங்கத்துக்கு ஏற்பட்டிருக்கும் கெட்ட பெயர்! இவற்றுக்கெல்லாம் சேர்த்துத்தான் அவன் மீது பத்தாயிரம் ரூபாய்க்கு நஷ்ட ஈடு வழக்குத் தொடரப் போகிறேன்!''

''நல்ல காரியம்தான், ஆனால் அந்தப் பிச்சைக்காரப் பயலிடமிருந்து பத்துப் பைசா கூட உங்களால் வசூல் செய்ய முடியாதே?''

''அது எனக்குத் தெரியாதா? ஆனால் நான் இந்தக் காரியத்தில் ஈடுபடுவதற்குக் காரணமே வேறு. அதாவது, இந்த வக்கீல் நோட்டீஸைக் கொண்டு அவனைப் பயமுறுத்தி, உங்கள் படத்துக்கு வாசித்துக் கொடுக்கச் செய்ய வேண்டுமென்பது என் திட்டம்!''

சடாரெனத் துள்ளியெழுந்த ஜமதக்கினி, விவேகானந்தனின் கையைப் பற்றி வேகமாகக் குலுக்கி, ''பிரமாதம்! பிரமாதம்!'' எனக் கூவினார். ''மிஸ்டர் விவேகானந்தன்! நீங்கள் மட்டும் இந்தக் காரியத்தைச் செய்து விட்டால் அப்புறம் பாருங்களேன்....''

''ஏன்? எனக்கு ஏதாவது லஞ்சம் கிஞ்சம் கொடுப்பீர்களோ?'' என்று குறும்பாகக் கேட்டான் விவேகானந்தன்.

''அதைவிடப் பெரிதாக எங்களால் செய்ய முடியும். அதற்குத் தோதாக இப்போது ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது'' என்றார் ஜமதக்கினி.

'என்ன' என்பதுபோல் அவரைப் பார்த்தான் விவேகானந்தன்.

''ஆமாம் மிஸ்டர்! உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா?''

''சொல்லுங்கள். கேட்கிறேன்.''

''சமீபத்தில் நடந்த தேர்தலில் உங்கள் துணைகொண்டு ஜயித்தாரே ஒருவர், அவர் நேற்று இறந்து விட்டார்.''

''எனக்கு இந்த விஷயம் தெரியுமே!''

''உங்களுக்குத் தெரியாமல் இருக்குமா? ஆனால் நான் சொல்வது வேறு. காலியான அந்த ஸ்தானத்துக்கு விரைவில் உபதேர்தல் நடக்கப் போகிறது.''

''நடந்துதானே ஆகவேண்டும்?''

"அந்தத் தேர்தலில் நிற்கப் போவது யார் தெரியுமா? முன்பு தோற்றுப் போன அதே ஆசாமி!"

"அவர்தான் மூளைக் கோளாருகி எங்கள் மருத்துவ விடுதிக்கு வந்து குணமாகாமல் மறுபடியும் வில்ஸன் புருக் என்ற ஓர் ஆங்கிலேயரிடம் சிகிச்சைபெற்றுக் கொண்டிருக்கிருரே?"

"அதெல்லாம் பழைய் கதை! இப்போது அவர் குணமாகி வெளியே வந்து விட்டார். எப்படிக் குணமானுராம் தெரியுமா? டாக்டர் வில்ஸன்புருக் அவருடைய காதில், இரகசியமாக, 'உப-தேர்தல் வருகிறது' என்று மூன்று முறை சொன்னுராம். உடனே மூளைக் கோளாறு சரியாகி விட்டதாம்!"

விவேகானந்தன் இதைக் கேட்டு உரக்கச் சிரித்தான். ஜமதக்னி உற்சாகமாக மேலும் தொடர்ந்தார்: "நீங்கள் ஏன் அந்தத் தேர்தலில் அவரை எதிர்த்து நிற்கக் கூடாது? நிற்பதாக மட்டும் சொல்லுங்கள், அப்புறம் பாருங்களேன் வேடிக்கையை!"

"வேடிக்கையா?..."

"அதாவது எங்களுடைய ஒத்துழைப்பைக் கேட்கும் விஷயத்தைக் குறிப்பிடுகிறேன்! டஜன் கணக்கில் 'வாக்ஸால்' கார்களாகக் கொண்டு வந்து நிறுத்துவோம்! தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு ஆள் சேர்க்க மேடைமீது சினிமா நடிகை நடிகர்களைக் கொண்டு வந்து கொலு வைப்போம்! அப்படியும் பொது ஜனங்கள் வரவில்லையென்றுல், நடிகர்களுக்கு 'மேக்-கப்' போட்டுத் தெருத் தெருவாக அழைத்து வந்து காட்டுவோம்! அதற்கும் மசியவில்லையென்றுல் ஆஸ்பத்திரி கட்டித் தருவதாகவும், பள்ளிக்கூடங்கள் திறப்பதாகவும் பெரிய நடிகர்களைக் கொண்டு கனல் கக்கும் வசனங்களைப் பேசச் செய்வோம்! நீங்கள் பேசும் மேடைகளை 'கிங்ஸ் சேம்பர் செட்'டுகளாக அலங்கரிப்போம்! உங்கள் வெற்றிக்கு இதைவிடப் பெரிய உத்திரவாதங்கள் வேறு என்ன இருக்க முடியும்?"

"எல்லாம் சரிதான். ஆனல் இந்த விஷயத்தில் நீங்கள் இத்தனை அக்கறை காட்டக் காரணம்?"

"ஆதாயம் இல்லாமல் ஆற்றைக் கட்டி இறைப்போமா? கலைஞர்களாகிய எங்களுடைய குரல் மக்கள்மன்றத்தில் ஒலிக்க உங்களைப் போன்ற ஒரு வாலிப 'ஸௌண்ட் இஞ்சினியர்' — அதாவது எதுகை மோனையோடு 'ரிதும்' பிசகாமல் பேசக்கூடிய ஒரு பேச்சாளர் வேண்டும்!"

"இதுவரையில் நீங்கள் அப்படி யாரையும் அனுப்பவில்லையா?"

"ஐயோ, அனுப்பிப் பார்த்தோமே! அங்கே போனதும் அவர்கள் 'டூயட்' பாடுவதற்குப் பதிலாகக் 'கோரஸ்' பாடுகிருர்கள்! 'லிப்ஸ்-மூவ்மென்ட்'டோ 'சின்க்ரனைஸோ' சரியாக அமையாத 'டப்பிங்' படங்களைப் போல, 'சினிமா ஒழிய வேண்டும், டப்பா சங்கீதத்துக்குத் தடை விதிக்க வேண்டும்' என்றெல்லாம் பேச ஆரம்பித்துவிடுகிருர்கள்!' 'ரீடேக்' பண்ணக்கூடிய பேச்சா இது? 'ரெகார்டு' ஆனல், ஆனதுதானே?"

"என்ன செய்வது? எப்போதும் எல்லாராலும் உண்மையே பேசாமலிருக்க முடிவதில்லை!" என்று சொல்லிச் சிரித்தான் விவேகானந்தன். ஆனுலும், ஜமதக்னி சொன்ன அந்தத் தேர்தல் விஷயம் அவனை யறியாமலே அவன் மனத்தின் ஆழத்தில் போய்ப் பதிந்து கொண்டது!

"அது போகட்டும், மிஸ்டர் விவேகானந்தன்! உங்களுக்குத் திருமணம் ஆகப் போவதாகக் கேள்விப்பட்டேனே, அது உண்மைதானு?" என்று கேட்டுப் பேச்சின் திசையை மாற்றினுர் ஜமதக்னி.

"உங்களுக்கு எப்படி அது தெரியும்?" என்று வியப்புடன் வினவினுன் விவேகானந்தன்.

"சிவப்பிரகாசம் நேற்று இங்கே வந்திருந்தார். பேச்சுவாக்கில் விஷயம் வெளிப்பட்டது."

"எனக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாது சார்!" என்று சொல்லி வெட்கத்துடன் தலைகுனிந்தான் விவேகானந்தன்.

"நான் அதைக் கேள்விப்பட்டு ரொம்பவும் மகிழ்ச்சி யடைந்தேன்! உங்களுக்குப் பார்த்திருக்கும் பெண் நன்ருகப் பாட்டுப் பாடுவாளாமே? நான் கூட அவளிடம் ஒரு பாட்டைக் கவனம் செய்து கொடுக்கச் சொல்லிக் கேட்கலாம் என்றிருக்கிறேன்."

"அடடே! அப்படியெல்லாம் அவளிடம் போய்க் கேட்டுவிடப் போகிறீர்கள்; ஏனென்றுல், அவளுக்குப் பாட்டுகளைக் 'கவனம்' செய்யத் தெரியாது, இயற்றத் தான் தெரியும்!" என்று சொல்லிக் கடகடவெனச் சிரித்தான் விவேகானந்தன்.


"ஓ! அப்படியானுல் நமக்குத் தோதுப் படாது!" என்று முகத்தைச் சுளித்தார் ஜமதக்னி.

கைக்கடிகாரத்தில் மணியைப் பார்த்த விவேகானந்தன், அப்போதுதான் ஏதோ ஒரு முக்கிய விஷயத்தை நினைவு கூர்ந்தவன்போல் சட்டென்று எழுந்து ஜமதக்னியிடம் விடைபெற்று அவசரமாக வெளியே சென்றுன். (தொடரும்)

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

சென்ஸஸ் 1961

பிப்ரவரி 10உ முதல் மார்ச் 5உ வரை



வரப்போகும் ஜனகணிதையானது இதுவரை நம் நாட்டில் எடுக்கப்பட்டுள்ளவைகளை விட மிகவும் விரி வானதாக இருக்கும். இதை வெற்றிகரமாகச் செய்து முடிக்க லக்ஷக்கணக்கான நபர்கள் ஒன்று சேர்ந்து உழைத்து வருகிறார்கள்.

ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்டுள்ள வேலைகளை அவர்கள் நன்கு தெரிந்து கொள்ளும்படி போதிக்கப் பட்டு வருகிறார்கள். மேலும் பிரத்தியட்சப் பயிற்சியும் விரிவாக அளிக்கப்படும்.

கணக்கெடுக்க ஒவ்வொருவரிடமும் அவர்கள் வரு வார்கள். மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் நீங்கள் ஒவ்வொருவருமே முக்கியமானவர்கள்தான்.

உங்களால் முடிந்தவரை அவர்களுக்கு உதவுங்கள்.

நீங்கள் அளிக்கும் எல்லா விவரங்களும் மிகவும் ரகசிய மாகவே இருக்கும். யாருக்கும் தெரிவிக்கப்பட மாட்டாது

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

DA-60/565

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon